இந்து சமய வகுப்பு பாட புத்தகம்

இளநிலை



இந்து சமய பாட புத்தகம்

இள நிலை



தொகுப்பாசிரியர்:

சுவாமி மதுரானந்தர்

ஸ்ரீ விவேகானந்த மந்திரம், வெள்ளிமலை

கன்னியாகுமரி மாவட்டம்.

வெளியிடுவோர்:

இந்து சமயக்கல்வி அறக்கட்டளை

விவேகானந்த மந்திரம், வெள்ளிமலை

கல்படி (P. O.), குமரிமாவட்டம் - 629204.

முதற்பதிப்பு 1985 ஜூன்.

இரண்டாம் பதிப்பு: 1987 ஏப்ரல்

தொகுப்பாசிரியர்:

சுவாமி சதுரானந்தர்,

தலைவர், ஸ்ரீ விவேகானந்த மந்திரம்,

வெள்ளிம லை.

வெளியிடுவோர்:

இந்து சமயக்கல்வி அறக்கட்டளை,

ஸ்ரீ விவேகானந்த மந்திரம், வெள்ளிமலை,

கல்படி P.O. - 629204.

அச்சிட்டோர்:-

ஸ்ரீ விவேகானந்தா பிறஸ்,

ஆற்றின்கரை மணவாளக்குறிச்சி 629252.

Sri Chandramouleeswaraya Namaha

SRI SANKARABHAGAVATPADACHARYA PARAMPARAGATHA

His Holiness

Sri Kanchi Kamakoti Peetadhipathi

Jagadguru Sri Sankaracharya Swamigal

SRIMATAM : : SAMASTHANAM,

KANCHEEPURAM - 631 502.

Camp: காஞ்சிபுரம் **Date:** *31-10-1984.*

தற்காலத்தில் பள்ளிப்படிப்பில் எந்த விதமான நீதிப் பாடத்தையோ, தெய்வீக சம்பந்தமான பாடத்தையோ காணப்படுவது மிகவும் அரிதாக உள்ளது. அதிலும் நமது இந்து சமயத்திற்கு மாறுன கருத்துக்கள் பலவருகின்றன. இந்த நிலையில் வருங்கால மாணவர்களின் வாழ்வில் நீதியும், நேர்மையும், கடவுள் பக்தியும் காண்பது அரிதாகிவிடும். இந்த நிலையில் மாணவர்களின் வாழ்க்கையின் மீது அக்கரை கொண்டு வரும் விவேகானந்த மந்திரம் ஸ்வாமி மதுரானந்த அவர்களும், கன்னியாகுமரி விவேகானந்தர் கேந்திரத்தைச் சேர்ந்தவர்களும், மாணவர்களுக்கு நீதிசமய போதனைகளை 5 பரீக்ஷைகளாக பாடத்திட்டம் வகுத்து பரீக்ஷை வைத்து, பரிசு கொடுப்பது கேட்டு சந்தோஷிக்கிறோம். இதே போன்று மாணவர்களை நல்வழிப்படுத்த நல்ல திட்டங்களை மேன்மேலும் வகுத்து, நல் வழியில் நடத்திச் செல்ல ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்ம்ருதி



விவேகானந்த கேந்திரம்

கிராம முன்னேற்றத் திட்டம்

நிர்வாக அலுவலகம்
விவேகானந்தபுரம், கன்னியாகுமரி – 629702
(தமிழ் நாடு)

தேதி 22-2-1987

பணிவுரை

தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் சமய வகுப்புக்கள் பிரபலம் அடைந்து வருகின்றன. பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் நற்கல்வி பெற்று வருகிறார்கள். குழந்தைகளின் மூலம் பல இல்லங்கள் ஒளி பெற்று வருகின்றன. இக்குழந்தைகள் கோவில் திருவிழாக்களிலும், கிராமங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் தம் திறமையையும், சமய வகுப்புக்களின் பயனையும் நிரூபித்து வருகிறார்கள். வேதரிஷிகளும் உபநிஷதமுனிகளும், ஆழ்வார்களும், நாயன்மாரும், ஸ்ரீராமகிருஷ்ணரும், அன்னை சாரதாவும், சுவாமி விவேகானந்தரும், அரவிந்தரும், காந்தி அடிகளும் கண்டபடி ஆன்மீகத்தை அடிப்படையாகக்கொண்ட சமுதாய வாழ்க்கை மலர, இவ்வகுப்புகள் அஸ்திவாரமிடும்.

பாடல்கள், நாடகங்கள், கதைகள் இவற்றின் மூலம் குழந்தைகளுக்கு நற்கல்வியூட்டும் சமய வகுப்பு ஆசிரியர்களின் பணி சிறக்க நம் பிரார்த்தனைகளும், வாழ்த்துக்களும் உரியன.

மனித இதயத்தில் நாட்டுப் பற்றினையும், இறை நம்பிக்கையும் மனிதாபிமானத்தையும், தன்னம்பிக்கையையும் உலக நலனில் ஆசையையும் உண்டு பண்ண இந்தச் சமயவகுப்பு நூல் பயன்படுமாக.

இவண்,

இறைவன் பணியில்,

(ந. கிருஷ்ணமூர்த்தி)

செயலாளர், கிராம முன்னேற்றத் திட்டம்.

இரண்டாம் பதிப்பின்

முன்னுரை

இந்திய நாடானது கடந்த சுமார் எண்ணூறு ஆண்டுகளாக முகம்மதியருடையவும். கிறிஸ்தவர்களுடையவும் அரசாட்சிக்குள் இருந்துவந்துள்ளது. இந் நாடு அரசியல் சுதந்திரம் பெற்று நாற்பது ஆண்டுகள் ஆகியுள்ளன. அன்னியர்கள் இந்தியப் பண்பாடாகிய இந்து தர்மத்தை அழித்தொழிப்பதற்குத்தங்களால் ஆனமட்டும் முயன்றனர். அவர்களது ஆட்சிக்காலத்தும் தற்போது தலைசிறந்தபாரதப்பண்பாட்டைப் பரப்புவதற்காக சில மகான்கள் சிறிது முயன்றார்களே ஒழிய, அரசின் தரப்பிலிருந்தோ அல்லது அரசின் ஒத்துழைப்புடனேயோ பாரதப் பண்பாடாகிய இந்துதருமம் பிரச்சாரம் செய்யப்படவில்லை. சாதிக்கொடுமையினாலும், தன்னவாதிகளின் சூழ்ச்சிகளாலும், உண்மையான சமயம் அல்லது பண்பாடு பொது மக்களிடையே பிரச்சாரம் செய்யப்படவில்லை. ஆதலால்தான் இடைக்காலத்தில் இந்திய நாட்டின் பரம்பரைச் சொத்தாகிய இந்துசமயம் மக்களால் முக்கால் வாசியும் மறக்கப்பட்டு, கைவிடப்பட்டது. தற்போது அது இந்துமக்களாலேயே இகழப்பட்டும் வருகிறது: நாஸ்திக வாதமும், பௌதிகவாதமும் தலைதூக்கியுள்ளன. தீர்க்கதரிசியாகிய விவேகானந்த சுவாமிகள் எச்சரித்துள்ளபடி இந்தியதேசமானது அதன் உயிர்நிலையாகிய சமயத்தைக் கைவிடுமானால் அது உலகின் பிற வல்லரசுகளைப் போல அழிந்தொழிவது திண்ணம். ஆதலால் இந்தியனாகப் பிறந்ததில் பெருமிதம் கொள்ளும் ஒவ்வொருவருடையவும் தலையாய கடமை நம்மை இத்தனை காலமும் அழிந்தொழிந்து போகாமல் காப்பாற்றி வந்திருக்கின்ற நமது தார்மிகப் பண்பாட்டை நாம் காத்தாக வேண்டும். இதனை எந்த வழியில் செய்து சாதிப்பது? இந்த வைதிக தருமத்தை நாமும் கற்று அதன்படி வாழ்ந்து மக்களுக்கெல்லாம் அதைக்

கற்பித்து அவர்களையும் தார்மிக வாழ்க்கை வாழ ஊக்குவிப்போமாக! உலகளாவிய தார்மிக இயக்கமாகிய ராமகிருஷ்ண மிஷனும், விசுவஹிந்து பருஷத்தும் சின்மய மிஷனும், காஞ்சி ஆச்சாரிய சுவாமிகளும், மற்றும்சில சங்கங்களும் முழு மூச்சுடன் இவ் வழியில் முயன்று வருகின்றன. எனினும் இந்திய நாட்டில் நூற்றில் ஐந்து பேருக்குக் கூட சுமாரான சமய நூலறிவு இருக்குமோ என்பது கேள்விக் குறியாகத்தான் உள்ளது. முதியோர்கள் நிலை இவ்வாறு இளைஞர்களுடையநிலைபற்றி சொல்வதற்கே இல்லை. கல்விநிலையங்களில் பயிலும் மாணவர்களது பாடத் திட்டத்தில் சமய நூலறிவுக்கு இடமே கிடையாது. இளவயதில் அவர்களுக்கு அளிக்கபடவேண்டிய தார்மிகஒழுக்கமுறையும் கைவிடப்பட்டுள்ளது. நம்முடைய வேதங்கள் முழங்குகின்றன 'தர்மோரக்ஷதி ரக்ஷித:' 'தர்மஏவஹதோஹந்தி' " நாம் அறத்தைக் காப்பாற்றினுல் அறம் நம்மைக் காப்பாற்றும். அறத்தை நாம் அழித்தால் அறம் நம்மை அழிக்கும்." ஆதலால் அத்தகைய அழிவிலிருந்து நமது சந்ததிகளைக்காக்கவும் அர்த்தமற்ற சாதிப்பிரிவினைகளையும் மூடக் கொள்கைகளையும் ஒழிக்கவும் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்குமாக வெள்ளிமலை இந்துசமய இளைஞர் இயக்கத்தின் சார்பில், கன்னியாகுமாரி விவேகானந்த கேந்திரத்தின் உதவியுடன்பண்பாட்டு வகுப்புகள் என்ற இந்துசமய வகுப்புகள் பலஊர் களிலும் நடத்தப் பெற்று வருகின்றன. கடந்த நான்காண்டு கற்பிக்கப்பெற்ற பாடத்திட்டத்தை கீழ்க் கண்டவாறு இவ்வாண்டு முதல் மாற்றி அமைத்துள்ளோம். தொடக்கநிலை, இளநிலை, வளர்நிலை, உயர் நிலை, முதுநிலை எனஐந்து பிரிவுகளாக்கப்பெற்றுள்ளது. மாணவர்கள் ஒவ்வொரு நிலையாகத்தேறி அடுத்த நிலைத்தேர்வு எழுதவேண்டும். ஐந்துநிலையும் தேறியவர்களுக்கு ஒருபட்டம் வழங்கப்பெறும்.

இத்தகைய சிறந்ததோர் பாடத்திட்டம் உருவாவதற்கு அயராதுழைத்த திருவாளர்கள். **ந. கிருஷ்ணமூர்த்தி,** (செயலாளர், விவேகானந்தகேந்திரம், கிராம முன்னேற்றத்திட்டம்) **எஸ். செல்லம்** (தக்கலை), **ஸ்ரீனிவாசன் எம். ஏ.** (இருளப்பபுரம்) கேப்டன் **எஸ். பி. குட்டி,** பி. இ. போன்ற அன்பர்களுக்கும், பயன்கருதாது பணி செய்து வரும் சமயவகுப்பு ஆசிரியப் பெருமக்களுக்கும் நமது நல்லாசிகளைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

பெற்றோர்களும் பெரியோர்களும் சமயக்கல்விப் பிரச்சாரத்தில் எங்களுக்கு ஊக்கமளிக்குமாறு பெரிதும்வேண்டுகிறோம். ஒவ்வொரு ஊரிலும் விடா முயற்சியுடன் மாணவர்களை ஒன்றுதிரட்டி சமய வகுப்புக்களை நடத்தி, நாட்டிற்கும் தருமத்திற்கும் நலன் தேடுவோமாக.

இந் நூலை அழகாக அச்சிட்டுதவிய மணவாளக்குறிச்சி ஸ்ரீவிவேகானந்தா அச்சகத்தாருக்கு நமது நன்றி உரித்தாகுக.

"எழுமின், விழிமின், குறிசாரும் வரை அயராது உழைமின்"

வெள்ளிமலை, இவண்,
14 - 4 - 1987, இறைபணியில்
சித்திரை விஷு சுவாமி மதுரானந்தர்



பதிப்புரை

பாரதம் எங்கே செல்கிறது?

பாரத நாடு சுதந்திரமடைவதற்காக இரத்தம் சிந்தியவர்களும், தூக்குமேடை ஏறியவர்களும் நாடு கடத்தப்பட்டவர்களும், சிறையில் வாடியவர்களும் எந்த இலட்சியத்திற்காக தங்களது வாழ்க்கையைத் தியாகம் செய்தார்களோ அந்த இலட்சியத்தை விட்டு விட்டு பாரதம் எங்கோ செல்கிறது!

பாரதம் அடிமைப்பட்டிருந்த பல நூற்றுண்டு காலமாக, பயமுறுத்தப்பட்டும், சூட்சிகளின் மூலமும், அந்நிய மதங்களுக்கு நம் நாட்டுமக்கள் மாற்றப் பட்டார்கள். அந்நியனை பாரத நாட்டிலிருந்து அகற்றி, மக்களுக்கு நல்வாழ்வுஅளித்து, பாரதத்தின் சொந்தச்சமயத்தையும் பண்பாட்டையும் காத்து பாரதஅன்னையை மகோன்னதமான முந்தியநிலைக்கு உயர்த்துவதே தியாகச்சரித்திரம் படைத்து வாழ்க் கையை அர்ப்பணம் செய்த ஜான்சிராணி முதல் காந்தியடிகள் வரையுள்ள மகாத்மாக்களின் இலட் சியமாக இருந்தது. மேற்கத்திய நாடுகளில் மக்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் புகழ்மிக்க பல்கலைக்கழகங்களைகண்ட பாரதநாடு -பல்லாயிரம் நிறைஞானிகளை ஈன்றநாடு - ரிஷிகளும் முனிவர் களும் வேதமிசைத்த புனித நாடு - மீண்டும் தனது புனிதத் தன்மையைக்காப்பாற்றிக் கொள்வதற்குப் பதிலாக, தனது கலாச்சாரத்தையும் சமயக்கோட் பாடுகளையும் பாதுகாத்துக் கொள்வதற்குப் பதிலாக, தனது ஆன்மீக சக்தியை பெருக்கிக் கொள்வதற்குப்

பதிலாக, தன்னையே இழந்து வருகிறது. தனது சொந்தச் சமயத்தையும் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் புறக்கணித்து வருகிறது. அமைதியை இழந்து வருகிறது.

அரசியல்புரட்டு, ஆபாச சினிமா, ஆண்மையில்லாதஆண்கள்,பெண்மையில்லாதபெண்கள்,கள்ளுக்கடைகள், கள்ளக்கடத்தல், கற்பழிப்பு, கலவரங்கள் கள்ளநோட்டு, கருச்சிதைவு, கோழைத்தனம், ஏழ்மை கோயில்திருட்டு, தேசத்துரோகம், பதவிமோகம், பொய், ஏமாற்று, வழிப்பறி, கொள்ளை, ஜாதிவெறி, வரதட்சிணைக் கொடுமை, இலஞ்சம் - இவற்றிற்கிடையே சிக்கித்தவிக்கும் கோடானுகோடிமக்கள்- இதுவே இன்றைய பாரதம்!

இந்த நிலைமை நல்லோர்களை கவலைக்குள்ளாழ்த்தி விட்டது. முன்னோர்களின் ஆத்மாக்கள் சாந்தியில்லாது தவிக்கின்றன. ஆகவே வானம் இரங்கவில்லை. காலநிலைகள் கூட மாறிவிட்டன. இந்த நிலைமை ஏற்பட முக்கியமான காரணம் நாட்டிற்குப் பொருந்தாத நமது கல்வித்திட்டமேயாகும். வெள்ளையர் வகுத்த கல்வித்திட்டம் நமது நாட்டிற்குப் பாதகமானது என்று அன்றே நமது வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் முழக்கமிட்டார். தியாகம், தொண்டுள்ளம், ஒழுக்கம், தேசப்பற்று, தெய்வபக்தி, சமயப்பற்று, உழைக்கும் மனம், பொதுநல நாட்டம் இவை ஏதுமில்லாத பட்டதாரிகளையே பல்கலைக்கழகங்கள் உருவாக்குகின்றன. இந்த நற்பண்புகளை அளிக்கக்கூடிய ஆன்மீகக் கல்வியை பாரதம் கைவிட்டு விட்டது. ஆன்மீகக் கல்வியின்றி பௌதிகக் கல்விமட்டும் பெறுபவர்கள் தாமும் கெட்டு நாட்டையும் கெடுப்பார்கள்.

இந்துக்களுக்குத் தமது சொந்த மதத்தின் கொள்கைகளும் கோட்பாடுகளும் தெரியாது! நம் நாட்டின் பெருமையும் தெரியாது!! தேசத்திற்காகவும் தர்மத்திற்காகவும் வாழ்க்கையை அர்ப்பணம் செய்த தியாகிகளின் வரலாறுகள் அறவே தெரியாது. இந்தச் சூழ்நிலைகளை பயன் படுத்திக்கொண்டு இந்தியாவின் சமயத்தையும் பண்பாட்டையும் அழித்து அந்நிய சமயத்தையும் அன்னிய கலாச்சாரத்தையும் புகுத்துவதற்கு, எங்கிருந்தோ பணம் பெற்று சிலர் துடியாகத் துடிக்கிறார்கள்!

சுவாமி விவேகானந்தரின் அறைகூவல் கேட்டு உலகமெங்கும் இந்து சமயம் பரவிவரும் இந்நாளில் உலக சமாதானத்திற்கு இந்துதர்மம் ஒன்றே வழி என்று உலகமேதைகளெல்லாம் எண்ணத் தொடங்கி விட்ட இந்நாளில் - சாந்தியையும் சமாதானத்தையும் பெறுவதற்காகப் பிற நாட்டவர்கள் இந்தியாவைத் தேடிவரும் இந்நாளில், —இந்தியா தன்னை இழந்துவிடக்கூடாது.

ஆகவே நமது கல்விக் கூடங்கள் புறக்கணித்து விட்ட ஆன்மீகக்கல்வியை சின்னஞ் சிறுர்கள் முதல் பெரியோர்கள்வரை அனைவரும் பெறும் பொருட்டு, பல்லாண்டுகால அனுபவத்தின் அடிப்படையில் இந்துசமயக் கல்வி அறக்கட்டளையை (**Hindu Religous Educational Trust**) தவத்திரு. சுவாமி மதுரானந்தஜி மஹராஜ் அவர்கள் ஆரம்பித்துள்ளார்கள். மழலைநிலை, தொடக்கநிலை இளநிலை, வளர்நிலை, உயர்நிலை, முதுநிலை என்ற வரிசையில் தனித்தனி பாடத்திட்டங்கள் அமைத்து வருடம் தோறும் தேர்வுகள் நடத்தி சான்றிதழ்களும் ஊக்கப்பரிசுகளும் கொடுப்பதும், முதுநிலையில் வெற்றிபெற்றோருக்கு அவரவர்களின் திறமைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப சமயவகுப்பு ஆசிரியர் பயிற்சி

பஜனைப்பயிற்சி, கோவில் பூஜைப்பயிற்சி, திருமணம் போன்ற சமுதாயச் சடங்குகள் நடத்தும் பயிற்சி, சமயசொற்பொழிவுப் பயிற்சி திருவிளக்கு பூஜைப் பயிற்சி, யோகாசனப் பயிற்சி முதலிய பயிற்சிகள் அளிப்பதும் அறக்கட்டளையின் நோக்கமாகும்.

தொடக்நிலை பாடபுத்தகம் இதுவரை மூன்று பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இளநிலை பாட புத்தகத்தின் இரண்டாம் பதிப்பு இப்போது வெளியிடப்படுகிறது. தொண்டுள்ளம் படைத்த இளைஞர்களும் மகளிரும் பெரியோர்களும் மாணவர்களும் ஊர்கள்தோறும் சமயவகுப்புகள் (பண்பாடு வகுப்பு) நடத்தவும், கற்கவும், கற்பிக்கவும் முன்வருமாறும், இந்த அரிய ஞான வேள்விப் பணியின் மூலமாக பிறவிப் பயன் எய்துமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இந்து சமயக்கல்வி அறக்கட்டளை,
வெள்ளிமலை,
கல்படி P.O.
கன்னியாகுமரி மாவட்டம் 629204.

இந்துசமய இளைஞர் இயக்கத்தின் குறிப்புரை

குமரி மாவட்டத்தின் மத்தியில் உள்ள வெள்ளி மலைச்சாரலில் அமைந்துள்ள விவேகானந்த மந்திரம் என்ற ஆஸ்ரமத்தின் தலைவராக இருந்து ஆத்மீகத் தொண்டு செய்துவரும் தவத்திரு. சுவாமி **மதுரானந்தஜி மஹராஜ்** அவர்களை குருநாதராகக் கொண்டு அவரது ஆணைப்படி விவேகானந்தர் காட்டிய பாதையில் "இந்து சமய இளைஞர் இயக்கம்" பல ஆண்டுகளாக சிறப்பான பணிகள் செய்துவருகிறது.

(i) **இவ்வியக்கத்தின் மூலதனம்:-** தேசத்தை நேசிக்கும் ஆண்களும் பெண்களும்.

(ii) **இவ்வியக்கத்தின் உறுப்பினர் சந்தா:-** பிரதி பலன் எதிர்பாராது தொண்டு செய்யும் மனம்.

(iii) **இயக்கம் செய்ய விருக்கும் பணிகள்:-**

1. அனைத்து ஊர்களிலும் சமய வகுப்புகள் நடைபெறச் செய்தல் (வாரத்தில் ஒரு நாள் 2 மணி நேரம்)
2. அனைத்து ஊர்களிலும் திருவிளக்கு வழிபாடு நடைபெறச் செய்தல் (மாதத்தில் ஒரு நாள் 1 மணி நேரம்)
3. அனைத்து ஊர்க்கோயில்களிலும் சத்சங்கம் நடைபெறச் செய்தல் (வாரத்தில் ஒரு நாள் 2 மணி நேரம்)

பொருளடக்கம்

4. இந்து சமயக்கல்வி அறக்கட்டளையின் மூலம் சமய வகுப்புப் பொதுத்தேர்வு நடத்தி சான்றி தழ்களும் பரிசுகளும் வழங்குதல்.

5. சமயவகுப்பு மாணவர் தினமும், சுதந்திர தின மும் கொண்டாடுதல் (ஆகஸ்டு 15)

6. குழந்தைகள் தினமும், விநாயக சதுர்த்தியும் கொண்டாடுதல். மாணவமாணவியர் பஜனை ஊர் வலம் நடத்துதல்.

7. இந்து இளைஞர் தினமும், காந்தி ஜெயந்தியும் கொண்டாடுதல் (அக்டோபர் 2) புனிதப்பயணம், உழவாரத்தொண்டு, இளைஞர் மாநாடு நடத்து தல்.

8. மகளிர் தினமும், துர்க்காஷ்டமியும் கொண்டாடு தல். மகளிர் மாநாடு, ஒரே நேரத்தில் **(6to7 p.m.)** எல்லாக் கோயில்களிலும் திருவிளக்கு வழிபாடு - இவை நடைபெறச் செய்தல்.

9. சமயவகுப்பு ஆசிரியர் பயிற்சிமுகாம், மகளிர் திருவிளக்கு வழிபாடு பயிற்சி முகாம், பூஜாரிப் பயிற்சிமுகாம் போன்றவை நடத்துதல்.

10. நமது குருநாதருடன் நேரிலோ கடிதம் மூலமோ தொடர்பு கொண்டு இந்து சமய அறிவும் ஆன் மீக பலமும் பெறுதல்.

காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீல ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆசிகள் அனுப்பித் தந்தும் புத்தகங்கள் அச்சிட்டுத்தந்தும் ஊக்கமளித்து வருகி றார்கள். கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரம் அனைத்துப் பணிகளுக்கும் ஒத்துழைப்பும் ஆதரவும் தந்து உற்சாகம் ஊட்டி வருகிறது. மற்றும் பல இந்து ஸ்தாபனங்களும் ஒத்துழைப்பு தந்து வரு கின்றன.

மாணவர்கள் எளிதில் பாடிப்பயன் பெறும் பொருட்டு சிறிய பஜனைப்பாடல் புத்தகங்கள் நான்கு இதழ்கள் வெளியிடப்பட்டன.

சமயவகுப்பு ஆசிரியர்களுக்குப் பலமுறை பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

இளமைத் துடிப்பும், சமயப்பற்றும் தேசத் தொண்டில் ஆர்வமும் உடைய ஆண்களும் பெண் களும் இயக்கத்தின் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு பிறவிப்பயன் பெறுமாறு அழைக் கின்றோம்.

இந்து சமய இளைஞர் இயக்கம்
வெள்ளிமலை,
கல்படி P. O.
கன்னியாகுமரி மாவட்டம் 629204.

பாடம் 1

துதிப் பாடல்கள்

1. கணபதி:

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

(திருப்புகழ்)

2. குரு:

குருர்ப்ரம்மா குருர்விஷ்ணுர் குருர்தேவோ
மஹேஸ்வர:
குருஸாக்ஷாத் பரப்ரஹ்ம்ம தஸ்மை
ஸ்ரீகுரவே நம:

(குரு கீதை)

3. சக்தி:

(அ) தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவும்தரும் நெஞ்சில்
வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனவெல்லாந்தரும்
அன்பரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி
கடைக்கண்களே!

(அபிராமி அந்தாதி)

(ஆ) தொண்டார்நாதன் துணைவி, பராசக்தி
கண்ட கண்கள் களிக்கும் மனோன்மணி
கொண்ட நெஞ்சங் குளிரு மருட்சிவை
வண்டு வார்குழ லம்மையை வாழ்த்துவாம்.

4. லெட்சுமி:

பொன்னரசி, நாரணனார் தேவி, புகழரசி,
மின்னுநவரத்தினம்போல் மேனியழகுடையாள்
அன்னையவள், வையமெலாம் ஆதரிப்பாள்,
ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து
வாழ்வோமே.
(பாரதியார்)

5. சிவன்

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும், பவளம்போல் மேனியில்
பால் வெண்ணீறும்,
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும்,
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே.
(அப்பர் தேவாரம்)

6. முருகன்:

பன்னிரு கரத்தாய் போற்றி, பசும்பொன்
மாமயிலாய் போற்றி,
முன்னிய கருணையாறுமுகப் பரம்பொருளே
போற்றி,
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே
போற்றி,
என்னிரு கண்ணே, கண்ணுள் இருக்கு
மாமணியே போற்றி.
(கந்தபுராணம்)

7. கண்ணன்:

(அ) மாயனை, மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,

ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த
தாமோதரனை
தூயோமாய்வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ
ரெம்பாவாய்
[திருப்பாவை]

(ஆ) பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம்
கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே.
[திருமங்கையாழ்வார்]

8. ஸ்ரீராமன்:

மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு
வாய்த்தவனே,
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்,
செம்பொன்சேர்
கன்னிநன் மாமதிள் புடைசூழ் கணபுரத்தென்
கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே
தாலேலோ
[பெரியாழ்வா]

9. ஐயப்பன்:

களிறொடு பிடியும் கூடிக்களித்திடும்
பம்பையாற்றின்

வளநிறை மருங்கில்மன்னும் மாண்புடைச்
சபரிகிரியோன்.
வளர்பிறை சூடுஞ் சிவனும் விண்டுவும் தந்த
மகனாம்
ஒளிநிறை உருவின் ஐயன் உபயமென் பாதம்
சரணே!.

10. ஆஞ்சநேயர்:

ஆஞ்சனேய மதிபாடலானனம்,
காஞ்சனாத்ரி கமனீய விக்ரஹம்
பாரிஜாத தருமூல வாஸினம்
பாவயாமி பவமான நந்தனம்

[நாமராமாயணம்]

11. ஸ்ரீ ராமகிருஷ்ணர்:

மறைகளின் முடிவில் நின்ற மாபெரும்
உண்மையெல்லாம்
அறிவிலாச் சிறுவர்கூடஅறிந்த னுபவிக்குமாறு
நறைநிகர் சொற்கள்கொண்டு நயமிகும்
உவமைசேர்த்துத்
திறமுடன் உரைத்த செம்மல் ஸ்ரீராம
கிருஷ்ணன் வாழ்க

12. ஸ்ரீ சாரதாதேவி:

கருங்குழல் அவிழ்ந்து தொங்கும்
கண்களில் கருணை பொங்கும்
அருங்குண நாணம் ஓங்கும்
ஆடையும் தலைமேல் வாங்கும்;
கரங்களில் வளைகள் தங்கும்;
கற்பினுக்கரசி; பூவின்
சரங்கொடு காமன் தீண்டாச்
சாரதா அன்னை வாழ்க!

13. சுவாமி விவேகானந்தர்:

சிரமதில் முண்டா சேர்ந்தி, சிறிதுமெய் இடமே சாய்த்து,
விரைமிகு முளரித் தாள்போல் விழியிணை வலமே சாய்த்து,
கரமொடு கரமுஞ் சேர்த்துக் காவியின் சொக்காய் போர்த்து,
அரசிளங் குமரனே போல் நின்றிடும் அடிகள் வாழ்க.

அருஞ்சொற்பொருள்

1. உம்பர்தரு — கற்பகதரு; தேனு — காமதேனு; மணி — சிந்தாமணி; க்சிவாகி — உருகி; ஒண்கடல் = பாற்கடல்; தேனமுதத்துணர்வூறி = அமிர்தம் போன்ற ஞானம் பெருகி; இன்பரசத்தே பருகி = இன்பரசத்தேன் பருகி; பலகாலும் = எப்போதும்; வனத்தணைவோனே = வனத்தில் வந்தவனே; தந்தை வலத்தால் = சிவனை வலம் வந்து; அருள் கைக் கனியோனே = மாம்பழம்பெற்ற அருட்கையையுடையவனே; நிலைப்பொருள் — நிலையான செல்வம்

2. தஸ்மை = அந்த

3. இனந்தரும் = நல்லார் உறவைத்தரும்; கனந்தரும் = கார் மேகத்தைப்போன்று கருமையான; பூங்குழல் — பூ வைத்த கூந்தல், தொண்டர் நாதன் — சிவன்; கொண்ட நெஞ்சு — கருத்தில் கொண்ட (தியானிக்கும்) நெஞ்சு; வார்குழல் — நீண்ட கூந்தல்.

4. குனித்த புருவம் — கருணைப் பார்வையுடைய புருவம்; கொவ்வை — கொவ்வைப்பழம்போன்று சிவந்த; குமிண் சிரிப்பு — புன்சிரிப்பு; பனித்தசடை — கங்கை நீரால் குளிர்ந்த சடை;

பவளம்போல் — பவளம் போன்று சிவந்த;
இனித்தம் — இனிமை

6. முன்னிய கருணை — அடியவர்க்காக முந்திப் பாயும் கருணை; வாரிதி — கடல்

7. (அ) தாயைக் குடல்விளக்கம் — தாயினிடம் வாயைத்திறந்து உலகைக் காண்பித்து விளக்கியவன்; போய பிழையும் = இறந்தகாலத்தில் செய்த பாவங்களும்; புகுதருவான் நின்றனவும் — எதிர்காலத்தில் செய்யும் பாவங்களும்

(ஆ) கமலச் செங்கண் = தாமரை இதழ் போன்ற கண்

அமரர் ஏறே — தேவர்களுக்குத் தலைவனே

8. தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் —இராவணனின் கிரீடங்களை (தலைகளை) வீழ்த்தினாய்; நன்மாமதிள் = பெரிய மதில் கணபுரம் — கணபுரம் என்ற இடத்தில்

9. களிறு = ஆண்யானை; பிடி — பெண்யானை உபயமென் பாதம் = மென்மையான இரு பாதங்கள்

10. அதிபாடலானனம் = மிகவும் சிவப்பான முகம்; காஞ்சனாத்ரி = பொன்மலை; கமனீய — அழகிய; விக்ரஹம் = வடிவம்; பாரிஜாத தரு மூலவாசினம் = பாரிஜாத மரத்தடியில்; வசிப்பவர்; பாவயாமி = தியானிக்கிறேன்; பவமான நந்தனம் — வாயுகுமாரன்.

11. நறை — தேன்

பாடம் 2

கடவுளின் இலக்கணம்

கடவுளுக்கு மூன்று நிலைகளுண்டு. அவை:- 1) அருவ நிலை, 2) உருவநிலை, 3) அருவுருவ நிலை. அருவ நிலையை சொரூப லக்ஷணம் என்றும் உருவ நிலையை தடஸ்த லக்ஷணம் என்றும் கூறுவர். சொரூப லக்ஷணம் கூறும் போது ஸச்சிதானந்த பிரம்மம் என்பர். ஸச்சிதானந்தம் என்ற சொல்லை ஸத், சித், ஆனந்தம் என மூன்ருகப் பிரிப்பர். ஸத், என்ருல் எக்காலத்தும் எவ்விடத்தும் நிறைந்து, மாருமல், அழியாமலிருக்கும் உண்மைப் பொருள் என்பதாகும். சித் என்ருல் எல்லாவற்றையும் அறிகின்ற பேரறிவு என்று பொருள். ஆனந்தம் என்பது பேரின்பம். பிரம்மம் என்ருல் பெரியது என்று பொருள். எதைவிடப் பெரியதோ, எதற்கு நிகராகவோ, பிறிதொரு பொருளில்லையோ அதுவே பிரம்மம். அதுவே உண்மை அறிவு இன்பமாகிய ஸச்சிதானந்தம். இது இறைவனுடைய சொரூப நிலை அல்லது நிர்குண நிலை.

இரண்டாவதான தடஸ்த நிலை என்பது மாயா சக்தியின் துணை கொண்டு பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், கணபதி, முருகன், சக்தி, சூரியன், ஐயப்பன் முதலிய பற்பல வடிவங்களில் தோன்றுவது. "கங்கு கரையற்ற கடல்நீர், துருவப் பிரதேசங்களில் குளிர் மிகுதியிஞல் பனிக்கட்டியாக உருவப்படுவது போல பக்தர்களின் அன்பிற்கு இரங்கி அருவமான இறைவன் பற்பல வடிவங்களை எடுக்கிருன்" என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பகர்வார். கீதையில் 12-ஆவது அத்தியாயத்தின் தொடக்கத்தில் இந்தக் கருத்து தெளிவாக்கப்பெற்றுள்ளது.

தமிழ்மறையாகிய திருக்குறளும், சைவ

வைணவ ஆகமங்களும் இறைவனை எண்குணத் தான் (திருக்குறள் பா-10) என்று கூறும்.

இறைவனின் எண்குணங்களாவன:—

(1) தன்வயத்தனுதல் (ஸ்வதந்திரத்வம்)(2) தூய வுடம்பினனாதல் (விசுத்ததேகத்வம்) (3) இயற்கை உணர்வு (அநாதி போதம்) (4) முற்றும் உணர்தல் (சர்வஜ்ஞத்வம்) (5) இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல் (நிராமயத்வம்) (6) பேரருளுடைமை (அலுப்த சக்தி) (7) முடிவிலாற்றலுடைமை (அநந்த சத்தி) (8) வரம்பிலின்பமுடைமை (திருப்தி) என் பனவாம்.

திருக்குறளில் முதற்பாட்டு இறைவனை, பகவன் என்று குறிப்பிடுகிறது. பகவான் என்ற சொல்லின் திரிபே பகவன் என்பதாம் — பகவான் என்ற சொல்லுக்கு, நிறைந்த திரு; மோட்சம், கீர்த்தி, ஐஸ்வரியம் (ஆட்சி), ஞானம், வைராக்யம், என்ற ஆறு குணங்களையுடையவன் என்று பொருள்.

கடவுளின் பெண் வடிவங்களில் முக்கிய மானவை மூன்று; அவை (1) சரஸ்வதி, (2) லட்சுமி, (3) துர்க்கை, 'சரஸ்வதி' என்றால் ஞானவடிவான வளும், ஞானத்தைத் தருபவளுமாம், "லட்சுமி" என்றால் செல்வம், அழகுத் தெய்வம் என்பதாகும். அவள் செல்வத்தையும் அழகையும் தருபவளும் ஆகும். "துர்க்கா" என்றால் ஆபத்திலிருந்து காப்ப வள். வீரமளிப்பவள், என்று பொருள். இத்தகைய நாமங்களும், வடிவங்களும் ஒரே இறைவனது பல் வேறு தன்மைகளைக் குறிக்கின்றன.

"ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி" என்ற ரிக்வேத மந்திரம் இந்தக் கொள்கையை விளக்கு கிறது. அதன் பொருள்; "மெய்ப்பொருள் ஒன்று;

ஞானிகள் அதனைப்பல பெயர்கள் சொல்லி அழைக்கிருர்கள்.'' பல வடிவங்களில் அது தென்படுவதனுல் பல நாமங்கள் ஏற்படுகின்றன. ஒரே பொன் பல அணிகளாகி பல பெயர்கள் பெறுவது போலவும், ஒரே மண் பல பாண்டங்களாகிப் பல பெயர்கள் பெறுவது போலவும் ஆகும்.

2) கடவுளின் அருவ, உருவ, அருஉருவ நிலை:-

இறைவன் உருவமுடையவனும் உருவம் அற்றவனும் ஆவான். அவனுக்கு அருஉருவ நிலையுமுண்டு.

இறைவன் பக்தர்களுக்காக இரங்கி பக்தர்கள் விரும்பும் வடிவில் காட்சி அளிக்கின்ருன். கரையற்ற சச்சிதானந்தக் கடல் இருக்கிறது. அது அருஉருவ நிலையில் தண்ணீர்போல் உள்ளது. பக்தி என்னும் குளிர் காற்றினுல் அந்நீர் உறைந்து பனிக்கட்டி என்னும் உருவம் பெறுகிறது. ஆனுல் ஞானசூரியன் உதித்ததும் உருவம் அற்ற நீராவி போன்று அருவமாக மாறுகிறது. மூன்று நிலைகளிலும் இருப்பது நீர்தான். அதுபோன்று இறைவனும் உருவ அருவ, அருவுருவ நிலைகளில் பக்தர்களின் தரத்திற்குகேற்ப வெளிப்பட்டு அருள் புரிகின்ருன்.

3) உருவ வழிபாடு:-

கலியுகத்தில் இறைவனை அடையச் சிறந்த எளிய வழி பக்தி மார்க்கமாகும், இறைவனிடம் பக்தி செலுத்துவதற்காக பக்தர்கள் பல்வேறு உருவங்களில் அவனை வழிபடுகின்றனர். ஒவ்வொருவரும் அவரவர்களுக்குகந்த விதத்தில் குழந்தையாக, தாயாக, எஜமானனுக, வேலைக்காரனுக, துணைவனுக, கணவனுக, மனைவியாக, பலவித பாவனைகளில் பக்தி செலுத்துகின்ருர்கள். இதற்கென அவர்கள் தங்களுக்கு விருப்பமான உருவினில் இறைவனை வணங்கும் பொழுது இறைவன் அவர்களுக்கு அவ்வண்ணம் காட்சியளிக்கின்ருன்.

சுவாமி விவேகானந்தரிடம் உருவ வழிபாட்டை கிண்டல் செய்து பேசிய ஒரு மன்னனுக்கு அவன் தந்தையின் படம் எவ்வாறு அவனது தந்தையை நினைவூட்டுமோ, மேலும் படத்தை மதிப்பது தந்தையை மதிப்பதற்குச் சமமோ, அவ்வாறே உருவ வழிபாடும் என உணர வைத்தார். மக்கள் இறையுருவின் முன்னர் நின்று சிவா, முருகா காளி, கிருஷ்ணா என்றுதான் அழைக்கின்றனரே தவிர ஏ கல்லே, மண்ணே, செம்பே, பேப்பரே என அழைப்பதில்லை. எனவே உருவ வழிபாடுமூலம் மக்கள் உள்ளத்தில் இறை சிந்தனை பெருகி இறைக் காட்சி கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது என்பதனையும் உணர்த்தினர்.

4) கடவுளின் வாகனங்கள் (ஊர்திகள்):

இந்து சமயம் கூறும் ஒவ்வொரு புராணக் கதையும். ஒவ்வொரு தெய்வ வடிவும், தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டனவேயாம். மனிதனை இறைநிலைக்கு உயர்த்தும் பாங்கில் அமைந்துள்ளன.

ஒவ்வொரு கடவுள் வடிவத்திற்கும் ஒவ்வொரு வாகனம் உள்ளது. ஆலயங்களில் இறைவன் திருவுருவின் முன் பக்கம் வைக்கப்பட்டிருக்கும் வாகன உருவம் திருவுருவின் திருவடியைப் பார்த்தவண்ணம் அமைக்கப்பட்டிருக்கும். நாம் இடைவிடாது இறைவன் திருவடிகளையே எண்ணிச் சரணடைந்து வாழ வேண்டும் என்பதை இது உணர்த்தும். வாகனத்திற்கும் திருவுருவிற்கும்இடையே செல்வது கூடாது. வாகனத்திற்கு இறைவன் திருவடிப்பார்வை தடைபடும் என்பதால் தான் அவ்வாறு செய்யக்கூடாதென கூறப்பட்டுள்ளது. இங்கு நாம்சில இறைவடிவங்களையும் வாகனங்களையும் பற்றி சிறிது பார்ப்போம்.

அ) சிவபெருமானது வாகனம் காளை (ரிஷபம்):-

காளையை நந்திதேவர் என அழைப்பர். சிவபிரானது பூதகணங்களுக்கெல்லாம் நாதர் நந்தி தேவர். கைலாயமாகிற சிவலோகத்தின் காவலாளி இவர்.

மேலும் காளையை உயிர் அல்லது ஜீவான்மாவின் சின்னம் என்பர்.

சிவ சன்னிதியில் சிவனையே நோக்கிய வண்ணம் படுத்திருக்கும் காளை சிவனை நினைந்து பணிந்து நிற்கும் பக்தனைக் காட்டுகிறது. காளையை தர்மம் அல்லது அறத்தின் சின்னம்என்றும் கூறுவர். மேலும் காளையினுல் ஒரு உழவனுக்குச் செல்வங்கள் உண்டாவதுபோல் சிவ தருமங்களை, தொண்டுகளைச் செய்தால் நாமும் இறைவனது வாகனமாகலாம் என்பது பொருள்.

ஆ) திருமாலின் வாகனம் கருடன்:-

கருடப் பறவையைக் காண்பது நல்ல மங்கள சகுனம் அல்லது அறிகுறி என்பார்கள். கருட மந்திரம் ஜபித்தால் விஷம் மாறும் என்பர். அத்தகைய நல்ல பறவையாகிய கருடன் தெய்வத்தன்மை வாய்ந்தது என கீதை (10-30) கூறுகிறது. இத்தகைய காரணங்களால் கருடனை திருமாலின்வாகனம் எனக் கூறுவர்.

இ) விநாயகரின் வாகனம் எலி (பெருச்சாளி):-

விநாயகர் பானை வயிற்றையும், யானைத்தலையையும் உடையவர் என்பது அவரது பிரம்மாண்ட விசுவரூபத்தைக் காட்டுகிறது. அவரே மூஞ்சுறு (பெருச்சாளி) மீது ஏறுகிருர் என்பது அணுவிலும் அமர்ந்திருக்கிருர் என்பதைக்காட்டுகிறது. இறைவனை அணுவிற்கும் அணுவாகவும், பெரிதிற்கும் பெரிதாகவும் (மகதோபகியான்) இருக்கிருன் என வேதம் கூறும்.

ஈ) முருகனின் வாகனம் மயில்:-

மயில் தோகை விரித்து நின்ருல் ஓங்காரம் போல் தோன்றும். ஓங்காரம் ஆகிய நாத தத்துவத்தைத் தனது இருப்பிடமாக, வடிவமாக இறைவன் கொண்டுள்ளான் என்பதே மயில் வாகன தத்துவம். "ஆன தனி மந்த்ர ரூப நிலை கொண்டது ஆடு மயிலென்பது அறியேனே" என்பது திருப்புகழ்.

உ) தேவியின் வாகனம் சிங்கம்:-

சிங்கம் வலிமைக்கும், தலைமைக்கும் சின்னமாய் அமைவது; எதிரிகளைத் தாக்கி அழிப்பது. அம்பிகை தீய சக்திகளை அழிப்பவள் என்பதைக் குறிக்கிறது. மேலும் சிங்கம் 12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இணை சேர்ந்து குட்டி போடுவது. அதனுல் அது வலிமையிற் சிறந்து விளங்குவது. சிங்கத்திடமிருந்து மனிதன் பிரம்மச்சரியத்தின் சிறப்பைத் தெரிந்துகொள்ளலாம்.

5) கடவுளின் ஆயுதங்கள்:

நாட்டைப் பாதுகாக்கும் காவலர்கள் ஆயுதம் தாங்கியிருப்பர். அவர்கள் தீயவர்களை அடக்குவதற்காக அவ்வாயுதங்களைப் பயன்படுத்துகின்றனர். அதுபோன்று இறைவடிவம் ஆயுதமேந்திய நிலையில் காட்சி தருவது தீயவர்களிடமிருந்து நல்லவர்களைப் காப்பாற்றும் தத்துவத்தை உணர்த்துகிறது. மேலும் இறைவன் தீயவர்களுக்குத் தண்டனை வழங்குவதன் மூலம் அவர்களைத் திருத்தித் தன்பால் இழுக்கிருன். பக்தர்களின் அகங்காரத்தை அவன் அழித்து முக்தி அருளுகிருன். எனவே, ஆயுதம் உயிர் வகைகளைக் காப்பாற்றுவதற்கு பயன்படுகிறதேயன்றி தண்டித்து அழிப்பதற்கல்ல. இதை நாம் உணர்ந்தால் கடவுளின் ஆயுதங்களின் தத்துவத்தையும் உணரலாம். இங்கு சில ஆயுதங்களைப் பற்றிப் பார்ப்போம்.

(அ) பாசம் – அங்குசம்: கணபதி உருவில் நமக்கு பாசம் - அங்குசம் ஆகிய ஆயுதங்களைக் காணலாம். பாசம் தீயவர்களை துன்பத்தில் கட்டவும், அங்குசம் நல்லோர்களை அல்லது பக்தர்களை சரியான வழியில் நடாத்தவும் பயன்படுகிறது.

(ஆ) வாள்: பல கைகளில் பலவித ஆயுதங்களை ஏந்தி பயங்கொள்ளத் தக்க வடிவுடன் விளங்கும் சக்தி கருணை பொழியும் முகத்துடன் அபய, வரதக்கரங்களுடன் காட்சி தருகிருள். அவள் தாங்கியிருக்கும் இரத்தம் வடியும் வாள் மனிதனின் அகங்காரத்தை அழித்து தீயோர்களைத் தண்டிப்பதை உணர்த்துவதுடன் உலகின் நிலையாமையையும் உணர்த்துகிறது.

(இ) திரிசூலம்

சிவனது ஆயுதமாக திரிசூலம் காணப்படுகிறது. சூலத்தின் மூன்று கூர்மையான முனைகளும் நம் மூன்று மலங்களையும் (ஆணவம், கன்மம், மாயை) அழித்து நம்மை முக்தி நிலைக்கு உயர்த்துகின்றதைக் குறிக்கும்.

ஈ) சக்கரம், கதை:

சக்கரம், கதை ஆகிய ஆயுதங்களைத்தாங்கி திருமால் காட்சி தருகிருர். 'சக்கரம்' பக்தர்களைப் பாதுகாக்க, தீயோரை ஒழிக்க பாய்ந்து வரும் ஆயுதம். 'கதை' தீயோர்களை அழிக்கவும் பக்தர்களின் அகங்காரத்திற்கு அடி கொடுத்து அடக்கி அருள் பாலிக்கவும் செய்வதற்கு அறிகுறியாகும்.

உ) வேல்:

முருகனின் ஆயுதம் வேல் ஞானசக்தியின் சின்னம். வேல் தீயவர்கள் நேரேபாய்ந்து அழிப்பதுடன், பக்தர்களின் அஞ்ஞானத்தை அழித்துஞானத்தை வழங்கும் ஞானசக்தியாக விளங்குகிறது.

பாடம் 3

ஆலயமும் இறைவழிபாடும்

1. ஆலய வழிபாட்டின் சிறப்பு:-

இறைவன் எங்கும் நிறைந்திருப்பவனுயினும் மெய்யன்பினுல் பக்தர்கள் வழிபடும் உருவத்திலும் இடங்களிலும் சிறப்பாகத் தென்படுவான். ஆண்டவன் அன்பிற்குக் கட்டுப்படுபவன், "அன்பருக்கன்பனே" எனத்திருவாசகம் சொல்லும். பசுவின் உடலெங்கும் பாலின் அம்சம் நிறைந்திருந்தாலும் அதன் மடுவிலிருந்து பால் வெளிப்படுவது போலவும், தண்ணீர் தரையின் கீழ் எங்கும் இருந்தாலும் ஊற்று, கிணறு, குளங்கள் வழியாக மக்களுக்கு உதவுவது போலவும் இறைவன் ஆலயங்களிலுள்ள மூர்த்தி வழியாக மக்களுக்கு அருள் சுரக்கிருன். பக்தியை வளர்த்து இறைவனை எளிதாகக் கண்டு கொள்வதற்கு உரிய இடமாக ஆலயம் அமைகிறது. ஆகம விதிப்படி ஆலயங்களை அமைத்து மூர்த்தியை நிலைபெறச்செய்து பூசை செய்து வந்தால் அங்கே இறைவன் எளிதில் காட்சி கொடுத்து, வேண்டும் வரங்களைக் கொடுக்கிருன். சிவஞான போதம் என்ற நூலில் "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்று கூறப்பெற்றுள்ளது. கோயிலிலுள்ள இறைவடிவத்தை இறைவனுகவே பாவித்தல் வேண்டுமென்பது அதன் பொருள். மிகத்தூய்மையாகவும், நறுமணம் நிறைந்ததாகவும், அமைதியாகவும், காப்பாற்றப் படுகின்ற ஆலயத்துள் கடவுளின் ஒளி மிகுதியாக நமக்குத் தென்படும். எளிதில் உள்ளம் குவியும். அதனுல் தான் ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனக் கூறியுள்ளனர்.

ஆலயத்தை மையமாகக்கொண்டு சமூக ஒற்றுமையையும், ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் வளர்க்க முடியும். அதற்கு ஆலய நிர்வாகக் குழு திறமையுடன் செயல்பட வேண்டும். ஆலயத்தை மையமாகக் கொண்டு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபடவேண்டும்.

ஆலயத்திற்குச் செய்கின்ற தொண்டுகள் ஆண்டவனுக்குச் செய்கின்ற வழிபாடேயாகும். அதனைச் சரியை எனக்கூறுவர். எத்தனையோ நாயன்மார்களும், ஆழ்வார்களும், ஆலயங்களில் உழவாரப் பணி செய்தும், நந்தவனம் அமைத்தும் பூக்கள் கொய்து மாலைகள் கோர்த்தும், திருவிளக்கிட்டும், நறும்புகை இட்டும் இறையருளைப் பெற்றுப் பொலிந்துள்ளனர்.

"கோயிலில்லா ஊரகத்தே குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழியின் பொருளை உணர்ந்து செயல்படுவோமாக.

2) சில தத்துவ விளக்கங்கள்:-

அ) சின்முத்திரை: 'தட்சிணா மூர்த்தி' 'ஐயப்பன்' போன்ற திருவுருவங்களில் 'சின்முத்திரை' யைக் காண்கிறோம். வலது கைப்பெருவிரல் நுனியையும், ஆள்காட்டி விரல் நுனியையும் சேர்த்துக் காட்டுதல் சின்முத்திரையாகும். பெருவிரல் இறைவனையும், ஆள்காட்டி விரல் உயிரையும் மற்ற மூன்று விரல்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் குறிக்கும். மும்மலங்களையும் விட்டு உயிர் (ஜீவாத்மா) இறைவனை (பரமாத்மாவை) சேர்ந்திருத்தல் முக்தி. இதனையே சின்முத்திரை காட்டுகிறது.

ஆ. அபயக்கரம்:- இறைவன் திருவுருவ அமைப்பில் 'அபய முத்திரை' என்பது கை விரல்கள் மேல் நோக்கியிருக்குமாறு உள்ளங்கையைக் காண்பிப்பதாகும். 'அபயம்' என்றால் 'நீ அஞ்சாதே' எனக் காட்டுவதாகும். நமக்குத் துன்பங்கள் வரும் பொழுது இறைவன் நம்மைக் காப்பான் என்பதை உணர்த்துவதே அம் முத்திரையின் நோக்கம். 'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்பது பொதுக்கருத்து.

இ: வரதக்கரம்:- கை விரல்கள் கீழ்நோக்கியிருக்குமாறு உள்ளங்கையைக் காண்பிப்பது வரத முத்திரையாகும். "உனக்கு வேண்டிய வரங்களைத் தருகிறேன்." எனக் காட்டுவதாகும். நமக்கு எது தேவையோ அதை இறைவன் தருவான் என்பதை உணர்த்துவதே இம்முத்திரையின் நோக்கம். 'கடவுளைத் தொழு, குறைகள் அகலும்'.

ஈ. பலிபீடம்: கோவிலில் கொடி மரத்தின் பக்கத்தில் பலிபீடம் அமைந்திருப்பதைப் பார்க்கலாம். நாம் இறைவனை வழிபடச் செல்லும்போது அகப்புறச் சுத்தமாகச் செல்லவேண்டும். நம்மிடம் உள்ள மும்மலங்களையும் விடுத்து பக்தியுடன் செல்ல வேண்டும் பலிபீடத்தில் நம் மன மாசுகளாகிய மும்மலங்களையும் பலியிட்டுத் தூய்மையாகச் செல்ல வேண்டியதை உணர்த்தவே இது ஆலயத்தின் முன் பக்கம் அமைக்கப்பட்டுள்ளது. பலிபீடத்தின் பக்கத்தில் ஆண்கள் சாஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், செய்தபின் இறைவனது தரிசனத்திற்குச் செல்லவேண்டும்.

உ. கொடிமரம்:-

நம் முன்னோர்களாகிய யோகிகள் நமது முதுகுத் தண்டில் சுழுமுனை, இடா, பிங்கலை ஆகிய மூன்று சூட்சும நாடிகள் செல்வதைக் கண்டுபிடித்துள்ளனர். அம் மூன்று நாடிகளும் அமைந்துள்ள

முதுகெலும்பைக் குறிக்கும் விதமாக கொடிமரம் அமைந்து உள்ளது. சுழுமுனை நாடி வழியே குண்டலினி சக்தியை எழுப்பி, ஏழாவது ஆதார பாகிய சகஸ்ராரத்தில் இருக்கும் சிவனுடன் ஒன்று படுத்துவதே கொடியேற்றத்தின் தத்துவம். மேலும் இறைவனது ஆட்சிக்குட்பட்டதுதான் அகில உலகும் என்ற உண்மையையும் கோவில் கொடிமரம் விளக்குகின்றது. தனதுபக்தனை இறைவன் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்கிருன் என்றும் பொருள்படும்.

ஊ. தீபாராதனை:- 'தீபாராதனை' ஆண்டவன் அருட்பெருஞ் சோதியாய் இருக்கிருன் என்பதைக் காட்டுகிறது.

முதலில் பல சுடருள்ள தீபத்தைக் காட்டுவது ஆண்டவனை 96 தத்துவ வடிவமாய் இருக்கிருன் என்பதைக்குறிக்கும். இரண்டாவது ஐந்து சுடருள்ள தீபம்- ஐம்பூதங்களாய் இருக்கிருன் என்பதையும், ஒரு சுடர்- மாயா சக்தியையும், கடைசியில் கற்பூர ஆரத்தி ஜீவான்ம, பரமான்ம ஐக்கியத்தையும் காட்டுகிறது. 96 தத்துவங்களும், ஐந்தில் ஒடுங்கி ஐந்தும் ஒன்றில் ஒடுங்குகிறது என்பது தீபாராதனை தத்துவமாகும். கற்பூர ஆரதியானது ஜீவாத்மா பரமாத்மாவுடன் இரண்டறக் கலத்தலைக் குறிக்கிறது.

எ. தேங்காய் உடைத்தல்:- ஆணவம், தேங்காய் ஓடு உள்ளம், தேங்காயின் உட்பாகம் என்ற தத்துவமாகும். நமது ஆணவம் இறைவன் அருளால் உடைந்து உள்ளம் தேங்காயின் உட்பாகம்போல் வெண்மையாக இனியதாக மாறவேண்டும் என்பதைத் தேங்காயுடைத்தல் உணர்த்தும். மேலும் நமது பாவங்களெல்லாம் பிள்ளையார் அருளால் சிதறுண்டு போகின்றன என்றும் எண்ணி தேங்காயை சிதற வைக்கவேண்டும்.

ஏ. தோப்புக்கரணம்: முன்பு கஜமுகாசுரன், தேவர்கள் தன்முன் தோப்புக்கரணம் போடவேண்டுமென ஆணை பிறப்பித்திருந்தான். அந்த கஜமுகாசுரனை விநாயகர் கொன்றார். எனவே, அசுரத்தலைவன் முன் தோப்புக்கரணம் இட்ட நிலை மாறியதால் நாங்கள் தேவதேவனாகிய உங்கள் முன் தோப்புக்கரணமிடுகிறோம் என தேவர்கள் கூறினர். விநாயகர் மகிழ்ந்து இனி என் முன்தோப்புக்கரணம் இடும் பக்தர்கள் என் அருளுக்குப் பாத்திரமாவார்கள் என்று அருளினார்.

தோப்புக்கரணம் போடுவதால் நம் மனத்தின் அகங்காரம், வெட்கம் யாவும் மறைகிறது. பணிவும், பக்தியும் வளர்கிறது. அதன் மூலம் இறையருள் கிடைக்கிறது.

3) ஆலய வழிபாட்டு முறை:–

உடல் தூய்மையுடனும், அகத் தூய்மையுடனும், சமயச் சின்னங்கள் (திருநீறு, குங்குமம, சந்தனம்) போன்றவற்றை அணிந்தும் ஆலயத்திற்குச் செல்லுதல் வேண்டும். கோபுரத்தைக் கண்டதும் இரண்டு கரங்களையும் தலைமேல் குவித்து மூலமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு, கோபுரத்தை ஸ்தூல லிங்கமாகவும், கடவுளின் பாதங்களாகவும், பாவித்து வணங்கவேண்டும். கோயிலினுள் புகுந்து முதலில் வெளிப்பிரகாசத்தை வலம் வர வேண்டும். கொடிமரத்தின் பக்கத்தில் சென்றதும் ஆண்கள் சாஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

சாஷ்டாங்க நமஸ்காரமாவது தலை, செவியிரண்டு, கையிரண்டு, புஜங்களிரண்டு, மோவாய்க் கட்டை ஆகிய எட்டு அவயங்களும் பூமியில் படும்படி வணங்குதலாகும். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, முழங்தாளிரண்டு ஆகிய ஐந்து

அவயங்களும் பூமியில் படும்படி வணங்குவதாகும். பின்பு கொடிமரத்தையும், பலி பீடத்தையும் (இருந்தால்) வலமாக வந்து, கன்னிமூலையில் விநாயகரை வணங்கவேண்டும். வலக்கையை இடக்கையின் முன் வைத்து வலக்கையால் இடப்புறத்திலும், இடக்கையால் வலப்புறத்திலும் மண்டையில் மூன்று முறை குட்டுகளிட்டு, வலக்கையால் இடக்காதையும் இடக்கையால் வலக்காதையும் பிடித்துக்கொண்டு மூன்று முறை தோப்புக்கரணமிட்டு விநாயகர் தோத்திரம் கூறிவணங்குதல் வேண்டும். விநாயகரை வணங்கிய பின்பு துவரா பாலக விக்கரங்களின் முன்சென்று (இருந்தால்) "அடியேன் உட்சென்று இறைவனை வணங்குவதற்கு அனுமதி தந்தருளும்" என்று வேண்டிக்கொண்டு, மூலஸ்தானம் சென்று இறைவனை வணங்கித் தோத்திரப்பாக்கள் கூறுதல் வேண்டும். தேங்காய், பழம் முதலிய நிவேதனப் பொருட்களைக் கொடுத்து அர்ச்சனையும் செய்விக்கலாம். கற்பூர தரிசனம் செய்து பிரசாதம் வாங்கித் தரிசித்துக்கொண்டு மூலஸ்தானமூர்த்தியை நன்றாய் மனதில் பதியவைத்துக் கசிந்துருகித் துதித்து வெளிவரல் வேண்டும். பின் அம்பிகை சந்நிதியிலும் அவ்வாறே வணங்கவேண்டும்.

கோயிலில் கிடைக்கும் தீர்த்தத்தைக் கீழே சிந்தாமல் இறைவனது நினைவுடன் பருகவேண்டும். கோயிலின் உள்ளே உரக்கப் பேசக்கூடாது. இறைவனுடைய வாகனங்களுக்கும் (மயில், நந்தி, கருடன். சிங்கம்) மூலஸ்தானத்திற்கும் குறுக்கே நடக்கக் கூடாது. அதன்பின் உட்பிரகாரங்களிலிருக்கும் ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கிகொண்டே வலம் வரல்வேண்டும். தக்ஷிணமூர்த்தி கல்லாலின் கீழ் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமரர் முதலிய நால்வருக்கு உபதேசம் செய்ய எழுந்தருளிய

திருமூர்த்தியாவார். தக்ஷிணாமூர்த்தி சின் முத்திரையுடன் எழுந்தருளியுள்ளார். ஆதலால் அவர் சந்நிதியடைந்த நாம் இறைவனைக் குருவாகப் பாவித்து வணங்கவேண்டும். அரன் உபதேசிக்கின்றபடி ஆணவம், கன்மம், மாயைகளை அகற்றி இறைவனை அடைய முயலுதல் வேண்டும்.

சண்டேசுரர் கோயில், கோயிலின் இடப்பக்கத்தில் சிறியதோர் இடைவழி விட்டு அமைக்கப்பட்டிருக்கும். மூலஸ்தானத்தில் சார்த்திய மாலையும், நைவேத்திய மிச்சமுமே இங்கு பூசைக்குரியன. இவர் கடவுள் திருவருள் பெற்ற அடியார். இவர் எப்போதும் சிவ தியானம் செய்துகொண்டே இருக்கிறார். இவரைக் கோயில் தரிசனம் அனைத்தும் முடிந்த பிறகு வணங்குதல் வேண்டும். சிவனுக்குரிய பொருளை திருடவில்லை என்பதை உறுதிப் படுத்தும் வகையில் இவர் முன் கை காட்டியப்பின் சிவதரிசன பலனை தருமாறு பிரார்த்திக்கவேண்டும். கோயில் வழிபாடனைத்தும் முடிந்த பிறகு கொடி மரத்திற்குச் சற்று தூரத்தில் வடக்கு நோக்கியோ, கிழக்கு நோக்கியோ விலகியிருந்து மூலமந்திரத்தை நூற்றெட்டு முறையோ அதற்கு மேற்படவோ ஜெபித்து, நாம் கண்ட இறைவன் திருவுருவத்தை மனதில் எண்ணித் தியானம் செய்யவேண்டும்.

சிவ தியானத்திற்குரிய மூலமந்திரம் "ஓம்நம: சிவாய" என்பதாம். இதை பஞ்சாக்ஷரம் (திருஐந்தெழுத்து) என்று கூறுவர்.

விஷ்ணு தியானத்திற்குரிய மூலமந்திரம் "ஓம் நமோ நாராயணாய" என்பதாம். இதை அஷ்டாக்ஷரம் (திருஎட்டெழுத்து) எனக்கூறுவர்.

சுப்பிரமணிய தியானத்திற்குரிய, மூலமந்திரம் "ஓம்சரவணபவ" என்பதாம். இதனை ஷடாக்ஷரம் (திருஆறெழுத்து) எனக்கூறுவர்.

3. விபூதி அல்லது திருநீறு தயாரிக்கும் முறை:

இதனை பசிதம் பசுமம் (பஸ்மம்) க்ஷாரம், இரக்ஷை எனவும் கூறுவர். பசுவின் சாணத்தை சுத்தமாக எடுத்து, கோஜலமோ, நீரோ தெளித்துப் பிசைந்து, உருண்டைப்பிடித்து வெயிலில் உலர்த்த வேண்டும். நன்றாக உலர்ந்த உருண்டைகளை நெல் உமியினையோ, நெல் சண்டினையோ, கொண்டு இடையிடையே இட்டு குவித்து மூடி 'தீ' மூட்ட வேண்டும். உமியும் சண்டும் சாம்பலாகச் சாம்பலாக, மேலும் மேலும் கொட்டிக்கொண்டிருக்க வேண்டும். இங்ஙனம் சுமார் ஒருவாரம் எரிந்து சாம்பலாகிய பின் அக்குவியல் தானாக சூடு ஆறும் வரையும் பொறுத்திருந்து மூடியிருக்கும் சாம்பலை நீக்கி, நீறி இருக்கும் சாணி உருண்டைகளை சுத்தமான பாத்திரத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். பின்னர் அவற்றைப்பொடி செய்து துணியினால் வடிகட்ட வேண்டும். இதனை வஸ்திரகாயம் என்று கூறுவர். இப்பொழுது அணிந்து கொள்வதற்குரிய புனித விபூதி கிடைக்கிறது. இதனைப் பானையிலோ வேறு பாத்திரத்திலோ சேகரித்து நன்றாக மூடி வைத்தல் வேண்டும். வேண்டும்பொழுது சிறிது விபூதியை அவசியத்திற்குத்தக்க, சம்புடத்திலோ, விபூதிப் பையிலோ, குடுக்கையிலோ எடுத்து வைத்து அன்றாட தேவைக்குப் பயன்படுத்தல் வேண்டும். சிலர் மல்லிகை, முல்லை, பாதிரி, சிறு செண்பகம் முதலிய சுகந்த புஷ்பங்களை இட்டு நறுமணம் ஊட்டுவதும் உண்டு. வெண்ணிற விபூதியே தரித்துக் கொள்வதற்குச் சாலச்சிறந்தது. விபூதியை கிழக்கு முகமாகவேனும், வடக்கு முகமாக வேனும் இருந்து கொண்டு தரித்தல் வேண்டும்.

விபூதியை உத்தூளனமாகவோ, திரிபுண்டரமாகவோ தரித்தல் வேண்டும். விபூதியை அப்படியே அள்ளி நெற்றியில் பூசிக்கொண்டு, கைகளில்

மணிக்கட்டிலிருந்து மேல் நோக்கி புஜம் வரையிலும், உடம்பில் நாபி முதல் மேல் நோக்கி கழுத்துவரை யும் பொடியாகப் பூசிக் கொள்ளுதல் தான் உள் தூளனம் ஆம். தண்ணீர் சேர்த்து இரு உள்ளங்கை களாலும் குழைத்து, வலது கைகட்டு, நடுமோதிர விரல்களால் அணிந்துகொள்வது திரிபுண்டரம். ஆச்சாரியர் மூலம் தீக்ஷை பெற்றவர்கள் திரிபுண்டர மாக அணிவது சிறப்பு. எல்லோரும் எப்பொழுதும் உள் தூளனமாக அணிந்து கொள்ளலாம். தீக்ஷை பெற்றவர்கள் மந்திரங்களை நினைந்து அங்கங் களில் தரித்தல் வேண்டும். தீக்ஷை இல்லாதவர்கள் அவரவர் இஷ்ட தேவதையை நினைந்து உள் தூளனமாகத்தரித்தல் வேண்டும். விபூதியை காலை, மாலை வேளைகளிலும், நீராடிய உடனும், பூசைக்கு முன்னும் பின்னும், உணவுக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், வெளியே செல்லு முன்னும், சென்று திரும்பிய பின்னரும் சிவ சிந்தனை யுடன் தரித்தல் வேண்டும். பூசுகின்ற நீறு தன் பாதத்திலோ தரையிலோ விழாமல் அண்ணாந்து பூசுதல் வேண்டும். இரு செவிகளிலும் தோள்களி லும் விழலாம் தீட்டுக் கழிக்கும் சக்தி வாய்ந்த திருநீற்றுக்கு தீட்டு என்பது கிடையாது.



பாடம் 5

பாரத நாடும் பாரதப் பண்பாடும்

1. பாரதத்திலுள்ள முக்கிய ஆலயங்கள்

1. ஸ்ரீ ராமேசுவரம் :-(சேது பந்தம்) தமிழகத்திலுள்ள மிக முக்கியமான இவ்வாலயம் தென்னாட்டு மக்களேயும் வடநாட்டு மக்களையும் உறவுகொள்ளச் செய்வதாகும் இத்தலத்திலுள்ள ராம நாதசுவாமி(சிவலிங்க மூர்த்தி) இந்தியாவிலுள்ள பனிரெண்டு ஜோதிர் லிங்கங்களில்ஒருவர். வடக்கில் காசிக்குள்ள சிறப்பும் புகழும் தெற்கில் இந்த ஆலயத்திற்கு முண்டு. திரேதாயுகத்தில் வாழ்ந்த ஸ்ரீராமபிரான் இலங்கை வேந்தனுகிய ராவணனைக் கொன்ற பாவந் தீர்ப்பதற்காக இத்தலத்தில் மணலால் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணி பூசித்ததாக இராமாயணங் கூறுகிறது. ஆதலால் இச்சிவலிங்கத்திற்கு இராம லிங்கர் என்று பெயர் வந்தது. தினமும் கங்காஜலம் அபிஷேகம் நடைபெறும். இத்தலத்தில் தீர்த்தஸ்நானம் மிக முக்கியமானது. "அக்கினி தீர்த்தம்" என்றழைக்கப்படும் கடல் தீர்த்தத்தில் சூரியோதயத்திற்கு முன்குளித்தால்பாவங்கள் நீங்கிப் புண்ணியமும் உடல் நலமும் பெறுவர் என்பது நம்பிக்கை. கோடி தீர்த்தம் கோயிலுள் இருக்கும் கிணறு ஆகும். கோவிலுக்குள் அனேக தீர்த்தக் கிணறுகள் உள்ளன. பக்தர்கள் அவைகளிலெல்லாம் குளிப்பர். இறந்தவர்களது எலும்புகளை அக்கினி தீர்த்தமாகிய கடலில் கலக்கி பித்ருதர்ப்பணம் செய்வர். ராமேஸ்வரம் கோவில் தமிழகக் கட்டிடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இந்தப் பேராலயத்தை நிர்மித்தவர்கள் ராமநாதபுரம் ராஜக்களாவர் ஆதலால் அவர்களுக்குச் சேதுபதி என்று

பெயர் வழங்கி வந்தது. சேது என்பது ராமேசுவரத்தின் பெயராகும். இக் கோவிலின் பிரகாரங்கள் உலகப் புகழ் வாய்ந்தவையாகும். இவை மொத்தம் சுமார் 4000 அடி நீளமுள்ளவை. இது உலக அதிசயத்தி லொன்றெனக் கூறுவர். மூன்றும் பிராகாரத்தில் 1212 கல்தூண்கள் உள்ளன. ராமேஸ்வரம் ஒரு தீவாகும். இத் தீவில் மற்றும் பல கோயில்களுள்ளன.

2. பத்ரிநாத்:- பாரத நாட்டின் வட எல்லையாகிய இமய மலையில் 10250 அடி உயரத்தில் பத்ரிநாத் ஆலயமுள்ளது. நாராயணர் கோயில் கொண்டிருப்பதால் பத்ரி நாராயணமென்றும் இதனைக்கூறுவர். இக் கோயில் நரபர்வதம், நாராயணபர்வதம் என்ற இரண்டு மலைகளுக்கிடையே, அலகாநந்தா என்ற கங்கையின் போஷக நதிக்கரையிலுள்ளது. இது இமய மலையின் தொடக்கமாகிய ஹரித்வாரத்திலிருந்து 325 கி.மீ. தூரத்திலுள்ளது. இங்கு உஷ்ண ஜல ஊற்று இருக்கிறது. கொதிக்கின்ற சூடுள்ள வெந்நீருற்றைச் சிறு தொட்டிகளில் தேக்கி மக்கள் நீராடுவர். கடுங்குளிர் வாட்டும் இவ் விடத்தில் இந்த வெந்நீருற்று மக்களுக்கு ஒரு வரப்ரசாதமே. இங்குள்ள நாராயணர் ஆலயத்தை ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள் புனர்பிரதிஷ்டை பண்ணி கேரளத்திலுள்ள நம்பூதிரியை பூசாரியாக நியமித்து கேரள முறைப்படி பூசையை ஏற்படுத்தினர். 1200 ஆண்டுகளாக அந்த முறையே இன்றும் கையாளப்பட்டு வருகிறது. பூசாரிக்கு ராவல்ஜி என்று பெயர். இங்கு வரும் வழியில் 48 கி.மீ கீழே ஜோஷிமட் என்ற ஜோதிர் மடம் இருக்கிறது. இது ஆதிசங்கரர் நிறுவிய நான்கு பெரும் மடங்களுள் ஒன்று. அவரது வாரிசான ஜோதிர் மடம் சங்கராச்சாரியர் இங்கு தங்குகிறார்.

பத்ரிநாத் கோயில் ஆண்டு தோறும் மே மாதம் ஆரம்பத்திலிருந்து நவம்பர் முடிய திறந் திருக்கும். மீதி மாதங்கள் பனிக்கட்டியால் மூடப் பட்டுவிடும். மேயில் முதல் முதல் உடைதிறந்து ஆலயத்திலுள்ள அணையாத அகண்ட ஜோதியைத் தரிசிக்க பெரும் பக்தர் கூட்டம் கூடும். ஐந்து மாதமும் அடைபட்டுக் கிடக்கும் ஆலயத்துள் அணை யாத பெரிய நெய் விளக்கு ஏற்றி வைப்பார்கள். இங்கு பனிரண்டு மாதங்களும் தங்கியிருக்கும் சில தவசிகளும் இருக்கிறார்கள். வெயில் காலத்தில் நூற்றுக் கணக்கான துறவிகளும் பக்தர்களும் தங் கித் தவஞ்செய்வார்கள். அவர்களுக்கெல்லாம் இல வசமாக இருவேளை உணவும் தேவையான கம்பிளி முதலியவைகளும், காளி கம்பிளி வாலா சத்திரத் திலிருந்தும் பஞ்சாப் சிந்த் சத்திரத்திலிருந்தும் தரப்படுகின்றன. இது தியானம் செய்ய மிக மிகப் பொருத்தமான இடம்.

3. ஸோமநாதர் ஆலயம்:-

இது இந்தியாவிலுள்ள பனிரண்டு ஜோதிர் லிங்கங்களில் ஒன்று. ஜோதிர்லிங்கமென்றால் பண்டு பண்டேயுள்ள சிவலிங்க வழிபாட்டுத் தலங் கள் என்பது பொருள்.

குஜராத் (சௌராஷ்ட்ர) மாநிலத்தில், மேற்குக் கடலோரமிருக்கும் பிரபாஸ்பட்டண் என்ற நகரில் தான் புகழ்மிக்க இந்த ஸோமநாதர் ஆலயம் அமைந்துள்ளது.

ரிக்வேதத்திலும், மகாபாரதம், ஸ்கந்தபுராணம் முதலிய பழமை பெருமை வாய்ந்த சமய நூல்களி லும், இந்தப் புண்ணியத்தலம் பற்றிய குறிப்புகள் உள்ளன.

சைவசமயத்தின் பிரிவுகளிலொன்ருகிய பாசுபதமதம் இங்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே தழைத்தோங்கியிருந்தது.

ஆதியில் இரண்டுதடவைகள் கொள்ளையர்களால் அழிவுற்ற இப் பேராலயம் மூன்ரும் முறை அழகாகக் கட்டப்பெற்றது. அதனை கி.பி. 1026ல் மகமது கஜனி என்ற கொடியவன், கொள்ளையடித்துத் தீக்கிரையாக்கியதோடு ஸோமநாதலிங்கத்தையும் தகர்த்துப் பொடிப்பொடி ஆக்கினுன். அப்போதைய போரில் 50,000 இந்துக்கள் உயிர் துறந்தனர்.

அதன்பின்னர் பாழடைந்து கிடந்த இப்பதியில், சாலுக்கிய மன்னனுகிய குமாரபாலன் ஸோமநாதருக்குப் புதியதோர் பேராலயம் அமைத்து, நகரைச்சுற்றி கோட்டையும் அமைத்தான். ஐந்தாம் முறையாகக் கட்டப்பெற்ற அவ்வழகிய ஆலயம் அல்லாவுத்தீன் கில்ஜியின் படைத்தலைவனுல் கி.பி. 1296 ல் தகர்க்கப் பெற்றது.

பின்னர் கி.பி. 1783 ல் இந்தூர் ராணி அகல்யாபாய் ஹோல்கார் புதிதாக ஓர் ஆலயத்தை அமைத்தார். அதன் மூலஸ்தானம் பூமிக்கடியில் அமைந்துள்ளது.

தற்போதுள்ள ஆலயம் 1951 ல் ஸ்ரீ வல்லபாய் பட்டேல், மகாராஜா ஜாம்ஸாஹேப் ஸ்ரீ கெ. எம். முன்ஷி முதலியோரின் நன்முயற்சியால் கட்டப்பெற்றது. இதில் சிவலிங்கப் பிரதிஷ்டைபண்ணியது அப்போதைய ஜனுதிபதி டாக்டர் ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் ஆவார்.

இந்தப் புனித தலத்திலேயே பகவான் ஸ்ரீகிருஷ்ணருடையவும் பலராமருடையவும் சமாதிகள் அமைந்துள்ளன.

4. புரிஜகன்னுதம்:- இத்தலம் இந்தியாவின் கிழக்கு கடலோரமாக கல்கத்தாவிலிருந்து சுமார் 200 மைல் தெற்கே இருக்கிறது. இங்கு ஸ்ரீ கிருஷ்ணர் பலராமர், சுபத்திரை ஆகிய மூன்று மூர்த்திகளும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டையாகி உள்ளனர். இங்குதான் ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மகாப்ரபு முக்தியடைந்தது. அவருக்குத் தனியாக ஒரு மடமும் கோயிலும் உள்ளன. இத்தலத்தில் அனுதிகாலம் முதலே ஜாதி வேற்றுமையின்றி எல்லோரும் ஜகன்னுதனை வழிபட்டு வருகின்றனர். இங்கு புதிய பானைகளில் அன்ன நிவேத்தியம் பாகம் பண்ணி பகவானுக்குப் படைப்பர். அந்த அன்னம் 'மகாப்ரசாதம்' என்று அழைக்கப்படுகிறது. அதைப் பக்தர்கள் மிகப் புனிதமாகக் கருதுகின்றனர். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதாவது கங்கா ஜலத்தையும், விருந்தாவன மண்ணையும், ஜகன்னுத்புரி மகாபிரசாதத்தையும் ப்ரம்மமாகவே கருத வேண்டும். நிவேத்யமான சோற்றை வெயிலில் உலர்த்தி பக்தர்கள் கொண்டு போவதற்கு வசதியாக சிறிய துணிப்பைகளில் விற்பது வழக்கம். எவ்வளவு காலமும் அதை வைத்துக் கொண்டு சிறிது சிறிதாக உட்கொள்ளலாம். இங்குள்ள தேரோட்டம் மிக முக்கியமானது.

5. காசி:- (வாராணசி) இந்தியாவின் இதயம் போன்றது இத்தலம். இங்கு ஸ்ரீ விசுவநாதரும் (சிவபிரான்) விசாலாட்சியும், அன்னபூர்ணுவும் கோயில் கொண்டுள்ளனர். மூன்று பேருக்கும் தனித்தனி ஆலயங்களுள்ளன. மேலும் காலபைரவருக்கும், துர்க்கா தேவிக்கும் ஹனுமான்ஜீக்கும் (ஸங்கட்மோசன்) புகழ்மிக்க தனி ஆலயங்களுள்ளன. காசி ஹிந்து டல்கலைக் கழகத்தினுள் (**Benares** Hindu University) மிகப்பெரியதோர் விசுவநாதர் ஆலயம். ஸ்ரீ ஜே. கே. பிர்லாஜீயால்

கட்டப்பெற்றுள்ளது. மேலும் துளசி மானஸ மந்திர் என்ற சலவைக்கல்லாலான கோயிலில் துளஸி ராமாயணப் பாடல்கள் முழுதும் பொறிக்கப்பெற்றுள்ளன. மேலும் ராமயணச் சிற்பக்காட்சிகளையும் காணலாம். காசியில் கங்காஸ்நானம் செய்வதற்காக 60 பெரிய படித்துறைகள் (காட்) உள்ளன. அவைகளில் ஒரு சில முக்கிய 'காட்' களாகும். அவை (1) மணிகர்ணிகா காட்:- இங்கு இரவு பகல் ஓயாமல் இறந்தவர்களின் பிணம் தகனம் ஆகிக்கொண்டிருக்கும். காசியில் இறப்பவர்களுக்கு முக்தி என்ற நம்பிக்கையின்படி அங்கே உயிரை விடுவதற்காக எண்ணிறந்த முதியவர்கள் அங்கு வந்து தங்கி ஸ்ரீவிஸ்வநாதரை வழிபட்டு வருகின்றூர்கள். அக்கம் பக்கத்து ஊர்களில் இறந்து போகிறவர்களது பிணங்களையும், காசியில் கொணர்ந்து தகனம் பண்ணுகிறூர்கள் இதனுல் இறந்த உயிர்களுக்கு நற்கதி கிடைக்குமென நம்புகிறூர்கள். (2) ஹரிச்சந்த்ராகாட்:- இங்கு பிணங்களை சுடுகிறூர்கள். சிவாலயம் ஒன்றும் இங்கு உண்டு. இது ஆதிகாலத்தில் ஹரிச்சந்திர மகாராஜா மயானங்காத்த இடமென்று கூறுவார்கள். (3) கேதார்காட்:- இங்கு கேதாரேஸ்வர் மகாதேவரின் ஆலயம் உள்ளது. இக்கோவில் தமிழ் நாட்டிலுள்ள திருப்பனந்தாள் மடத்தைச் சார்ந்தது. ஆதிகுமரகுருபர சுவாமிகள் இங்கு வந்து தனது அருள் வலிமையால் துருக்க மன்னனிடமிருந்து இடம் பெற்று ஒரு பெரிய மடத்தை நிறுவினூர். அதற்குப் பெயர் ஸ்ரீ குமாரசாமி மடம் என்பதாகும். இங்கே காசியைத் தரிசிக்க வரும் தமிழர்கள் தங்கிச் செல்ல இடவசதியும் நண்பகல் உணவும் அளிக்கிறூர்கள். இம்மடமும் திருப்பனந்தாள் ஆதீனத்தைச் சார்ர் ததே.

6. கன்யாகுமரி:- பாரத நாட்டின் தென்கோடியிலுள்ள புராதனக் கோயில். வங்காள விரிகுடா, இந்துமகா சமுத்திரம், அரபிக் கடல் ஆகிய முக்கடல்களும் சந்திக்கும் இடம்,இங்கே தேவி பார்வதி கன்னிகை உருவில் வலது கையில் ஜபமாலை ஏந்தி சிவபிரானை நினைந்து தவஞ்செய்து கொண்டு நிற்கும் கோலமாக உள்ளாள். நவராத்திரித் திருவிழா 9 நாட்கள் விமரிசையாக நடைபெறும். பௌர்ணமி நாட்களிலும் சிறப்பு வழிபாடுகள் உண்டு' கோயிலைச் சுற்றி மாத்ரு தீர்த்தம் முதலிய தீர்த்த கட்டங்கள் கடலில் உள்ளன. இங்கிருந்து சூரியோதயமும், அஸ்தமனமும், காண்பது கண் கொள்ளாக் காட்சியாகும். மேலும் சித்திரைப் பௌர்ணமி நாள் மாலையில் சூரியாஸ்தமனவும், சந்திரோதயமும்ஏக காலத்தில் காணலாம்.

கன்யாகுமரி பகவதி கோயிலின் கிழக்கே கடல் நடுவே காணும் பாறையில் விவேகானந்தர் நினைவு மண்டபம் திகழ்வதைக் காணலாம். கோயிலின் மேற்கே காந்தி நினைவு மண்டபத்தைக் காணலாம். கோயில்வளைவினுள் தென்பக்கம் பகவான் ஸ்ரீ சங்கராச்சாரியாரின் மண்டபமும் காணலாம்.

வடக்கிருந்து கன்யாகுமரிக்குப் போகும் பாதையில், ஊரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் வடக்கே நெடுஞ்சாலையின் கிழக்காக சுமார் 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தில் விவேகானந்த கேந்திரம் என்றொரு மாபெரும் நிறுவனம் உண்டு. விவேகானந்தர் பாறை நினைவு மண்டபத்தை நிறுவிய மானனீய ஏகநாத் ரானடே அவர்களே இந்த கேந்திரத்தையும் நிறுவினார்கள். இந்தியப் பண்பாட்டையும் சுவாமி விவேகானந்தரது வரலாற்றையும் உபதேசங்களையும் பரப்புவதும் சமூகத் தொண்டுகள் செய்வதும் இதன் நோக்கங்களாகும்.

தியாகம், தொண்டு இவற்றை இலட்சியமாகக் கொண்டு பட்டதாரிகளான இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல், நூல்கள் வெளியிடல், பள்ளிகள் நடாத்துதல் பண்பாட்டு வகுப்புகள் மருத்துவ மனைகள் நிறுவி நோயாளிகளுக்கு உதவுதல் போன்ற பல பணிகள் நடந்து வருகின்றன. பெரிய நூல் நிலையம், சித்திரக் கண்காட்சி முதலிய நிறுவனங்களும் இங்குள்ளன. இந்தியாவிலுள்ள பல மாநகரங்களில் கேந்திராவின் கிளைகள் உள்ளன.

7. பண்டரிபுரம்:- இது மகாராஷ்ட்ரா மாநிலத்தில் சென்னையிலிருந்து பாம்பே செல்லும் வழியில் உள்ளது. பாம்பேக்கு பண்டரிபுரத்திலிருந்து சுமார் 300 மைல்கள் உண்டு. இங்கு மகாவிஷ்ணுவீன் பெரியஆலயமுள்ளது. இங்குள்ள மூர்த்தியை பண்டரிநாதன், விட்டல் தேவ், பாண்டுரங்கன் என்றெல்லாம் அழைப்பர். புண்டரிக பக்தனுக்காக பகவான் செங்கல்லின் மேல் நின்று கொண்டிருக்கிறார் என்று வரலாறு கூறும். புண்டரிக பக்தன் மிகுந்த பக்தியுடன் தன் தாய் தந்தையருக்குத் தொண்டு செய்து கொண்டிருந்தார். அவருக்கு அருள் புரியுமாறு ஸ்ரீமந் நாராயணர் அவர் முன் வந்தார். தாய் தந்தையர்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டினைச் செய்து முடித்த பின் தான் அவரைச் சந்தித்துப் பேச முடியும் என்று கூறி பக்கத்தில் கிடந்ததோர் செங்கல்லை எடுத்துப் போட்டு ஸ்ரீமந் நாராயணரை அதன் மேல் உட்கார்ந்திருக்குமாறு வேண்டிக் கொண்டு அவர் தன் வேலைக்குச் சென்று விட்டார். அவர் வருவது வரையிலும் பகவான் அவரைக் காத்து கொண்டு அந்தச் செங்கல்லின் மேல் நின்று கொண்டிருந்தார். அந்த இடத்தில் தான் அவருக்கு ஆலயம் அமைந்துள்ளது என்பது வரலாறு. மராட்டி மொழியில் செங்கல்லுக்கு விட்டல் என்று பெயர். செங்கல்லின் மேல் நிற்பதால்

பாண்டுரங்கனுக்கு விட்டல் என்று பெயர் வந்தது, பீமா அல்லது சந்திரபாகா நதிக்கரையில் தான் பண்டரீபுரம் ஆலயமும், புண்டரீக பக்தரது சமாதியும் திகழ்கின்றன. கோயிலின் கிழக்கு வாயில் பக்கத்தில் ஸ்ரீ நாம தேவ சுவாமிகளது சமாதியும் அமைந்துள்ளது என்பர். கோயிலைச் சுற்றி அனேகம் மடாலயங்களும், சத்திரம் சாவடிகளும் உள்ளன. அங்கெல்லாம் நாம பஜனை சதா நடந்து கொண்டிருக்கும். நாடோறும் அன்னதானமும் ஏராளம் நடக்கும்.

இந்த ஆலயத்தில் விடோபா துக்காராம். ஞானதேவ், சக்குபாய், சோகா மேளர், கோரா கும்பர், முக்தாபாய் முதலிய எண்ணிறந்த பக்த பெருமக்கள் வழிபட்டு வந்தனர். ஏகாதசி தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பகவந்நாம பஜனை செய்து பாடி ஆடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

8. அமர்நாத்:- இத்தலம் காஷ்மீர் மாநிலத்தின் வடகோடியிலிருக்கிறது. காஷ்மீரின் தலைநகரமான ஸ்ரீ நகரிலிருந்து 90 மைல் தூரத்திலுள்ளது. இக்கோயில் 60 மைல் தூரம் பஸ்ஸில் பஹல்காம் வரை போகலாம். அங்கிருந்து 30 மைல் நடந்து சந்தன் வாடி, சேஷநாக், மகாகுணஸ்சிகரம், பஞ்சதரணி ஆகிய இடங்களில் தங்கி மூன்று நாட்களில் அமர்நாத்செல்லலாம். இயற்கையான பெரியதோர் மலைக் குகைக்குள் இயற்கையாக உண்டான பனிக்கட்டிச் சிவலிங்கத்தைத் தரிசிக்கலாம். இச் சிவலிங்கம் வளர்பிறையில் வளர்ந்தும், தேய்பிறையில் தேய்ந்தும் வருகிறது. ஜூலை, ஆகஸ்ட் மாதப் பௌர்ணமி நாட்களில் இந்தக் குகைக் கோயிலைத் தரிசிக்க எண்ணிறந்த பக்தர்கள் செல்வர். ஆகஸ்ட் மாதப் பௌர்ணமி (சிராவண்

பூர்ணிமா) நாளில் ஆயிரக்கணக்கான சாது மகாத்மாக்களின் ஊர்வலம் (ஜடி) ஒன்று அமர்நாதரைத் தரிசிக்கச் செல்லும் வழியில் மகாகுணஸ் என்ற சிகரம் சுமார் 14,000 அடி உயரமுடையது. எப்போதும் பனி மூடித்தான் கிடக்கும். இதைக் கடந்து செல்வது மிகக் கஷ்டமாயிருக்கும் அடிமேல் அடியெடுத்து வைத்துத்தான் செல்லவேண்டும்.

இக்கோயில் சுமார் 10,000 அடிக்கு மேல் உயரத்திலிருப்பதால் மிகக் குளிரான இடம். சுமார் 9 மாதங்கள் பனிக்கட்டியால் மூடிவிடும். அப்போது யாரும் போக மாட்டார்கள்.

2. பாரதத்திலுள்ள நதிகள்

1. கங்கை

கங்கை பாரத நாட்டின் மிகச்சிறந்த நதி. கங்கை நீர் புனிதத்தினுடையவும் தூய்மையினுடையவும் எடுத்துக்காட்டு. உலகத்தின் எல்லா நதிகளின் நீரும் குறுகிய கால அளவிற்குள் மாசுபடுகின்றது. ஆனால் கங்கை நீர் எப்போதுமே மாசுபடுவதில்லை. இமயத்தில் கங்கோத்ரிதான் கங்கையின் பிறப்பிடமாக கருதப்படுகின்றது. அங்கிருந்து இமய சிகரங்களின் ஊடே பாய்ந்து கங்கை, ஹரிதுவாரத்தில் சம வெளியை வந்தடைந்து உத்திர பிரதேசம். பீஹார், வங்காளம் என்னும் மாநிலங்களில் ஓடி அந்நகர்களையெல்லாம் புனிதமாக்குகின்றது. கங்கையின் கரையோரத்தில் ஆயிரக்கணக்கான புனித நகர்கள் உள்ளன. அவற்றில் ஹரித்துவார். பிரயாகை, காசி இவைகளின் சிறப்பு வானுயர்ந்தது. அநாதிகாலம் தொட்டு லட்சக்கணக்கான ரிஷிகளும், முனிவர்களும், சித்தர்களும், துறவிகளும், பிரம்மச் சாரிகளும் கங்கைக்கரையில் கடுந்தவம் புரிந்து பரமனை கண்ணுரக்கண்டுள்ளனர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் கங்கையை "பிரம்ம வாரி" என்றழைத்

தார். புராணங்களின்படி கங்கை விஷ்ணுவின் காலடியிலிருந்து கிளம்பி ஸ்வர்க்கத்தில் ஓடி வந்தது. சகர வம்சத்தைச் சார்ந்த மன்னர்களின், சிறப்பாகவும் குறிப்பாகவும் பகீரதனுடைய இடையருத கடுந்தவத்தின் பயனுல் கங்கை இப்பூமிக்கு வருகை புரிந்தாள். அதன் மிகப் பெரிய ஓட்டத்தை (பிரவாகத்தை) சிவபெருமான் சடைமுடி நிறைந்த தன் தலையில் தடுத்துக் கொண்டார். பிறகு ஜன்னு என்ற மன்னனின் காது வழியாக அது வெளிப்பட்டது. இக்காரணத்தால் தான் கங்கைக்கு பாகீரதி, ஜான்னவி என்ற பெயர்கள் ஏற்படலாயின.

2. சிந்து

இமயத்தில் கங்கோத்ரிக்கருகில் தோன்றி, பஞ்சாப் சிந்து மாநிலங்களின் வழியே பாய்ந்து சிந்து நதி மேற்குக்கடலில் மறைகின்றது. சிந்து நதியின் காரணத்தால்தான் சிந்து பிரதேசம் என்ற பெயர், இந்தியாவுக்கு வழங்கலாயிற்று. 'கங்கை' யமுனை முதலிய புனித நதிகளின் பட்டியலில் சிந்துவின் பெயரும் எண்ணப்படுகின்றது. சிந்து மாநிலத்தில் உடேடோலால் என்று பெயருள்ள ஒரு தேவதையை சிந்துவின் அவதாரமாக கொள்கிறோம். பத்தாவது நூற்றுண்டில் தான் உடேடோலாவின் பிறப்பு ஏற்பட்டதாக நம்பப்படுகிறது. இக்காலத்தில் சிந்துவின் "மர்க்" என்ற முகமதிய மன்னனின் ஆட்சி இருந்தது. அவன் எல்லா இந்துக்களையும் முகமதியர்களாக மாறுமாறு கட்டளை பிறப்பித்தான். இக்கட்டளையை மீறுபவர்களுக்கு மரண தண்டனை விதிப்பதாகவும் அறிவித்திருந்தான். இத்தொல்லை நிறைந்த காலத்தில் ஹிந்துக்கள் சிந்து நதியை வேண்டிக்கொண்டனர். மூன்றுவது நாள் சிந்து நதியிலிருந்து ஒரு குரல் எழுந்தது' "எட்டு நாட்களுக்குப் பிறகு 'நரஸாபுர்' என்ற

இடத்தில் அவதாரம் எடுத்து தொல்லைகளைத் தொலைப்பேன்" என்று அக்குரல் கூறியது. எட்டாவது நாள் புகழ் பெற்ற இந்துத் தலைவர் ரதன்ராய் டாக்டர் அவர்களின் மனைவி தேவகிக்கு ஒரு மகவு பிறந்தது. இவன் தான் சிந்துவினுடைய அவதாரமான உடேடோலால். உடடோலால் மத மாற்ற அபாயத்திலிருந்து இந்துக்களைக் காப்பாற்றினார். சிந்து மாகாணத்தில் தத்தா, சக்கர், பீர்பாதோ, பீர்மாங்தோ, மஹேராஸட் ஆகிய இடங்களில் சிந்துவின் அவதார புருஷனுகிய உடேடோலாவின் கோவில்கள் பல நிலைத்துள்ளன.

3. காவேரி

காவேரி நதி குடகு பிரதேசத்தில் உள்ள பிரம்மகிரி என்கிற மலையிலிருந்து தோன்றி தமிழ் நாட்டின் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களினூடே பாய்ந்து பின்னர் கிழக்கே கடலில் கலக்கிறது. காவேரியிலிருந்து பண்டைக் காலந்தொட்டே பல கால்வாய்கள் பிரிக்கப்பட்டிருந்தன. இக்கால்வாய்களின் பயனுல் தமிழ்நாடு முழுவதும் விளை நிலங்கள் செழிப்புற்று விளங்குகின்றன. வடபகுதியில் கங்கையின் பெருமைக்கு நிகராகவே காவேரியையும், தாமிரபரணியையும் தமிழ்நாட்டின் கங்கை, யமுனைகளாகக் கொள்ளலாம். இவ்விரு நதிகளின் இருமருங்கிலும் எண்ணற்ற புனித க்ஷேத்திரங்கள் விளங்குகின்றன.

4. யமுனை

யமுனை வட பாரதத்தின் ஒரு பெரிய ஆறு. 'பந்தர் பூஞ்ச்" என்ற இமய மலையின் சிகரத்திலிருந்து கிளம்பி ஜமுனேத்ரியின் வழியாக உத்திரப் பிரதேசத்திற்குள் இறங்கி பிரயாகை என்ற தேசத்

தில் கங்கையுடன் கலக்கின்றது. கங்கை யமுனை இரண்டின் கலப்பும் பாரதத்தில் திரிவேணி சங்கமம் என்ற பெயரில் மிகப் பெரிய புனிதத்தின் இருப்பிடமாகக் கருதப்படுகின்றது. யமுனையின் கரையில் டில்லி, பிருந்தாவனம், மதுரா முதலிய பெயர் பெற்ற நகரங்கள் அமைந்துள்ளன, பாணகங்கா, சர்மண்வதி (சம்பல்) வேத்ரவதி (பேத்வா) முதலிய புகழ் மிக்க நதிகள் யமுனையுடன் சேருகின்றன. புராணங்களின்படி, யமுனை நதி சூரியனின் மகளாகச் சொல்லப்படுகின்றது. பகவான் கிருஷ்ணனின் பாலலீலைகள் எல்லாம் கோகுல பிருந்தாவனத்தில் யமுனையின் கரையில்தான் நிகழ்ந்தன. ஆகையால் கிருஷ்ண பக்தர்களுக்கு யமுனை ஒரு பெருமை மிகுந்த சிறப்பான நதியாகும்.

5: சரஸ்வதி

சரஸ்வதி நதியைப் பற்றிய குறிப்பு மறைகளில் வருகின்றது. புராணங்களில் சரஸ்வதியை பிரம்மாவின் மனைவியாகவும் வாக்கு தேவதா எனவும் கூறப்பட்டுள்ளது. பஞ்சாபில் சரஸ்வதி என்ற பெயரில் சிறிய நதி ஒன்றுள்ளது. மற்றொரு சரஸ்வதி ஆரவல்லி மலையிலிருந்து தொடங்கி 'கச்' பகுதியில் உள்ள 'ரன்' என்ற இடத்தில் மறைந்து விடுகின்றது.

6. ரேவா (நர்மதா)

இந்த புனித நதி நர்மதை என்ற பெயரில் புகழ் பெற்றது. நர்மதை விந்திய மலையின் அமரகண்டக என்ற சிகரத்திலிருந்து உற்பத்தியாகி படோச என்ற இடத்தில் மேற்குக் கடலில் சேருகிறது. புராணங்களின்படி ரேவா நதி சிவபெருமானின் உடலிலிருந்து கிளம்புகிறது. நர்மதை நதியின் ஒவ்வொரு சங்கமத்திலும் பல புண்ணிய

கோவில்கள் விளங்குகின்றன. ஓங்கார், மந்தாதா, மகேஷ்வர், பேடாகாட், சுக்ல தீர்த்தம் முதலிய புனிதமான க்ஷேத்திரங்கள் நர்மதையின் கரையில் அமைந்துள்ளவை. தரிசிக்கத் தக்கவை. மகேஷ்வரியில் ராணி அகல்யா தேவி, நர்மதையில் படித்துறைகள் அமைத்துள்ளார். அகல்யா தேவியின் சமாதியும் அவர்களால் கட்டுவிக்கப்பட்ட பல கோவில்களும் இவ்விடத்தில் இன்றும் உள்ளன. ஒவ்வோராண்டும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் நர்மதை நதியை வலம் வருகிறார்கள்.

7. கோதா (கோதாவரி)

ஸஹ்யாத்ரியின் பிரம்மகிரி (திரயம்பகேஷ்வர், நாசிக்குக்கு அருகே) என்ற சிகரத்திலிருந்து கிளம்புகின்றது. பிரபு ராமசந்திரர் கோதாவரி நதிக்கரையில் பஞ்சவடி என்ற இடத்தில் வசித்தார். இதே இடத்தில் ஸமர்த்த ராமதாஸர் அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வரை கடுந்தவம் புரிந்தார். கோதாவரிக் கரையில் நாற்தேடு என்ற க்ஷேத்திரத்தில் குரு கோவிந்த சிம்மரின் சமாதி உள்ளது. ஆந்திரப் பிரதேசத்தில் கோதாவரி ஆறு விரிவடைந்து கிழக்கு கடலில் சேருகின்றது. சிரத்தை மிகுந்த மக்கள் கங்கையிலும், கோதாவரியிலும் எவ்வித வேறுபாடும் கொள்வதில்லை. திரியம்பகேஷ்வரம், நாசிக் பைடண் (பிரதிஷ்டான்), கோடிபல்லி, ராஜமகேந்திரம், பத்ராசலம் முதலிய புனித க்ஷேத்திரங்கள் கோதாவரியின் கரையில் விளங்கி வருகின்றன. ராஜமகேந்திரத்தில் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை 'புஷ்கர்' என்ற பெயரில் கோதாவரி ஸ்நானப் பெருவிழா நடக்கிறது.

8. பிரம்மபுத்திரா

உலகத்துப் பெரு நதிகளில் பிரம்மபுத்திரா நதியும் ஒன்ருகக் கணக்கிடப்படுகின்றது. இது மானஸ ஸரோவர் என்ற ஏரியிலிருந்து உற்பத்தியாகிறது. 1800 மைல்கள் வரையில், நீளமுள்ளது. இமயமலையிலிருந்து அஸ்ஸாம் வழியாக வங்காளத்தில் பாய்ந்து மிகப்பெரிய அளவினதாய்விரிந்து கிழக்குக் கடலில் கலக்கின்றது. கௌஹாத்தியில் பிரம்மபுத்திராவின் கரையில் ஒரு மலைச்சிகரத்தின் மீது 'காமாக்யா'' என்ற பகவதி அம்மையின் மிகச் சிறந்த சக்தி பீடம் அமையப்பெற்றுள்ளது.

3. பாரதத்திலுள்ள மலைகள்

1. ஸஹ்ய பர்வதம்

பாரதத்தின் மேற்குக் கடலோரத்தில் ஸஹ்ய பர்வதம் நிலைத்து நிற்கின்றது. மராட்டிய மாநிலத்து சிவநேரி, சிம்ஹகம், பன்ஹால், ராய்கட், பிரதாப் கட், விசால்கட் போன்ற வரலாற்றுப் புகழ் செறிந்த கோட்டைகள் எல்லாம் ஸஹ்யாத்திரி மலையின் மேல் தான் அமைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணா, கோதாவரி போன்ற நதிகள் ஸஹ்யாத்திரியிலிருந்துதான் உற்பத்தியாகிப் பாய்ந்தோடுகின்றன. திரியம்பகேஸ்வர், மஹாபலேஸ்வர், பஞ்சவடி, மங்கேஷி, வாலுகேஸ்வர், கரவீரம் போன்ற பல எண்ணற்ற புனித க்ஷேத்திரங்கள் இம்மலை மீதும். இம்மலை மீதிருந்து பாய்ந்தோடும் நதிக்கரையோரங்களிலும் விளங்குகின்றன. புண்ணிய புருஷரான சிவாஜி மன்னனின் செயல்களுக்கெல்லாம் அடித்தளமாக அமைந்தது ஸஹ்ய பர்வதமேயாம்.

2. ஹிமாலயம்

மகாகவி காளிதாஸன் இமயமலையை "தேவ்தாத்மா" என்ற பண்புச் சொல்லால் அழைத்தார். அது முற்றிலும் பொருத்தமே. இமயத்தே

அமைந்த கைலாச சிகரம், பகவான் சங்கரனின் இருப்பிடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பத்ரி நாத் க்ஷேத்திரத்தில் நர - நாராயணர் ஆதி காலந் தொட்டு வாழ்ந்து தவம் செய்து வருகிறார். "கேதார்நாத்" தில் சிவனின் ஜோதிர் லிங்கம் மிளிர்ந்து காணப்படுகின்றது. கங்கோத்ரி என்ற க்ஷேத்திரத்தில் பகீரத மன்னனின் தவத்தால் மகிழ்ந்து. தேவகங்கையானவள் வந்து இறங்கி தங்கி உள்ளாள். ஹரித்வார் என்ற இடத்தில் கங்கை சமமான தரையில் பாய்கிறாள். அதனருகே தான் மாயாபுரி "அயோத்யா, மதுரா, மாயா" என்ற பாடலில் வருகின்ற மோக்ஷபுரியின் தக்ஷ கன்னியான சதி (பார்வதி தேவியின் முன் அவதாரம்) தக்ஷயக்ஞத்தில் தன் உடலை சமர்ப்பித்தாள். பத்ரீநாத்திலிருந்து இரண்டு கல்தொலைவிலுள்ள மாணகிராமம் (மாணாதார்) என்ற இடத்தில் வியாஸ பகவான் வேதங்களை நான்கு பகுதிகளாகப் பிரித்து புராணங்களை இயற்றினார். வியாஸ குகை என்ற இடத்தில் வசிக்கும் போது "ஜய" (மகாபாரதத் தின் மூல அடி நூல்) என்ற நூலை யாத்தருளினார். வஸிஷ்ட அருந்ததியின் (ஆசிரமம்) குடில் டிஹரி கட்வால் ஜில்லாவில் உள்ளது. உத்தவ சௌரி என்ற கிராமத்தில் ஸ்ரீ கிருஷ்ணனிடம் உபதேசம் பெற்று உத்தவன் வசித்தான். பத்ரீநாத்திலிருந்து 3 கல்தொலைவில் வடக்குப் பக்கத்தில் பழைய சரஸ்வதி நதி ("கங்கா சிந்துஸ்ச காவேரி யமுனாச சரஸ்வதி என்பதில் குறிப்பிடப்பட்டுள்ளது) பாய்கின்றது. பாண்டவர்கள் தங்கள் கடைசி வாழ்நாட்களை தேஹ்ராடுன் மாவட்டத்திலுள்ள மலைப்பாங்கான பிரதேசத்தில் கழித்தார்கள். தவம் பல புரிந்த சத்யசந்தன் என்ற மன்னன் எந்த இடத்தில் கொடுமைகள் பல செய்த கோலா சுரனை வதைத்தாரோ, அந்த இடத்தில் தான்

"ஸ்ரீ நகர்" அமைந்துள்ளது. பீல்தேகார் என்ற இடத்தில் அர்ச்சுனனை சோதனை செய்வதற்காக சிவன், வேடன் உருக்கொண்டு அவனோடு சமர் புரிந்தார். இமயமலைப் பகுதி முழுவதும் நூற்றுக் கணக்கான புனித இடங்களாக இருப்பதின் காரணத்தால்தான் அதற்கு 'தேவதாத்மா, என்ற அடைமொழிச் சொல் பொருந்துவதாகவும் இயல் பானதாகவும் கருதப்ப டுகின்றதோடு அப்பெயரே தொடர்ந்தும் வருகின்றது.

3. விந்திய பருவதம்

பாரதத்தின் நடுப்பகுதியில் குஜராத்திலிருந்து பீஹார் வரை விந்தியம் அமைந்துள்ளது. விந்தியம் மற்றும் சாத்புராவின் சேர்க்கை "அமர்கண்டக்" கில் உள்ளது. இங்குதான் நர்மதா பிறக்கின்றது. புராணங்களின்படி விந்திய மலை, இமயமலை, மேரு மலைகளைக் காட்டிலும் உயர்ந்திருந்தது என்பதாகும் அந்த உயரத்தினால் தான் சூரியனின் ரதம் பறக்கத் தொடங்கியது. அப்பொழுது தேவர்கள் அனைவரும் குருவாகிய அகத்தியரை வேண்டிக் கொண்டனர். அகத்தியர் விந்தியத்தின் அருகே வந்ததும் விந்தி யம் தன் குருவிற்கு முன் வணங்கிக் குனிந்து நின்றது. அகத்திய முனிவர் விந்தியத்தை அதே நிலையில் பணிந்திருக்குமாறு பணித்தார். அது முதல் விந்தியத்தின் உயரம் குறைந்துவிட்டது. நர்மதா. ஷோணபத்ரா முதலிய புனித நதிகளெல் லாம் விந்திய மலையிலிருந்து கிளம்புகின்றன. ஒவ் வோராண்டும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் நர் மதையை வலம் வந்து விந்தியத்தின் இணையிலா அழகையும் அதன் எல்லையில் அமைந்துள்ள எண் ணற்ற புனித இடங்களையும் கண்டுகளித்து வருகின்றனர்.

4. பாரதத்தின் இதர புண்ணிய தலங்கள்

1. மதுரா:

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரது ஜன்மஸ்தானமாகிய மதுராபுரி உத்திரபிரதேசத்தில் டில்லிக்கும் 80 மைல் கிழக்கே உள்ளது. யமுனா நதிக்கரையிலிருக்கும் இத்தலம் இந்தியாவின் பண்டைகால ஸப்தபுரிகளில் ஒன்றாகும். ஸப்தபுரிகள் என்றால் ஏழு புண்ணிய பதிகள் என்பதை துவாரகாபுரியைப் பற்றிக் கூறியபோது குறிப்பிட்டுள்ளோம். இங்குள்ள கம்ஸ்கிலா என்ற கம்ஸனது கோட்டைச் சிறையில் தான் பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் அவதாரம் செய்தார். பழங்காலத்தில் இங்கு பகவானுக்கு மிகப் பெரிய ஆலயமொன்று இருந்தது. அதைச் சமய வெறியரான மொகலாய மன்னர்கள் தகர்த்து அவ்விடத்திலேயே முஸ்லீம் பள்ளி கட்டியுள்ளனர். இந்திய விடுதலைக்குப் பின் வள்ளல் ஸ்ரீஜித் ஜெ. கெ. பிர்லாஜி போன்ற பல பெரியோரின் நன் முயற்சியால் தகர்க்கப்பட்ட கோயிலின் ஒரு பகுதியை அகழ்ந்து வெளிப்படுத்தி. புதிய ஆலயம் ஒன்றை நிறுவியுள்ளனர். ஜன்மஸ்தானத்தருகே பஜனை மடம் முதலிய பல கட்டிடங்களும் புதிதாகக் கட்டியுள்ளனர். புனர் நிர்மாண வேலை நடந்துகொண்டேயிருக்கிறது. இதைத் தொட்டுள்ள முஸ்லீம் பள்ளியிருக்கும் இடத்தையும் விட்டுத்தர இந்துமக்கள் வாதாடிக்கொண்டிருக்கின்றனர். இப் புண்ணிய பகுதியில் மற்றும் பல பெரிய கோவில் களும், மடாலயங்களும் உள்ளன. ஸ்ரீராமானுஜர், ஸ்ரீவல்லபர், ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் முதலிய மகாத்மாக்களின் திருவடி பட்ட இப்புண்ணிய பூமியின் புனிதத் தன்மையை நாமும் காப் போமாக.

2. பிருந்தாவனம்

கண்ண பரமாத்மாவின் பாலலீலைகள் நடந்த புண்ணிய பூமியாகிய பிருந்தாவனம் மதுராபுரியின் அண்மையில் யமுனை நதிக்கரையிலுள்ளமிகப்புனித மான பூமி. இங்குள்ள ஒவ்வொரு மணற் பொடியும் தெய்வத்தன்மை வாய்ந்தது. ஆயிரக்கணக்கான மடங்களும், கோயில்களும் இங்குண்டு. பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள், பக்தர்கள் இங்கு தங்கி இரவு பகல் பஜனை, ஜபதவம், ஸ்ரீகிருஷ்ண லீலை யின் ஆடல் பாடல் ஆகியவை செய்து வருகின்றனர். இங்கு ஸ்ரீரங்கநாதர் கோயில், கோவிந்தர் கோவில் பாங்கி பிஹாரி கோவில், கோகுலானந்தர் கோயில் ஆகியவை மிகப்பெரிய ஆலயங்களாம் .காளியதமன் காட், பிரம்மாண்டகாட், கேசிகாட் முதலியவை யமுனு நதிக்கரையிலுள்ள படித்துறைகளாம். இங்கு பக்தர்கள் புண்ணிய ஸ்நானம் செய்த வண்ணம் இருப்பர். இங்கிருந்து 14 கல் தொலைவில் கோவர்த் தனகிரியைக் காணலாம். இக்குன்றையே கண்ணன் குடையாகப் பிடித்துக் கோகுலத்தைக் காத்தான் எனப் பாகவதம் கூறும். பிருந்தாவனத்தைச் சுற்றி ஸ்ரீகிருஷ்ணரும் கோப, கோபியரும் விளையாடிய மதுவனம், நிதுவனம், பர்ஸானு, நந்தகாம், ரமண் ரேத்தி முதலிய பல புண்ணிய தலங்களுள்ளன. இவைகளை எல்லாம் சேர்த்து வ்ரஜபூமி என்பர். பக்தர் கள் இவ் வ்ரஜபூமியை சிரத்தையுடன் வலம்வருகி ருர்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் மேனாட்டிலுள்ள ஹரே கிருஷ்ண சங்கத்தார்கள் இங்கு மிகப்பெரிய ஸ்ரீகிருஷ்ணர் கோயிலும், அவர்களது குருநாதராகிய ஸ்ரீபிரபுபாதர் சுவாமிகளது சமாதி கோயிலும் கட்டி நல்ல முறையில் நித்திய வழிபாடு செய்து வருகின் றனர். ஸ்ரீராமகிருஷ்ண ஸேவாசிரமம் ஸ்ரீபிர்லாஜியின் கீதாமந்திர் முதலியவைகளும்பார்க்கத்தக்கவையாம்

3. அயோத்யா:

பாரதத் திருநாட்டின் மிகப் பழைய, ஏழு புண்ணிய நகரங்களிலே (ஸப்தபுரி) அயோத்யா முதலிடம் பெறுகிறது என்று முன்னேர குறிப்பிட்டுள்ளோம். இது இக்ஷுவாகு வம்ச சூரிய குல மன்னர்களுடையவும் வசிஷ்டர் முதலிய பிரம்ம ரிஷிகளுடையவும் உறைவிடமாயிருந்தது. இந்தப் புண்ணிய பூமியில் ஸ்ரீராமச்சந்திரர் அவதாரம் பண்ணினுர். இந்நகரம் சரயூ என்ற பெரிய நதியின் கரையிலமைந்துள்ளது, உத்திரப்பிரதேச மாநிலத்தில் பைஜாபாத் ஜில்லாவிலுள்ள சிறிய நகரமாக இது இன்றுள்ளது. எனினும் அனேக நூற்றுண்டுகளுக்கு முன்னரும் தற்போதுமாகக் கட்டப்பெற்ற எண்ணற்ற ஸ்ரீராமர் ஆலயங்களைக் கொண்டு நிறைந்தது இவ்வூர். இங்கு ஹனுமான் கட்டி. கனக பவன், ஸ்ரீராமஜன்மபூமி, சீதாதேவியின் அந்தப்புரம், ஸ்ரீ துளசி ராமாயணமந்திர், ஸ்ரீவால்மீகி ராமாயணமந்திர் முதலியவை மிக முக்கியமான கோயில்களாம். துளசி ராமாயணத்திலும், வால்மீகி ராமாயணத்திலுமுள்ள அத்தனைப் பாடல்களையும் சலவைக் கற்களில் பொறித்து, மேற்குறிப்பிட்ட இரண்டு மந்திர் (கோயில்) களின் சுவர்களிலும் அமைத்துள்ளனர். இவை தற்போதையவை. தவிர ஸ்ரீதுளசிதாசருக்குத் தனிச் சிலை வைத்து ஒரு பூங்காவும் அமைத்துள்ளனர். ஸ்ரீராமஜன்ம பூமியிலிருந்த மிகப் பெரிய தேவாலயத்தை முஸ்லீம் கொள்ளையர்கள் அழித்தொழித்து அங்கே பெரியதோர் பள்ளியைக் கட்டினர். ஆனால் இந்து மக்கள் அந்த ஜன்மபூமி ஆலயத்திற்காக நீதி கேட்டு நீதி மன்றத்தில் வெற்றிபெற்றுள்ளனர். எனினும் அங்கு கோயில் கட்டி வழிபடுவதற்கு அனுமதி வழங்கப் படவில்லை. அதற்கான போராட்டம் இன்னும் நடந்து கொண்டேயிருக்கிறது.

இங்கு எண்ணற்ற வைஷ்ணவ மடாலயம்களும் ஆயிரக்கணக்கான வைணவ அடியார்களும் தங்கி ராம நாம ஜபம், கீர்த்தனை ராமாயணபாராயணம்ஆகியவை செய்த வண்ணமிருக்கின்றனர்.

4. தட்சிணேசுவரம்.

கல்கத்தா மாநகரிலிருந்து வடக்கே 4 மைல் தொலைவில் கங்கை (கூக்ளி) யின் கிழக்குக்கரையில் அமைந்திருக்கும் ஒரு பேராலயமே தட்சிணேசுவரம் காளிகோவில். இது இன்று உலகப் புகழ் வாய்ந்த ஓரிடமாக மாறியுள்ளது. காரணம் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இங்குதான் பூஜாரியாயிருந்து காளிதேவியை நேரில் கண்டு உறவாடியது. இது தான் அவர் சுமார் 30 ஆண்டுகள் வாழ்ந்து, பற்பல சாதனைகள் செய்து ஆன்மீக அனுபவத்தில் திளைத்த இடம்.

இங்கு பவதாரிணி காளிதேவியின் ஆலயம் முக்கியமானது. அதற்கடுத்து ராதாகாந்தர் (ஸ்ரீ கிருஷ்ணர்) ஆலயமும் கங்கைக் கரையோரமாக 12 சிறு சிவாலயங்களும் அமைந்துள்ளன. ஆலய வளைவின் வடமேற்குக் கோடியில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் வாழ்ந்த அறையைக் காணலாம். அங்கு அவர் அமர்ந்த படுக்கைகள், அவர் உபயோகித்த பொருட்கள் எல்லாம் உள்ளன. அதற்கும் வடக்கே சுமார் 100 அடி தொலைவில் ஸ்ரீசாரதா தேவியார் வாழ்ந்து வந்த நஹபத் என்ற சிறிய அறையைக் காணலாம். தினமும் இங்கு எண்ணற்ற பக்தர்கள் வந்து தரிசனம் பண்ணிச் செல்கின்றனர். இதற்கும் ஒரு மையில் தெற்கே கங்கையின் மேற்குக்கரையில் பேலூர் மடம் அமைந்துள்ளது. தட்சிணேசுவரத்திலிருந்து பார்த்தால் பேலூர் மடத்திலுள்ள பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரது பேராலயத்தின் கோபுரங்களைத் தரிசிக்கலாம்.

5. பாரத வரலாறு

பாரதம்:

பரதன் என்ற வீரமிக்க அரசன் இந்து தர்ம நெறி முறைகளின்படி நம் நாட்டை ஒரு குடையின் கீழ் சிறப்பாக ஆட்சி செய்த காரணத்தால் நமது நாட்டிற்கு பாரதநாடு என்ற பெயர் ஏற்பட்டது. உலகிலேயே மிக அதிக கால சரித்திரம் உடைய நாடு நமது நாடாகும். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே ஆன்மீகத்திலும் நாகரீகத்திலும் சிறப்புற்றிருந்தது.

நாகரீகங்கள்:

6000 ஆண்டுகளுக்கு முன்பு சிந்து சமவெளியில் சிறந்து விளங்கிய மக்களின் நாகரகம் நமது நாட்டிற்கு பெருமை தருவதாகும். இன்றைய பாகிஸ்தானில் உள்ள மோஹென்ஜதாரோ, ஹாரப்பா என்னுமிடங்களிலும் இந்தியாவில் குஜராத் மாநிலத்திலுள்ள ரங்பூர், லோதால் என்னுமிடங்களிலும் இராஜஸ்தானிலுள்ள கலிபங்கன் என்னுமிடத்திலும் இந்நாகரீகத்தின் சின்னங்கள் அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சுமார் 3500 வருடங்களுக்கு முன்பு சிந்து சமவெளி நாகரீகம் அழிந்தது.

சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் வடமேற்கிலுள்ள கைபர் - போலன் கணவாய்களின் வழியாக மத்திய ஆசியாவிலிருந்து பலர் இந்தியாவில் வந்து குடியேறி இந்திய மக்களுடன் இரண்டறக் கலந்தனர். சுமார் 2600 வருடங்களுக்கு முன் கங்கை நதிக்கரைகளில் உன்னதமான நாகரீகம் வளர்ந்தது. 2700 ஆண்டுகளுக்கு முன் அவந்தி, கோசலம், மகதம் என்ற பேரரசுகள் வட-இந்தியாவில் பிரபலமடைந்திருந்தன.

மௌரியர்கள்:

பாரத வரலாற்றில் பேரரசை ஆண்டதில் பெருமை மிக்கவர்கள் மௌரியர்கள் ஆவார்கள். கி. மு. 322 முதல் சந்திரகுப்தனும் கி. மு. 298 ல் அவனது மகன் பிந்துசாரனும் கி. மு. 274 ல் அவரது மகன் அசோகனும் பதவிக்கு வந்தனர். சந்திரகுப்த மௌரியனின் மந்திரியான கௌடில்யர் (சாணக்கியர்) எழுதிய அர்த்தசாஸ்திரம் இணையற்ற அரசியல் அறிவியல் நூலாக விளங்கி வருகிறது.

குஷாணர்கள்:

இந்தியாவின் வடமேற்கு எல்லையில் குஷாணர்களின் பேரரசு அமைந்தது. குஷாணர்களில் மிகவும் புகழ் பெற்றவர் கி.பி. 78 முதல் கி.பி. 120 வரை அரசாட்சி செய்த கனிஷ்கர் ஆவார். இவர் புத்த சமயத்தைத் தழுவினர். சீனவிலும் இவர் காலத்தில் தான் புத்த சமயம் பரவியது. பிற்காலத்தில் குஷாணர்கள் இந்துக்களாக மாறினர்கள். வாசுதேவர் என்ற குஷாண அரசர் ஒரு சிறந்த சிவபக்தராக திகழ்ந்தார். கி.பி. மூன்றும் நூற்றுண்டில் குஷாண அரசு மறைந்து விட்டது.

கி.மு. முதல் நுற்றுண்டு முதல் கி.பி. இரண்டு நூற்றுண்டுகளில் பிற தேசங்களிலிருந்து பாரதத்திற்கு வந்த அயல் நாட்டினர் பாரத கலாச்சாரத்தில் தம்மை இணைத்துக் கொண்டு பூரணமாக இந்துக்களாக மாறினர்கள்.

குப்தர்கள்:

கி.பி. 300 முதல் 600 வரை மகத நாட்டில் வலிமை வாய்ந்த பேரரசு குப்தர்களுடையது ஆகும்.

குப்தர்களின் காலத்தில் கலை, இலக்கியம், அறிவியல் இவை சிறப்பு பெற்றன. இந்து சமயம்

குப்தர்களின் காலத்தில் சிறந்து விளங்கியது காளிதாசர் சம்ஸ்கிருத மொழியில் சிறந்த காவியங்களைப் படைத்தார். கணிதமேதை ஆரியபட்டர் "ஆரியபட்டீயம்" என்ற நூலை எழுதினர். அமரசிம்மர் அமரகோசம் என்ற சம்ஸ்கிருத இலக்கண நூலை எழுதினர். வராகமிகிரர், "பிரகத் சம்ஹிதா", என்ற வான நூலை எழுதினார். வாத்சாயனர் காம சூத்திரம் எழுதினர். தன்வந்தரி மருத்துவத் துறையை வளர்த்தார். குப்த மன்னர்களில் ஒருவரான குமார குப்தர் நாளந்தா பல்கலைக்கழகத்தை தோற்றுவித்தார். அதில் உலகில் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் பயின்றனர். வல்லபி என்ற பல்கலைக் கழகமும் இக்காலத்தில் சிறந்து விளங்கியது.

ஹர்ஷப்பேரரசு:

குப்த பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் வர்த்தன மன்னர்கள் சிறப்பு பெற்று விளங்கினார்கள். கி. பி. 580 முதல் 605 வரை பிரபாகர வர்த்தனரும் கி. பி. 606 முதல் 647 வரை ஹர்ஷவர்த்தனரும் அரசாட்சி செய்தனர். ஹர்ஷர் காலத்தில் நாளந்தா பல்கலை கழகத்தின் புகழ் மிகவும் உயர்ந்தது. அதில் 10000 மாணவர்களும் 1500 ஆசிரியர்களும் இருந்தனர். ஹர்ஷவர்த்தனர் இந்துவாக வாழ்ந்தார். பிற்காலத்தில் புத்த சமயத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

பல்லவர்கள்:

தலைநகரம் காஞ்சீபுரம், கி. பி. 250 ல் பப்பராஜா பல்லவ வம்சத்தைத் தோற்றுவித்தார். ஆந்திராவிலுள்ள நெல்லூர் முதல் தெற்கில் காவிரி வரை பல்லவர்களின் நாடு விரிந்திருந்தது. முதல் மகேந்திரவர்மன் அப்பர் சுவாமிகளால் சமண சமயத்திலிருந்து இந்து சமயத்திற்கு மாற்றப் பட்டார். இவர்காலத்தில் கற்பாறைகளைக்குடைந்து

நாமக்கல், திருச்சிராப்பள்ளி முதலியபல கோயில்கள் ஏற்பட்டன. சித்தன்ன வாசல் குகையில், இக்காலத்து ஓவியங்களும் வரையப்பட்டன.

முதலாம் நரசிம்மவர்மன் என்ற பல்லவ அரசன் மாமல்லபுரம் என்ற மகாபலிபுரத்தை அமைத்தான்.

பல்லவர்களின் காலத்தில் இந்து சமயம் தழைத்தோங்கியது. தேவாரம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்பவை இயற்றப்பட்டன. காஞ்சியைச் சேர்ந்த தர்மபாலர் நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைவராக இருந்தார். கி. பி. 9-ம் நூற்றுண்டில் பல்லவர்களின் ஆட்சி வீழ்ச்சி பெறத் தொடங்கியது.

சோழப்பேரரசு:

பல்லவர்களின் சிற்றரசனாக இருந்த விஜயாலயன் (கி. பி. 850—871) பிற்கால சோழப்பேரரசை நிறுவினார். ஆதித்ய சோழர் (கி. பி. 871—907) சோழவரசை விரிவாக்கினார். பராந்தக சோழர் (கி. பி. 907—955) சிறந்த சிவ பக்தராக இருந்தார் சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் பொற்கூரை வேய்ந்தார். ராஜராஜ சோழன் (கி. பி. 985-1014) மிகவும் புகழ்பெற்ற அரசனாகத் திகழ்ந்தார். சிறந்த சிவ பக்தராக இருந்தார். கி. பி. 1010 ல் தஞ்சை பிரஹதீஸ்வரர் ஆலயத்தை அமைத்தார். சிவனடியார்களின் பாடல்களை திரட்டி தேவாரம் என்ற பெயரில் வெளியிட்டார். முதல் ராஜேந்திர சோழன் போரில் பல வெற்றிகள் பெற்று வடக்கே துங்கபத்திராவரை நாட்டை விரிவுபடுத்தினார். மலேயா, இலங்கை, சுமத்ரா என்னும் நாடுகளும் சோழ நாட்டில் உட்பட்டிருந்தன.

கி. பி. 1070 முதல் 1120 வரை முதலாம் குலோத்துங்கன் ஆட்சி செய்தார். கி. பி. 1133 முதல் 1150 வரை இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சி செய்தார். இவர் காலத்தில் சேக்கிழார் பெரியபுராணம் என்ற சிறந்த நூலைப் படைத்தார். கி.பி. 1178—1216 வரை மூன்றும் குலோத்துங்கன் ஆட்சி செய்தார்.

சோழர்களின் ஆட்சிக்காலத்தில் ஆலயங்களைச் சுற்றிலும் உயர்ந்த கோபுர வாயில்கள் அமைக்கப்பட்டன.

பிற்கால பாண்டியர்கள்:

அரிகேசரி பராங்குசமாறவர்மன் (கி. பி. 670-710) பிற்கால பாண்டிய மன்னர்களில் சிறப்புற்று விளங்கினார். இவர் கூன் பாண்டியன் என்றும் நின்றசீர் நெடுமாறன் என்றும் அழைக்கப்பட்டார். திருஞானசம்பந்தரால் சமண சமயத்தை விட்டு இந்து சமயம் திரும்பினார். இவருக்குப் பிறகு மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி. பி. 1216 - 1238) ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251-1268) மாறவர்மன் குலசேகரபாண்டியன் (கி. பி. 1268-1310) ஆகியோர் அரசாண்டனர். இவர்கள் சிறந்த இந்து அரசர்களாக விளங்கினார்கள். சிதம்பரம், ஸ்ரீரங்கம் போன்ற பல சிவ, விஷ்ணு ஆலயங்களை பெரும் பணம் செலசெய்து திருட்பணி செய்தனர். குலசேகரனது ஆட்சியின் போது வெனிஸ் நகரப்பயணி மார்கோபோலோ பாண்டியநாடு வந்து அதனை உலகிலேயே சிறந்த நாடு என்று போற்றினார்.

இவரது கடைசிநாட்களில் புதல்வர்கள் உரிமைக்கு சண்டையிட்டு அவரில் ஒருவன் அலாவுதீன் கில்ஜியின் தளபதியும் முஸ்லீம் வெறியனுமான

பல்லிகாப்பூரை உதவிக்கழைத்தான். அதனால் தென்னகத்தில் முஸ்லீம் ஆட்சி ஏற்பட்டது. புனிதமான இந்து தர்மம் மலர்ந்த இடத்தில் மிலேச்சர்களின் ஆதிக்கம் ஏற்பட்டதை எண்ணி குலசேகர பாண்டியன் மன அமைதி இழந்தான்.

அராபிய படையெடுப்பு:

பல நூற்றாண்டுகளாக அராபியர்கள் மேற்கு கடற்கரையில் வியாரபாரத் தொடர்புகள் கொண்டிருந்தனர். கி. பி. 8 - ம் நூற்றாண்டில் இந்தியாவில் படையெடுத்தனர். சிந்துவின் இந்து அரசன் ராஜா தாஹிர் பலமாக போரிட்டு முதலில் படையெடுத்த உபயத்துல்லாவையும் இரண்டாவது படையெடுத்த புடேல் என்பவனையும் விரட்டியடித்தார். தொடர்ந்து கி. பி. 711 ல் முகம்மது பின் காஸிம் சிந்துவின் மீது படையெடுத்து சில நகரங்களை கைப்பற்றினான். கி.பி. 712 ல் ராஜா தாஹீர் வீரப்போரில் மரணமடைந்தார். அவரது மனைவி ராணிபாய் வீரமுடன் சிலகாலம் போரிட்டாள். பின்தோல்வி நிச்சயமெனத் தெரிந்ததும் மானம் காக்க தீக்குளித்து இறந்தாள். கி.பி. 713 ல் சிந்து மாகாணம் முழுவதும் அராபிய ஆட்சியின் கீழ் வந்தது ஆனால் இந்து வீரர்களான ரஜபுத்திரர்களின் எதிர்ப்பை சமாளிக்க இயலாமல் விரைவில் அராபியர் ஆதிக்கம் முடிந்தது.

அராபிய ஆட்சியின் விளைவாக புனித பாரத மண்ணில் இஸ்லாம் விதை ஊன்றப்பட்டது. அதே நேரத்தில் பாரதத்தின் மருத்துவம், கணிதம், சூரிய சித்தாந்தம் என்ற வானவியல், இசை, பஞ்சதந்திரக் கதைகள், கீதை போன்றவற்றை அராபிய நாட்டினர் கற்றனர்.

துருக்கியப் படையெடுப்பு:

கஜினி நாட்டின் மன்னன் சபக்டிஜின் கி.பி. 977ல் இந்தியா மீது படையெடுத்தான். இந்து மன்னன் ஜயபாலன் அவனை விரட்டியடித்தான். அதன் பின் கஜினி மன்னன் சபக்டிஜினின் மகன் முகம்மது கஜினி இந்தியாவின் செல்வத்தில் ஆசை கொண்டு படையெடுத்தான். கி.பி. 1000த்திலிருந்து 27 ஆண்டுகளில் 17 முறை அவன் படையெடுத்தான். ஒவ்வொரு முறையும் அளவிலா செல்வத்தை எடுத்துச் சென்றான். இந்து அரசர்கள் ஒவ்வொருவராக எதிர்த்து தோல்வியுற்றார்கள். பல இந்து ஆலயங்களை கொள்ளையிட்டு அழித்தெறிந்தான். கி.பி. 1025 ல் சோமநாத ஆலயத்தை கொள்ளையிட்டு விலை மதிப்பற்ற பெருஞ்செல்வத்தை கவர்ந்து சென்றான்.

கோரியின் படையெடுப்பு:

ஷகாபுதீன் முகமது கோரி கி.பி 1182 லிருந்து இந்தியா மீது படை யெடுக்கத் தொடங்கினான். 1191 ல் தரையின் சண்டையில் பிரித்வீராஜ் சௌஹான் என்ற இந்து அரசனின் தலைமையில் இந்து அரசர்கள் ஒன்று சேர்ந்து எதிர்த்தனர். கோரி புறமுதுகிட்டு ஓடி தப்பினான். ஆனால் 1192 ல் கனோஜ் மன்னன் ஜயச்சந்திரன் துரோகியாக மாறி, கோரிக்கு உதவியாக பிருதிவீராஜை எதிர்த்ததில் பிருதுவீராஜ் தோற்கடிக்கப்பட்டு வீரமரணம் எய்தினான். 1193ல் கோரி டில்லியை கைப்பற்றினான். டில்லி கோரியின் இந்திய பிரதேசங்களின் தலைநகராக மாறியது. அவ்விதமாக இந்துக்களின் ஒற்றுமையின்மையினால் டில்லியில், அன்னியர்களாகிய முஸ்லீம் சுல்தான்களின் ஆட்சி ஏற்பட்டது.

முஸ்லீம ஆட்சியில் இந்தி இலக்கணமும் அரபி மொழியும் கலந்த 'உருது' என்ற புதிய மொழி ஏற்பட்டது. இந்துக்கள் ஆயிரக்கணக் காக மதம் மாற்றப்பட்டனர்.

பாமினிப் பேரரசு:

(*1347-1526*) முகம்மதுபின் துக்ளக் டில்லி யில் ஆண்ட போது தக்காணத்தில் அன்னிய அமீர்களால் பாமினி அரசு நிறுவப்பட்டது. இதன் தலைநகரம் குல்பர்கா. முகம்மது ஷா, பிருஸ்ஷா, அகம்மதுஷாவாலி, மூன்றாம் முகம்மதுஷா, என்னும் சுல்தான்கள் பாமினி அரசை ஆண்டனர். பின் பாமினி அரசு பீரார், அகம்மது நகர், பிஜப்பூர், கோல் கொண்டா, பீடார் என ஐந்தாக உடைந்தது. பாமினி அரசின் போது பாரதத்தில் கலைநுட்பம் மிக்க மசூதிகள் அமைக்கபட்டது. இந்துக்கள் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வாயில்லாப் பூச்சிகளாக வாழ்ந்தனர்.

விஜயநகரப் பேரரசு (*1336-1565*):

ஹரிஹரர் புக்கர் என்ற சகோதரர்கள் வித்யாரண்ய சுவாமிகளின் ஆசியுடன் பாரத நாட்டின் சமயத்தை யும் பண்பாட்டையும் காப்பதற்காக சபதம் ஏற்று 1336 -ல் துங்கபத்திரை நதிக்கரையில் ஒரு இந்து பேரரசை ஏற்படுத்தினர். 1344 -ல் விஜய நகரம் அதன் தலைநகரமாயிற்று. முதலில் ஹரிஹரரும் பின்பு புக்கரும் அரசாண்டனர். இரண்டாம் தேவ ராயர் (*1422 - 1446*) பாமினி அரசர்களை பலமுறை எதிர்த்து போர் செய்து இந்து அரசை பலப்படுத் தினார். கிருஷ்ண தேவராயர் (*1505 - 1529*) விஜய நகரப் பேரரசின் புகழ் பெற்ற அரசராக இருந்தார். அஷ்டதிக்கஜங்கள் என்று அழைக்கப்பட்ட அறிஞர்

கள் அவர் அரசவையை அலங்கரித்தனர். விட்டல ஸ்வாமி ஆலயம், ஹசரா இராமஸ்வாமி ஆலயம் போன்ற பல பேராலயங்களை எழுப்பினார். இந்து சமயம் செழித்து வளர்ந்து மக்கள் இன்புற்று வாழ்ந்தனர். இந்துப் பேரரசின் வலிமையும் புகழும் செல்வ செழிப்பும் கண்டு அந்நிய முஸ்லீம் அரசர்கள் பீதியும் பொருமையும் கொண்டனர். பாமினி அரசின்ஆதிக்கம் தெற்கு பரவஇயலாமல் போயிற்று. எவ்விதமேனும் இந்துப் பேரரசை அழித்து இந்து சமயத்தையும் இந்து பண்பாட்டையும் சிதைக்க எண்ணம் கொண்டு பிஜப்பூர், அகம்மது நகர், கோல் கொண்டா, பீடார் ஆகிய முஸ்லீம் அரசர்கள் கூட்டாக சேர்ந்து விஜய நகரப் பேரரசுடன் போர் தொடுத்தனர். 1565 ஜனவரி 23-ல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில் பல்லாயிரம் இந்துக்கள் பலியானார்கள். அரசர் ராமராயர் கொல்லப்பட்டார். இந்து ஆலயங்கள், கலைக்கூடங்கள், நகரங்கள் அத்தனையும் அந்நிய முஸ்லீம் துரோகிகளால் அழித்து தரைமட்டமாக்கப்பட்டது. தற்போதுள்ள ஹம்பி நகரில் அந்த அழியாச் சின்னங்கள இப்போதும் காணப்படுகிறது.

ராமராயரின் சகோதரர் திருமலை தலைநகரை பெனுகொண்டாவிற்கு மாற்றி ஆட்சி செய்து வந்தார். இருப்பினும் முஸ்லீம் சுல்தான்களின் அடிக்கடி தாக்குதல்களிலும் உள்நாட்டுத் தலைவர்களின் கலகங்களிலும் விஜயநகரப் பேரரசு படிப்படியாக வீழ்ச்சியுற்றது.

மொகலாய பேரரசு (1526 - 1707):

காபூலில் மன்னராக இருந்த பாபர் இந்துஸ்தானத்தின் மீது 1526-ல் படையெடுத்தான். முதலாம் பானிப்பட்டு போரில் டில்லியை ஆண்டு வந்த

இப்ராகிம்லோடியை வென்று மொகலாய அரசை நிறுவினான். அவருக்குப்பின் ஹுமாயூன் அரசனானான். ஹுமாயூனை விரட்டிவிட்டு ஆப்கானைச் சேர்ந்த சூர்வம்ச அரசன் ஷெர்ஷா அரசரானார் 10 ஆண்டுகளுக்குப் பின் ஹுமாயூன் மீண்டும் ஆட்சியை சூர்வமிசத்தாரிடமிருந்து கைப்பற்றினான். ஹுமாயூனின், மறைவிற்குப்பின் அக்பர் தமது 13 -வது வயதில் அரசனானான். அப்போது சூர்வம்சத்தைச் சேர்ந்த ஹேமு டெல்லியை கைப்பற்றினான். 1656 -ல் நடந்த இரண்டாம் பானிப்பட்டுப் போரில் அக்பர் ஹேமுவைத் தோற்கடித்து டில்லியை கைப்பற்றினான். தொடர்ந்து பல போர்களை நடத்தி தனது சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தினான். ராஜா மான்சிங் ராஜா பகவன்தாஸ் போன்ற இந்து வீரர்கள் துணை நின்றதால் இந்துக்களை வைத்தே பல இந்து அரசுகளை வென்றான்.

1567-ல் சித்தூரை வென்றான். ராணா பிரதாப் சிம்மன் என்ற ரஜபுத்திர வீரர் சித்தூரை மீண்டெடுப்பதற்கு தொடர்ந்து 25 ஆண்டுகள் போர் செய்தார். 1596 - ல் நடைபெற்ற ஹால்டிகாட் போரில் துரோகி மான்சிங்கினால் தோற்கடிக்கப் பட்டார். இப்போரில் மானமுள்ள இந்து வீரர்களின் ரத்தம் ஆறாக ஓடியது.

ஜெசியா வரியை நீக்கியதால் இந்துக்களுக்கு எற்பட்ட பிரிவினை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு பேரரசினை நிறுவுவதில் அக்பர் வெற்றிபெற்றார். அக்பருக்குப்பின் ஜஹாங்கீரும் (1605 - 1627) அதன் பின் ஷாஜஹானும் (1629 - 1658) அதன் பின் ஔரங்கசீபும் (1658 - 1707) அரசர்களானார்கள். மற்ற அனைவரையும் விட ஔரங்கசீப் மதவெறியனாக இருந்தான். மீண்டும் இநதுக்களின் மீது

ஜெசியா வரியை விதித்தான். மேவாரை அழித்தான் பல்லாயிரம் இந்துக் கோவில்களை இடித்தான். அந்த இடங்களில் மசூதிகள் எழுப்பினான். பய முறுத்தி இந்துக்களை மதம் மாற்றினான். மறுத்த வர்களைக் கொன்றான். சீக்கியர்களின் 9-வது குரு தேஜ் பகதூர் மதம் மாறி இஸ்லாம் சமயத்தில் சேர மறுத்ததனால் அவரை சித்திரைவதை செய்து கொன்றான். அவரின் மகன் குருகோவிந்தசிங் சீக்கி யர்களை இஸ்லாமியர்க்கு எதிராக ஒன்று படுத்தி னார். ஔரங்கசீப்புக்குப்பின் 1739-ல் நாதிர்ஷா என்ற பாரசீக அரசனின் படையெடுப்பும் மராட்டிய இந்து சக்தியின் எழுச்சியும் உள் நாட்டு அரசுரிமைப் போராட்டங்களும் மொகலாய அரசின் வீழ்ச்சிக்கு காரணமாயிற்று.

மராட்டிய இந்து சாம்ராஜ்யம்:

1627-ல் பிறந்த சிவாஜி அன்னிய முஸ்லீம் களின் கொட்டத்தை அடக்க உறுதி பூண்டார். சமர்த்த ராமதாஸ் சுவாமிகளின் ஆசிபெற்று மராட்டிய இளைஞர்களை ஒன்று திரட்டினார். பிஜப்பூரின் பல கோட்டைகளையும் மொகலாயப் பேரரசின் பல பகுதிகளையும் கைப்பற்றி மராட்டிய இந்து சாம்ராஜ்யத்தின் சத்ரபதியாக முடிசூட்டிக் கொண்டார். சிவாஜியை அடக்குவதற்கு ஔரங்க சீபும் பிஜப்பூர் சுல்தானும் எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போயிற்று. சிவாஜியின் ஆட்சி இந்து தர்ம நெறி முறைகளின்படி அனைவரும் போற்றும் வண்ணம் அமைந்தது. 1679-ல் சிவாஜி மறைந் தார். 1689-ல் ஔரங்கசீபின் சதியினால் சாம்பாஜி கொல்லப்பட்ட பின் மராட்டிய இந்து சாம்ராஜ்யம் சிதைவுற்றது.

ஐரோப்பியர்களின் ஆட்சி:

பாரதத்திற்கு வியாபாரம் செய்வதற்காக போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோர் வந்தனர். வியாபாரத்திற்கு வந்தவர்கள் சில பகுதிகளையே தமதாக்கிக் கொண்டனர்.

ஆங்கிலேயர்களின் ஆட்சி:

கி.பி. 1600 ல் வியாபாரத்திற்காக கிழக்கிந்திய கம்பெனி துவக்கப்பட்டது. மொகாலயப் பேரரசின் வீழ்ச்சியும் பாரத அரசர்களின் உள்நாட்டுப் போர்களும் சாதாகமாக பயன்படுத்திக் கொண்டு பாரதத்தின் பல பகுதிகளை கைப்பற்றி கம்பெனியினர் ஆட்சி நடத்தினுர்கள். இந்தியாவின் பெரும்பகுதி கம்பெனியின் ஆட்சிக்குட்பட்டது. ஆங்கிலேயர்களின் கொடுங்கோலாட்சியும் இந்து விரோதப் போக்கையும் கண்டு பாரதத்தின் வீரர்கள் பொங்கி எழுந்தனர். ஜான்சிராணி லட்சுமிபாய், நாநாசாகிப் போன்றவர்களின் தலைமையில் பாரதத்தின் முதல் சுதந்திரப்போர் 1857 ல் துவக்கப்பட்டது. தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். பல்லாயிரம் இந்துக்கள் பலியாயினர். முதல் சுதந்திரப்போர் தோல்வியுற்றுலும், இந்தியர் உள்ளத்தில சுதந்திரத்தாகம் ஏற்பட இப்போர் உதவியது.

1858 நவம்பர் 1 முதல் இந்தியா இங்கிலாந்தின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்தியா மூலப்பொருட்கள் இங்கிலாந்துக்கு கொண்டு செல்லப்பட்டது. கிருஸ்தவ சமயம் பரப்பப்பட்டது. பாரத மக்கள் வறுமையில் வாடினுர்கள். பாரத நாட்டின் செல்வத்தைக் கொண்டு வெள்ளையர்கள் பிரபுக்களாக வாழ்ந்தனர்.

இந்திய மக்கள் சுதந்திரப் போராட்டம் நடத்தினர். பலர் கொல்லப்பட்டனர். பலர் நாடு கடத்தப்பட்டனர். சிறையிலடைக்கப் பட்டனர். இறுதியில் 1947 ஆகஸ்டு 15-ம் தேதி பாரதம் சுதந்திரம் பெற்றது. முஸ்லீம் தலைவன் ஜின்னா தனது தனிக்குணத்தை காட்டினான். அதனால் ஆங்கிலேயன் பாரத நாட்டை பல கூறுகளாக்கி விட்டுச்சென்றான். அகண்ட பாரத அன்னை முனிவர்கள் வேதமிசைத்த சிந்துவையும் வங்கக்கடலில் கங்கையின் சங்கமப் பகுதியையும் இழந்து நிற்கின்றாள்.

பாரதநாட்டு மக்கள் மனத்தில் பல நூற்றாண்டுகளாக அனுபவித்த துன்பங்கள், பாய்ச்சிய ரத்தஆறுகள், உடைக்கப்பட்ட கோயில்கள், அழிக்கப்பட்ட கலைக்கூடங்கள், இழந்த செல்வங்கள் ஆகியவை நீங்காத நினைவுகளாக எஞ்சி நிற்கிறது.

சிதைந்து விட்ட நமது பண்பாடுகள் மீண்டும் புத்தொழில் பெறப்போகிறது. இழந்து போன தேசங்களையும் மீளப்பெறும் காலம் வரத்தான் போகிறது. இந்தியாவின் சமயத்தையும் சாஸ்திரங்களையும் உலகோர் அனைவரும் கற்கத் தொடங்கி விட்டார்கள். பாரத அன்னைஇழந்த அனைத்தையும். மீளப்பெற்று புத்தொழிலுடன் வாழத்தான் போகிறாள்.

6. பாரதக் கலைகள்

பாரதநாடு தொன்று தொட்டே ஆன்ம ஞானத்திலும், உள்ளப் பண்பாட்டிலும், கலைத் திறமையிலும் சிறந்து விளங்கியது. இந்திய நாகரீகம், கலைகள், பண்பாடு யாவுமே ஆன்மீகத்தின் அடிப்படையில் தோன்றி வளர்ந்தனவாகும். மேலும் கலைகள் மூலம் நம் முன்னோர்கள் ஆன்

மீகத்தையும் ஒழுக்கத்தையும் வளர்த்தனர். பண்டு முதலே பாரதத்தில் தோன்றி வளர்ந்த கலைகள் அறுபத்து நான்காகும். அவைகளின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.

1) அக்கர [அட்சர] இலக்கணம்
2) லிகிதம் [அழகிய கை எழுத்து]
3) கணிதம்
4) வேதம்
5) புராணம்
6) வியாகரணம் [இலக்கணம்]
7) நீதிசாஸ்திரம்
8) சோதிடசாஸ்திரம்
9) தருமசாஸ்திரம்
10) யோக சாஸ்திரம்
11) மந்திர சாஸ்திரம்
12) சகுன சாஸ்திரம்
13) சிற்ப சாஸ்திரம்
14) வைத்திய சாஸ்திரம்
15) ரூபசாஸ்திரம் (சாமுத்ரிகா லட்சணம் – உடலுறுப்புக்களை பார்த்து ஆளின் குணங்களை அறிதல்
16) இதிகாசம்
17) காவியம்
18) அலங்காரம் (அணி இலக்கணம்)
19) மதுர பாஷணம் [சொல்வன்மை]
20) நாடகம்
21) நிருக்தம் [வைதிக சொற்களும் பொருட்களும்]
22) சப்தப்ரம்மம் [ஒலி விஞ்ஞானம்]
23) வீணை
24) வேணு [புல்லாங்குழல் வாசிப்பு)
25) மிருதங்கம்
26) தாளம் [ஜகத்தாளங்கள் அடித்தல்]
27) அஸ்த்ர பரீட்சை [வில்வித்தை]
28) கனகப்பரீட்சை [தங்கம் சோதித்தல்]
29) ரதப் பரீட்சை [தேரோட்டுதல்]
30) கஜப்பரீட்சை [யானை ஒட்டுதல்]
31) அசுவப்பரீட்சை [குதிரையோட்டம்]
32) ரத்தினப் பரீட்சை [மணிகளைச் சோதித்தல்]
33) பூமிப்பரீட்சை
34) சங்க்ராம லட்சணம் [போர்க்கலை]

35) மல்யுத்தம்
36) ஆகர்ஷணம் [மந்திரசக்தியால் வசிகரித்தல்]
37) உச்சாடணம் [மந்திரத்தால் பேயொழித்தல்]
38) வித்வேஷணம்[மந்திரத்தால் வெறுப்பை உண்டாக்கல்]
39) மதன சாஸ்திரம் [காமசாஸ்திரம்]
40) மோகனம் [மந்திரத்தால் மயக்குதல்]
41) வசீகரணம் [கவர்ச்சி மந்திரம்]
42) ரசவாதம் [மற்று உலோகப் பொருட்களை பொன்னாக்குதல் - ரசாயனம்]
43) காந்தருவ வாதம் [கந்தருவர்களைப் பற்றிய அறிவு]
44) பைபீலவாதம் [உயிர்வகைகளின் மொழிகளை உணர்தல்]
45) கௌதுகவாதம் [வருந்திய மனத்தைத் தேற்றும் கலை]
46) தாதுவாதம் [நாடி பார்த்தல்]
47) காருடம் விஷகடி மந்திரங்கள் பயில்தல்
48) நஷ்டம் [இழந்த பொருட்களை திரும்பிப் பெறும் முயற்சி]
49) முஷ்டி [கையடக்கம் அறிதல்]
50) ஆகாயப்ரவேசம் [அரூபியாய் உலவுதல்]
51) ஆகாயகமனம் [வெளியில் உலவுதல்]
52) பரகாயப்பரவேசம் [வேறொருவர் பிணத்தினுள் தன்னுயிரைப் புகுவித்தல்]
53) அதிரிசியம் [தன்னுடலை மறைத்தல்]
54) இந்திர ஜாலம் [கண்கெட்டு வித்தை]
55] மஹேந்திர ஜாலம் [தரையிலும் வானத்திலும் அற்புதங்களைச் செய்து காட்டுதல்]
56) அக்கினி ஸ்தம்பம் [தீயைச் சுடாமலாக்குதல்]
57) ஜலஸ்தம்பம் [தண்ணீரில் நடப்பது முதலியன]
58) வாயுஸ்தம்பம் [காற்றை அடக்குவது]

59) த்ருஷ்டிஸ்தம்பம் [கண்களை மயக்குதல்]
60) வாக்குஸ்தம்பம் [பேச்சை அடக்குதல்]
61) சுக்லஸ்தம்பம் [வீரியத்தை கட்டுவது]
62) கன்னஸ்தம்பம் [பொருட்களை மறைத்து வைத்தல்
63) கட்கஸ்தம்பம் [வாள் முதலிய ஆயுதங்களின் வலிமையை அழித்தல்]

64. அவஸ்தைப்ரயோகம் [ஐந்தவஸ்தைகளாகிய விழிப்பு, கனவு தூக்கம், துரியம், துரியாதீதம் [சமாதி நிலை] ஆகியவைகளில் தன் விருப்பம்போல் வீற்றிருந்தல்]

பாடம் 6

இந்து சமயத்தின் அடிப்படை நூற்கள்

1. வேதங்கள்:

'வித்' என்ற பதத்தினின்றும் வேதம் என்ற சொல் வந்தது. வித் என்பதற்கு 'அறிவு' அல்லது 'வித்தை' என்று பொருள். எனவே வேதம் அறிவைத் தரும் நூல் எனக்கொள்ளலாம். குரு முகத்திலிருந்து கேட்டு பரம்பரை பரம்பரையாகச் செவி வழி வந்ததால் 'சுருதி' என்ற பெயரும் உண்டு. இதை வேதவியாசர் நான்காகத் தொகுத்தார். அவை (1) ரிக் (2) யஜுர் (3) ஸாமம் (4) அதர்வணம் ஆகிய வேதங்களாகப் பெயர் பெற்றது.

ரிக் என்பதற்கு 'துதிகள்' எனப் பொருள் ரிக்வேதத்தில் கடவுளைத் துதிக்கின்ற மந்திரங்கள் அடங்கியுள்ளன. மொத்தம் 1028 மந்திரங்கள் உள்ளன.

யஜ்ஞங்களைச் (வேள்வி)சிறப்பித்து சொல்வது யஜுர்வேதம். இதில் கர்ம காண்டம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. 18,000 மந்திரங்களுள்ள கிருஷ்ண யஜுர்வேதம், 1900 மந்திரங்களுள்ள சுக்ல யஜுர்வேதம், என யஜுர்வேதம் இரு பகுதிகளாக உள்ளது.

ரிக் வேதத்திலுள்ள மந்திரங்கள் இசையோடு கூடிய பாடல்களாக ஸாம வேதத்தில் கூறப்பட்டுள்ளன. மேலும் 75 தனி மந்திரங்களும் கூறப்பட்டுள்ளன.

அதர்வண வேதத்தில் உபாஸனைகளும், மந்திரவாத முறைகளும் கூறப்பட்டுள்ளன. இதில் 760 ஸுக்தங்களும், 6,000 மந்திரங்களும் உண்டு.

ஆயுர்வேதம், தனுர் வேதம், காந்தர்வவேதம், அர்த்தசாஸ்திரம் ஆகியவை உப வேதங்களாகும்.

இன்னும் சில கிராமங்களில் இந்து ஒருவன் தன்னை 'அஞ்ஞானி' என்றும், கிறிஸ்தவர்களை 'வேதக்காரர்கள்' என்றும் அறிமுகம் செய்யும் நிலையுள்ளது. இதற்கு மாற்று மதத்தார் செய்த பொய்ப் பிரச்சாரங்களே காரணம். இன்று அவர்கள் இந்துக்களின் சடங்குகள் பலவற்றை கடைப்பிடித்து மதம் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளனர். வேதத்திற்குச் சொந்தக்காரர்களாகிய நாம் இனி மாற்று மதத்தவர்களை வேதக்காரர்கள்' என அழைப்பதையும், நம்மை 'அஞ்ஞானிகள்' என அறிமுகம் செய்வதையும் அறவே ஒழிப்போமாக.

2. உபநிஷத்துக்கள்:

வேதங்களின் இறுதியான பாகங்களே உபநிஷத்துக்கள் (உபநிடதங்கள்) ஆகும். ஒவ்வொரு வேதத்திலும் அதனதன் சாகைகளின் எண்ணிக்கையின் அளவில் முறையே 21, 109, 1000, 50 உபநிடதங்கள் உள்ளன. இதில் 108 உபநிஷத்துக்கள் வழக்கிலுள்ளன. அவற்றில் முக்கியமானவை ஈச, கேன, கட, பிரச்ன, முண்டக, மாண்டுக்ய, ஐதரேய, தைத்ரிய, சாந்தோக்ய, பிருகதாரண்யகம் ஆகிய 10 ஆகும். உபநிடதங்கள் ஞான காண்டத்தில் அடங்கியவை. பிரம்மத்தின் இயல்பு, பிரம்மத்திற்கும் ஜீவாத்மாவிற்கு மிடையேயுள்ள வேறுபாடு, மனிதன், பந்தம், மோட்சம் என்பவற்றின் ஆழமான உண்மைகளை உபநிடதங்கள் விளங்குகின்றன.

3. வேதாங்கங்கள்:

வேதாங்கங்கள் 1) சிக்ஷை, 2) வியாகரணம், 3) சந்தஸ், 4) நிருக்தம், 5) ஜோதிஷம், 6) கல்பம் என்ற ஆறுமாகும்.

1) சிக்ஷை என்பது வேத மந்திரங்களின் உச்சரிப்பை விளக்குவது.

2) வியாகரணம் என்பது சமஸ்கிருதத்தின் இலக்கணம். இந்த வியாகரண சாஸ்திரங்கள் அனேகம் உள்ளன. அவற்றில் பாணினியின் நூல் புகழ் பெற்றது.

3) சந்தஸ் என்பது சமஸ்கிருதப் பாடல்களின் விருத்தம் எது எனக் கூறுவது. எழுத்துக்களைக் கொண்டு வேத வாக்கியங்களை அளவிட்டுச் சொல்வது சந்தஸ். இதை யாப்பிலக்கணம் எனக்கூறலாம்.

4) நிருக்தம் என்பது வேத சப்தங்களை உச்சரிக்கும் போது சரீரத்தினுடைய எந்தெந்த இடத்திலிருந்து சப்தங்கள் வெளிவருகின்றனவோ அந்தந்த இடத்தைப்பற்றிக் கூறுவது நிருக்தம். இதை சொல்லிலக்கணம் என்று கூறலாம். நிருக்தம், என்பதற்கு விளக்கிச் சொல்லுதல் என்று பொருள்.

5) ஜோதிஷம் என்பது கிரஹங்களின் நிலைகளைக் கணக்கிட்டு காலத்தைக் கணிப்பது வான சாஸ்திரத்தை உள்ளடக்கியது.

6) கல்பம் என்பது வேதகர்மங்களை எந்தெந்த இடத்தில் எந்தெந்த முறையில் எந்தெந்த விதமாக அமைத்துச் செயல்பட வேண்டும் என்பது பற்றி

கூறுகிறது. யாகசாலைகள் அமைப்பு யஜ்ஞகுண்டம், மேடைகள் முதலிய அமைப்புக்களைக் கூறு வது யஜ்ஞ பாத்திரங்களைப் பற்றியும் கூறும்.

4. பிரம்ம சூத்திரம்:

இதன் ஆசிரியர் பாதராயண மகரிஷி, வேதங் களின்ஞான காண்டத்தை அடிப்படையாகக் கொண் டது பிரம்மசூத்திரம். இறைவனின் உண்மைஆன்மா வின் நுண்ணியல்பு, ஜீவான்மா பரமான்மா ஒற் றுமை, இறைவனின் மாயாசக்தி, இறைவனை அடையும் விதம் முக்தியின் இயல்பு ஆகியவை பிரம்ம சூத்திரத்தில் விளக்கப்படுகின்றன. இதை வேதாந்த சூத்திரம் என்றும் கூறுவர். இது ஷட்தர் சனங்களில் ஒன்றாகிய உத்தரமீமாம்சையைப் பற் றிக்கூறும் நூல்.

5. இதிகாசங்கள்:

உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், ஆகியவற்றின் உன்னதமான தத்துவங்களை அனைவரும் புரிந்து கொள்வது கடினம். எனவே குழந்தைகளுக்கு கசப்பு மருந்துடன் சீனி கலந்து கொடுப்பது போல், சுவை மிக்க கதைகள் மூலமாக உன்னதத் தத்து வங்களைப் பாமரரும் உணரும் வண்ணம் இதி காசம் நமக்குத் தருகின்றது. உலகிலேயே பழமை யான காவியங்களாகிய இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் நமக்கு இன்றும் அழியாது பல உண்மைகளையும், ஒழுக்க நெறிகளையும் கற்பிக்கின்றன. இவைகளை நாம் மற்ற பாடங்க ளில் விரிவாகக் காணலாம்.

6. புராணங்கள்:

வேதத்தில் கூறப்படும் தத்துவங்களும், சிறு சிறு கதைகளும் விரிவாக, எளிய நடையில்

இனிய முறையில் புராணங்களில் விளக்கப்படுகின்றன. 18 புராணங்களையும் வகுத்தவர் வேதவியாசராவார்.

புராணங்களுக்கு 5 இலக்கணங்கள் உண்டு. அவை 1) சர்கம் அல்லது படைப்பு விஞ்ஞானம் [வரலாற்றை ஒட்டியவை] (2) பிரதிசர்கம் அல்லது படைப்பின் விரிவு 3) பிரளயம் அல்லது ஒடுக்கம் 4) வம்சானு சரிதம் அல்லது மன்னர்களின் வம்சாவளி 5) மன்வந்தரங்கள் ஆகிய 5 ஆகும்.

புராணங்களில் கூறப்படும் கதைகள் மூலம் பக்தி வெகுவாக வளர்க்கப்பட்டது. ஒவ்வொரு புராணமும் அவைகூறும் பொருட்களும்.

1. பிரம்ம புராணம் - பிரம்மாவின் சிறப்பை விளக்குகிறது.
2. பத்ம புராணம் - உலகப் படைப்பை விளக்குகிறது
3. நாரத புராணம் - கண்ணன் பெருமை, தத்தாதிரேயர் சிறப்பு கார்த்திகைச் சிறப்பு போன்றவற்றை கூறுகிறது.
4. கருடபுராணம் - இறந்தபின் உயிரின் நிலையினை விளக்குகிறது.
5. விஷ்ணு புராணம் - மகாவிஷ்ணுவைப் பற்றி கூறுகிறது.
6. பாகவத புராணம் - தசா அவதாரங்களையும், விஷ்ணுவின் பெருமைகளையும் கூறுகிறது.
7. சிவ புராணம் - சிவனின் திருவிளையாடல்களைக் கூறுகிறது.
8. கந்த புராணம் - முருகப்பெருமானைபற்றிக் கூறுகிறது.
9. லிங்கபுராணம் - ஈசான கல்ப உற்பத்தி அகோர மந்திர மகிமை முதலியவற்றைக் கூறுகிறது.

10. கூர்ம புராணம் - கூர்மஅவதார மகிமையைக் கூறுகிறது.
11. வாமன புராணம் - வாமன அவதார மகிமையைக் கூறுகிறது.
12. வராக புராணம் - கீதையின் மாண்பை விளக்குகிறது.
13. பவிஷ்ய புராணம் - ஆரிய வழிபாட்டு மகிமையை விளக்குகிறது.
14. மத்ஸ்ய புராணம் - மத்ஸ்ய (மீன்) அவதாரத்தை விளக்குகிறது.
15. மார்க்கண்டேய புராணம் - ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுகிறது
16. பிரம்மாண்ட புராணம் - அனந்த சயனம், இறை பூஜை இவற்றைவிளக்குகிறது.
17. பிரம்மவைவர்த்த புராணம் - பிரம்மாண்டத்தை விளக்குகிறது.
18. அக்னி புராணம் - இதிகாசங்களை சுருக்கமாகக் கூறுகிறது.

மேலும் உபபுராணங்கள் 18 உண்டு. அவை (1) சனத்குமாரம், 2) நரசிம்ஹம், 3) பிருஹன் நாரதீயம், 4) ஸ்வரஹாஸ்யம், 5) துர்வாசகம், 6) கபிலம், 7) வாமனம், 8) பார்கவம். 9) வருணம், 10) காலிகா, 11) சாம்ப, 12) நந்தி, 13) சூர்ய, 14) பராசர, 15) வாஸிஷ்டம், 16) தேவி பாகவதம், 17) கணேசம், 18) ஹம்சம் என்ற புராணங்களாகும்.

7. ஆகமங்கள்

ஆகமங்கள் சைவாகமம், வைணவாகமம், சாக்தாகமம் என 3 பிரிவுகளாக உள்ளன. சைவ ஆகமங்கள் 28 ம், வைணவ ஆகமங்கள் 250 – ம், சாக்த ஆகமங்கள் 77 -ம் உண்டு என்றும் கூறுவர்.

சைவ ஆகமங்கள் சிவனது முகத்திலிருந்து வந்ததாகக் கூறுவர். சிவனது (1) ஸத்யோஜாத முகத்திலிருந்து. காமிகம், யோஜகம், சிந்த்யம், காரணம் என்ற ஆகமங்களும் (2) வாமதேவ முகத்திலிருந்து தீப்தம், ஸூக்ஷ்மம். ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம் என்ற ஆகமங்களும் (3) அகோர முகத்திலிருந்து விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம்புவம், அனிலம், வீரம் என்ற ஆகமங்களும. (4) தத்புருஷ முகத்திலிருந்து ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம். பிம்பம் என்ற ஆகமங்களும் (5) ஈசான முகத்திலிருந்து ப்ரேவ், கீதம் லளிதம், சித்தம், ஸந்தானம், ஸர் லோக்தம், பரமேச்வரம், கிரணம், வாதுளம் என்பவையும் ஆகமித்ததாகக் கூறுவர்.

வைணவ ஆகமங்கள் வைகாநச, பாஞ்சராத்ர, பரிசித்சார, விஞ்ஞான, லலிதா என 4 பிரிவுகளாக உள்ளன. திருமாலை பெருந்தெய்வமாகக் கொண்டு இவை இயம்பப் படுகின்றன.

சாக்த ஆகமங்கள் 64 தந்திரங்கள் முதலிய 77 நூல்கள் உள்ளன என்று கூறுவர். சக்தியை அடிப்படையாகக் கூறும் இவை சிவன், பார்வதி உரையாடல்களாகக் காணப்படுகின்றன.

ஆகமங்கள் பொதுவாக பூஜைப்பொருட்கள் பூஜை விதிகள், ஆலய நிர்மாணம், பிரதிஷ்டை முதலிய கிரியைகள், உற்சவங்கள், தீக்ஷா விதிகள், ஆத்ம சுத்தி, பதி பசு பாச இலக்கணங்கள், மந்திர வாதங்கள், வசீகரணம் போன்றவற்றைக் கூறுகின்றன.

8. திவ்விய பிரபந்தம்:

திருமாலின் திருப்புகழை ஆழ்வார்கள் பக்தியுடன் பாடியருளியவைகளே திவ்விய பிரபந்தம் எனப்படுகிறது. இவை 4,000 பாடல்களாக இருப்பதால் நாலாயிர திவ்ய பிரபந்தம் என்கிறார்கள்.

முதல் திருவந்தாதி (100 பாடல்கள்) பொய்கையாழ்வாரும், இரண்டாம் திருவந்தாதி (100 பாடல்கள்), பூதத்தாழ்வாரும், மூன்றாம் திருவந்தாதி (100) பேயாழ்வாரும், திருச்சந்தவிருத்தம் (120) நான்முகன் திருவந்தாதி (96) திருமழிசையாழ்வாரும், பெருமாள் திருமொழி (105) குலசேகராழ்வாரும், திருப்பல்லாண்டு (12) பெரியாழ்வார் திருமொழி (361) முதலிய 473 பாடல்களை பெரியாழ்வாரும், திருப்பாவை (30) நாச்சியார் திருமொழி (143) ஆண்டாளும். திருமாலை (45) திருப்பள்ளியெழுச்சி (10) திருப்பாணாழ்வாரும், பெரியதிருமொழி (1084) திருக்குறுந்தாண்டகம் (20) திருநெடுந்தாண்டகம் (30) திருவெழுகூற்றிருக்கை (1) சிறியதிருமடல் (1) பெரிய திருமடல் (1) திருமங்கையாழ்வாரும், திருவிருத்தம் (100) திருவாசிரியம் (7) பெரிய திருவந்தாதி (87) திருவாய்மொழி (1102) நம்மாழ்வாரும், கண்ணி நுண்சிறுத்தாம்பு (11) மதுரகவியாழ் வாருமாக மொத்தம் 3776 பாடல்கள் பாடியுள்ளனர். சிறிய திருமடல். பெரிய திருமடல் ஆகிய இரு கலி வெண்பாக்களிலும் ஒவ்வொரு கண்ணியையும் ஒவ்வொரு பாசுரமாகக் கொண்டு முறையே $77\frac{1}{2}$ $148\frac{1}{2}$, ஆக 226 பாசுரங்கள் என கணக்கிட்டு 4000 (3774 - 226) எனக்கூறுவர்.

9. திருமுறைகள்:

'திருமுறை' என்பதற்கு தெய்வீக நூல் என்றும் 'சிவநூல்' என்றும் பொருள் கூறுகின்றனர். திருமுறைகளின் ஆசிரியர்கள் புராண நிகழ்ச்சி

களைத்துணையாகக்கொண்டுசிவபிரானது புகழைப் பாடினர். சிவபரத்துவத்தை வற்புறுத்தினர் சிவனையே முழுமுதற் பொருளாய்க் கொண்டு. பாடப்பட்டாலும், முருகனையும், விநாயகப்பெரு மானையும் தேவியையும் புகழ்ந்து பாடும் பாடல் களும் திருமுறைகளில் உள்ளன. அடியவர்களைப் பற்றிய வரலாறுகளைத் தரும் பாடல்களும் உள்ளன. 'திருமுகப்பாசுரம்' சிவபிரானால் அருளப்பெற்றது. மற்ற அனைத்தும் சிவனடியார்களால் அருளப் பெற்றவை.

திருமுறைகளை 12 ஆக வகுத்துள்ளனர். சம்பந்தர் பாடிய பாடல்கள் தேவாரம், 1, 2, 3. திருமுறைகளாகவும், அப்பர பாடிய பாடல்கள் (தேவாரம்) 4, 5, 6, திருமுறைகளாகவும், சுந்தரர் பாடிய தேவாரம் 7 -ஆம் திருமுறையாகவும், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம், திருக்கோவை யார் ஆகியவை 8 -ஆம் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி, காடநம்பி, கண்டராதித்தர் வேணாட்டடிகள், திருவாளியமுதனுர், புருடோத்-தமநம்பி, சேதிராயர் முதலியோர் பாடிய திரு விசைப்பாவும், சேந்தனுர் இயற்றிய திருப்பல் லாண்டு ஆகியவையும், 9 ஆம் திருமுறையாகவும், திருமூலர் இயற்றிய திருமந்திரம் 10 -ஆம் திருமுறை யாகவும், சிவபெருமான் (திருவாலவாயுடையார்) அருளிய திருமுகப்பாசுரம், காரைக்காலம்மையார் இயற்றிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந் தாதி ஆகியவையும், ஐயடிகள் காடவர்கோன் பாடிய க்ஷேத்திரத் திருவெண்பாவும், சேரமான் பெருமாள் இயற்றிய பொன்வண்ணத்தந்தாதி திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞான, வுலா ஆகியவையும், நக்கீரதேவநாயனார் இயற்றிய

கயிலைபாதி காளத்திபாதியந்தாதி, திருவீங்கோய்மலை எழுபது. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை. திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம் ஆகியவையும் கல்லாடதேவநாயனார் பாடிய திருக்கண்ணப்பதேவர் திருமறமும், கபிலதேவநாயனார் இயற்றிய மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி ஆகியவையும், பரண தேவ நாயனார் அருளிய சிவபெருமான் திருவந்தாதியும், இளம்பெருமானடிகள் பாடிய சிவபெருமான் திருமும்மணிக் கோவையும், அதிராவடிகள் பாடிய மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை, திருவெண்காட்டடிகள் இயற்றிய கோயில் நான் மணிமாலை, திருக்கழுமலமும்மணிக்கோவை. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபாவொருபஃது ஆகியவையும் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலை, கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை ஆகியவையும் 11-ம் திருமுறையாகவும், சேக்கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர் புராணம் 12-ம் திருமுறையாகவும் பாகுபடுத்தியுள்ளனர்.

பாடம் 7

நல்லொழுக்கம்

புருஷதர்மம் (ஆணின் கடமை):

ஆண்கள் திருமணத்திற்கு முந்திய இளமைப் பருவத்தில் நல்லொழுக்கமும் அடக்கமும் உடையவராய் கல்வி கற்று அறிவாளி ஆதல் வேண்டும். ஏதாவது தொழிற்பயிற்சி உடையவனாதல் வேண்டும். கடவுள் வழிபாட்டில் தனிக்கவனம் செலுத்தல் வேண்டும். பெண்களை உடன்பிறப்புகளாகக் கருதி மதிக்க வேண்டும். சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் சேவை செய்ய வேண்டும். தனது ஒழுக்கத்தினாலும் சேவையினாலும் நற்பெயர் பெற்று விளங்க வேண்டும்.

தக்க பருவத்தில் பெற்றோர்களின் அனுமதியும் ஆசியும் பெற்று தெய்வ பக்தியும் நற்பண்புகளும் உடைய ஒரு மனைவியை ஏற்று மனையறம் செவ்வனே நடத்த வேண்டும். இல்லறம் நடத்துபவர் அறநெறிகளை கடைப்பிடிக்க வேண்டும். நல்லவழிகளில் மட்டும் பொருள் ஈட்ட வேண்டும். விருந்தினர்களை உபசரித்தும், மூத்தோர்களை பேணியும் இல்லறம் நடத்தி வரவேண்டும். நல்லொழுக்கமும் தான தருமமும், புலனடக்கமும், உடைய தம்பதியினருக்கு நற்குணமுடைய சிறந்த குழந்தைகள் பிறப்பர். கணவனும் மனைவியும் அன்புடனும், ஒருவரையொருவர் மதித்தும் வாழவேண்டும். தம்பதியர் இல்லற தர்மத்தின் உயர்வை அறிந்து உடல் இன்பத்திற்காக வாழ்க்கை நடத்தாமல் நன்மக்கட்பேற்றைஅடைவதும் தனது பிள்ளைகளை சான்றோர்களாக்குவதும் தனது கடமையென

உணர்ந்து வாழவேண்டும். பகவான் ராமகிருஷ்ணர் "ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்ற பிறகு கணவனும் மனைவியும் சகோதரர்களைப் போல் வாழவேண்டும். தெய்வீக வழிபாடுகளில் அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். கணவனும் மனைவியும் கடவுள் விஷயங்களை குறித்து அடிக்கடி பேசவேண்டும்" என்று கூறியுள்ளார்.

நல்லவழியில் தேடிய பொருளால் நிலையான நல்லறங்களைச் செய்து குடும்பத்தையும் பேண வேண்டும். ஒவ்வொரு நாளும் பஞ்சமகாயக்ஞம் செய்யவேண்டும். பஞ்சமகாயக்ஞம் செய்யத் தவறிய இல்லறத்தான் பாவியென்றும், கள்வனென்றும் ஸ்ரீமத் பகவத்கீதை கூறுகிறது.

பசு, நாய், பூனை, காகம் போன்ற உயிர் களுக்கு உணவளிப்பது பூத யக்ஞம் என்றும், மனிதர்கட்கு உதவுவதும், சேவை செய்வதும் நரயக்ஞம் என்றும் இறந்துபோன முன்னோர் களுக்கு சிரார்த்தம் பலி இடுவதும் வாழ்ந்து வரும் தாய் தந்தையருக்கும், தாத்தா பாட்டி ஆகியோர் களுக்கும் தொண்டுகள் செய்வதும் பிதுர்யக்ஞம் எனவும், ஆண்டவனை வழிபடுவது தேவ யக்ஞம் எனவும், மறைகள் ஓதுவதும், மந்திரங்கள் ஜபிப் பதும் பிரம்ம யக்ஞம் (ரிஷியக்ஞம்) எனவும் இவை ஐந்தும் சேர்ந்து பஞ்சமகாயக்ஞம் எனப் பெயர் பெறும்.

இல்லறத்தான் தனது எதிரிகளை சாம, தான பேத, தண்டத்தால் வெல்லவேண்டும். தன் குழந்தைகளுக்கு நல்லொழுக்கமும், சமய போதனை யும் அளிக்க வேண்டும். மனைவி எல்லாவகையி லும் மகிழ்வுடன் இருக்குமாறு கவனித்துக் கொள்ள வேண்டும். ஊரிலுள்ள ஆலயங்களில் வழிபாடுகள்,

நன்முறையில் நடைபெறச் செய்வதும் இறைவனை எண்ணி வாழும் துறவியர்களைப் போற்றுவதும் இல்லறவாசியின் கடமையாகும். பொதுவாக நடு நின்று நாட்டிற்கும், வீட்டிற்கும் நல்லவனுக வாழ்வது ஒவ்வொரு ஆணினுடையவும் கடமையாகும்.

பெண்ணின் கடமை (ஸ்த்ரீ தர்மம்):

ஒரு பெண்ணின் வாழ்வை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று தாய் தந்தையருடன் வாழும் கன்னிப் பருவம். மற்றொன்று கணவருடன் வாழும் இல்லறநிலை. இவ்விரு நிலைகளிலும் அவளுக்கு வெவ்வேறு கடமைகள் உள்ளன. முதற்பருவததில், பெற்றோர் முதியோருக்கடங்கி, கல்வி, ஒழுக்கம் தொழில் முதலியன பயில்தல். இவை மூன்றில் ஒழுக்கம் மிக முக்கியம். ஒழுக்கத்தையும் கற்பினையும் உயிரைவிடப் பாதுகாக்கவேண்டும்.

"ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" என்பது திருக்குறள்

ஏனெனில் ஒழுக்கம் தவறினால் இம்மையில் பழியும் மறுமையில் நரகமும் இழிந்த பிறப்பும் எய்துவர். ஒழுக்கமுடைமையால் இம்மையில் புகழும் மறுமையில் பரகதியும் பெறுவர். மேலும் அவர்கள் வயிற்றில் சிறந்த சந்ததிகள் வந்து பிறப்பர். சந்ததிகளின் புண்ணியத்தால் தாமும் புண்ணியம் பெறுவர்.

'எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்."

பெண் தன் ஒழுக்கத்திற்கு ஊறு செய்யும் கல்வியையோ, தொழிலையோ கற்கலாகாது, நல்ல பெண்களுடன் மட்டுமே பழகல் வேண்டும். முன்பின்

தெரியாத ஆண்களுடன் பேச்சோ தொடர்போ வைக்கலாகாது. அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களும் கொண்டு அவள் தனது கற்பைக் காக்க வேண்டும். ஆபாசமான படக்காட்சிகள் கதைகள் இவைகளை விஷம் போல் தள்ளவேண்டும்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்."

கற்புடைய காரிகையை விடச் சிறந்து பொருள் வேறென்ன இருக்க முடியும்? என்று வள்ளுவர் வினவுகிறார். மேனாட்டு பெண்கள் அணிவது போன்ற ஆடைகள் அணியக்கூடாது. ஆண்களை கவருகின்ற வகையில் அரைகுறை ஆடைகள் அணிவதும் முற்றிலும் தவறாகும்.

பிரம்மச்சரிய விரதத்தால், புண்ணியமும், புகழும் நீடிய ஆயுளும், இருமையிலும் இன்பமும் ஏற்படும் என நீதிநூல்கள் முறையிடுகின்றன.

இல்லற வாழ்வினை, ஏற்றுக் கொண்டபின், தன் பண்பாட்டிற்கிணங்க

"கற்பெனப்படுவது சொல்திறம்பாமை" என்ற முதுமொழிக்கிணங்க மனைவியானவள் கணவனது குறிப்பை அறிந்து, அவனுக்கினியவளாக, குடும்பத்தார் அனைவரையும் அன்புடன் பேணி உற்சாக முடையவளாய் தனது கற்பினையும் காக்கக் கடமைப்பட்டவள் ஆவாள்.

"தற்காத்துத் தற்கொண்டார் பேணித்தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

மேலும் மனைவியானவள் கணவனது வருவாய்க்குத் தகுந்தபடி செலவுகளைச் செய்ய வேண்டும். தெய்வ காரியங்களிலும், தான தருமங்கள் செய்வதிலும் கணவனுக்குத் துணை செய்பவளாயிருத்தல் வேண்டும். முட்டுக்கட்டை

போடக்கூடாது. பொறுமையே பூஷணமாகக் கொண்ட பெண்ணை பூவுலகத்தார் அனைவரும் புகழ்வர்.

அவளது நற்குண நற்செயல்களிலே தான் அழகு இருக்கின்றது என்ருெரு முதுரைப் பாடல் உள்ளது:

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு."

கணவன், உடலழகு, செல்வம், நற்குணம் இவையின்றி இருந்தாலும் அவனைத் தெய்வமாக எண்ணித் தொண்டு செய்பவள் மழையைப்பெய் என்று சொன்னால் பெய்யும் என்று பொய்யா மொழியார் புகல்வர்.

"தெய்வந்தொழாஅள், கொழுநற்ருெழு தொழுவாள்
பெய்யெனக் பெய்யும் மழை"

விரதம், பட்டினி, தானம் இவற்றைச் செய்து பரகதி அடைவதைவிட கணவனைப் பூசிப்பதனாலேயே மனைவியொருவள் எளிதில் பரகதி அடைகிறாள்.

மனைவியும் கணவனும் ஒருவரையொருவர் மரணம் வரை பிரியாமல் இருத்தல் சாலசிறப்பு. தனக்குமுன் கணவன் இறக்க நேரிட்டால் வெள்ளை ஆடை உடுத்து கூடிய மட்டும் உலகியல் அலுவல்களை ஒதுக்கி மனத்தை இறை இன்பத்தில் ஈடுபடுத்தி வாழுதல் வேண்டும். கணவனை இழந்தவர்களை திருமணம் போன்ற உலகியல் சடங்குகளில் ஈடுபடாமல் தவிர்ப்பது வழக்கம். அவர்கள் இறை நெறியில் உயர்வாழ்வு நடத்த வேண்டும். உலகவைபவங்கள் அவர்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு தடையாகக்கூடாது என்பதே அதன் கருத்து ஆகும்.

பாடம் 8

சில மந்திரங்கள்

1. ஸ்ரீராமரக்ஷாமஹாமந்திரம்: (த்ரயோதசாக்ஷரம்)

'ஸ்ரீராம ஜெயராம ஜெயஜெய ராம'

இம்மந்திரம் மிகவும் பெருமை வாய்ந்தது. இது ஆஞ்சநேயரால் ஸ்ரீ சமர்த்தராமதாஸ் சுவாமிகளுக்கு உபதேசிக்கப்பட்டது. இதை ஜெபம் செய்து ராமதாஸர் ராமதரிசனம் பெற்றார்.

2. ஸ்ரீராஜகோபால அஷ்டதாசாக்ஷரீ மந்திரம்: (பதினெட்டு எழுத்து மந்திரம்)

'ஓம் க்லீம் க்ருஷ்ணாய கோவிந்தாய கோபீ ஜன - வல்லபாய ஸ்வாஹா'

3. த்வாதாக்ஷரீ மந்திரம்: (பன்னிரண்டெழுத்து

'ஓம் நமோ பகவதே வாசுதேவாய'

4. உணவு உண்ணும் போது கூறவேண்டிய மந்திரம்:

அ ப்ரம்மார்ப்பணம் ப்ரம்மஹவிர்
ப்ரம்மாக்னௌ ப்ரம்மணாஹுதம்
ப்ரம்மைவதேன கந்தவ்யம்
ப்ரம்ம கர்ம சமாதினா

(அர்பணம் செய்தல்பிரம்மம், நெய் முதலிய ஹவிஸும் பிரம்மம்; பிரம்மம்; பிரம்மமாகிய அக்னியில் பிரம்மத்தால் கொடுக்கப்படுகிறது; பிரம்மமாகிய கர்மத்தில் மனங்குவிந்துள்ளவனால் பிரம்மமே அடையப்படுகிறது)

ஆ. அன்னபூர்ணே ஸதாபூர்ணே
சங்கரப்ராணவல்லபே
ஜ்ஞான வைராக்ய ஸித்யர்த்தம்
பிக்ஷாந்தேஹிச பார்வதி.

(சிவனது பிராணன் போன்ற ஓ! அன்னபூர்ணி தேவியே, ஞானமும் பற்றற்ற தன்மையும் உண்டாகும்படி எனக்குப் பிக்ஷை அளிப்பாயாக)

மேற்சொன்ன இரு மந்திரங்களையும் நாம் உணவு கொள்ளுமுன் கூறுதல் வேண்டும், இம் மந்திரங்களைக் கூறி உணவைச் சுற்றிலும் நீர் வார்த்துச் சிறிது நீர் பருகி இறைவனுக்கு அர்ப்பிப் பதாக நினைத்து உணவு கொள்ளவேண்டும்.

5. மஹாமிருத்யுஞ்ஜய மந்திரம்:

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருகமிவ பந்தநாத்
ம்ருத்யோர், முக்ஷீய மாம்ருதாத்

(நறுமணம் நிறைந்தவரும், உயிர்கள் அனைத்தையும் நன்கு போஷிப்பிக்கும் முக்கண்ணருமாகிய சிவபெருமானை நாம் வணங்குகிறோம். எவ்வாறு வெள்ளரிப்பழம் கொடியின் பந்தத்தினின்று விடு படுகிறதோ அவ்வாறே அவர் நம்மை மரணத்தினின்று விடுவித்து அழிவற்ற பதத்தை அருள்வாராக)

இதை நாம் ஜெபம் செய்வதால் துர்மரணம் ஏற்படாது. மரணபயம் நீங்கும். யாத்திரையின் போது இதை ஜெபம் செய்தால் யாத்திரை சுபமாக நிறைவு பெறும்.

6. ஓம் அஸதோ மா ஸத் கமய,
தமஸோ மா ஜ்யோதிர் கமய,
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய,
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

(பொய்யினின்று என்னை மெய்மைக்கு இட்டுச் செல்வாயாக. அஞ்ஞான இருளினின்று என்னை ஞான ஜோதிக்கு எடுத்துச் செல்வாயாக. மரணத்தை விட்டு மரணமில்லாப் பெருவாழ்வுக்கு அழைத்துச் செல்வாயாக)

இது பிருஹதாரண்யக உபநிஷத்தில் உள்ள மந்திரமாகும், இதை ஜெபம் செய்வதன் மூலம் இறையருளால் நாம் நல்வழியில் நடத்தப்படுவோம் என்பது உறுதி.

பாடம் 9

ஸ்ரீமத் பகவத் கீதை

உலக சமாதானத்திற்கு கீதை காட்டும் வழி

ஸ்ரீமத் பகவத்கீதை ஹிந்துக்களின் மிகச் சிறந்த சமயநூல் ஆகும். நான்கு வேதங்களுடைய வும் கருத்துமாகும். எல்லா உபநிடத தத்துவங் களிலுமுள்ள சிறந்த கொள்கைகளெல்லாம் இதன் கண் மிகத்தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன. இத்த கைய ஒப்புயர்வற்ற நூலிலே, மிகச்சிறந்த சமய சமரசக்கொள்கையையும் நமக்குக் காணமுடிகிறது. உலக சமாதானத்தைக் கொடுக்கின்ற சக்திகளில் மதவெறி மிகக்கொடிய ஒன்று. மதவெறிக்கு முற் றுப்புள்ளி வைக்கின்ற வகையில் வானம்போன்று விரிவானதும், கடல்போன்று ஆழமானதுமாகிய சமய சமரசக் கருத்துக்களடங்கிய சில பாடல்களைக் கீழே பார்ப்போம் - "யார் என்னை எப்படி வழிபடு கிறாரோ அவர்களுக்கு நான் அப்படியே அருள் புரிகிறேன். அர்ஜுனா, மக்கள் எவ்வழியிலாயினும் என்னையே பின்பற்றுகிறார்கள்" (4 - 11) என்று கண்ணபரமாத்மா அர்ஜுனனை நோக்கிக் கூறு கிறார். "எந்தெந்த பக்தன் எந்தெந்த தெய்வ வடி வத்தை நம்பிக்கையுடன் வழிபட விரும்புகிறானோ, அவனுடைய அந்த நம்பிக்கையை அசையாததாக நான் செய்கின்றேன்" (7.21) இத்தகைய பரந்த சம ரசக் கொள்கையே பண்டைக்காலம் முதல் பாரதநாடு பின்பற்றி வந்திருக்கிறது. இத்தகைய கொள்கை தான் சகிப்புத்தன்மையையும் சாந்தியையும் வளர்க்க வல்லது. ஆதலால் பாரத நாட்டில் இன்றும் எல்லாச் சமயங்களும் சுதந்திரமாகச் செயல்பட்டுவருகின்றன பாரதநாட்டினர் சமய சகிப்புத் தன்மையற்ற வர்களாயிருந்திருப்பின் இந்நாட்டில் சமயவெறி

பிடித்த செமிட்டிக் மதங்கள் தழைத்தோங்க முடி யுமா? அரசியல் துறையிலும் இந்நாடு பிறநாட் டிற்குப் படையெடுத்துச் சென்றதுமில்லை; பிறர் செல்வத்தைக் கொள்ளையடித்து தனது வீட்டை நிறைத்ததுமில்லை. பிறநாடுகளை அடிமைப்படுத்தி அவற்றைச் சுரண்டி வாழ்ந்ததும் கிடையாது. ஏன்? இந்நாட்டின் அரசர்களும், ஞானிகளும், வித்வான் களும், கீதை கூறும் சமரசக் கொள்கையில் ஊறிப் போனவர்களாயிருந்தனர். தற்போதும் அவ்வழி யையே பின்பற்றி வருகின்றனர். சான்றாக அக் காலத்தில் வாழ்ந்த அசோகன் முதலிய பேரரசர்கள் பிற சமயங்களையும் மதித்து வாழ்ந்திருந்தனர் என்று இந்திய வரலாறு கூறுகின்றது. தற்காலத் தில் வாழ்ந்த உலகப் பெரியோர்களாகிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும், சுவாமி விவேகாநந்தரும், மகாத்மா காந்தியடிகளும் சமயசமரசத்தை மிகவும் வற்புறுத்திக் கூறியுள்ளனர். தன்னுடைய கொள்கை தான் சிறந்தது. மற்றவையெல் லாம் மூட நம்பிக்கைகள் என்று கொக்கரிக்கும் மதவெறியர்களை விவேகாநந்தர் கிணற்றுத் தவளைகள் என்று கூறியுள்ளார். விவேகாநந்தரது சமரசக் கொள்கையைக் கேட்டு மேலைநாட்டு அறி ஞர்கள் அவரை வானளவாப் புகழ்ந்து பாராட்டி னர். விவேகாநந்தரது கொள்கை கீதையின் கொள் கையாகும்.

விஞ்ஞானத்தின் துணையால் இன்றுஉலகின் தூரம் சுருங்கிவிட்டது. வானஊர்தியும் வானொலி யும், டெலிவிஷனும் இன்று உலகை ஒரு குடும்பம் போல் இணைந்துள்ளன. ஆனால் உலக நாடுகளின் கருத்துக்கள் இணையவில்லை. அதற்கு மதவெறி ஒரு முக்கிய காரணமாகும். ஆதலால் கீதையின் சம ரசக் கொள்கையை உலகம் ஏற்றுக் கொள்ளுமேல், மதவெறிக்கோ, மதமாற்றத்திற்கோ அதனாலேற் படும் போர்களுக்கோ பூசல்களுக்கோ இடமேது?

இரண்டாவதாக கீதை ஆதியோடந்தம் தியாகத்தைத்தான் சிறப்பித்துச் சொல்கிறது. கீதா என்று சொல்லை அடுத்தடுத்துச் சொன்னால் 'தாகீ' அதாவது தியாகீ என மாறும் என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கீதைக்கு விளக்கம் கூறுவார். கீதை கருமபலத் தியாகத்தை மிகவும் வற்புறுத்துகிறது. தன்னல நோக்கத்தை விடுத்து பரோபகாரம் செய்வதையே கருமயோகம் என்றும் யஜ்ஞம் என்றும் கீதை சிறப்பித்துச் சொல்கிறது. இத்தகைய யஜ்ஞம் செய்யாமல் ஒருவன் உயிர் வாழ்வானாயின் அவன்பாபியேஉலகிற்குப்பெருங்கேடுவிளைவிக்கின்ற அசுரனே அவன் என்று கீதா மாதா பகர்கின்றாள். மேலும் தனக்கென மட்டும் சேமிப்பவன் கள்வனே என்றும் (3 - 12) தனக்காக மட்டும் சமையல் செய்பவன் பாபத்தையே உண்கிறான் (3 – 13) என்றும் முழங்குகிறது. ஆதலால் எல்லாவகையிலும் பிறர்க்கு உதவி செய்து வாழ்வதையே சிறந்த வாழ்க்கையாகக் கீதையில்கூறப்பட்டுள்ளது. (3-13) இந்தத் தியாக வாழ்க்கையை உலக நாடுகள், வல்லரசுகள் பின்பற்றுமாயின் உலக சமாதானம் அன்றே கைகூடும், தியாகத்தால் சாந்தியை அடையலாம் (12 - 12)

தனி மனிதர்கள் பலகோடிபேர் சேர்ந்து வாழ்வதே உலகம். தனிமனிதன் ஒவ்வொருவனது வாழ்வும் தூய்மையானால் உலகமே தூய்மையடையும். போர், பகை, நோய், கொலை, களவு, கொடுமை, சுரண்டல் முதலிய கறைகளெல்லாம் நீங்கப்பெற்று உலகில் அன்பு, அறம், அருள், அடக்கம் அறிவு பெருகி தூய்மையடையும் வழியை பகவத் கீதை மிகச் சுருக்கமாக மூன்றே வார்த்தைகளில் குறிப்பிடுகிறது. அவை யச்ஞம், (வேள்வி-தொண்டு) தானம், தமம் (ஈகை - தன்னடக்கம்).

யஜ்ஞும் (பரோபகாரச் செயல், தெய்வத் தொண்டு). தானம் (ஈகை), தமமாகிய பொறி புல னடக்கம் இவை மூன்றும் மனிதனது மனமாசு களை மாற்றி அவனைத் தூயவனாக்குகிறது; தெய்வத் தன்மையை அவனுக்கு அளிக்கிறது. (18-5) மனிதமனத்தைப் பற்றிய மாசுகள் மூன்று: காமம், கோபம். உலோபம், (அவா, வெகுளி, கஞ்சத்தனம்). (16 - 21) எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாகிய இம்மூவகை மலங்களையும் அடக்கம் (தமம்), இரக்கம் (தயா), ஈகை (தானம்) ஆகிய மூவகை தெய்வீகக் குணங்களால் நீக்கிவிட்டால் பேரின்பம் தானே உதயமாகிவிடும். தனிமனித னுக்கும், உலகத்திற்கும் சமாதான வழி இஃதொன்றே! இதனை அழுத்தந்திருத்தமாக மிக விளக்கமாகக் கீதை கூறுகிறது. ஒருவன் எந்தத் தொழிலைச் செய்தாலும், அதனால் வரும் ஊதியத் தின் பெரும்பகுதியையும், புகழையும், பதவியையும், அவன் தியாகம் பண்ணினால் அவனுக்கு இகத்தி லும், பரத்திலும் சாந்தி, சமாதானம், பேரின்பமே வரும். தன் சொந்தக் கடமையாகிய மலர்களால் உலகின் அம்மை அப்பனாகிய இறைவனை ஒரு வன் வழிபடுவானாயின், அவன் வாழ்வின் பெரும் பயனை அல்லது லட்சியத்தை அடைந்தவனாகி றான் என கீதா மாதா கூறுகிறாள் (18 - 46).

தனிமனிதனுக்காக மட்டும் கூறப்பெற்றவை யல்ல இவ்வுபதேசங்கள், கற்றோர்களும், பொறுப் புள்ளவர்களும், அதிகாரிகளும் இவற்றைச் சிரத்தை யுடன் படித்து அதன்படி செயல்படுவார்களாயின் இவ்வுலகம் பொன்னுலகமாக மாறி நிலையான அமைதியைக் காணும் என்பதற்கு ஐயமில்லை உள்ளே சமாதானமுண்டேல் வெளியிலும் சமாதான முண்டு!

2. கீதையில் கூறப்படும் கருமயோகம்

மகாபாரத போர்களமாகிய குருக்ஷேத்திரத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனை நோக்கிக் கூறியருளிய ஞானோபதேசங்களே பகவத்கீதை எனப்படுவது. கொடும்பாவிகளாகிய துரியோதனாதியரைக் கொன்றொழித்து அறத்தை நிலை நாட்டும் நோக்கத்துடன் வில்லையும் ஏந்திக் கொண்டு போர்களத்திற்கு விரைந்து வந்த விஜயன், தன்னெதிரே துரியோதனனுக்குத் துணைசெய்யுமாறு கூடி நின்ற தனது அருமைப் பாட்டனாரையும் குருநாதரையும் மற்றும் உற்றார் உறவினர்களையும் கண்ணுற்று, அவர்களையெல்லாம் கூரியபாணங்களால் எங்ஙனம் கொல்வது என்று இரக்கமும், ஏக்கமும் கொண்டு தயங்கி, மதிமயங்கி நின்றான். அப்போது தர்மமூர்த்தியாகிய கண்ணபிரான் அர்ஜுனனது இரக்கத்தைக் கோழைத்தனமென இடித்துரைத்து அவனுக்குப் பற்பல அறிவுரைகளைக் கூறியருளினார். முதலில் ராஜ நீதியையும் க்ஷத்திரியனது தர்மத்தையும் போதிப்பிக்கிறார் (2-2.3). தீயோர்களையும் அவர்களுக்கு உதவி செய்பவர்களையும் அவசியம் அழித்தொழிப்பது க்ஷத்திரிய மன்னனது குலதர்மமாகும். அக்குல தர்மமாகிய அறப்போரிலிருந்து எக்காரணம் கொண்டும் அர்ஜுனன் பின்வாங்கக் கூடாதென்கிறார். மேலும் கூறுவார் "சொந்தக் கடமையைச் செய்யாது விடுவதுதான் பாபம்; கடமையைச் செய்வதில் தனக்கு மரணம் நேரினும் நல்லதே. ஏனெனில் அத்தகைய மரணத்தால் ஒருவனது ஆன்மா பரகதி அடைகிறது (3-35). கடமையைச் செய்யும்போது உற்றார் உறவினர் என்று பாராமல், யான், எனது என்ற அஞ்ஞான மயக்கங்களை விட்டு, பற்றின்றிப்பணி செய்தல் வேண்டும். அதுவே

கருமயோகம் அல்லது யஜ்ஞம். அத்தகைய யோகத்தால் ஒருவனுக்கு கருமபந்தம் ஏற்படாது. நேர் மாறாக அதனால் அவனது உள்ளம் தூய்மையுற்று ஆன்ம ஞானத்தையும், பேரின்பத்தையும் அடைய பெறுகிறான். (5 - 2) கண்ணபிரான் தொடர்ந்து கூறுகிறார்; ஒரு பிராமணனாயினும் சரி (ஆசிரியன்), க்ஷத்திரிய அரசியல்வாதியாயினும் சரி அவரவருக்குரிய தொழில்களைப் பேராசையின்றி, வெறுப்பின்றி சோம்பலின்றித், திறம்படச் செய்வது இறைவனுக்குரிய பூசையாகும். அதனால் இறையருளை எளிதிற் பெறலாம் (18 - 46, 47).

மனிதர்களுக்கு கருமம் செய்யாமல் ஒரு கணம் கூட உயிர் வாழமுடியாது (3-5). மனம். மொழி, மெய்களால் எப்பொழுதும் கருமங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. கருமங்களைச் செய்பவன் அவைகளின் பயன்களை அனுபவித்தே ஆகவேண்டும். நற்கருமங்களுக்குப் பலன் இன்பம். தீக்கருமங்களுக்குப் பலன் துன்பம். ஒருவன் ஒரு பிறவியில் எண்ணித் தொலையாத கருமங்களை இயற்றியவண்ணமிருக்கிறான். அவைகளின் பலன்கள் முழுவதையும் இப்பிறவியில் அவனால் துய்க்க இயலாது. ஆதலால் தனது கருமபலனைப் புசிப்பதற்கு பற்பல பிறவிகளை எடுத்தாக வேண்டும். புதிய பிறவிகள் எடுக்கும் போது, மேலும் புதிய கருமங்களைச் செய்கிறான். இவ்வாறு கருமங்களும், அதனாலேற்படும் ஜன்மங்களும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கின்றன. இதுதான் பிறவிச் சுழி, அல்லது பிறவிக் கடலலைகள். இதுதான் கருமபந்தம் எனப்படுகிறது. பிறவி என்பது துன்பங்களுக்கெல்லாம் இருப்பிடமானது. "(துக்காலயம் அசாசுவதம்)" துன்பமயமான பிறவியைத் தருகின்ற இந்தக் கருமபந்தத்தை எங்ஙனம் அறுத்து ஆன்ம விடுதலை அல்லது முக்தி பெறுவது? கருமத்தை

யோகமாகச் செய்தால் பந்தத்திலிருந்து விடுபடலாம் (5. 2) எங்ஙனம் தாமரையிலை தண்ணீரில் வாழ்ந்தாலும் அதில் தண்ணீர் ஒட்டுவதில்லையோ அஃதேபோல் பற்றற்று, அதாவது தன்னல நோக்கமின்றி உலக நன்மைக்காக இறைவனையே நினைத்து செய்கிற கருமயோகம் ஒருவனை பிறவித்தளையிலிருந்து விடுவிக்கும் பேரின்பத்தை அளிக்கும். போர்க்களத்தில் கூட "என்னை நினைத்துகொண்டு போர் செய்வாயாக" என்று பகவான் அர்ஜுனனுக்குப் பகர்கிறார். (8-7).

தனக்கென விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்யும் போது லாப நஷ்டங்களையோ, புகழ்ச்சி இகழ்ச்சிகளையோ, சுக துக்கங்களையோ எண்ணாமல் சமபுத்தியுடன் செய்வதுதான் கருமயோகம் (2-38). கரும யோகத்தை கீதை, யஜ்ஞம் அல்லது வேள்வி என்று மதிக்கிறது. நிஷ்காமிய கருமங்கள் இறைவனுக்கான பூசை அல்லது வழிபாடு எனக்கூறப்படுகிறது. இத்தகைய யஜ்ஞத்தைச் செய்து முன்னேறுவதற்கே மனிதன் படைக்கப்பட்டுள்ளான் என பகவான் கூறுகிறார் (3-10). ஒருவன் தனக்கென மட்டும் சமையல் செய்து உண்பானாயின், அவன் பாபத்தையே உண்பவனாகிறான் (3-13). அவன் கள்வன் (3-12). பிறருக்குக் கொடுத்து மிஞ்சுவதை உண்பவன் அமுதத்தை உண்கிறான். அவ்வுணவு அவனுக்கு மரணமிலாப் பேரின்பத்தை அளிக்கிறது (4-31).

ஆதலால் எதைச் செய்தாலும், எதை உண்டாலும் எந்த வழிபாடு செய்தாலும். எந்த தவத்தைச் செய்தாலும், அதைத் தனக்கெனச் செய்யாமல் உலகத்திற்காக அல்லது ஆண்டவனுக்குச் செய்வது தான் கருமயோகம் (9-27). அதனால் ஒருவன் இறைவனருளைப் பெற்று எல்லாத் துன்பங்களி

லிருந்தும் விடுபடுகிறான். கருமபலன்களை உயிர்களுக்கு ஊட்டுகின்ற இறைவன் கருமயோகியை ஒருபோதும் கைவிடமாட்டான். இது இறைவனது வாக்குறுதியாகும்.

கண்ணபிரானது அருளாற்றல் மிக்க அறிவுரைகளைக் கேட்ட அர்ஜுனன் மதிமயக்கம் தீர்ந்து, ஆன்மீக, தார்மீக அறவொளி பெற்று பாபிகளாகிய எதிரிகளைக் கொன்றொழித்து, உலகின் அரச நீதியையும் தருமத்தையும் நிலைநாட்டினான் (18-63).

கருமம் செய்தாலும் கருமத்தின் பலன் நம்மைப் பற்றிக்கொண்டு, மேல் பிறவிகளைத் தோற்றுவிக்காமல் இருக்கவேண்டுமேல் பற்றின்றி பணிசெய்தல் வேண்டும். இதுவே திறம்பட செயல் புரிதலாகும். அத்தகைய நிஷ்காமிய கருமத்தால் உள்ளத்தூய்மை பெற்று ஒருவன் ஆன்ம ஞானத்திற்குரியவனாகிறான். அவன் ஆண்டவன் அருளுக்குரியவனாகி அழிவிலா இன்பத்தை அடைகிறான் (2-51). தன்னலவாதி சிற்றின்பத்தை அடைந்து மேலும் மேலும் செத்துப் பிறக்கிறான். ஆதலால் எல்லையற்ற பேரின்ப வாழ்வைத் தரும் கரும யோகத்தை யாவரும் கைக்கொள்வோமாகா.

3. பாட்டும் பொருளும்

(அ.) குதஸ் – த்வா கச்மலமிதம் விஷமே ஸமுபஸ்திதம்
அனார்யஜுஷ்ட - மஸ்வர்க்யம்-அகீர்த்திகரம் - அர்ஜுன (அத் 2 - பாட்டு

அருஞ்சொற்பொருள்

குத - எங்கிருந்து, த்வா – உன்னிடத்து, கச்மலம் - மோஹம், இதம்-இந்த, விஷமே -

நெருக்கடியில், ஸமுபஸ்திதம் - அடைந்தது, அனார்யஜுஷ்டம்- ஆரியனுக்கு அடாதது, அஸ்வர்க்யம் -சுவர்க்கத்துக்குத் தடையாவது, அகீர்த்திகரம் - புகழைப் போக்குவது

பொருள்: அர்ஜுனா! இந்த சிக்கலான நிலைமையில் மேல்மக்களுக்குப் பொருந்தாததும் வானுலகின் வழியை அடைப்பதும் பழிக்கிடமானதும் ஆகிய மனக்கலக்கம் உன்னை எங்கிருநது வந்தடைந்தது?

ஆ. க்லைப்யம் மாஸ்ம கம: பார்த்த நைதத் த்வய்யுபபத்யதே
க்ஷுத்ரம் ஹ்ருதயதௌர்ப்பலயம் த்யக்த் வோத்திஷ்ட பரந்தப (அத். 2- பாட்டு 3)

க்லைப்யம்-அலித்தன்மையை, மா ஸ்ம கம அடையாதே, ஏதத் - இது, த்வயி- உன்னிடத்தில், ந உபபத்யதே- பொருந்ாது, க்ஷுத்ரம்- இழிவான, ஹ்ருத்யதௌர்பல்யம் - உள்ளத் தளர்ச்சியை, த்யக்த்வா - துறந்துவிட்டு உத்திஷ்ட - எழுந்திரு, பரந்தப - எதிரியை வாட்டுபவனே,

பொருள்:- அர்ஜுனா! பேடித்தனத்தை விட்டொழி. இது உனக்குச் சிறிதும் பொருந்தாது. எதிரிகளை எரிப்பவனே! அற்பமான மனதளர்ச்சியை ஒழித்து எழுந்திரு.

இ. யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ் - ததைவ பஜாம்யஹம்
மம வர்த்மானுவர்த்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வச:|| (அத். 4-பாட்டு 11)

யே - யார், யதா - எப்படி, மாம் - என்னை, ப்ரபத்பந்தே - வழிபடுகிறார்களோ. தான் -

அவர்களுக்கு, ததா ஏவ - அப்படியே, பஜாமி– அளிக்கிறேன், அஹம் - நான், மம - என்னுடைய, வர்த்ம-மார்க்கத்தை, அனுவர்த்தந்தே - -அனுசரிக்கிருர்கள், மனுஷ்யா:– மனிதர்கள் பார்த்த - பார்த்தா (அர்ச்சுன), ஸர்வச - எவ்வாற்றாலும்

பொருள்:- யார் எங்ஙனம் என்னை நாடுகிருர்களோ அவர்களுக்கு அதற்கிணங்க நான் அருள் புரிகிறேன். பார்த்தா! மனிதர்கள் எவ்வகையிலும் என்னுடைய வழியையே பின்பற்றுகிருர்கள்.

ஈ. சாதுர்- வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குண-கர்ம விபாகச:/
தஸ்ய- கர்த்தாரமபிமாம் வித்த்யகர்த்தார- மவ்யயம்.//
அத். 4-பாட்டு 13

சாதுர் வர்ண்யம் - நான்கு வருணங்களாக, மயா - என்னுல், ஸ்ருஷ்டம் - சிருஷ்டிக்கப்பட்டன, குணகர்மவிபாகச: குணத்தினதும் கர்மத்தினதும் வேறுபாட்டிற்கு ஏற்றவாறு, தஸ்ய- அதற்கு,கர்த்தாரம்அபி- கர்த்தாஎனினும்,மாம்- என்னை, வித்தி- அறிக, அகர்த்தாரம்- கர்த்தா வல்லாதவனெனவும், அவ்யயம் - நிர்விகாரியாகவும்

பொருள்:- குணங்களுக்குத் தக்கபடி கருமங்களை வகுத்து நான்கு வர்ணங்கள் என்னுல் படைக்கப்பட்டன. அதன் கர்த்தாவாக இருந்தபினும் என்னை அழிவில்லாத அகர்த்தாவாக அறிவாயாக.

உ. யோ யோ யாம் யாம் தனும் பக்த: ச்ரத்தயார்ச்சிது - மிச்சதி

தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ
விததாம்யஹம் (அத் 7, பாட்டு 21)

யோ யோ - எந்த எந்த. யாம் யாம்–எந்தெந்த. தனும் - தேவவடிவத்தை, பக்த – பக்தன், ச்ரத்தயா - சிரத்தையோடு, அர்ச்சிதும் - அர்ச்சிக்க, இச்சதி-இச்சிக்கிருனோ, தஸ்யதஸ்ய- அவ்வவனுடைய, அசலாம் - அசையாததாக, ச்ரத்தாம் - சிரத்தையை, தாம் ஏவ - அதே விததாமி - செய்கிறேன், அஹம் = நான்.

பொருள்:- எந்தெந்த பக்தன் எந்தெந்த மூர்த்தியைச் சிரத்தையுடன் வழிபடுவதற்கு விரும்புகிருனோ அவனவனுடைய அந்தச் சிரத்தையை நான் திடப்படுத்துகிறேன்.



பாடம் 10

விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள்

1. திருவிழாக்கள்:

ஆலயங்களில் பத்துநாட்கள் சிறப்பாகப்பூஜைகள் நடத்தி திருவிழாக் கொண்டாடுவதுண்டு. இதை நைமித்திக பூஜை என்பர். தினசரி பூஜையில் வருகின்ற குற்றம் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகவும், இறைவன் ஐந்தொழில்களையும் நடத்தி வருகிற உண்மையை விளக்குவதற்காகவும் ஆண்டிற்கு ஒரு தடவையோ இருதடவையோ இம்மாதிரியான திருவிழாக்கள் நடைபெறுகின்றன. திருவிழாவில் இறைவன் திருவுலாக் காட்சியும், தேரோட்டமும் நடைபெறுவது எல்லா மக்களுடைய உள்ளத்திலும் பக்தியை வளர்ப்பதற்காகவே இயல், இசை, நாடகக் கலைகள் வழியாகவும்,பக்தி நெறியைப் பிரசாரம் செய்வது திருவிழாவின் மற்ரொரு நோக்கமாகும்.

முதல்நாள் கொடிமரத்தில் திருக்கொடியேற்றுவர். அந்தந்த தெய்வ வடிவின் வாகனத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். இதன் நோக்கம் திருவிழாவிற்கு பக்தியுடன் வரும் அடியவர்களை இறைவன் உயர்பதம் அடையச்செய்வான் என்பதாம். மேலும் எல்லா அண்டங்களுக்கும் தலைவன் இறைவன் ஒருவனே என்றும் அவனது ஆட்சியே நிலை பெற்றிருக்கிறது என்றும் பொருள்படும். திருவிழா முடிவில் தேரோட்டம் நடைபெறுகிறது. தேரின் அமைப்பு நமது உடலமைப்பிற்கு ஒத்ததாகும். தேரில் இறைவனை எழுந்தருளச் செய்வது நம் உடம்பினுள் இறைவன் எழுந்தருளியிருக்கிறான் என்பதை விளக்குவதற்காகும்.

"தேரில் வீற்றிருப்பவன் ஆத்மா (இறைவன்). தேராயிருப்பது உடம்பு. குதிரைகளாயிருப்பவை இந்திரியங்கள். தேரோட்டி புத்தியாகும். ஐம்புலன்களும் (தேரோடும்) வீதிகள்" என்று கடோபநிடதம் கூறுகிறது.

சில முக்கிய திருவிழாக்கள்:

1. திருக்கலியாணத் திருவிழா.

இறைவனும் அவனது சக்தியும் இணைந்தால் மட்டுமே படைப்பு நடக்கும் என்பதைக் காட்ட இத்திருவிழா நடைபெறுகிறது. இதன் விளக்கம் கீதை 4-ஆம் அத்யாயம் 3,4 பாட்டுக்களிலும், சிவஞான சித்தியாரிலும் காணலாம். ஆனால் இறைவன் சக்தியோடு கலந்து நின்றாலும் பற்றற்று அனாதி முக்தனாகவேயிருக்கிறான். அவன் பிரம்மச்சாரியும் அம்மை கன்னியுமாகவே விளங்குவர். அவர்கள் திருமணம், ஆசை வயப்பட்டதல்ல; அருள் வயப்பட்டதாகும். உயிர்களுக்கு தனுகரணபுவன போகங்களைத் தருதற் பொருட்டு ஆகும்.

2. விநாயகர் சதுர்த்தி விழா:

ஆவணி மாதம், வளர்பிறையில் வரும் சதுர்த்தியை (நான்காம் பிறை) விநாயகர் சதுர்த்தி எனக்கொண்டாடுகிறோம். முன்னொரு காலத்தில் கஜமுகாசுரன் என்னும் அசுரன், தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் பெரும் கொடுமை செய்து வந்தான். அவன் மனிதர்களாலும், விலங்குகளாலும் ஆயுதங்களாலும் கொல்லப்பட முடியாதபடி வரம் பெற்றிருந்தான். அவனைக்கொல்ல சிவசக்தி அருளால் விநாயகர் அவதரித்தார். யானை முகத்துடனும், மனித உடலுடனும் கூடிய அவர் தனது கொம்புகளில் ஒன்றை ஒடித்து அவ்வசுரனைக் கொன்றார். அந்நாளே வினாயகர் சதுர்த்தி என்று கொண்டாடப்படுகிறது.

3. நவராத்திரி விழா:

நவராத்திரி என்பதற்கு ஒன்பது இரவுகள் என்று பொருள். புரட்டாசி மாதத்தில் அமாவாசைக்குப்பின் வரும் ஒன்பது நாட்கள் இரவில் தேவியைப் பலவடிவங்களில் பூஜிக்கிறோம். முதல் மூன்று நாட்கள் பார்வதி தேவியாகவும், நடு மூன்று நாட்கள் இலட்சுமி தேவியாகவும், கடைசி மூன்று நாட்களில் சரஸ்வதி தேவியாகவும் முறையே பூஜித்து பத்தாம் நாள் விஜயதசமி விழாவைக் கொண்டாடுகிறோம். விஜயதசமி கல்வித் தொடக்கத்திற்கு மிகவும் சிறந்த நாள் ஆகும்.

முன்னொரு காலத்தில் மகிஷாசுரன் என்ற ஓர் அசுரன் பல வரங்கள் பெற்று பெரும் வலிமையுடன் இருந்தான். அவன் நல்லோர்களுக்கு இடர் செய்து வந்தான். தேவர்கள் பார்வதி தேவியை நோக்கித் தவம் செய்தனர். தவச்சாலையிலுள்ள யாக குண்டத்தில் தேவி தோன்றி மகிஷாசுரனைக் கொன்று தேவர்களின் துயரைத் துடைத்தாள். இதுவே நவ ராத்திரி பூஜையின் வரலாறு. பார்வதி தேவி என்பது ஆற்றலும், இலட்சுமி தேவி என்பது செல்வமும், சரஸ்வதி தேவி என்பது ஞானமுமாகும். ஆக ஆற்றல், செல்வம், கல்வி அனைத்தையும் தெய்வ சக்தியின் வடிவமாக ஆராதிப்பதே நவராத்திரி விழாவின் தத்துவம்.

4. கோகுலாஷ்டமி (ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி):

ஆவணி மாதம் தேய்பிறையும் அஷ்டமியும் ரோகிணியும் சேர்ந்து வரும் நாள் கோகுலாஷ்டமியாகும். அன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண அவதார பூஜை செய்யப்படுகிறது. ஸ்ரீபாகவத புராணத்தில் ஸ்ரீகிருஷ்ணன் அவதாரப் பகுதி வாசிக்கப்படுகிறது. சில இடங்களில் கோகுலாஷ்டமி கழிந்த எட்டாம் நாள் உறியடி விழா நடைபெறுகிறது.

5. கார்த்திகை தீபம்:

கார்த்திகை மாதம் பௌர்ணமி நாளில் கார்த்திகை நட்சத்திரம் வருகிறது. அன்று வரிசையாக விளக்குகள் வைத்து தீபத் திருவிழா கொண்டாடப்படுகிறது. இறைவன் ஜோதிவடிவானவன் என்பதைக் காட்டவே இத்திருவிழா கொண்டாடப்படுகிறது. 'சூரியனிலும் சந்திரனிலும் அக்னியிலும் உள்ள ஜோதி யாவும் என்னுடையது; ஜோதிகளுக்கெல்லாம் ஜோதி நானே" என்று பகவான் கிருஷ்ணன் கீதையில் அருளிச் செய்துள்ளார். திருவண்ணாமலையில் இத்திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

ஐப்பசி கார்த்திகை மாதங்களில் வாயு மண்டலத்தில் விஷக்கிருமிகள் நிறைந்திருக்குமென்றும் தீபங்களின் ஒளி அவற்றைக்கொன்று வாயு மண்டலத்தைச் சுத்தமாக்குகிறது என்றும் இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது.

6. திருவாதிரைத் திருவிழா:

திருவாதிரை நட்சத்திரம் சிவபெருமானுக்கு உகந்ததாகும். மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரையன்று சிவாலயங்களில் எல்லாம் அந்நாள் சிறப்பாக பூஜைகள் செய்யப்படுகின்றன. விடியற் காலையில் திருவெம்பாவை பாடி சிவபெருமானை ஆராதிப்பார்கள்,

7. வைகுண்ட ஏகாதசி:

மார்கழி மாதத்தில் வரும் வளர்பிறை ஏகாதசி வைகுண்ட ஏகாதசி அல்லது சொர்க்க வாசல் ஏகாதசி என்றழைக்கப்படுகிறது. இந்நாளில் உபவாசமிருந்து இறைவனை வழிபடுவது சாலச் சிறந்தது. இந்நாளில் தான் கண்ணன், அர்ஜுனனுக்கு கீதா உபதேசம் செய்தார் என்று கூறப்படுகிறது. அன்று கீதை முழுவதும் பாராயணம் செய்வது நலம்.

8. பங்குனி உத்திரம்:

ஸ்ரீ தர்ம சாஸ்தா அவதரித்த நாள் பங்குனி மாதம் உத்திர நட்சத்திரம் ஆகும். இந்நாளில் சாஸ்தா கோவில்களில் விசேஷ பூஜைகள் நடை பெறுகின்றன.

9. வைகாசிவிசாகம்:

கந்தப் பெருமான் தோன்றிய நாள் வைகாசி மாதம் விசாக நட்சத்திரம் ஆகும். முருகன் ஆலயங் களில், சிறப்பாகத் திருச்செந்தூரில் லட்சக்கணக் கான அடியார்கள் கடல் நீராடி முருகனை வழிபடுவர். ஆயிரக்கணக்கான காவடிகள் ஏந்தி வந்து முருக னுக்கு அபிஷேகம் செய்வார்கள். காவடி கலசங்க ளுக்குள் அபிஷேகத்திற்குரியபாலோ. எண்ணெயோ, சந்தனமோ எடுத்துச் செல்வார்கள்.

2. விரதங்கள்

1. கந்த சஷ்டி விரதம்:

காசிப முனிவருக்கும், மாயை என்ற அசுரப் பெண்ணுக்கும் பிள்ளைகளாய் பிறந்து, எல் லோரையும் கொடுமைப்படுத்தி வந்த சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் என்னும் மூவரையும் முருகப்பெருமான் 10 நாட்கள் போர் செய்து அழித் தார். கடைசி ஆறுநாட்களும் தேவர்களெல்லாம் உணவருந்தாமல் முருகனையே தியானம் செய்து வந்தனர். ஐப்பசி மாதம் வளர்பிறை சஷ்டியன்று கொல்லப்பட்டார்கள் அசுரர்கள். மும்மலங்களின் வடிவமே இம்மூவசுரர்களும். பக்தர்களும் அவற்றை வெல்வதற்காக, அவ்வாறு நாட்களும் விரதமிருப் பர். ஆறும் நாள் மாலை சூரபத்மனைக் கொன்ற தும் அடியார்கள் நீராடி நீராகாரம் பருகுவர். இதுவே கந்த சஷ்டி விரதமாகும்.

2. சிவராத்திரி விரதம்:

உமாதேவி சிவபெருமானை நோக்கி ஒரு முறை கடின தவம் செய்தாள். மகிழ்ந்த சிவனும் வேண்டிய வரத்தைப் பெறுமாறு பணித்தார்.

உமாதேவி "யான் பூசித்த இந்த இரவில் உம்மைப் பூசிப்பவர்க்கு இம்மை மறுமை இன்பங்களை அளிக்க வேண்டும்" என்று வேண்டினாள். அந்நாளே சிவராத்திரியாகும். மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி நாள்தான் சிவராத்திரி நாளாகும். அன்றிரவு சிவாலயங்களில் நான்கு ஜாம பூஜைகள் நடைபெறும். இரவு முழுவதும் கண்விழித்து, உபவாசமிருந்தால் இகபர நலன் எய்துவர் என்பது திண்ணம்.

3. சித்திரபுத்திர நயினார் நோன்பு:

சித்திரை மாதம் பௌர்ணமியும், சித்திரை நட்சத்திரமும் கூடிய நாளில் இந்நோன்பு அனுஷ்டிக்கப்படுகிறது. பகலில் சித்திரை புத்திர நயினார் கதை வாசிக்கப்படுகிறது. ஜீவர்கள் செய்யும் பாவ புண்ணியங்களின் கணக்கை எழுதுபவர் சித்திர புத்திரர். இந்த நாளில் நோன்பிருந்து அவரை வழிபட்டால் தீவினை நீங்கி சுகம் பெறுவர்.

4. ஏகாதசி விரதம்:

ஒவ்வொரு மாதமும் வரும் இரு ஏகாதசிகளன்றும் திருமாலடியார்கள் உபவாசமிருந்து இறைவனை வழிபட்டு, துவாதசியன்று துளசி தீர்த்தமருந்தி உணவருந்துவர். இதுவே ஏகாதசி விரதம் எனப்படுகிறது.

5. பிரதோஷ விரதம்:

ஒவ்வொரு மாதமும் வரும் இரு திரயோதசிகளன்றும் சிவனடியார்கள் பகலில் உபவாசமிருந்து, மாலையில் நீராடி சிவாலயம் சென்று வழிபடுவர். பிரதோஷம் என்ற சொல்லின் பொருள் இரவின்

தொடக்கமாகும். அந்த வேளையில் இறைவனை வழிபடுவது மிகுந்த பலனைத்தரும்.

3. பண்டிகைகள்

1. திருவோணம்:

ஆவணி மாதம் திருவோண நட்சத்திரத்தன்று இவ்விழா கொண்டாடப்படுகிறது. மஹாவிஷ்ணு வாமனனாக அவதரித்து, மகாபலி என்ற அசுரச்சக்கரவர்த்தியைப் பாதாளத்துக் கழுத்தினார். மகாபலியின் வேண்டுகோளுக்கிணங்க வருடம் ஒரு முறை பூமியைப் பார்த்துச் செல்ல அனுமதியளித்தார் மகாவிஷ்ணு. அந்நாளே திருவோணம். கேரள மாநிலத்திலும், குமரி மாவட்டத்திலும் இப்பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

2. தீபாவளி:

ஐப்பசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி நாளன்று இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. மஹாவிஷ்ணு கண்ணனாக அவதரித்து, நரகாசுரன் என்ற அசுரனைக் கொன்றார். அதனைக் கொண்டாட மக்கள் எல்லோரும் விளக்குகள் கொளுத்தி அழகு படுத்தினர். அதனால் இன்றும் அப்பண்டிகை நாளன்று புத்தாடை உடுத்தி, பட்டாசுகள் கொளுத்தி மகிழ்கின்றனர். இது தமிழ் நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

3. பொங்கல் பண்டிகை:

சூரியன், தக்ஷிணாயனம் முடித்து. உத்தராயனம் தொடங்கும் நாள் மகர சங்கராந்தி எனப்படுகிறது. இதனையே தமிழ் நாட்டில் பொங்கல் பண்டிகையாகக் கொண்டாடுவர். வீட்டின் முற்றத்தில் சூரிய பகவானுக்குப் பொங்கலிட்டு வழிபடுவர். இது தை மாதம் ஒன்றாம் தேதி கொண்டாடப்படுகிறது.

பாடம் 11

புராணப் பெரியோர்கள்

1. தசாவதாரக் கதைகள்

1) மத்ஸ்யாவதாரம்:-

முன்னொரு காலத்தில் ஹயக்ரீவன் என்ற அசுரன் வாழ்ந்து வந்தான். தேவர்களின் பெருமையையும், அசுரர்களின் சிறுமையையும் எண்ணிய அவன் தேவர்களை ஒழிக்கத் தீர்மானித்தான். பூமியில் செய்யப்படும் யாகம் போன்ற நற்கருமங்களால் தான் தேவர்கள் சுகமாக வாழ்கிருர்கள் என்பதை உணர்ந்த அவன், நற்கருமங்களை எல்லாம் தடை செய்தான். படைப்புக்கடவுளாகிய பிரம்மாவிடமிருந்து வேதங்களையும் கவரத் துணிந்தான். அவன் தக்க தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தான். அப்பொழுது பிரளயமும் வந்தது. பிரம்மாவும் துயிலச் சென்ருர். தக்க சமயம் இது தான் என்பதை உணர்ந்த ஹயக்ரீவன் நான்கு வேதங்களையும் திருடிக்கொண்டு பாதாளத்தில்போய் ஒளித்துக் கொண்டான். மீண்டும் படைப்புத் தொழிலை ஆரம்பிப்பதற்காக முயன்ற பிரம்மதேவன் வேதங்களில்லாமல் விழித்தார். மானிடரும் தேவரும் எல்லோரும் கலங்கினர். எல்லோருமாகச் சென்று மகாவிஷ்ணுவிடம் முறையிட்டனர். மஹாவிஷ்ணுவும் வேதங்களை மீட்பதற்காக மீனாக அவதரிக்கத் திருவுளம் கொண்டார்.

பூமியில் சத்யவிரதன் என்ற அரசன் ஒருவன் அந்நாளில் அரசாட்சி செய்து வந்தான். உலக விஷயங்களில் வெறுப்புற்ற அவன் கானகம் சென்று தவ வாழ்க்கையில் நிலைத்து நின்றான். ஒருநாள் குளித்துவிட்டு, தர்ப்பணத்திற்காகக் கையில் நீரை

எடுத்தபோது, அதில் சிறிய மீனொன்று இருக்கக் கண்ட அரசன் அதனை நீரில் விட்டான். அம்மீன் அரசனை விட்டுப்பிரிய மனமில்லாததுபோல் தோன் றவே, அதனை எடுத்துத் தனது கமண்டலத்தில் இட்டுக் குடிசைக்குச் சென்றான். அங்கு சென்றுப் பார்க்கும் போது அம்மீன் கமண்டலம் முழுவதும் வியாபிக்கும்படி வளர்ந்திருந்தது. அதனை எடுத்து நீர் நிறைந்த வேறோர் பாத்திரத்தில் விடவே அதனையும் அம்மீன் நிறைந்தது. பின்னர் அதனை எடுத்து நதியில் விட்டான் அரசன். மறுநாள் அந்நதி முழுவதும் வளர்ந்திருந்தது அம்மாய மீன். சந்தே கம் கொண்ட அரசனுக்குத் தன்னை வெளிப்படுத் தித் தன்னைக் கடலில் விடுமாறு கேட்டுக் கொண் டார் மஹாவிஷ்ணு. அதுபோல் கடலில் விட்டவுடன் "ஹே சத்ய விரதா? இன்னும் சில நாட்களுள் மஹாபிரளயம் ஒன்று வரப்போகிறது. எனவே நீயும், மற்ற ஜீவராசிகளும் ஒரு தோணியில் அமர்ந்து எனது பற்களுள் ஒன்றில் அதனைக் கட்டிவிடு" என்று கூறி நீரினுள் மூழ்கினார். மழை பெய்யத் தொடங்கியது. ஜீவராசிகளனைத்தும் மடிந்து ஒடுங்கின. மஹாவிஷ்ணுவும் சத்யவிர தனைப் பூமியில் விட்டு, "இனி நீ சென்று பூமியில் வாழ்வாயாக! நான் ஹயக்ரீவனை அழிக்கச் செல் கிறேன்" என்று கூறி பாதாளம் சென்றார். மீனுக் கும், அசுரனுக்கும் பெரும் போர் நடைபெற்றது. அசுரனைக் கொன்ற மஹாவிஷ்ணு வேதங்களை மீட்டு, பிரம்ம தேவனிடம் தந்தார். படைப்புத்தொழி லும் மீண்டும் தொடங்கியது.

2. கூர்மாவதாரம்:-

இந்திரலோகத்தில் ஒருநாள் துர்வாச முனி வர் பராசக்தி தேவி கழுத்திலிட்ட மாலையுடன் தேவேந்திரனைக் காணச் சென்றார். தேவேந்திரன் தனது யானை மீது அமர்ந்திருந்தான். அவனிடம்

அம்மாலையைத் தந்தார் முனிவர். அதனை மமதையுடன் வாங்கிய இந்திரன், ஐராவதத்தின் மத்தகத்தின் மீது வைத்தான். அம்மாலையில் வண்டுகள் மொய்த்தன. ஐராவதத்திற்குத் தொந்தரவாயிருக்கவே அது அதனை கீழே போட்டுத் தனது காலால் தேய்த்தது. துர்வாச முனிவர் பெருங்கோபங் கொண்டு, "ஏ தேவேந்திரா! அகங்கரத்தால் என்னை நீ அவமதித்தாய்! நீயும் உனது தேவர் குலமும் துன்பமடையக் கடவீர்கள்! உங்களுக்கும் மனிதரைப்போல் பிணியும் மூப்பும் உண்டாகக்கடவது" என்று சபித்தார். தனது தவற்றை உணர்ந்த இந்திரன், சாபவிமோசனததிற்கு வழி கேட்டான். துர்வாசரும், "பாற்கடலைக் கடைந்து அமுதமுண்டால் விமோசனம் உண்டாகும்" என்று கூறிச் சென்றார். தேவர்களும் அசுரர்களின் உதவியோடு பாற்கடலைக் கடையத் தொடங்கினர். மந்தரமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். துன்பத்தைப் பொறாத வாசுசி விஷத்தைக் கக்கிற்று. அதன் வெம்மையைத் தாங்கமுடியாமல் தேவர்கள் தவித்த போது சிவபெருமான் அதனை உண்டு தேவர்களின் துயர் தீர்த்தார். மீண்டும் கடையத் தொடங்கிய போது மந்தர மலை பாற்கடலில் மூழ்கத் தொடங்கியது. தேவர்களும், அசுரர்களும் முயன்றபோதும் அதனைத் தடுக்க இயலவில்லை. எல்லோரும் மகாவிஷ்ணுவைப் பிரார்த்தித்தனர்.

ஆபத்பாந்தவனாகிய நாராயணனும் கூர்மமாக (ஆமை) அவதரித்து தேவர்களின் துயர் துடைக்கத் திருவுளம் கொண்டார். அம்மகாவிஷ்ணுவாகிய ஆமை லட்சம் யோசனை நீளமுள்ளதாக இருந்தது. அவ்வாமை பாலாழியில் மூழ்கி, அம் மந்தர மலையைத் தன் முதுகில்

சுமந்து கொண்டு மேலே வந்து அதனை இருப்பிடத்தில் வைத்தது. பின்னர் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து கிட்டிய அமுதத்தால் துர்வாசமுனிவரின் சாபத்திலிருந்து தப்பினர்.

3. வராஹவதாரம்:-

முன்னொரு காலத்தில் ஹிரண்யாட்சன். ஹிரண்யகசிபு என்ற இரு அசுர சகோதரர்கள் இருந்தார்கள். மூத்தவனாகிய ஹிரண்யாட்சன், அதிக பலசாலியாயிருந்தான். தனது பலத்தினால் மண்ணுலக அரசர்களையும், இந்திரனையும், எமனையும் மற்று எல்லோரையும் வெல்ல எண்ணிய அவன், தேவர்களை வெல்ல வேண்டி பூமியிலுள்ள நற்கருங்கள் எல்லாவற்றையும் நிறுத்த எண்ணினன். ஏனெனில் இக்கருமங்களால்தான் தேவர்களுக்கு பலம் உண்டாகிறது என்பதை உணர்ந்திருந்தான் அவன். எல்லாவற்றையும்விட பூமியையே நாசம் செய்வதுதான் சிறந்தது. ஏனெனில் அப்போது கர்மத்தைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்று எண்ணிய அவன் பூமியைக் கடலுக்கடியில் ஒளித்து வைத்து விட்டான். இதனால் பூமியில் வாழும் அனைத்தும் மடிந்தன. பின்னர், அவன் வருணனைப் போருக்கழைத்தான். பயந்த வருணன், "அசுரேந்திரா! உன்னுடன் போரிடுவதற்கு என்னிடம் பலமில்லை. அதற்குத் தகுதியானவர் சங்கு, சக்கரம், கதை முதலியன தாங்கிப் பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள பரந்தாமனே" என்று கூறினன். ஆணவத்தால் அறிவிழந்திருந்த அசுரன் வைகுண்டம் நோக்கிப் புறப்பட்டான்.

ஹிரண்யாட்சனின் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்களும், பிரம்மதேவனும் மஹா

விஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர். பக்தர்களுக்கிரங்கும் பரந்தாமனும் தான் வராஹவதாரமெடுத்து (பன்றி) உலகை மீட்கத் தீர்மானித்தார். முதலில் ஒரு வண்டைப்போல் தோற்றமளித்த அப்பன்றியானது, பின்னர் யானையைப் போலாகி மீண்டும் வளர்ந்து ஆகாயமெங்கும் வியாபித்தது. நேராகக் கடலில் பாய்ந்து, பூமியைத் தன் இரு பற்களில் தூக்கிப் பழைய இடத்தில் வைத்தது. இதனை நாரதர் மூலமறிந்த ஹிரண்யாட்சன் நேராக மஹாவிஷ்ணுவிடம் சென்றான். இருவரும் போரிட்டனர். முடிவில் ஹிரண்யாட்சன் மாண்டான்.

4. வாமன அவதாரம்:

அசுர ராஜாவான மஹாபலி, தேவர்களை வெல்வதற்காக சுக்ராச்சாரியாரின் அனுக்ரஹத்தால் பலவானாகி மூவுலகங்களையும் வென்றார். தேவர்களும், இந்திரனும் விண்ணுலகினின்று ஓடி காடுகளிலும், குகைகளிலும் வசித்தனர். இதனால் துன்பமடைந்த தேவர்களின் தாயாகிய அதிதிதேவி மஹாவிஷ்ணுவை நோக்கிக் கடுந்தவம் செய்தாள். தவத்தினால் மகிழ்ந்த மஹாவிஷ்ணுவும் தோன்றி தேவர்களைக் காப்பதாகவும், அதற்காக அதிதியிடமே மகனாகத் தோன்றுவதாகவும் கூறினார். அதுபோல் ஓர் ஆவணி மாதம் வளர்பிறையில் துவாதசியும் திருவோண நட்சத்திரமும் சேர்ந்த நாளில் பகவான் அதிதிதேவியிடம் திரு அவதாரம் செய்தார்.

வளர்ந்து வந்த பாலகனுக்கு உரிய வயதில் உபநயனம், செய்விக்கப்பெற்றது. பார்வைக்கு மிகவும் குள்ளமாகத் தோன்றியதால் "வாமனர்" என்று அழைக்கப்பட்டார். தன் அவதார நோக்கத்தை நிறைவேற்றத் திருவுளம் கொண்ட வாமனர் நேராக யாகசாலைக்குச் சென்றார். மகாபலியும் வாமனரின் பிரம்ம தேஜஸைக் கண்டு தகுந்த மரியா

தைகளுடன் வரவேற்றார். வேண்டிய உபசாரங்களைச் செய்து அவர் விரும்புவதைக் கேட்கலாம் என்றும் கூறினார். வாமனரும், "அரசே! என் காலளவுக்கு மூன்றடி நிலம் மட்டும் தான் எனக்குத் தேவை" என்று கூறினார். இதனால் சந்தேகம் கொண்ட சுக்ராச்சாரியார், மஹாபலியிடம், இது மஹாவிஷ்ணு என்பதைக்கூறி நிலம் கொடுக்க வேண்டாம் எனத் தடுத்தார். ஆனால் மஹாபலியோ அதனைக் கவனிக்காமல் கெண்டியிலுள்ள நீரை எடுத்து வாமனரின் கையில் வார்த்து நிலத்தைக் கொடுக்கத் தீர்மானித்தார். சுக்ராச்சாரியார் ஒரு வண்டாக மாறி கெண்டியில் சென்றமர்ந்து துளை வழியாக நீர் வராமல் தடுத்தார். சர்வமும் அறிந்த வாமனரோ, ஒரு தர்ப்பைப் புல்லால் குத்தினார். இதனால் சுக்ராச்சாரியார் ஒரு கண்ணை இழந்தார். மஹாபலியும் கேட்ட நிலத்தைக் கொடுத்தார். அதனைப் பெற்ற வாமனர் பெரிதாக வளரத் தொடங்கினார். வளர்ந்து வளர்ந்து பிரபஞ்சம் முழுவதும் வியாபித்தார்; கேட்டதுபோல் ஓரடியால் மண்ணுலகையும், இரண்டாம் அடியால் விண்ணுலகையும் அளந்தார். மூன்றாம அடிக்கு இடம் எங்கே என்று மஹாபலியிடம் கேட்டார் மஹாவிஷ்ணு. வேறொரு வழியும் இல்லாததால் மஹாபலி தன் தலையையே நீட்டினார். அவருடைய தலையில் தன் பாதத்தை வைத்து அவரை 'ரஸாதலம்' என்று கூறப்படும் உலகத்திற்கு அழுத்தினார். அங்கு நெடுங் காலம் சகல சுகங்களுடன் வாழும்படி மகா பலியை ஆசீர்வதித்து தனது இருப்பிடமாகிய வைகுண்டம்சென்றார்.

5. பரசுராம அவதாரம்:-

முன்னொரு காலத்தில் ஆணவம் மிக்க அரசர்கள் பலர் பூமியில் வாழ்ந்தார்கள். நற்காரியங்கள் ஒன்றும் நடைபெறவில்லை. துஷ்டர்கள் அதிகரித்த

தால் பூமா தேவிக்குத் துயரம் அதிகரித்தது. எனவே சர்வேசுவரனாகிய மஹாவிஷ்ணு அதர்ம நெறியிற் சென்றவர்களைக் கொன்று, பூமியின் துயர் தீர்ப்ப தற்காக அவதாரம் எடுக்கத் திருவுளம் கொண்டார்.

நர்மதை நதிக்கரையில் வாழ்ந்த ஜமதக்கனி மஹரிஷியும் அவர் மனைவி ரேணுகாதேவியும், ஆறு குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார்கள். அவர் களுக்கு ஏழாவது மகனாக மஹாவிஷ்ணு திருவவ தாரம் செய்தார். இராமன் என்றபெயருடன் வளர்ந்த அவர், சகல வித்தைகளும் கற்றுத் தெளிந்தார்.

ஒருநாள் காலையில் ரேணுகா தேவி குளிப் பதற்காக நர்மதை நதிக்குச் சென்றாள். அங்கே கார்த்த வீர்யார்ஜுனன் என்ற ஆயிரம் கைகள் கொண்ட அரசன் தன் மனைவிகளுடன் குளித்துக் கொண்டிருந்தான். அவர்கள் குளித்து முடிக்கும் வரை காத்திருந்தாள் ரேணுகாதேவி. வீடு திரும் பும்போது நடுப்பகலாயிற்று. இதனால் கோபமுற்ற மஹரிக்ஷி, தனது ஆறு மகன்களிடமும் அவளைக் கொல்லும்படி கூறினார். ஆறுபேரும் கொல்லாமற் போகவே ராமனிடமும் கூறினார். ராமனும், ஒரு வாள் கொண்டு தன் தாயின் தலையை வெட்டி வீழ்த்தினான். மஹரிஷியும் மகிழ்ச்சி கொண்டு ராம னிடம், அவர் விரும்பும் வரம் தருவதாக வாக்க ளித்தார். ராமனும் தன் தாய் உயிருடன் எழும்ப வேண்டும் என்று கேட்டார். மஹரிஷியும் அவ் வாறே செய்தார். பின்னர் அவளுடன் வாழ்ந் திருந்தார்.

ராமன் தாய் தந்தையரிடம் ஆசீர்வாதம் பெற்று கைலாசமலையின் அருகிற் சென்று கடின தவம் செய்தார். தவத்தினால் மகிழ்வடைந்த சிவ

பெருமானும் தோன்றி 'பரசு' ஒன்றைத் தந்து, துஷ்டர்களை அழிக்கும்படிக் கூறி மறைந்தார். ராமனும் மகிழ்ந்தார்.

ஒரு நாள் கார்த்தவீர்யார்ஜுனன் காட்டில் வேட்டையாடச் சென்றான். வழியிலிருந்த ஜமதக்னி மஹரிஷியின் குடிலில் சென்று இளைப்பாறினான். மஹரிஷியும் கார்த்திவீர்யார்ஜுனனுக்கும் அவன் படை வீரர்களுக்கும், காமதேனுவின் மகளான ஸுரபி என்ற தெய்வப் பசுவின் உதவியால் விருந்து அளித்தார். ஸுரபியின் மகிமையை அறிந்த அரசன் அப்பசுவைத் தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்பினான். மஹரிஷி சம்மதிக்காமற் போகவே அவரைக் கொன்றான். இதனையறிந்த பரசுராமன் அவ்வரசனையும் கொன்று. இருபத்தொரு தலைமுறையில் வரும் க்ஷத்திரியர்களையும் கொன்றார். பின்னர் கடலினுள் புதைந்து கிடந்த கன்னியாகுமரி முதல் கோகரணம் வரையுள்ள பகுதிகளை வெளிக்கொணர ஆசைப்பட்டார். வருண பகவானும் அதற்குச் சம்மதித்தார். அப்பகுதிகளில் அநேக சக்திபீடங்களை நிறுவினார். பின்னர் காடுகளில் நீண்டகாலம் தவம் செய்து உடம்பினை உகுத்து வைகுண்டம் சென்றார்.

பகவான் ஸ்ரீராமன் பலராமன் ஸ்ரீகிருஷ்ணன் என்ற அவதாரங்கள் எடுத்து தியோர்களை அழித்தார். கலியுக முடிவில் அதர்மம் மட்டுமே மிஞ்சும். அப்போது தீயோர்களை அழித்து நல்லோர்களை காப்பதற்காக மகாவிஷ்ணு எடுக்கப் போகும் அவதாரம் கல்கி அவதாரம் என்று புராணங்கள் கூறுகின்றன. கையில் வாளேந்தி, வெள்ளைக் குதிரையின் மேலேறி வந்து துஷ்டர்களை அழிப்பார் மஹாவிஷ்ணு. அதுவே கல்கி அவதாரம.

2. ஸ்ரீநாரதர்

தேவரிஷி நாரதருடைய பெயரைக் கேளாதவர் எவருமே இருக்கமாட்டார்கள். அவர் கலகத்தை உண்டுபண்ணும் குறும்புக்காரர் என பாமர மக்கள் கூறுவர். ஆனால் நாரதரது கலகம் எவரையும் கெடுத்தது கிடையாது. அவர் உண்மையில் சமாதான தூதுவரே ஆவார். வீணையை மீட்டிக்கொண்டு கடவுள் நாமத்தை ஓயாது பாடிக் கொண்டு மூவுலகம் திரியும் பக்தராவார். உத்தமத் துறவியாகிய அவர் உலக நலனை முன்னிட்டு கெட்டவர்களை அழிக்க சிலசமயம் சூழ்ச்சி செய்ததுண்டு. கலகப் பிரியர் என்ற பெயர் அவ்வாறு அமைந்திருக்கலாம். கலகம் அவர் நோக்கமல்ல.

பாமர பக்தராகிய பிரகலாதனது பிறப்பிற்குக் காரணமாகவும், துருவன், வால்மீகி போன்றவர்களுக்குக் குருவாகவும் அமைந்தவர் நாரதர்.

முந்திய மஹாகல்பத்திலே நாரதர் கந்தர்வ குலத்தில் தோன்றினர். அப்போது அவருடைய பெயர் உபபர்ஹணன். இசையில் பெருமேதையாகிய அவர் தீவிர சிற்றின்ப நாட்டமுடையவரானர். அவர் செய்த பாபத்திற்காக பிரஜாபதிகள் அவரை சூத்திர குலத்தில் பிறக்கும்படி சாபமிட்டனர். நாரதருடைய சூத்திரப் பிறவியைப் பற்றி பிரம்மவைவர்த்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது. காமாக்யத்திலே துருமிளன் என்னும் இடையன் ஒருவன் இருந்தான். அவனது மனைவிக்கு புத்திரப் பேறுவாய்க்கவில்லை. பிறகு அவளுக்கு கச்யப முனிவருடைய ஆசீர்வாதத்தால் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைதான் நாரதர்.

பாகவத புராணத்தில் கீழ்வருமாறு அவருடைய வரலாறு கூறப்படுகிறது. பிரஜாபதிகளின் சாபத்தால் உபபர்ஹணன் என்ற கந்தர்வன்

சூத்திரப் பெண்ணின் வயிற்றில் பிறந்தார். அவரே நாரதர். நாரதர் தாயாருடன் வாழ்ந்து வந்த காலத்தில் சாது சன்யாசிகளுக்கு நன்ருகத் தொண்டு செய்தார். அதனுல் மகிழ்ச்சியுற்ற சாதுக்கள் அவரை வாழ்த்தினர். அவருக்கு பாகவத தர்மத்தை உபதேசித்தனர். நாரதர் ஹரியின் தரிசனத்திற்காக மிகவும் ஆவல்கொண்டார். மஹாவிஷ்ணு அவருடைய உள்ளத்தில் தரிசனம் கொடுத்தாரே ஒழிய வெளியில் தோன்றவில்லை. ஆனல் ஒரு அசரீரி மட்டும் கேட்டது "குழந்தாய், இப்பிறப்பில் என் தரிசனம் மறுபடியும் உனக்குக் கிடைக்காது. இப்போது செய்யும் பக்தி சாதனை பலனை அடுத்த பிறவியில் அடைவாய்". அடுத்த பிறவியில் பிரம்ம தேவருடைய மகனுகப்பிறந்தார். மஹாவிஷ்ணு அவருக்கு வீணை ஒன்றை கொடுத்தார். இறைவன் நாமத்தை பாடி வீணைவாசித்துக்கொண்டே மூவுலகிலும் இன்றும் உலவி வருகிருர் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

வியாசபகவானுக்கு மனநிம்மதி இல்லாதிருந்த போது நாரதர் அவருக்கு ஸ்ரீமஹா பாகவத புராணத்தை சுருக்கமாக உபதேசித்தார். வியாசர் விரிவாக பாகவத புராணத்தை எழுதி நாரதர் கூறியதுபோல் மனநிம்மதி அடைந்தார்

வால்மீகி முனிவருக்கும் ஸ்ரீராமருடைய பெருமைதனை உபதேசித்தவர் நாரத மஹரிஷியே ஆவார்.

நாரதர் கைக்கொண்டது பக்திமார்க்கமான பாகவத தர்மம். கலி கால மக்கள் உய்வதற்கான அதை பிரச்சாரம் செய்துவந்தார். சாந்தோக்ய உபநிஷத்தில் ஏழாவது அத்யாயம் முதற்கண்டத்தில் நாரதருக்கும் சனத்குமாரருக்குமிடையே நடந்த சம்பாஷணை ஒன்று வருகிறது. அதில் நாரதர்

உலகத்திலுள்ள எல்லாக் கலைகளையும் கற்றவராகக் கூறப்பட்டுள்ளது. அத்தகைய பெரும் பண்டிதராக இருந்தும் அவருக்கு மன ஆறுதல் கிடைக்கவில்லை. ஆதலால் மிகுந்த பணிவுடன் சனத்குமார மஹரிஷியிடம் சென்று வணங்கி தன்னுடைய ஆன்மா சாந்தியடையும் வழியை உபதேசிக்குமாறு கேட்கிறார். நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், இதிகாச புராணங்கள் இன்னும் எத்தனை எத்தனையோ கலைகள் தனக்கு தெரியுமென்று கூறினார். ஆனால் அவைகளால் தனக்கு நிம்மதி கிடைக்கவில்லை என்று தன் குறையை வெளியிட்டார். சனத்குமார மஹரிஷி அவருக்கு வார்த்தைகளைவிடப் பெரிது மனது, மனத்தைவிடப் பெரிது புத்தி என்று படிப்படியாகச் சொல்லி எல்லாவற்றையும்விடப் பெரிது பிரம்மம் (பூமா) அதை அறிந்தால்மட்டுமே உண்மையான பேரின்பம் கிடைக்கும் என்று உபதேசித்தார். அவ்வாறு சனத்குமார மஹரிஷியின் அருளால் பிரம்மத்தைப் பற்றிய அனுபவ ஞானம் (விஞ்ஞானம்) வாய்க்கப் பெற்றார். "சுக்கு சேராத மருந்தில்லை" என்பது போல் நாரதருடைய பெயரைக் குறிப்பிடாத புராண இதிகாச கதைகளோ தத்துவநூற்களோ இல்லை எனலாம்.

ஸ்ரீமத் பகவத்கீதையின் 10 - வது அத்தியாயத்தில் கண்ணபிரான், தேவரிஷியாகிய நாரதர் தனது தெய்வாம்சம் (விபூதி) என்று குறிப்பிடுகிறார்.

'ஹரே ராம! ஹரே ராம! ராம ராம ஹரே ஹரே!
ஹரே க்ருஷ்ண! ஹரே க்ருஷ்ண! க்ருஷ்ண
க்ருஷ்ண! ஹரே ஹரே!

என்று பதினாறு நாமங்கள் கொண்ட மகாமந்திரத்தை கலிகால பக்கள் கதியடைய உபதேசித்தவரும் நாரதரே என்று கலிசுந்தர சணுபநிடதம்

நாரதர் இயற்றிய நூல்கள்?

கூறுகிறது. நாரதர் தன் பிதாவான பிரம்மாவிட மிருந்து இந்த மந்திரத்தைக் கற்றுக்கொண்டா ரென்றும் கூறுகிறது. நாரதபாஞ்சராத்ரம் நாரத பக்தி சூத்திரம் நாரத பரிவ்ராஜக உபநிஷத், நாரத ஸ்மிருதி என்ற நூற்களை இயற்றினார்.

5. வசிஷ்டர்

வசிஷ்டரை பிரம்ம ரிஷி என்று அழைப்பர். பிரம்மாவின் புத்திரராகிய இவர் ஸப்தரிஷி (ஏழு ரிஷிகள்) களில் ஒருவர். ரிக் வேதத்தின் ஏழாவது மண்டலத்திலுள்ள மந்திரங்களை இவர் வெளிப் படுத்தினார். சூரிய குல மன்னர்களின் குருவாக விளங்கியவர். இவர் ஒப்புயர்வற்ற புகழோடு விளங் கினார். அருந்ததி என்ற கற்பிற் சிறந்த அம்மை யாரை மணந்து இல்லறத்திலேயே வாழ்ந்த பரம ஞானி. இவருக்கு நூறு பிள்ளைகள் பிறந்தனர். அந்நூறு பிள்ளைகளையும் விசுவாமித்திரர் கொன் றொழித்தும் அவர் மீது கோபங் கொள்ளாதிருந் தார். விசுவாமித்திரர் இவரைப் பகைத்தபோதும் அவர் பிரம்மரிஷி ஆவதற்கு இவரே மூலகாரணமாக இருந்தார். இவரிடம் காமதேனு என்ற தேவலோகப் பசு ஒன்றிருந்தது. அது கேட்டதையெல்லாம் அளிக்கவல்ல ஆற்றலுடையது.

இவர் தசரத மன்னனுடைய குருவாக விளங் கினார். வேளாவேளையில் தசரதனுக்கு பல உபதே சங்கள் கொடுத்து துணைபுரிந்து வந்தார். தசரத சக்ரவர்த்திக்கு வெகுகாலமாக புத்திரப்பேறு இல் லாததால் ரிஷ்ய சிருங்கர் (கலைக்கோட்டு முனிவர்) என்ற முனிவரைக் கொண்டு புத்திரிகாமேஷ்டியாகம் செய்ய வசிஷ்டர் தசரதனுக்கு உபதேசித்தார். அதன் பலனாய் தசரதனுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தன

இந்த நான்குபேருக்கும் குருவாக இருந்து நான்கு வேதங்கள், 6 சாஸ்திர தத்துவக் கலைகளை வஷிட்டரே பயிற்றுவித்தார்.

ராமலட்சுமணர்கள் சிறுவர்களாயிருந்த போது விசுவாமித்திர மகரிஷி வந்து, தாடகை முதலிய அசுரர்களால் யாகம் பாழாக்கப்படுகிறது என்றும் அந்த யாகத்தை நிறைவேற்றவும், அசுரர்களை அழிக்கவும் தகுதி வாய்ந்தவர்கள் ராம, லட்சுமணர்களே. ஆதலால் அவர்களை 10 நாள் அவரிடம் அனுப்புமாறு கேட்டார். இதைக்கேட்ட மன்னன் மனம் புண்பட்டு நிற்கும் போது ஸ்ரீராமன் மஹாவிஷ்ணுவின் அவதாரம் என்ற உண்மையை அறிந்திருந்த வசிஷ்டர் தசரதனை தேற்றி ராம லட்சுமணர்களை விசுவாமித்திர மகரிஷியுடன் அனுப்பி வைக்கிறார். ராமனுக்கு எந்த சூழ்நிலையிலும் எக்கேடும் வராது என்று வசிஷ்டர் தசரதனுக்கு உறுதி கூறுகிறார். இவ்வாறு தசரதனுக்கு சீதா கல்யாணத்திலும் உறுதியளிக்கிறார். கடைசியாக ராவண வதம் முடிந்து திரும்பிய ஸ்ரீராமனுக்கு பட்டாபிஷேகமும் செய்து வைக்கிறார்.

4. விசுவாமித்திரர்

இவர் பிறப்பால் க்ஷத்திரியன் ஆவார். கன்யாகுப்ஜம் என்ற நாட்டில் காதி என்ற அரசனின் மகனாவார். விசுவாமித்திர மன்னன் ஒரு நாள் காட்டிற்கு வேட்டையாட சென்றார். வனத்தில் வசிஷ்டருடைய ஆவின மங்கையைக் கண்டார். அங்கு காமதேனு என்ற தெய்வீகப் பசு ஒன்று இருந்தது. அந்த பசுவானது கேட்டவையெல்லாம் கொடுக்கும் சக்தி படைத்ததாகயிருந்ததால் மன்னனுடைய படைகளுக்கும் ராஜோபசாரம் செய்து அன்னதானம்

செய்தது. இதைக்கண்ட மன்னன் பசுவில் ஆசை கொண்டு வசிஷ்டரிடம் அப்பசுவைக் கேட்டான். வசிஷ்டர் கொடுக்க மறுக்கவே மன்னனுக்கும் மகரிஷிக்கும் போர் நடந்தது. விசுவாமித்திர மன்னன் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டான். தோல்வியினால் அவமானப்பட்ட விசுவாமித்திர மன்னன் தானும் தவம் செய்து வசிஷ்டரின் ஆற்றலைப் பெற எண்ணினான். அரசாட்சியை விட்டுக் கடுந் தவம் செய்து ராஜரிஷி, மகரிஷி, பிரம்ம ரிஷி என்ற பட்டங்களைப் பெற்றார். ஆனால் வசிஷ்டர் அவரை பிரம்மரிஷி என்று அழைக்க வேண்டுமென்று விரும்பினார். வசிஷ்டர் அதற்கு எளிதில் உடன்படவில்லை. விசுவாமித்திரர், வசிஷ்டருடைய 100 குழந்தைகளைக் கொன்ற பிறகும் வசிஷ்டர் கோபப்படவில்லை. வசிஷ்டருடைய பெருந்தன்மையை உணர்ந்து விசுவாமித்திரரே அவரை மன்னிக்கும்படி வேண்டினார். அப்போது முதல் அவர் பிரம்மரிஷி என்று அழைக்கப்பட்டார்.

திரிசங்கு என்ற அரசன் உடலுடன் சொர்க்கம் புக எண்ணி வசிஷ்டரிடம் அதற்கு ஆவன செய்யும்படி கோரினான். வசிஷ்டரும் அவரது 100 பிள்ளைகளும் மறுக்கவே தகாத வார்த்தையால் ஏசினான். ஆகவே சபிக்கப்பட்டு சண்டாளன் ஆனான். விசுவாமித்திரர் தனது மந்திர சக்தியால் அவனை சொர்க்கத்திற்கனுப்பினார். ஆனால் இந்திரன் திரிசங்குவைத் தடுத்து விடவே திரிசங்கு பூமியை பார்த்து விழலானான். ஆனால் விசுவாமித்திரர் திரிசங்குவே நில் எனக்கூறவும், திரிசங்கு வானத்தில் நின்றான். அவன் நின்ற இடத்தில் விசுவாமித்திரர் தனது தவவலிமையால் ஒரு சொர்க்கத்தையே படைத்தார்.

ராம லட்சுமணர்கள் சிறுவராக இருந்த போது அழைத்துவந்து அவர்கள்மூலம் பல அரக்கர்களை ஒழித்தார். அகல்யைக்கு ராமனது பாதம் பட்டு சாபவிமோசனம் பெறச் செய்தார். மிதிலைக்கு இவர்களை அழைத்துச்சென்று சிவதனுசை வளைக்குமாறு ராமனை ஏவி சீதா கல்யாணம் நடைபெறச் செய்தார். இவ்வாறு ராமாயணத்தில் முக்கிய பங்கினை வகிக்கிறார்.

கதை உணர்த்தும் பாடம்:-

1. அரசனின் படைபலத்தைவிட தவசிகளின் ஆன்மீகபலம் சக்தி வாய்ந்தது.
2. முயற்சியால் அடையமுடியாதது உலகில் இல்லை.

5. வியாசர் பகவான்

பராசர முனிவர் ஒருநாள் கங்கைக் கரையில் ஒரு மீனவப் பெண் நிற்பதைக் கண்டார். நாளும், கோளும் நன்றாக இருக்கும் வேளையில் ஒரு குழந்தை பிறக்குமானால் உலகு நன்மையடையும் எனஎண்ணி அம் மீனவப் பெண்ணிடம் தன் எண்ணத்தைக் கூறினார். அவளும் அவருடன் சேர இசைந்தாள். அவளது உடலிலிருந்து மீன் நாற்றத்தை மாற்றி (மச்சகந்தி) அவளை பரிமள கந்தியாக மாற்றி, அவளுடன் சேர்ந்து வியாசரைப் பிறப்பித்தார். பின் முனிவர் தன் தவ வலிமையால் சத்தியவதியை மீண்டும் கன்னியாக்கிச் சென்று விட்டார். பிறந்த குழந்தை உடனே சிறந்த முனியாகக் காட்சியளித்து, தன் தாயை வணங்கி "என்னை நீ எண்ணும் போது வருவேன்" என்று கூறி விடைபெற்றுச் சென்றது.

சத்தியவதியை இரண்டாவது முறையாக சந்தனு மகாராஜன் மணந்தார். அவருக்கு சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்று இரு புதல்வர் பிறந்தனர். சித்திராங்கதன் இளமையில் மாண்டான். விசித்திர வீரியன் அம்பிகை, அம்பாலிகை என்ற இரு பெண்களை மணந்து இளமையிலேயே மாண்டான். அப்போது சத்தியவதி தனது குலம் அழிந்து விடும் என எண்ணி தன் மகனான வியாசரை எண்ணினாள். வியாசர் வந்தார். அவள் வியாசரிடம் தம்பியாகிய விசித்திர வீரியனின் மனைவிகளுடன் கூடி சந்ததிகளைப் பெறும் படி ஏவினாள். தாயின் விருப்பத்திற்கிணங்க வியாசருக்கும், அம்பிகைக்கும் திருதராஷ்டிரன் என்ற குருட்டுக் குழந்தையும், அம்பாலிகைக்கு பாண்டுவும், அரசியின் தோழிக்கு விதுரரும் பிறக்கிறார்கள். அவ்விதம் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் வியாசர் பாட்டன் ஆயினார்.

அவர் விஷ்ணு அம்சமாக பிறந்தவர். சர்வக்ஞர். எல்லாம் அறிந்தவர். முனிவர்களில் சிறந்தவர். அவரே பரந்து அடுக்கு முறையில்லாமல் கிடந்த வேத மந்திரங்களை எல்லாம் தொகுத்து சாகைகளாகப் பிரித்து, ரிக் யஜுர், சாமம், அதர்வணம் என்ற பெயருடன் நாலாக வகுத்து மந்திரங்கள் மறையாமல் காத்தார். ஆதலால் அவருக்கு வேத வியாசர் எனப் பெயர் வந்தது. ஐந்தாவது வேதமென்று புகழப்பெறும் மாகாபாரதத்தைப் பாடியவர். விநாயகருடன் ஒப்பந்தம் பேசி, அவரைக் கொண்டு மகாபாரதத்தை எழுதச்செய்தவர். விநாயகர் ஒரு நிபந்தனை போட்டார். நான் நிறுத்தாமல் எழுதிக்கொண்டு போகுமளவுக்கு நீங்கள் கவிபாடிக் கொண்டே போக வேண்டும் என்பது. வியாசரும் ஒரு நிபந்தனையை போட்டார். அதாவது எழுதுபவர் கவியின்

பொருளை விளக்கிக் கொண்டுதான் எழுதவேண்டும். அதனால் வியாசர் பெருமான் இடையிடையே கஷ்டமான பொருளுடைய கவிதைகளைப் போடுவார். கணபதி அதன் பொருளை ஆலோசிக்க சற்று எழுத்து வேலையை நிறுத்துவார். அதற்கிடையில் வியாசர் புதிய கவிகளை தன் மனத்திற்குள் தயார் பண்ணிப் பாடத்தொடங்குவார். இங்ஙனம் 18 பருவங்களும் மொத்தம் ஒரு லட்சம் பாடல்களும் கொண்ட ஒப்புயர்வற்ற மகாபாரத கதையை உலகிற்கு அளித்தார் வியாச பகவான்.

இவரை ஸ்ரீகிருஷ்ணாத்வைபாயனர் எனவும் கூறுவர். இவரே உபநிடதங்களின் தத்துவங்களை விளக்கி உத்தர மீமாம்ஸை என்ற அத்வைத வேதாந்த சூத்திரங்களையும் எழுதியவர். இதை பிரம்மசூத்திரம் என்று கூறுவர். வேதப்பொருளை விளக்குவதற்காக பதினெண்டு புராணங்களை யாத்த வரும் வியாசரே.

இவரைப்புகழ்ந்து பாடப்பெற்ற இரண்டு பாட்டுக்கள்

1. வியாஸாய விஷ்ணு ரூபாய வியாஸ ரூபாய விஷ்ணவே
நமோ வை பிரம்ம நிதயே வாஸிஷ்டாய நமோநம!

(வியாசனென்ற விஷ்ணுவே, விஷ்ணு என்ற வியாசரே, வசிஷ்ட குலத்தில் பிறந்த வேத வித்தையின் வடிவமே உமக்கு வணக்கம், வணக்கம்)

2. வ்யாஸம் வஸிஷ்ட—நப்தாரம்
சக்தே: பௌத்ரம் அகல்மஷம்
பராசராத்மஜம் வந்தே
சுகந்தாதம் தபோநிதிம்

(வஸிஷ்டருடைய கொள்ளுப்பேரனும், சக்தியின் பேரனும், பராசரரின் மகனும், சுகப்ரம்மத்தினுடைய தந்தையுமாகிய தூய தவச்செல்வரை நான் வணங்குகிறேன்.)

ஆஷாட பௌர்ணமி நாளை வியாஸ பௌர்ணமி அல்லது குரு பௌர்ணமி என்று கொண்டாடுகிறோம். அன்று அவரது நினைவு நாள், அவரை பூஜிப்பார்கள். இந்து தர்மத்தின் ஆணிவேராயிருப்பவர் வியாஸ பகவான்.

ஸ்ரீமன் நாராயணர். பிரம்மா, வஸிஷ்டர், சக்தி பராசரர், வியாசர் எனற சந்தான குரு பரம்பரையில் வந்த ஞானசூரியன். ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளின் 16-வது வயது முடிந்தவுடன் அவருக்குக் காட்சி கொடுத்து பிரஸ்தானத்ரயபாஷியம் எழுதுவதற்காக மேலும் 16 வருடம் ஆயுளையும் அளித்தார் எனப்படுகிறது. மேலும் அவரது பாஷியத்தைப்பற்றி விவாதித்து, அவரை மெச்சி, ஆசீர்வாதம் பண்ணினதாகவும் கூறப்படுகிறது.

வியாச பகவானை பற்றிக் கூறும்போது, அவரது மகனான சுகபிரம்மரிஷியைப் பற்றிக் கூறாமலிருக்க முடியாது. கிளியுருவில் வந்த ஒரு தேவலோகப் பெண்ணுக்கும் வேதவியாசருக்கும் பிறந்தவரே சுகப்ரம்மரிஷி. சுகர் கருவிலே ஞானியாயிருந்தார். தாய் வயிற்றில் பதினாறு ஆண்டுகள் தங்கியிருந்தார். மாய உலகில் வந்து பிறக்க மனம் இல்லாமல் அவ்வாறு செய்தார். பிறகு பிறந்ததும் தாய் தந்தையரைத் துறந்து கானகம் நோக்கிச் சென்றார். மகன் மேல் வைத்த பாசத்தால் வியாஸ பகவானும் பின்னே சென்றார். ஆனால் மகனைக் காணாது, மகனே! மகனே! என அழைத்தார். கானகத்திலுள்ள செடி, கொடிகளும் ஓம், ஓம் என்று குரல் கொடுத்ததாகச் சொல்வர். சுகப்பிரம்மம் எங்கும் நிறைந்த பரப்ரம்ம ஞான வடிவமாகவே வாழ்ந்தார் என்றும் கூறப்படுகிறது. இதிலிருந்து வியாச பகவானுடைய மகிமை தெரியவருகிறது.

5. கந்தபுராணம்

கயிலயங்கிரியில் உலக அன்னையும் தந்தையுமான பராசக்தியும், சிவபெருமானும் கொலுவிருக்கிறார்கள். அன்னை பராசக்தி பெருமானிடத்தில் தனிமையில் வேண்டிக்கொள்கிறாள். பெருமானே, என் தந்தையான தக்கன் என்னை இழிவுபடுத்தினான். தங்களையும் இகழ்ந்து பேசினான். அன்னவன் மகள் என்ற பெயரே எனக்கு இருக்கக் கூடாது. மேலும் அவன் தங்களை இகழ்ந்தமைக்கு கழுவாயாக நான் இவ்வுடலை நீக்கி வேறொரு புனித வடிவத்துடன் தங்களை இடைவிடாது தொண்டு செய்து வழிபட வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்கு அருள வேண்டும் என்றாள். சிவபெருமானும் அதனை ஏற்றுக் கொண்டு உன் விருப்பம் போல் நீ வேறு புனித வடிவம் தாங்கி எம்மை வழிபட அருளுகின்றோம். மலையரசனான இமயவான் தனது திருமலையின் ஒரு பகுதியான மானசரோவரம் என்ற குளக்கரையில் அமர்ந்து கொண்டு என்னை நோக்கி கடுந் தவம் புரிகின்றான். நீ அன்னார் திருமுன்பு சிறு குழந்தையாக போய் காட்சியளிக்க வேண்டும். அவன் உன்னை மகளாக பாராட்டி வளர்த்து எனக்குத் திருமணம் செய்து கொடுப்பான். நீ அவர் முன்பு செல்லலாம் என்று உத்தரவிட்டார். சிவபெருமானை விட்டுப் பராசக்தி பிரிந்துவிட்டதால் சிவபெருமான் தனியனாக தட்சிணாமூர்த்தி திருக்கோலத்தில் அமர்ந்துவிட்டார். அந்தநேரம் சனகர், சனத்குமாரர்,சனாதனர்,சனந்தனர் என்ற நால்வருக்கு மௌனமாக அமர்ந்து தத்துவ விளக்கம் கூறத் தொடங்கினார். சிவபெருமான் மௌனத்தில் அமரும் பொழுது நந்தி தேவருக்கு ஒரு உத்தரவிட்டார் நான் நால்வருக்கும் மௌனம் உரைக்கும் பொழுது என் முன்பு யாரையும் அனுப்பக் கூடாது. ஆனால் மன்மதன் ஒருவன் வருவான். அவனை தடைசெய்யாமல் உள்ளே அனுப்பிவிடு என்று உத்தரவிட்டார்.

இந்தத் தருணம் காசிப முனிவரின் மகன் களான சூரபன்மா, சிங்கமுகன், தாரகன் என்ற மூன்று சகோதரர்களும் வானவர்களை எல்லாம் மிகவும் கொடுமைப் படுத்திக்கொண்டு இருந்தார் கள். எல்லா வானவர்களும் ஒன்று கூடி முப்பத்து மூன்று கோடி தேவர்களும் திருமாலை சந்தித்தார் கள். திருமால் வானவர்களுக்கு ஆறுதல் கூறினர். தேவர்களே! நீங்கள் இத்தருணம் சக்தி இழந்தவர் களாகவும் சூரனின் கொடுமைக்கு உட்பட்டவர் களாகவும் இருப்பதற்கு காரணம் உண்டு. தக்கன் செய்த வேள்வியில் பெரியதோர் சபையில் தக்கன் சிவபெருமானை அடுக்கடுக்காக ஏசினன். அதனை நீங்கள் அனைவரும் செவிசாய்த்தீர்கள். அந்தப் பெருங்குற்றத்தின் தீய முடிவுதான் இந்த துன் பத்திற்குக் காரணம். ஆனல் இதிலிருந்து விடு பட்டு, உலகனைத்தும் உய்வதற்கு அருமையான வழி இருக்கிறது. அதுதான் முருகன் திரு அவதா ரமாகும். நீங்கள் உங்களில் ஒருவரான மன்மதனை சிவபெருமானிடத்தில் அனுப்பிவையுங்கள். பெரு மான் தற்போது மௌனத்தில் அமர்ந்து இருக்கி ருர். மன்மதன் சென்று தனது பூக்களாலான கணையை சிவபெருமான் மீது போட வேண்டும். பூக்கணையால் தாக்குண்ட சிவபெருமான் தவம் கலைந்து சக்தியான தேவியை தேடிச்சென்று திருமணம் செய்துகொள்வார். அதன் மூலம் முருகன் தோற்றம் ஏற்படும். உலகத்திற்கு நன்மை பிறக்கும் என்ருர்.

தேவர்கள் மன்மதனை அழைத்து சிவபெரு மானிடம் செல்லவும், சென்று பூக்கணை தொடுக் கவும் பணித்தார்கள். மன்மதன் முதலில் மறுத்து விட்டான். கடைசியாக பிரம்மா கூறினார்; உன் ஒருவன் கையில்தான் மூன்று உலகத்தின் விதி யும் இருக்கிறது. எனவே நீ செல்லவேண்டும்

என்றார். நான் ஒருவன் அழிந்து, அதன் மூலம் மூவுலகுக்கும் நன்மை பிறக்குமாயின் அதைவிட பெரும்பேறு எனக்குக் கிடையாது என்று தீர்மானித்து மன்மதன் புறப்பட்டான். நேராகச் சிவபெருமான் சன்னதியில் வந்து தன்னுடைய கரும்பு வில்லை வளைத்து மலர்க்கணையை தொடுத்தான். பெருமான் மேல் அம்பு படவே கண்விழித்தார். சிவபெருமானின் நெற்றி விழியால் மன்மதன் நீறுப் படுத்தப்பட்டான். பெருமான் தவம் கலைந்தது. தேவர்கள் எல்லாம் வந்து சிவபெருமானை வணங்கி வாழ்த்தி வேண்டிக்கொண்டனர்.

பெருமானே தங்களின் திருவருள் பெற்றவனை சூரபதுமா தன்னுடன் பிறந்தார்களுடன் சேர்ந்து எங்களையும் மற்றைய உலகத்தவரையும் மிகவும் கொடுமைப்படுத்துகின்றான். தங்களின் கருணையினால்தான் நாங்கள் விடுவிக்கப்பட முடியும் என்று வேண்டினர்.

தேவர்களே அஞ்சவேண்டாம். நாம் முருகப் பெருமானை அருளி உங்களை எல்லாம் காப்பேன் என்றுகூறி விடைகொடுத்தார்.

மன்மதனின் மனைவியான ரதிதேவி கணவனுக்கு உற்ற நிலையைக் கண்டு மனம் கலங்கி அழுதுபுலம்பினாள். சிவபெருமான் திருமுன்பு வந்து முறையிட்டாள். பெருமானே எனக்கு என் கணவனை அளிக்க வேண்டும். தங்கள் அருட்செயலால் முடியாதது ஒன்றுமில்லை என்று வேண்டினாள். சிவபெருமானும் அப்படியே செய்வதாகக் கூறி உன்னுடைய கணவன் எல்லா நேரமும் உன் கண்களிலிருந்து பிரியமாட்டான். மற்றவர் கண்களுக்குப் புலப்படவும் மாட்டான். ஆகவே அவனுக்கு அனங்கன் என்று பெயர் வழங்கப்படும். எமது திருமணத் தருவாயில் உனது கணவனை எழுப்பித் தருவோம் என்றும் நம்போன்று

(சிவ சக்தி) நீங்கள் என்றுமே இணைபிரியாத தம்பதிகளாக ரதி மன்மதன் என்று விளங்கு வீர்கள் என்று அருளினர்.

சிவபெருமானைப் பிரிந்து பராசக்தி இமவானுடைய தவப்பயனுக அவன் எதிரில் பூக்குவியலின் இடையில் சிறு குழந்தையாகக் காட்சியளித்தார். இமவான் அக்குழந்தையைத் தன்வீட்டிற்கு எடுத்து வந்து மனைவியிடம் கொடுத்து வளர்த்துவந்தார். பர்வத் ராசாவுக்கு மகளாக வந்ததால் அன்னை பார்வதி என்று அழைக்கப்பட்டாள். பார்வதி தமது மூன்ரும் வயதில் ஒருநாள் திடீரென தவம் செய்வேன் எனப் புறப்பட்டாள். தாய் மேனுதேவி தடுத்தும் கேட்காமல் தவத்தில் அமர்ந்துவிட்டாள். நெடுநாளாகத் தவம் இயற்றுகின்ருள் பார்வதிதேவி. சிவபெருமானும் பார்வதியைக்காணப் புறப்பட்டுவிட்டார். தன்வடிவத்தை மறைத்துக் கொண்டு வயது முதிர்ந்த அந்தணர் திருக்கோலம் தாங்கி உமாதேவிக்கு எதிரே வந்தார். உமாதேவின் தோழியர்களான ஜெயா. விஜயா என்கின்ற இருவரும் அவரை பார்வதி தேவிக்கு அருகில் அழைத்து வந்தனர். பார்வதி தேவியும் தவநிலையில் இருந்து வெளிவந்து பெரியவரை வணங்கி வரவேற்றனர். உடன் பெரியவரான சிவபெருமானும் பேசத் தொடங்கினார். "அம்மா பார்வதி! நீ பெரிய அரசனுடைய மகளாகப் பிறந்திருக்கிறாய்? அறிவிலும்.ஆற்றலிலும் சிறந்தவளாக விளங்குகிறாய். இத்தனை சிறப்புடையநீஅழகே இல்லாத வயது முதிர்ந்த பித்தனான சிவபெருமானையா விரும்புகின்ருய்.நீவிரும்பும் சிவன் அழகற்றவன். சுடுகாட்டில் நடம் புரிகின்றான், மண்டை ஓட்டில் பிச்சை எடுத்துத்தின்கின்றான். அப்படிப்பட்ட சிவனை விரும்புகின்றாயே வெட்கம் என்றார். பார்வதி தேவி முதியவரைப் பார்த்து தாங்கள் சிவனடியார் போல்

தோற்றமளித்தும் அவர் பெருமைகளை அறியாத வராக இருக்கின்றீரே. அவருக்கு மேம்பட்ட பரம் பொருள் ஒன்றுமில்லை. சாதாரண மக்கள் சிவ பெருமானின் இந்த உண்மை பெருமைகளை அறிய மாட்டார்கள் என்றாள். உமாதேவியின் இந்த உறுதியைக் கண்டு சிவபெருமான் தனது முழுத் திருக்கோலத்தைக் காட்டிவிட்டார்.

அதைக்கண்ட உமாதேவி எழுந்து வணங்கி, பெருமானே! தங்கள் வரவை எதிர் பார்த்துத்தான் தவம் கிடந்தேன். அந்த நிலையிலும் தாங்கள் எழுந்தருளியும் நான் அறிந்து கொள்ளாமல் இருந்து விட்டேனே என்று வருந்தினாள். சிவபெருமான் புன் முறுவல் செய்து வருந்த வேண்டாம், உன்னு டைய விருப்பம் போல நாளையே உன்னை முறை யாகத் திருமணம் முடிந்துத் கொள்வோம் என்று கூறி மறைந்தார். பார்வதியும் தன் தந்தையாரி டம் திரும்பி வந்துவிட்டாள். சிவபெருமான் வசிட் டர் முதலிய முனிவர்களை அழைத்து முனிவர் களே, நீங்கள் உங்கள் மனைவிமார்களுடன் சேர்த்து இமவானை அணுகி பார்வதி தேவியை நமக்குத் திருமணம் முடித்துத்தர கேட்டுவாருங் கள் என்று அனுப்பினார். இமவானும் மகிழ்ந்து இசைந்தார். திருமணம் பங்குனி உத்திரத் திருநாள் என்று தீர்மானிக்கப்பட்டது.

திருமண நாள் அன்று மூவுலகத்தினுடைய பெரும் எண்ணிக்கைகளும் கயிலங்கிரியில் கூடின னதால், வடகோடு தாழ்ந்து விட்டது. பூமியின் தென்கோடி உயர்ந்து விட்டது. சிவபெருமான் கூட முனிவரான அகத்தியரை அழைத்து நீ சென்று இந்தியாவின் தென் கடைசியிலுள்ள பொதிகை மலையில் சென்று அமர வேண்டும் என்றார். அகத் தியர் சிவபெருமானை நோக்கி தங்கள் திருமணக் காட்சி காண எல்லா உலகமும் கூடியுள்ள இத்

தருணத்தில் அடியேனுக்கு மாத்திரம் தங்கள் திருமணக் காட்சி காணக்கிடைக்காமல் போகிறதே என்று வேண்டினார். உனக்காக நாம் தென்கோடியில் வந்து திருமணக்காட்சியளிப்போம் என்றார்.

சிவபெருமான் அகத்திய முனிவரின் வேண்டுகோளின்படி தமிழ் மொழியை இலக்கண இலக்கியவரம்புடன் உணர்த்தினார். அகத்திய முனிவர் வானவீதியில் புறப்பட்டு பொதிகை மலை வந்து சேர்ந்தார். பூமி சமப்பட்டுவிட்டது. பிரம்மா திருமணவிழாவினை வைதிக முறைப்படி முடிக்கின்றார். சிவபெருமான் தமது திருக்கரத்தால் உலக மங்களமே வடிவமாக உள்ள அம்பிகைக்கு திருமாங்கல்யம் அணிவித்து தமது திருமார்பிலுள்ள மாலையை அணிவித்து அன்னையின் கைத்தலம் பற்றிக்கொண்டார்.

சிவபெருமான் ஐந்து முகத்துடன் காட்சி அளிக்கின்றார். சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்பது ஐந்து முகங்களாகும். ஐந்து முகத்துடன் அதோ முகம் என்ற ஆறுமுகத்தை எடுத்துக்கொண்டு சிவபெருமானே ஆறுமுகத்துடன் காட்சியளிக்கின்றார் இந்த ஆறுமுகத்துடன் தமது இடப்பாகம் அமர்ந்தவளான உமாதேவியை திருக்கண்சாத்தினார். உமாதேவியின் கருணை நோக்கும் ஆண்டவன் திருமுகத்தில் பதிந்தது. சிவபெருமான் தன்னுடைய ஆறு திருநெற்றிக்கண்களையும் திறந்தார். அவ்விழிகளிலிருந்து ஓர் ஒளிவடிவம் கீழே விழுந்தது. அந்த ஒளியை அக்கினிக் கடவுளும், வாயு பகவானும் தாங்கவேண்டும் என்று கட்டளையிட்டார். அவர்கள் இருவரும் தாங்கிச் சென்று கங்கை ஆற்றில் விட்டுவிட்டனர். கங்கையில் மிதந்து சென்ற அந்த ஒளியானது சரவணப்பொய்கையில் ஒதுங்கியது. அங்கு ஒருமலர்ந்த தாமரை மலரில் சென்று

வீழ்ந்தது. உடன் அதிலிருந்து திருமுருகனுகத் தோற்றமளித்தது. ஜோதிப் பிழம்பாய் இருந்த அருஉரு நிலையைக் கடந்த அப்பரம்பொருள் கருணையினுல் ஆறுமுகத்துடன் பன்னிரு கரங்களுடன் அழகான திருமேனியை அமைத்துக் கொண்டு காட்சியளித்தான்.

சிவபெருமானுடைய திருக்கண்களிலிருந்து ஒளி புறப்பட்டவுடன் அருகிருந்த உமாதேவி வெப்பம் தாங்காமல் பரபரப்புடன் கீழே இறங்கி விட்டாள். அந்தநேரம் உமையம்மையின் கால்களில் இருந்த பொற்சிலம்பு சிதறிக் கீழே விழுந்து விட்டது. சிலம்பிற்குள்ளிருந்த நவரத்தினங்கள் கீழே விழுந்தன. அந்த ஒன்பது ரத்தினங்களும் ஒன்பது கன்னிப் பெண்களாக மாறிவிட்டன. அந்தப் பெண்களை சிவபெருமான் தமது திருக்கண்களால் நோக்கினுர். பெருமானுடைய பார்வை விழுந்த உடன் அந்தப் பெண்களின் உடம்பிலிருந்து வியர்வை அரும்பின. அவர்களுடைய மயிர் கால்களிலிருந்தும் லட்சம் வீரர்கள் உதித்தனர். மேலும் அவர்களது தொப்புள்களிலிருந்து ஒன்பது சேனைத் தலைவர்கள் உதித்தார்கள். வீரபாகு தேவரை முதன்மையாகக் கொண்ட இந்த லட்சத்து ஒன்பது வீரர்களும் முருகனுக்கு துணைவர்களாக அமைந்தார்கள்.

முருகப் பெருமானுக்கு பாலூட்டும்படி கிருத்திகை இனமான ஆறு பெண்களை அனுப்பினுர். ஆறு பெண்களும் பாலூட்ட வந்த பொழுது ஆறு பேருமே வளம் மகிழவேண்டும் என்று கருதி முருகப் பெருமான் ஒருவராக இருந்தவன் ஆறு உருக்கொண்டான். இதன் பிறகு சிவபெருமானும், பார்வதி தேவியும் சரவணம் தேடி வந்தார்கள். பார்வதி இந்த ஆறு குழந்தைகளையும் ஒன்ருகச் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

அப்பொழுது ஒரே திருமேனியாகி பன்னிரு கரங்களுடனும், ஆறு முகத்துடனும் காட்சியளித்தார். முருகனுடைய பெருமைகளை சிவபெருமான் தன்னுடைய திருவாயால் உமாதேவிக்கு எடுத்துக்கூறினார்.

முருகப்பெருமான் பல திருவிளையாடல்கள் புரிந்தான். வேதங்கள் அனைத்துமே நாம்தான் என்றும், வேதத்தினுல் கூறப்படும் சரியை, கிரியை யோகம், ஞானம் இந்த நான்கினுடைய முடிவும் நானே என்றும், நாரத முனிவர் செய்த வேள்வியில் உதித்த ஆட்டுக்கிடாவை இடது காலால் உதைத்து அதைத் தனது ஓர் ஊர் தி யா க வு ம் செய்து கொண்டார்.

ஓம் என்ற சொல்லுக்கு பொருள் தெரியாத பிரம்மாவை சிறையில் அடைத்தார். இதையறிந்த சிவபெருமான் நந்தி தேவரிடம் விடுதலை செய்யும்படி சொல்லியனுப்பினுர். பிறகு சிவபெருமானே எழுந்தருளி பிரணவத்தின் உட்பொருளை தமக்கு உரைக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அகத்தியருக்கு உபதேசிக்கும்படி சிவபெருமான் சொல்ல அகத்தியருக்கு உபதேசம் செய்தார்.

காசிப முனிவரின் மனைவியான மாயை என்பவளிடத்தில் மூன்று ஆண் பிள்ளைகளும், ஒருமகளும் பிறந்தார்கள். காசிப முனிவர் முறையே மக்களுக்கு சூரபத்மா, சிங்கமுகன், தாரகன் என்றும், மகளுக்கு அயமுகி என்றும் பெயர் சூட்டினுர். தம் பிள்ளைகளுக்கு வேதம் முதலான நூல்களைக் கற்பித்தார். ஆனுல் தாயான மாயை என் மக்களான நீங்கள் உலகை அடக்கி ஆள வேண்டும் என்று அதற்கான வழிகளை உபதேசித்தாள். அவ்வாறே ஆரன் முதலியவர்கள் கடுந்தவம் இயற்றினர். இவர்கள் பக்தியின் வலிமையைக் கண்ட சிவபெருமான் முதியவராக

அவர்கள் முன் தோன்றினார். தன் வடிவத்தைக் காட்டி உங்கள் வேண்டுகோள் என்ன? அதனை முடிப்போம் என்றார். அப்போது சூரன் எண்ணற்ற வரங்களை வேண்டினான். உங்கள் திருவருள் தவிர வேறு ஒன்றும் என்னை வெல்லக்கூடாது என்றெல்லாம் வேண்டினான். வரங்கள் பெற்ற சூரபன்மா மூன்று உலகத்தையும் அடக்கி இந்திரனின் பதவியையும் பறித்து தானே அரசனானான். அசுரபுரி என்ற பட்டணத்தை அமைத்துக் கொண்டு எல்லா அண்டங்களையும் அடக்கி ஆட்சிசெய்தான். அவனுக்கு பதுமகோமளை என்ற மனைவி அமைந்தாள். பானுகோபன், அங்கிமுகன் இரணியன், வச்சிரவாகு முதலான நான்கு புதல்வர்கள் தோன்றினார்.

ஒருநாள் அயமுகி அண்ணனுடையஅவைக்கு வந்தாள். அண்ணா, இந்த மூவுலகத்திலுள்ள பெண்களுக்குள் இந்திரன் மனைவியான சகிதேவீதான் மிக அழகி, அவளை நீ மனைவியாக்கிக் கொள்ள வேண்டும். இது எனது விருப்பம் என்றாள். தந்தையே நான் ஒருவனே சென்று இந்திராணியைத் தங்களிடம் கொண்டு சேர்ப்பேன் என்று சூரனின் மூத்த மகன் புறப்பட்டான். இதைக் கேள்விப்பட்ட தேவேந்திரன் இந்திராணியை அழைத்துக்கொண்டு வேறு உருவம் எடுத்து பூமிக்கு வந்துவிட்டான் சீர்காழியில் இருபேர்களும் மூங்கில் வடிவமாக பகல் எல்லாம் ஒளிந்திருந்து இரவில்சிவபெருமானைப் பூஜை செய்தார்கள்.

பானுகோபன் இந்திராணியைக் கொண்டு வருவதற்காக அமராவதி வந்து அடைந்தான். இந்திராணி அங்கு இல்லை. இந்திரன் மகன் செய்ந்தனையும் மற்றும் பல தேவர்களையும் பிடித்து சிறைப்படுத்தினான். அவன் பிடியில் அகப்படாத தேவர்கள் தேவகுருவான பிருகஸ்பதியின் தலைமை

யில் இந்திரனிடம் வந்தனர். முருகப்பெருமானை அனுப்பும்படி சிவபெருமானிடத்தில் முறையிடவேண்டும். அதற்கு நீ தலைமை தாங்கி வரவேண்டும் என்று விண்ணப்பித்தர். தேவேந்திரனும் தன் மனைவியை ஜயிஞனிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களுடன் புறப்பட்டான்.

காலையில் எழுந்த எளிய எல்லா தேவர்களும் சிவபெருமான் திருவடியில் வீழ்ந்துவிண்ணப்பித்துக் கொண்டனர். சிவபெருமான்முருகனை அனைத்து வேலையும் கொடுத்து விடை கொடுத்து அனுப்பினார். உமாதேவி முருகனைத் தழுவி அணைத்து ஆசி கூறி விட்டு வீரவாகுத் தேவருக்கு தமது அருட் சக்தியால் ஒரு வாளினை அளித்தார். முருகப்பெருமான்படைகளுடன் புறப்பட்டு முதன்முதலாக இமய மலையிலுள்ள திருக்கேதாரேச்சுரம் வந்து சிவப்பெருமானை வழிபட்டார். பிறகு தாரகப்பதியான காசி வந்தார். இடையில் சூரனின் நம்பி - தாரகாசுரன் ஒரு மாய மலையை குறுக்கிடச் செய்தான். அது செயற்கை மலையாகும். அதன் பெயர் கிரௌஞ்சம் எனப்படும். விஷச் செடி கொடிகளின் தன்மையால் மயங்கி விழுந்துவிடுவார்கள். நாரத முனிவர் முன்னெச்சரிக்கையாக முருகனுக்கு இம்மலையைப் பற்றிக்குறிப்பிட்டார். அந்த மலையை அழித்துவிட வேண்டும் என்றும் நாரதர் கூறினார். முருகப்பெருமான் தனது வேலால் அம்மலையை துகள் படுத்தி விட்டார். பிறகு தாரகா சுரனும் முருகப்பெருமானுடன் போர் தொடுத்தான். முடிவாக முருகப்பெருமானுடைய வேலால் துணிக்கப்பட்டு பரம பதம் பெற்றான்.

தாரகாசுரனை வென்று காசி திருப்பர்வதம், திருக்காளத்தி எல்லாம் சென்று காஞ்சியில் வந்து கொலு இருந்தார். முருகன் தங்கின சிறப்பினால் கந்தகோட்டம் என்று பெயர் வழங்குகிறது. அங்

கிருந்து திருச்செந்தூர் வந்தார். அங்கு வைத்து பிருகஸ்பதி அசுரனுடைய வரலாற்றினையும், கொடுமைகளையும் எடுத்துக் கூறினார். அதனைக் கேட்ட முருகப்பெருமான் வீரபாகு தேவரை சூரபன்மனிடம் தூது அனுப்பினார். வீரபாகு நேராக அசுரபுரிக்கு வந்தார். முதன் முதலாக சிறைப்பட்டுள்ள செயந்தன் முதலானவர்களைச் சந்தித்தார். வெகு சீக்கிரத்தில் விடுதலை கிடைத்து உலக நன்மை ஏற்படும் என்று உறுதிகூறினார். பிறகு சூரபத்மனுடைய சபைக்கு எழுந்தருளினார். அழையாமலேயே தன்முன் வந்த வீரபாகு தேவரை நீ யார்? என்று வினவ, உடன்பதில் கூறினார். "கந்தவேலின் அருள் கட்டளையினால் நான் இங்கு வந்துள்ளேன், நீர் அமரர்களை விடுவிக்க வேண்டும். நீதியான முறையில் உன் ஆளுகையை நடத்தவேண்டும். இல்லையேல் வேலவனால் தாக்குண்டு அழிவாய்" என்றார். சிங்கமுகனும் அண்ணனுக்கு அறிவுரை கூறினார். தம்பியின் உரைகளைக் கேட்கவில்லை. வீரபாகு தேவரைக் கடிந்து கொண்டு முருகனையும் இகழ்ந்து பேசினான். நான் உங்களை அழித்துக்கட்டுவேன் என்று சினந்து கூறி போருக்கு ஆயத்தமானான். முருகனும் போரிடப் புறப்பட்டான். தம்பி சிங்கமுகனும் முருகப்பெருமானுடன் எதிர்த்துப் போராடினான். முடிவில் சிங்கமுகன் இறந்தான். வேற்படையின் வலிமையினால் சூரன் படை முழுவதும் அழிந்தது. சூரன் தனியாக ஆகிவிட்டான். தன்னுருவை மாற்றிக் கொண்டு பறவை வடிவத்தில் போர் செய்தான். அதுவும் முருகனால் அழிக்கப்பட்டது. மீண்டும் மாயமான ஒரு மாமரமாகத் தோன்றினான். அதனையும் வேலன் துணித்து விட்டான். கடைசியாக முருகன் ஞான சக்தி ஆயுதமான வேலினால் சூரனுடைய உடலை இரு கூறுபடுத்திவிட்டார். அவைகள் இரண்டும்

சேவலும், மயிலும் ஆக மாறிற்று. திருமால் வாமனனாக திரு அவதாரம் செய்தபொழுது தனித்திருந்து தவம் செய்தார். அவர் கண்களில் இருந்து அமிர்தவல்லி, சுந்தரவல்லி என்ற இரு கன்னியர் உதித்தனர். அந்த இரு பெண்களையும் சிவபெருமானிடம் ஒப்படைத்து விட்டார். இரு கன்னிகளும் முருகப்பெருமானை கணவனாக அடையவேண்டும் என்று சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமானும் இசைந்து அமிர்தவல்லியை தேவேந்திரன் கையில் கிடைக்கும் படியாகவும், சுந்தர வல்லியை வேடர்குலத் தலைவனான நம்பியரசன் கையில் கிடைக்கவும் செய்தார். இந்திரன் தன் புதல்வியான தெய்வயானையை திருமணம் செய்யும் படி முருகப்பெருமானை வேண்டினார். திருமணம் சிவ பார்வதி முன்பு மிக சிறப்பாக நடைபெற்றது.

நம்பியரசன் பெண்குழந்தையில்லாமல் வருந்தினான். வள்ளிக்கொடியின் கீழ் குழந்தையைக் கண்டு மகிழ்வுடன் வளர்த்து வந்தான். நம்பியரசன் பல மலைகளுக்குச் சொந்தக்காரன். மலைகளில் தினை முதலிய தானியங்கள் விளைந்து இருந்தன. வள்ளியை தினைப்புனத்தைக் காவல் புரியுமாறு பணித்தார். வேடுவர் வடிவத்துடன் வந்து உன் ஊர், பெயர் எல்லாவற்றையும் சொல் என்றார். அதற்கு இசையாமல் வள்ளி சினத்து நிற்கவும் நம்பியரசன் அங்கு எழுந்தருளினான். உடனே முருகன் வேங்கை மரமாக மாறினான். நம்பியரசன் சென்ற பிறகு மானிட வடிவில் வந்தான். என்னை திருமணம் செய்துகொள் என்று மன்றாடினார். மறுநாள் முதியவராக எழுந்தருளினார். அப்போதும் தன் விருப்பத்தை வெளியிட்டார். அதற்கும் வள்ளி சம்மதிக்கவில்லை. தனது அண்ணனான விநாயகப் பெருமானை நினைத்தார். விநாயகர் யானையாக எழுந்தருளினார்.

வள்ளி யானையைக் கண்டு அஞ்சியவளாய் ஓடிச் சென்று முருகப்பெருமானைத் தழுவிக்கொண்டாள். முருகப்பெருமானும் ஆறுமுகத்துடனும், பன்னிரு கரங்களுடனும் காட்சியளித்தார். முன்னைத் தவமுடைய நம்பியரசனும், முருகப்பெருமானின் முழு வதனத்தை காணப்பெற்றார். வள்ளியை முருகப் பெருமானுக்கு முறையாகத் திருமணம் செய்து கொடுத்தார். வள்ளியை அழைத்துக் கொண்டு அனந்தகிரிக்கு எழுந்தருளினார். வேலையும், மயிலையும் நினைத்து முருகன் திரு அருளைப் பெறுவோமாக.



சிவபக்தர்கள்

1. திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்த சுவாமிகள் சோழ நாட்டினில் சீகாழிப் பதியில் அந்தணர் மரபில் திருவவதாரம் செய்தருளினார். தந்தையார் சிவபாதவிருதயர். தாயார் பகவதி அம்மையார். குழந்தை செல்வமாக வளர்ந்து மூன்றாம் ஆண்டு எய்தியது. அப்பொழுது ஒருநாள் தந்தையார் நீராடும் பொருட்டுத் திருக்குளத்திற்குச் செல்லுங்கால் குழந்தையும் உடன் வருவதாகப் பிடிவாதமாய் அழுதது. தந்தையார் குழந்தையை அழைத்துச்சென்று குளக்கரையில் இருத்திக் குளத்தில் இறங்கி நீராடினார். அப்போது தம தந்தையாரைக் காணாத குழந்தை நாற்றிசையும் நோக்கி அழுது. கடைசியாகத் தோணியப்பர் திருக்கோயிலின் சிகரம் நோக்கி, அம்மே, அப்பா என அழைத்து அழத்தொடங்கியது உடனே தோணியப்பர் அம்மையாரோடு இடபவாகனத்தில் எழுந்தருளிக் குழந்தையின் முன் தோன்றித் திருமுலைப் பாலுடன் சிவஞான இன்னமுதையும் குழைத்துப் பொற்கிண்ணத்தில் ஊட்டிடுக என அம்மையாரைப் பணிக்க. அம்மையாரும் அவ்வாறே அருளினார்.

சிவபாதவிருதயர் நீராடி நியமங்களை முடித்துக் கரையேறியதும் பாலாடும் வாயினனாய் நின்ற பாலனைக் கண்டு; உனக்கு பாலூட்டியவர் யார்? எனச் சினந்து ஒரு சிறு கோல் கொண்டு அதட்டிக் கேட்டார். அவ்வளவில் குழந்தை தமக்குப் பால் கொடுத்தவர் அம்மையப்பரே என்பதைச் சுட்டிக்காட்டித் தாம் கண்ட திருக்கோலத்தை அறிவுறுத்தித் 'தோடுடைய செவியன்' என்ற திருப்பதிகத்தைப் பாடியருள தந்தையார் அள

வற்ற ஆனந்தமுற்றார். அது கேட்ட யாவரும் அற்புதம்! அற்புதம்! என்று குழந்தையைச் சூழ அவர் கோயிலை அடைந்து இறைவனை வணங்கினார். அம்மையப்பரால் ஆட்கொள்ளப்பட்டமையின் ஆளுடைய பிள்ளையார் எனவும், சிவஞான சம்பந்தர் பெற்றமையின் திருஞானசம்பந்தர் எனவும் பெயர் பெற்றார்.

ஆளுடைய பிள்ளையார் மற்றொரு நாள் திருக்கோலக்கா என்னும் திருப்பதியை அடைந்து வலம் வந்து கையினால் தாளமிட்டு 'மடையில் வாளை' என்ற பதிகம் பாடினார். சிவபெருமான் திருவருளால் பஞ்சாட்சரம் வரையப்பெற்ற பொற்றாளம் திருக்கரத்தில் வந்தது. சிதம்பரத்தையடுத்த திருஎருக்கத்தம்புலியூரில் வாழ்ந்து வந்த திருநீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவி மதங்க சூளாமணியும் சீர்காழிப் பதி வந்து திருஞானசம்பந்தரை வணங்கிடப் பாட, அவர் மகிழ்ந்து, தாம்பாடும் பதிகங்களை யாழில் அமைத்துப் பாடுமாறு பாணர்க்கருள் செய்தார். திருநெல்லாயிரத்துறைக்குச் செல்ல விரும்பித் தந்தையார் தோளினின்றும் இறங்கித் திருவடி நோவ நடந்து மாறன் பாடிக்கு வரவும், கதிரவன் மறையவே அங்கு தங்கினார். மறுநாள் சிவபெருமான் கட்டளையின் படி அரத்துறைவாசிகள் திருக்கோயிலில் விளங்கிய முத்துச்சிவிகை, குடை, சின்னம் முதலியவற்றை எடுத்துச்சென்று திருஞானசம்பந்தரை வணங்கி அவர்பால் சேர்ப்பித்தார்கள். பிள்ளையாரும் அவற்றை அன்புடன் ஏற்று 'எந்தை ஈசன்' என்ற பதிகம் பாடி ஐந்தெழுத்தோதிச் சிவிகையில் ஏறியருளினார்.

பிள்ளையார் உபநயனப் பருவத்தையடைந்தார். வேதவிதிப்படி உபநயனச் சடங்கு நடைபெற்றது. அதுபோது பிள்ளையார் அங்கு வந்

திருந்த வேதியர்களுக்குள்ள ஐயங்களையெல்லாம் போக்கி சகல மந்திரங்களுக்கும் பஞ்சாட்சரமே வித்து என்பதை விளக்கினார். தம்மை காண வேண்டுமென்று வந்த திருநாவுக்கரசருடன் அன்புடன் அளவளாவினார். திருப்பாச்சிலாச்கிராமத்தை அடைந்த போது அங்கு ஆலயத்துள் முயலகன் நோயினால் துயருற்றுக்கிடந்த, கொல்லி மழவன் என்ற அரசனது மகளின் துன்பத்தை கண்டிரங்கி பதிகம் பாடி நோயை நீக்கினார். கொடிமாடச் செங்குன்றூரை அடைந்த போது அங்கு பனியின் கொடுமையால், தம் அடியவர் குழாங்களும், மக்களும் குளிர் சுரத்தால் வருந்துவதைக் கண்டு பதிகம் பாடி அந்நோயினை நீக்கினார். பிறகு பல தலங்களை தரிசித்துவிட்டுத் திருப்பட்டீச்சரத்தை அடைந்தார்; அங்கு சிவபெருமான் அளித்த முத்துப்பந்தரைப் பெற்று பதிகம் பாடினார்.

சிவபாதஹிருதயர் யாகஞ் செய்யப் பொன் வேண்டவும், ஞானசம்பந்தர் பதிகம் ஓதிச் சிவனருளால் ஆயிரம் பொன் பொருந்திய முடிச்சு ஒன்றைப் பலி பீடத்தில் பெற்றுத் தந்தையார்க்கு அளித்து வேள்வியைச் செய்ய விடைகொடுத்து அனுப்பினார். சில நாட்களுக்குப் பிறகு ஞானசம்பந்தர் தலங்கள் பலவற்றையும் வணங்கினவராய் திருத்தருமபுரத்தை அடைந்தார். அங்குப் பாணர் விருப்பின்படி 'மாதர் மடப் பிடியும்' என்ற பதிகம் பாட, அவர் அப்பதிகத்தை யாழிலிட்டு வாசிக்க முடியாமல் யாழை உடைக்க ஓங்கினார். உடனே பிள்ளையார் தடுத்து இயன்றவரை வாசிக்கச் செய்தார். திருசாத்தமங்கையில் திருநீலநக்கராலும், திருச்செங்காட்டங்குடியில்சிறுத்தொண்டராலும் உபசரிக்கப்பெற்றுத் திருமருகலை அடைந்தார். அங்கு ஒரு கன்னியுடன் வழிப்பயணமாக வந்த வணிகன் மகன் ஒருவன் அரவு தீண்டி ஆவி துறந்ததைக்

கண்டு இரக்கமுற்று அவ்வணிகனை உயிர்பித்து இருவருக்கும் திருமணம் முடித்து அனுப்பினர். பின்னர் முருகநாயினரால் உபசரிக்கப்பட்டுத் திருநாவுக்கரசரைக் கண்டு வணங்கித் திருவாரூர்த் திருவாதிரைச் சிறப்பினை அவர் வாயிலாக கேட்டு மகிழ்ந்தார்.

திருவீழிமி மலையில் மழை வளங்குன்றிப் பஞ்சமேற்பட அடியார்கள் யாவரும் பசிப்பிணியால் வருந்தினர். வாகீசரும் ஞானசம்பந்தரும் சிவபெருமானைத்தொழுது படிக்காசு பெற்று அடியார்க்கு அமுது செய்வித்தனர். அப்பர் சுவாமிகளுடன் திருமறைக்காடு சென்று வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த திருக்கதவங்களைத் திருநாவுக்கரசு சுவாமிகளைக் கொண்டு திறப்பித்தும், 'தாம் சதுரம் மறை' என்ற பதிகம் பாடி மூடவும் செய்தார். பாண்டி நாட்டு மன்னனுகிய கூன் பாண்டியன் சமண மதத்தைக் கைக்கொண்டிருந்தமையால் அந்நாட்டவரும் சைவ சமயத்தைக் கைநழுவ விட்டனர். அதனைக் கண்டு வருந்திய பாண்டி மாதேவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் சைவ ஒளியைப் பரவச் செய்து எம்மையாட்கொள்ள வேண்டுமென்று சில அடியார்களை அனுப்பினர்கள். சம்பந்தர் அங்கு போதல் ஒண்ணுது என அப்பர் சுவாமிகள் தடுத்தார். சமணர் வஞ்சனை என்னை எதுவும் செய்யாது எனக் கூறி அப்பரிடம் விடைபெற்று பாண்டி நாடடைந்தார். மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் எதிர்சென்று வரவேற்றுப் பணிந்து ஆசி பெற்றனர். அன்றிரவு சமணர்கள் ஒருங்கு கூடி அரசனேடு ஆலோசித்து சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தில் வஞ்சனையால் தீ இட்டனர். இதனை அறிந்த சுவாமிகள் பதிகம் பாட

மடத்தில் பற்றிய தீ தணிந்து வெப்பு நோயாக மாறிப் பாண்டியனைப் போய் பற்றி வருத்தத் தொடங்கியது.

வெப்பு நோயினுல் பீடிக்கப்பட்ட பாண்டியன், சமணர்கள் செய்த மந்திர மருந்துகளினால் நோய் தீரப்பெறாது மிகுதலையுணர்ந்து, அரசியாரும் மந்திரியாரும் வேண்டிக்கொண்டதற்கு இணங்கி, யான் உற்ற நோயை நீக்கி வென்றவர் பக்கம் சார்வன் எனப் பகன்று சம்பந்தரை அழைத்து வரும்படிக் கட்டளையிட்டான். உடனே மந்திரியார் திருமடம் சென்று பிள்ளையாரை அழைத்து வர, அரசனும் அவரைக் கைகூப்பி வணங்கித் தன் தலைப்பக்கம் ஒரு பீடத்தமர்த்தினான். அரசன் சுவாமிகளைத் 'தாங்கள் எவ்வூர்' என வினவ, ஞானசம்பந்தர் 'பிரமனூர் வேணுபுரம்' என்ற பதிகம் ஓதிச் சீர்காழியின் பன்னிரு பெயர்களையும் தெரிவித்தார். பின்னர் அரசன் 'யான் உற்ற வெப்பு நோயைத் தீர்த்தார் உலகில் வென்றவர் ஆவர்' என்று செப்பச் சமணர்கள் பீலியினால் தடவலும் அந்நோய் மிக அதிகரித்தது. மன்னர் நோய் பொறுக்காமல் புகழ்வேந்தரை வேண்ட அவர் ஆலவாய் அண்ணலை நினைந்து "மந்திர மாவது நீறு" என்ற பதிகம் பாடித் திருநீறு சாத்தவும் வெப்பு நோய் தீர்ந்து ஒழிந்தது. அரசனும் ஆளுடைய பிள்ளையின் அடிமிசை வீழ்ந்து, 'உய்ந்தேன்! உய்ந்தேன்! என்று உவகை பூத்தனன். பிறகு சமணர்கள் சுவாமிகளை கனல் வாதத்திற்கு அழைத்தனர். சுவாமிகளும் திருநள்ளாற்றுப் பதிக ஏட்டை எடுத்துப் பதிகம் பாடி தீயில் இட்டார். சமணர்கள் ஏடு கரிந்தது. சுவாமிகளின் ஏடோ பச்சையாய் விளங்கிற்று. சமணர்கள் புனல் வாதத்திற்கு அழைத்து 'அத்திநாத்தி' என்றெழுதிய ஏட்டை வைகையில் விட்டனர். சுவாமி

களும் 'வாழ்க அந்தணர்' என்ற பதிகம் எழுதப் பெற்ற ஏட்டை விட்டார். சமணர்கள் விட்ட ஏடு கடல் நோக்கிச் சென்றது. சுவாமிகளுடைய ஏடு எதிர்த்துச் சென்றது. குலச்சிறை நாயனார் அதனை எடுக்க குதிரை மேல் விரைந்து சென்றார். பிள்ளையார் அவ்வேடு நிற்கும் பொருட்டு பதிகம் பாட ஏடு நின்றது. அவ்வேடு நின்ற இடமே திருவேடகம் ஆயிற்று. அவ்வேட்டில் வேந்தனும் ஓங்குக என்று அருளின்மையால் அரசனது கூனும் ஒழிந்தது. தம் முடிவிற்கேற்ப எண்ணாயிரம் சமணரும் கழுவிலேறினர். சம்பந்தர் பாண்டிய நாட்டுப் பதிகள் பலவற்றையும் தரிசித்து வணங்கி வழிபட்டு பௌத்தர்கள் இருக்கும் போதிமங்கை என்னும் ஊரை அடைந்தார்.

புத்த நந்தி, ஞானசம்பந்தர் வரும் ஆரவாரங் களைக் கண்டும், கேட்டும் பொறுது தடுத்து 'எம்மை வென்றன்றோ வெற்றிச் சின்னம் ஊத வேண்டும்' என்றனர். 'சீறிப்புத்தர் சமண கழுக் கையர்' என்ற திருப்பாட்டை சம்பந்தர் எடுத்து ஓதி இவன் தலையில் இடி விழுக என்று கூற, இடிவிழுந்து புத்த நந்தி இறந்தனன். பின்னர் அப்பரைக் காணும் பொருட்டுத் திருப்பூந்துருத்தியை அடைந்தார். அப்போது அப்பர் சுவாமிகள் ஒரு வரும் காணாதபடி பிள்ளையாரின் முத்துச் சிவி கையைத்தாங்கி வந்தார். சுவாமிகள், 'அப்பர் எங்கே? எனவினவ அப்பர் சுவாமிகளும், தங்கள் முத்துச்சிவிகையைத் தாங்கும் பேறு பெற்று இங்குள்ளேன்' என்றார். உடனே இருவரும் வணங்கி அளவளாவினர்.

சுவாமிகள் திருவோத்தூரை அடைந்த போது ஒரு சிவனடியாரது வேண்டுகோளுக்கு இணங்கி ஆண் பனைகளைப் பதிகம்பாடி பெண் பனைகளாக்கினர். சிவநேசர் என்ற அடியார்

அரவு கடித்து மகள் இறந்த நிகழ்ச்சியைக் கூறி திருமயிலாப்பூருக்கு வரும்படி வேண்டிக்கொண் டார். சுவாமிகளும் திருமயிலாப்பூருக்கு எழுந்த ருளிக் கபாலீசுவரர் திரு முன் நின்று சிவநேசர் சேமித்து வைத்திருந்த எலும்புக் குடத்தைக் கொண்டுவரச் செய்து பதிகம் பாடவும் அப்பாவை வெளித் தோன்றினள். மகள் பூம்பாவையை மணந்து கொள்ளும்படி சிவ நேசர வேண்டிட சுவாமிகள் தக்க காரணங்கூறி மறுத்தார்.

சீர்காழியை அடைந்த சுவாமிகளைத் திரு மணஞ்செய்து கொள்ளுமாறு பெற்றோரும் சுற்றத்தாரும் வேண்டினர். பிள்ளையார் முதலில் மறுக்க அவர்கள் மீண்டும் வற்புறுத்தி வேண்ட வும் ஒருவாறு இசைந்தார். திருநல்லூர்ப் பெரு மணத்தில் வாழும் நம்பாண்டார் நம்பிகளின் திரு மகளை மணம் பேசிமுடித்தார்கள். திருமண நிகழ்ச்சிகள் அவ்வூரிலேயே நடக்க ஏற்பாடுக ளாயின. திருஞானசம்பந்தர் சுற்றத்தாரும், மற்ற வரும் புடைசூழத் திருக்கோயிலை அடைந்து 'கல்லூர்ப் பெருமணம்' என்ற பதிகத்தை ஓதினர். சிவபெருமான் "காதலியும் நீவிரும் திருமணங் காண வந்தாரனைவரும் நம்பாற் ஜோதியிற் கலமின்" என்று அருள்புரிய உடனே ஜோதி தோன்றிற்று. சுவாமிகள் 'காதலாகி கசிந்து' என்ற பஞ்சாட்சரப் பதிகத்தை ஓதி அனைவரையும் ஜோதியுற் புகுமாறு பணித்து, எல்லோரும் ஜோதி யுற் புகுந்த பின்னர் காதலியைக் கைப்பற்றி வலம்வந்து வணங்கி வைகாசி மூல நன்னனில் அந்தமில் இன்பத்து அழிவில் வீடாகிய சிவ ஜோதியில் கலந்தருளினர்.

2. திருநாவுக்கரசர் (அப்பர்)

திருநாவுக்கரசர், தமிழ் நாட்டில், திருமுனைப் பாடி நாட்டில், திருவாமூரில் சைவ வேளாளர்

மரபில் திருவவதாரம் செய்தார். அவர் தந்தை புகழனூர். தாய் மாதினியார். தமக்கை திலகவதியார். மருள்நீக்கியார் என்ற பிள்ளைத் திருநாமத்தோடு அவர் வளர்ந்து வரலானூர்.

திலகவதியாருக்கு உரிய காலத்தில் மணமுடிக்கப் பெற்றோர் கருதினர். சிவபக்தியிற் சிறந்த கலிப்பகையார் என்பவரை மணவாளனுக குறித்துப்பேசி முடித்தனர். இடையில் போர் நேரவே, சேனுதிபதியான கலிப்பகையார், போர்க் களம் சென்று போரிட்டு மரணமடைந்தார். இந் நேரத்தில் புகழனூரும் மாதினியாரும் காலமாயினர். திருமணம் நடைபெருவிடினும், மனதால் கலிப் பகையாரைக் கணவனுக வரித்து விட்டபடியால் திலகவதியார் தவ வாழ்க்கையை மேற்கொண்டார்.

தமக்கையாரின் ஆதரவில் வளர்ந்தார் மருள் நீக்கியார். சிறப்பாக வளர்ந்த அவர் உலகநிலை-யாமையை உணர்ந்து மெய்யறிவு பெற்றுத்துறவு நெறியை மேற்கொண்டார். பிற சமய நுண் பொருட்களை அறியும் பொருட்டு, பாடலிபுத்திரம் சென்று சமண நூல்களைக் கற்ருர். அக்கருத்துக் களால் மனங்கவரப்பெற்று, சமணராகி தருமசேனர் எனும் பெயருடன் சமண நூல் வல்லுனராய்த் திகழ்ந்தார்.

தம்பியின் மனமாற்றத்தைக் கண்ட திலகவதியார் வருந்தினூர். அவரை நன்னெறிக்குத் திருப்ப வேண்டுமென்று சிவபெருமானிடம் மனங் குழைந்து வேண்டினூர். அவனருளால் தடுப்பதற் கரிய சூலை நோய் தருமசேனரைப் பற்றியது. சமணர்களின் பலவகை முயற்சியாலும் அது குண மாகவில்லை. இறுதியில் அவர் தனது தமக்கை யாரை அணுகி வேண்டினூர்.

தம்பியின் நிலைகண்டு வருந்திய திலகவதியார் ஐந்தெழுத்தோதி திருநீறளித்து, திருவதிகை வீரட்டானேஸ்வரரை வணங்கச்செய்தார். உடனே அவர் நோய் நீங்கி பாடும் திறன் பெற்றார். "கூற்றாயினவாறு" எனத் தொடங்கும் பதிகம் பாடினார். 'செந்தமிழில் நாவின் திறங்காட்டிப் பாடியதால் நாவுக்கரசு எனப்பெயர்பெறுவாய்' என்ற சொற்கள் வானில் எழுந்தன. மனங்களித்த திருநாவுக்கரசர் மனங்களித்து சிவநேசச் செல்வராகி, கண்டிகை பூண்டு, இறைவனுக்குத் தொண்டு புரியும் கருத்தினராய் உழவாரப் படை தாங்கி உலவினர்.

சமணத்தை கைவிட்டுச் சைவத்தைச் சார்ந்ததால் மன்னரும், சமண முனிவரும் வெகுண்டனர். நாவுக்கரசரை வரவழைத்து நீற்றறையில் இட்டனர். நஞ்சை அருந்த செய்தனர். யானைக் காலில் இடறச்செய்தனர். இறுதியாகக் கல்லுடன் கட்டிக் கடலில் இட்டனர். சிவன் சேவடி மறவாத, திருநாவுக்கரசு ஒன்றாலும் துன்புறாதிருந்ததைக் கண்ட மன்னன், சைவசமயமே மெய்யென உணர்ந்து சைவனாகி, திருவதிகையில் குணதர வீச்சரம் எனும் கோயிலையும் கட்டுவித்தான்.

பின்னர் பல இடங்களையும் காணவிரும்பிய திருநாவுக்கரசர் நடுநாட்டில் பல இடங்களையும் கண்டார். திருப்பெண்ணாகடம் அடைந்து, இறைவன் ஆணைப்படி பூதம் ஒன்றினால் இடபக்குறியும், சூலமுத்திரையும் தம் தோளில் பொறிக்கப் பெற்றார். பின்னர் சிதம்பரம், சீர்காழியில் முதலிய இடங்களுக்குச் சென்றார். சீர்காழியில் திருஞான சம்பந்தரைக்கண்டு அவரால், 'அப்பரே' என்றா அழைக்கப் பெற்றார். திருநல்லூரில் வைத்து சிவ பெருமானின் திருபாதங்கள் தன் தலைமேல் பொறிக்கப் பெற்றார். திங்களூரில் அப்பூதியடி

களில் மகன் பாம்பு கடித்து இறக்க, அவனை, "ஒன்று கொலாம்" எனும் பதிகம் பாடி உயிர்ப்பித்தார். திருவீழிமிழலையை அடைந்து ஆண்டவனிடம் பொற்காசு பெற்று, அடியார்களின் பசிப்பிணி போக்கினார்.

திருமறைக்காடு சென்று வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த கதவை தனது பாட்டினால் திறக்கச் செய்தார். இறைவன் அவரைத் திருவாய்மூருக்கு வரப்பணித்தான். அப்பர் திருவாய்மூர் சென்று இறைவனது காட்சி பெற்றார். பின்னர் பழையாறை வடதளி என்னும் ஊரை அடைந்து, அங்கு சமணர் சூழ்ச்சியால் மறைப்பூண்டிருந்த சிவலிங்கத்தை வெளிப்படுத்தினார். திருப்பைஞ்ஞீலி என்னும் ஊருக்குச் செல்லும் வழியில் பசியாலும், தாகத்தாலும் வருந்தினார். அப்போது இறைவன் பொதிச்சோறும், நீரும் கொடுத்து இளைப்பைப் போக்கியருளினார். வடகயிலையைத் தரிசிக்க வேண்டிக் காசி வரையில் அடியார்களுடன் சென்றார். பின்னர் தனித்துச் செல்லலானார்.

தனது உடல் தளர்ந்த நிலையிலும் அவர் உள்ளந்தளராமல் சென்றார். கால்களெல்லாம் தேய்ந்தன. நடக்க முடியாமல் புரண்டு சென்றார். பின்னர் அதுவும் முடியாமல் அசைவற்றுக் கிடந்தார். அப்போது கயிலை நாதன் ஒரு முனிவரின் வடிவில் தோன்றி, "அன்பனே! கயிலை, மனிதர் காணக்கூடியதல்ல; நீ திரும்பிச் செல்" என்றார். அதற்கு அப்பர், கயிலையைக் கண்டாலல்லாமல் திரும்ப மாட்டேன் என்ற உறுதியுடனிருந்தார். இவரது மனவுறுதியைக் கண்ட சிவபெருமான், அவரை அங்கிருந்த ஒரு பொய்கையில் மூழ்கப் பணித்தார். அவ்வாறு மூழ்கியதும், தென்னாட்டிலுள்ள திருவையாற்றின்கண் ஒரு பொய்கையினின்று சிவபெருமானின் அருளால் எழுந்தார். அங்கே கயிலைக் கோலத்தைக் கண்ணாரக் கண்டார்.

பின்னர் திருப்பூந்துருத்தியை அடைந்து, அங்குத் திருமடம் ஒன்றினை அமைத்து உழவாரப் பணிபுரிந்தார். பின்னர் ஞானசம்பந்தரை கண்டார். ஞானசம்பந்தர், பாண்டி நாட்டின் சிறப்பியல்புகளைத் தெரிவிக்கவே, பாண்டி நாட்டினைக் காண ஆவல் கொண்டு, அங்கு பல திருத்தலங்களைக் கண்டு மகிழ்ந்தார். பின்னர் சோழநாடு திரும்பினார். மண், பெண், பொன் முற்றும் துறந்த முனிவரான அவர், தமது எண்பத்தொன்றாம் வயதில் சித்திரை மாதச்சதய நன்னாளில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் (சுந்தரர்)

ஸ்ரீ கைலாயத்தில் சிவபெருமானுடைய பிரதிபிம்பத்திலிருந்து தோன்றி அப்பெருமானுடைய திருத்தொண்டு புரிந்து வரும் ஆலாலசுந்தரர் என்பவர் ஒருநாள் அர்ச்சனைக்காக மலர் கொய்யும் பொருட்டு நந்தவனத்திற்குச் சென்றார். அங்கே உமாதேவியின் திருத்தொண்டில் ஈடுபட்ட அனிந்திதை, கமலினி என்னும் இரண்டு மகளிர், முன்பே மலர் கொய்திருந்தனர். அவர்களைக் கண்டபோது, ஆலாலசுந்தரருக்கும் அவர்களுக்கும் ஒருவருக்கொருவர் ஆசை தோன்றியது. இதனை உணர்ந்த "எம்பெருமான், நீங்கள் மூவரும் பூவுலகில் சென்று மணம் புரிந்து, நம் தொண்டு செய்து வாருங்கள்" என்றனுப்பினார்.

திருவுளப்படியே, ஆலாலசுந்தரர், தமிழ் நாட்டில், திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதி சைவ அந்தணர் மரபில் சடையனாருக்கும், இசை ஞானியாருக்கும், நம்பி ஆரூரர் என்ற திருநாமத்தோடு பிறந்து வளர்ந்து வந்தார். அந்நாட்டை ஆண்ட சிற்றரசனான நரசிங்கமுனையரையர் இக்குழந்தையின் பேரில் அன்புற்று

அதனைத் தம் வளர்ப்புப் பிள்ளையாக ஏற்றுப் போற்றி, அரண்மனையில் வளர்த்து வந்தார். உபநயனம் முதலியவை நிறைவேறிய பின் அவருக்கு சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை மணம் பேசினார்.

மணநாளில் திருமணக்கோலத்தோடு சென்று கொண்டிருந்தபோது, தடுத்தாட்கொள்ளத் திருவுள்ளம் பூண்ட எம்பெருமான், ஒரு கிழவேதியராகத்தோன்றி, மணப்பந்தலின் முன் நின்று, 'இந்த நம்பியாரூரன் என் அடிமை'' என்றார். யாவரும் திகைத்து நிற்க, ''அந்தணர், அந்தணருக்கு அடிமையாவது எங்குமில்லையே! நீர் பித்தரோ!'' என்று நம்பியாரூரர் எள்ளி நகையாடினார். சிவபெருமானோ விட்டபாடில்லை. ஆரூரர், ''நான் அடிமை என்பதைக் காட்ட என் முன்னோர் எழுதித் தந்த ஓலை உண்டா?'' என்றுகேட்க, அவரோ, 'அவ்வோலையை நீ பார்க்கக்கூடாது' என்றார். சினங்கொண்ட ஆரூரர் ஓலையைப் பிடுங்கி கிழித்தெறிந்தார். திருவெண்ணெய் நல்லூரில்தான் அவ்வேதியர் யார் என்பதை உணர்ந்து, அழ்வூர்ச் சபையினரிடம், வழக்குப் பேசலாமென யாவரும் சென்றனர். வேதியர், சபையினரிடம் தம் வழக்கைத் தெரிவித்தார். அவர்கள் நம்பாததைக் கண்ட வேதியர், 'இவன் கிழித்தது படி ஓலை' மூல ஓலை இதோ இருக்கிறது' என்று காட்டினார். இதனை கண்ட சபையினர் நம்பியாரூரர் அம்முதியோருக்கு அடிமையாக ஏவல் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தனர். பின்னர் முதியவரை நோக்கி, ''உமது இருப்பிடம் எது?'' எனவினவினர். அவரோ எல்லோரையும் அழைத்துக் கொண்டு கோவிலினுள் சென்று மறைந்தார். தொடர்ந்து சென்றவர்கள், வேதியரைக் காணமல் திகைத்து நிற்க சிவபெருமான் இடபவாகனத்தின் மேல் எழுந்தருளி

ஆரூரரிடம், "நீ நம்மை வன்மை பேசியதால் வன்றொண்டன் எனப் பெயர் பெறுவாய். நீ நம்மைப் பாடு" என்றார். ஆரூரரோ, "நான் எம்பெருமானைப் பாடுமாறு அறியேன்" என்று கூறினர். சிவ பெருமான் "நீ நம்மைப் பித்தன் என்றதால் அதையே வைத்துப் பாடு" என்றுரைக்க, அவரும் "பித்தா பிறைசூடி" என்ற திருப்பதிகத்தைப் பாடினர். திருமணம் நடைபெறுவிடினும் மணப் பெண் நம்பியாரூரரையே கணவனாக எண்ணி வாழ்ந்து, இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

பின்னர் ஆரூரர் பல திருத்தலங்களைக் காணும் பொருட்டு தீர்த்த யாத்திரை சென்றார். திருவதிகை என்னும் ஊர் வந்தபோது, அது அப்பர் சுவாமிகள் உழவாரத் தொண்டு செய்த ஊரா தலால் கால்களால் மிதிப்பது கூடாது என்று அருகிலுள்ள சித்தவட மடத்தில் தங்கித் துயின்றார். சிவபெருமான், முதுவேதியராய் அங்கே சென்று உறங்குபவர் போன்று நம்பியாரூரர் தலைமேல் கால் நீட்டினர். பன்முறை கூறியும் கேளாத போது அவர் சிவபெருமான் என்பதை அறிந்து ஆரூரர், "தம்மானை அறியாத சாதியார் உளரே" என்ற பதிகத்தைப் பாடினர்.

சிதம்பரத்திலிருக்கும் போது, எம்பெருமான் அசரீரிவடிவில் ஆரூரைத் திருவாரூருக்கழைத்தான். செல்லும் வழியில், திருஞானசம்பந்தர் அவதரித்த திருத்தலமாகிய சீர்காழியை மிதிக்கக்கூடாதென்று நின்றார். எம்பெருமான் காட்சி கொடுத்தருளினர். திருவாரூர் கோவிலில் சிவபெருமான், "நீ எனக்குத் தோழன்! என்றும் மணக்கோலத்தோடிருப்பாயாக" என்று பணித்தார். அதுமுதல் ஆரூரர் 'தம்பிரான் தோழர்' என்ற பெயர் பெற்றார். ஆரூரர் அங்கேயே தங்கி, தினமும் திருக்கோவில் சென்று

வழிபட்டு வந்தார். கயிலையிலுள்ள கமலினி இவ்வூரின் உருத்திரகணிகையர் குலத்தில் பரவையார் என்ற பெயரில் பிறந்து வளர்ந்து கோயிற்பணி செய்து வாழ்ந்து வந்தார். ஆரூரரும், பரவையாரும் ஒருவரை ஒருவர் விரும்பி மணம் செய்து வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் ஆரூரர், கோவிலில் சிவனடியார்கள் இருந்ததைக்கண்டு, அவர்களைப்பாட எண்ணினர். அப்போது இறைவனே "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்க ஆரூரரும் திருத்தொண்டர் தொகை பாடியருளினர், குண்டையூர்க்கிழார் என்பவர், ஆரூரருக்கு வழங்கும் பொருட்டு நெல் வைத்திருந்தார். அதனை எடுத்துச்செல்ல ஆட்கள் இல்லையே என்று ஆரூரர் எண்ணியபோது, சிவபெருமானின் ஏவலால் பூதங்கள் நெல் முழுவதையும் திருவாரூர் கொண்டு சேர்த்தன. திருநாட்டியத் தான்குடியில் வாழ்ந்த கோட்புலிநாயனர் ஒருமுறை ஆரூரரை அழைத்து, உபசரித்து தம் பெண்களாகிய சிங்கடியார், வனப்பகையார் எனுமிருவரையும் ஆட்கொண்டு அருள்புரிய வேண்டுமென்று விண்ணப்பம் செய்தார். ஆரூரர், அவர்களைத் தம் மக்களாக ஏற்றுக்கொண்டார்.

பங்குனி உத்திர திருநாளுக்குப் பொன் வேண்டுமென்று பரவையார் கேட்டார். ஆரூரர் திருப்புகலூர் சென்று கோவிலுக்குள் சென்று அங்கிருந்த செங்கற்களைத் தலையணையாக வைத்துத் துயின்றார். எழுந்தபோது செங்கற்களெல்லாம் பொன்னாக இருந்தன. சிவபெருமான் அருளை வியந்த அவர், பொன்னைப் பரவையாரிடம் கொடுத்தார். திருமுதுகுன்றூர் என்னும்

ஊரை அடைந்தபோது இறைவனருளால் பன்னீரா யிரம் பொன் பெற்றார். அதனைத் திருமணிமுத் தாறு நதியிலிட்டு, பின்னர் திருவாரூர் சென்று அங்குள்ள கமலாலயத்திலிருந்து அப்பொன்னை எடுத்துப் பரவையாரிடம் கொடுத்தார். திருக்குரு காவூரில் வைத்து, சிவபெருமான் அவருக்குப் பொதிசோறருளினார். திருக்கச்சூரில் சிவபெருமான் பிச்சை எடுத்து வந்து ஆரூரருக்கு உணவு கொடுத்தார்.

கயிலையில் வாழ்ந்த அனிந்திதை, திரு வொற்றியூரை அடுத்துள்ள ஞாயிறு என்ற ஊரில் இருந்த வேளாளச் செல்வர் ஒருவருக்குப் பிறந்து, சங்கிலியார் என்ற பெயரில் வளர்ந்து, யாரையும் மணக்கப் பிரியம் இல்லாமல், கன்னி மாடத்தில் வாழ்ந்து, திருவொற்றியூர் சிவபெரு மானுக்குத் தொண்டுகள் செய்து வந்தார். சங்கி லியாரைக் கண்ட ஆரூரர், அவரை மணக்கும் விருப்பத்தை இறைவனிடம் தெரிவித்தார். இறை வனும் அங்ஙனமே இருவருக்கும் திருமணத்தை நிறைவேற்றினர், திருமணத்துக்குமுன், "உன்னைப் பிரியேன்" என்று மகிழ மரத்தின்கீழ், சங்கிலியா ரிடம் உறுதிமொழி கொடுத்திருந்தார். அதனை மறந்து அவர் திருவாரூர் சென்றார். உறுதிமொழியி னின்று தவறியமையால், தம் கண் பார்வையை இழந்தார். சிவபெருமான், திருவெண்பாக்கத்தில் வைத்து, ஆரூரருக்கு ஊன்றுகோல் ஒன்று கொடுத் துதவினர். பின்னர் காஞ்சிபுரத்தில் இடக்கண் பார்வையையும், திருவாரூரில் வலக்கண் பார்வை யையும் சிவபெருமான் அருளால் பெற்றார்.

நம்பியாரூரர் சங்கிலியாரை மணந்த செய்தி கேட்ட பரவையார், அவரை ஏற்றுக் கொள்ள வில்லை. ஆரூரர், இறைவனிடம் வேண்ட அவர்

இருமுறை பரவையாரிடம் தூது சென்று இருவரும் இணைந்து வாழ அருள் புரிந்தார். இவ்வாறு இறைவனை ஏவல் கொண்டமையால் ஏயர்கோன் கலிகாம நாயனார் என்பவர் ஆரூரரிடம் சினங்கொண்டிருந்தார். அவ்விருவரையும் நட்புக் கொள்ளச் செய்ய எண்ணிய இறைவன், கலிக்காமருக்கு சூலை நோய்வரச்செய்து அதனைத் தீர்க்க நம்பியாரூரை அனுப்பினார். இவரால் நோய் தீர்வதினும் இறப்பதே மேல் எனக்கருதி கலிக்காமர், உடைவாளால் தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்தார். அது கண்ட ஆரூரரும் உயிர் துறக்கத் துணிந்தார். இறைவன் வந்து கலிக்காமரை எழுப்பி இருவரையும் நட்புக் கொள்ளச் செய்தார்.

சேர அரசராகிய சேரமான் பெருமாள் நாயனார், சுந்தரரைக் கண்டு நட்புப்பூண்டு இருவருமாக பல இடங்கள் சென்று வணங்கினர்' கொங்கு நாட்டில் உள்ள திருப்புக்கொளியூர் அவிநாசியில் முதலை விழுங்கிய பிள்ளையைப் பதிகம் பாடி வருவித்தார். பின்னர் திருவஞ்சைக்களம் சென்று சேரமானுடன் தங்கியிருந்தார். ஒருநாள் திருவஞ்சைக்களத்துக் கோயிலினுள் சென்று உலக வாழ்க்கையில் தனக்குள்ள வெறுப்பினை, எம்பெருமானிடம் தெரிவித்தார், சிவபெருமான், தேவர்களோடு வெள்ளை யானையை அனுப்பி சுந்தரரை கைலாயத் திற்குவரவழைத்தார். இதனை உணர்ந்த சேரமானும் தம் குதிரையில் ஏறிக் கைலாயம் அடைந்தார்' பரவையாரும் சங்கிலியாரும் கயிலைசென்றுபண்டை நிலையில் தொண்டு செய்தனர். சுந்தரர் கைலாயம் அடைந்தது தமது பதினெட்டாம் வயதில் ஆடி மாதம் சுவாதித் திருநாளில் என்பர்.

(4) மாணிக்கவாசகர்: (மணிவாசகர்)

பாண்டி நாட்டில் மதுரைக்கு வடகிழக்கிலுள்ள திருவாதவூரில் ஆதிசைவ அந்தணர் மரபில், சம்புபாத இருதயருக்கும்; சிவஞானவதியம்மைக்கும் மகனாக மாணிக்கவாசகர் தோன்றினர். பதினாறாம் வயதிற்குள் கல்வி கேள்விகளுள் தலைசிறந்து விளங்கினார். சைவ நூல்களை, தத்துவநூற்களையும் படித்து, பக்தியிலும் இறைவழிபாட்டிலும் சிறந்து நின்றார். இவரது மேன்மையைக் கேட்டுணர்ந்த அரிமர்த்தன பாண்டியன் என்ற மன்னன் இவரை வருவித்து, 'தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தை வழங்கித் தனது அரசவைக்கு முதலமைச்சராக்கி, நிறைய செல்வமும் அளித்துச் சிறப்பித்தான். இவர் அறநெறி பிறழாமல் அரசுரிமை நடத்தி வந்தார். ஆயினும் அதில் பற்றின்றிப் பேரின்பப் பெருவாழ்வு பெற உண்மை உணர்த்தும் ஞானாசிரியனை' நாடி நின்றார்.

சோழநாட்டுக் கடற்கரையில் நல்ல குதிரைகள் விற்பனைக்கு வந்துள்ள செய்தியைத் தூதர் மூலம் அறிந்த அரசன் முதலமைச்சராகிய, வாதவூர்ரை அழைத்து, நல்ல குதிரைகள் வாங்கி வரப் பணித்தார். பெரும் பொருட்களுடனும், படைகளுடனும் புறப்பட்ட வாதவூரர் வழியில் மீனாட்சியம்மையும், சொக்கலிங்கப் பெருமானையும் வணங்கி ஆவுடையார் கோயில் என வழங்கும் திருப்பெருந்துறையை அடைந்தார். அப்போது அங்கொரு சோலையிலிருந்து 'ஹரஹர' என்ற சிவநாக முழக்கம் கேட்டு மெய்மறந்து, ஒலி வந்த திசை நோக்கிச் சென்றார். சிவபெருமான் வாதவூரரை ஆட்கொள்ள வேண்டி சிவமுனிவரின் கோலத்தில் சிவகணங்கள் சூழ ஒரு குருந்த மரத்தின் அடியில் உட்கார்ந்து சிவஞானப் பொருளை

உணர்த்திக் கொண்டிருந்தார். பரவசமாகித் தன்வச மிழந்த வாதவூரர் முனிவரின் பாதங்களில் வீழ்ந்து தன்னை ஆட்கொள்ள வேண்டினார். சிவபெருமா னும் அவருக்கு ஞான தீட்சை அளித்து உண்மைப் பொருளை உபதேசித்தார். மகிழ்ந்த வாதவூரர் பல பாடல்களைப் பாட எம் பெருமானும் அவருக்கு "மாணிக்கவாசகர்" என்ற திருநாமம் சூட்டித் திருக் கோயிற் பணி செய்யக்கட்டளையிட்டு மறைந்தார்.

மாணிக்கவாசகர் மெய்துறவியாகி, குதிரை வாங்கும் எண்ணத்தையே மறந்து, தாம் கொண்டு வந்த பொருளை எல்லாம் திருப்பணிக்கு செலவிட் டார். பல நாட்கள் சென்றன. குதிரை வாங்கச் சென்ற அமைச்சரைக் காணாததால் பாண்டியன் ஏவலாட்களை அனுப்பினான். ஏவலர் வாதவூரரின் செயலைப் பற்றிப் பாண்டியனிடம் கூறினார். அர சன் சினந்து, குதிரைகளைக் கொண்டு வருமாறு மாணிக்கவாசகருக்கு ஓலை அனுப்பினான். மாணிக் கவாசகர் ஓலை கண்டதும் திருப்பெருந்துறை உறை சிவபெருமானிடம் முறையிட்டார். சிவபெரு மானும் தோன்றி ஒரு மாணிக்கக் கல்லைக் கொடுத்து அதை அரசனிடம் கொடுக்கும்படியாக வும், தாம் குதிரைகளுடன் ஆவணி மூலநாளில் வந்து சேர்வதாகவும் கூறி, மாணிக்கவாசகரை முன்னர் செல்லும்படியாகவும் தெரிவித்தார். அமைச் சரும் சென்று அரசனிடம் விபரங்களைக் கூறினார். அரசனும் குதிரைகளை எதிர்நோக்கி மகிழ்ந்திருந் தான். ஆவணி மூலத்திற்கு முந்தின நாள்வரை, குதிரைகள் வராததைக் கண்ட பாண்டியன், மாணிக்கவாசகரைசிறையிலிட்டுத்துன்புறுத்தினன்.

அப்போது மாணிக்கவாசகரோ, "நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்ற மனவுறுதியுடன் இருந்தார். அடி

யவர் துயரம் பொறாத ஆண்டவன் காட்டிலுள்ள நரிகளை எல்லாம் பரி (குதிரை) களாக்கி, தாமே குதிரைச் சேவகனாக வேடம் பூண்டு, ஆவணி மூலத்தன்று மதுரை வந்து சேர்ந்தார். பாண்டியனும் மாணிக்கவாசகரைச் சிறைவிடுத்துப் போற்றிப் புகழ்ந்தான். குதிரைச் சேவகனாக வந்த எம்பெருமான், குதிரையின் இலக்கணங்களைக் கூறிக் குதிரைகளைக் கொடுத்து மீண்டார். அன்றிரவே, வந்த பரிகளெல்லாம், மீண்டும் நரிகளாகி, இன்னல்கள் பல விளைவித்து ஊளையிட்டுக் கொண்டு காடு நோக்கி ஓடின. இச்செயலை அறிந்த பாண்டிய மன்னன் பெருஞ்சினங்கொண்டு மாணிக்கவாசகரை வைகைச் சூடு மணலில் நிறுத்தி, முதுகில் கல்லேற்றித் தண்டிக்கச் செய்தான். மாணிக்கவாசகர் துன்பம் பொறாது எம்பெருமானை வேண்டினார்.

அன்பர்க்கருளும் ஆலவாயண்ணல், உண்மையை விளக்கும் பொருட்டு வைகையாற்றிலே பெருவெள்ளம் வரச்செய்தார். வெள்ளம் கரை கடந்து மதுரை நகருக்குள் பாய்ந்தது. அதனைக் கண்டு மருண்ட பாண்டியன் குடிமக்களை வீட்டிற்கு ஒருவராக வந்து வைகைக் கரையை அடைக்குமாறு கட்டளையிட்டான். குடிமக்களுள் பிட்டு வியாபாரம் செய்யும் வந்தி எனும் பக்தி நிறைந்த மூதாட்டி ஒருத்தி இருந்தாள். தன் வீட்டிலிருந்து வேலைக்குச்செல்ல ஆள் இல்லாததால் அவள் சிவபெருமானிடம் முறையிட்டாள். சிவபெருமான் தானே கூலியாளாக வந்து, உதிர்ந்த பிட்டு மட்டும் கூலியாக ஏற்பதாகக் கூறிக் கரையடைக்கச் சென்றார். அங்கு சென்று அவர் கரையை அடைக்காமல், மற்றைய ஏவலர்கள் அடைப்பதையும் அங்குமிங்கும்ஓடிச்சிதைத்தார். வந்தியின்பங்கு அடைக்கப் படாமலிருப்பதைக் கண்டபாண்டியன், கூலியாளாக

வந்திருந்த சிவபெருமானைப் பிரம்பால் அடித்தான். சிவபெருமான் கரையினை அடைந்து மறைந்தார். பாண்டியன் அடித்த அடி அவன் முதுகிலும் மற்ற எல்லா உயிர்கள் முதுகிலும் பட்டது. அரசன், இறைவன் திருவிளையாடலையும், மாணிக்கவாசகர் பெருமையினையும் அறிந்து, அவரைப் பிழை பொறுக்க வேண்டினான். மாணிக்கவாசகரும் பிழை பொறுத்ததோடு மட்டுமல்லாமல் தமது அமைச்சர் பதவியையும் நீத்துத் திருத்தலங்கள் பல சென்று, எம்பெருமானைப்பாடி மகிழ்ந்து தில்லையே அடைந்தார்.

தில்லையிலே நடராஜப் பெருமானைப் பணிந்து வாழும் நாளில், ஒரு நாள் தில்லைவாழந்தணர்களுடன் வாதுக்கு வந்த புத்தகுருவை இறைவன் ஆணைப்படி வென்றார். ஊமைப் பெண்ணொருத்தியைப் பேசவைத்தார். இதனைக் கண்ணுற்ற புத்த குரு முதலியோர் சைவராயினர். ஒருநாள் நடராஜப் பெருமான் அந்தணவடிவு தாங்கி மாணிக்கவாசகரிடம் சென்று திருவாசகம் முழுவதையும் ஓதச் செய்து, தமது ஓலைச் சுவடியில் அவற்றை எழுதிக் கொண்டார். திருக்கோவையாரையும் சொல்லச் செய்து, அதனையும் எழுதி, "மாணிக்கவாசகன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பல முடையான் எழுதியது" என்று கையொப்பமிட்டு அதனைக் கனக சபையின் பஞ்சாக்கரப் படியிலே வைத்து மறைந்தருளினார். மறு நாட் காலையில் தில்லைவாழந்தணர்கள், சுவடியைக் கண்டு அதிசயித்து, சுவடியில் அம்பலவாணன் கையெழுத்திட்டிருப்பதைக் கண்டு, மாணிக்கவாசகரிடம் சென்று விபரம் அறிவித்தனர். பின்னர் அவரிடம் இப்பாடல்களின் பொருள் தெரிவிக்க வேண்டினர். மாணிக்கவாசகர் தில்லை வாழ் அந்தணர்களை

அழைத்துக் கொண்டு, பொற்சபையை அடைந்து தில்லைத் திருக்கூத்தனைச் சுட்டி, "இவரே திருவாசகத்திற்குப் பொருள்" என்று கூறி சிவபெருமானது திருவடிச் சோதியில் இரண்டறக் கலந்தார்.

இவர் சோதியில் கலந்தது ஆனிமாத மகநாளில் தமது முப்பத்திரண்டாம் வயதில் என்பர்.

உணர்வினால் உணர இயலா ஒருவரை உணர்த்த வேண்டி அடியாராய் வந்து உறங்கும் அவரை எழுப்ப நாயனார் அங்கு வந்தார். துயில் எழுப்ப வந்த நாயனார் முன் ஜோதி வடிவாய் தோன்றி நின்ற பெருமானை மனைவியாருடன் கண்டுகளித்தார். தம் அடியார்களுக்கு செல்வச் செழிப்பிலும், கொடிய வறுமையிலும் மனந்தளராது உணவளித்து உபசரித்து வாழ்ந்த நாயனார்க்கு சிவபெருமான் காளை வாகனத்தில் உமாதேவியுடன் காட்சியருளினார்.

மனைவியுடன் மாறநாயனார் சிவபதம் பெற்று குபேரனும் அவர் ஏவல் கேட்டு நிற்கப் பெருவாழ்வு எய்தினார்.

5. காரைக்காலம்மையார்

முழுமுதற் கடவுளாம் சிவபெருமானுடைய திருவாக்கினால் 'அம்மையே' என அழைக்கப்பெற்று சிறப்பிக்கப் பட்டவர் காரைக்காலம்மையார். தஞ்சாவூர் ஜில்லாவில் காரைக்கால் என்னும் ஊரில் தனதத்தர் என்னும் வணிகர் வாழ்ந்து வந்தார். அவரது தவப்புதல்வியே நம் காரைக்காலம்மையார். அவரது இயற்பெயர் புனிதவதி. புனிதவதி கடவுள் சிந்தனையை மறவாது வாழ்ந்து வந்தார். தக்க பருவம் எய்தியதும் பரமதத்தனுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டார். நல்லறம் நடத்திவந்த புனிதவதியார் சிவபக்தர்களுக்குத் திருத்தொண்டு செய்துவந்தார்.

பரமதத்தனுக்கு அவரது நண்பர்கள் ஒரு நாள் இரண்டு மாங்கனிகள் கொடுத்தார்கள். புனிதவதியார் அந்த இரண்டு மாங்கனிகளில் ஒன்றை கணவனில்லாதபோது சிவனடியார் ஒருவருக்கு அர்ப்பணித்தார். அன்றைய தினம் பரமதத்தன் உணவருந்த வந்தபோது புனிதவதியார் உணவுடன் மீதியிருந்த மாங்கனியையும் கணவனுக்குப் படைத்தாள். உண்டபின் மற்றொரு கனியையும் கணவன் கேட்டார். புனிதவதியார் கனியில்லாதது நினைத்து மனம் பதைத்தார். சமையலறைக்குச் சென்று சிவபெருமானை நினைந்து உள்ளம் உருகினார். திருநீலகண்டன் அருளால் அம்மையின் கையில் மாங்கனி வந்தது. அதைக் கொணர்ந்து கணவனுக்குப் படைத்தார். அக்கனி மிகவும இனிமையாக இருந்ததை உணர்ந்த பரமதத்தன் "இக்கனியை எங்கிருந்து பெற்றாய்?" என வினவினார். புனிதவதியார் அது சிவபெருமான் அருளால் கிடைக்கப்பெற்றதாக தெரிவித்தார். "அப்படியானால் இன்னொரு கனியை தருவித்துக் கொடு, பார்க்கலாம் என பரமதத்தன் சொன்னார். அம்மையாருக்கு முன்போலவே இறைவனிடமிருந்து ஒரு கனி கிடைத்தது. அந்தக் கனியை பரமதத்தன் தனது கையில் வாங்கியதும் அது மாயமாய் மறைந்து விட்டது. அதனால் பரமதத்தன் தன் மனைவி தெய்வத்தன்மை வாய்ந்தவள் என்பதை புரிந்து கொண்டார். இப்பத்தினி தெய்வத்தோடு இல்லறம் நடத்துவது முறையல்ல என எண்ணிய பரமதத்தன், புனிதவதியாருக்குத் தெரிவிக்காமல் மதுரை மாநகரம் சென்று வேறு ஒரு மங்கையை மணம் செய்து கொண்டார். தனக்குப் பிறந்த பெண் குழந்தைக்குப் புனிதவதி எனப் பெயர் சூட்டினார்.

மதுரை மாநகரில் இளைய மனைவியோடு வாழ்ந்து வந்த பரமதத்தனிடம் சுற்றத்தார் புனித வதியை அழைத்துச் சென்றார்கள். ஆனால் பரமத் தத்தனோ புனிதவதி அம்மையாரின் காலடியில் வீழ்ந்து வணங்கி பக்தியுடன் நின்றார். கணவனது மனநிலையை அறிந்த அம்மையார் உடலின் வனப் பைப் போக்கி இறைவன் அருளால் பேய் வடி வத்தை ஏற்றுக் கொண்டார். அப்போது அம்மை யாருக்கு மேலான சிவானுபவம் கிடைத்தது. தமக்கு வாய்த்த தெய்வீக அனுபவத்தைத் தாம் இயற்றிய அற்புதத் திருவந்தாதி என்னும் நூலில் வெளியிட்டுள்ளார்.

காரைக்காலம்மையார் திருக்கயிலாயம் செல்ல விரும்பி, அங்கு சென்று சிவபெருமானை உள்ளம் நெகிழ வணங்கினார். சிவபெருமான் புனிதவதி யாரை நோக்கி 'அம்மையே' என்றார். அம்மையாரும் "பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்" என வேண்டினார். பின்னர் சிவபெருமானது ஆணைக் கிணங்க அம்மையார் திருவாலங்காடு என்னும் ஊருக்கு வந்தார். திருவாலங்காட்டில் சிவபெருமா னைத் தரிசித்து, மூத்த திருப்பதிகங்கள் என்ற நூலைப்பாடினார். அம்மையார் திருவாலங்காட்டில் அம்பலவாணரது ஆனந்தத் திருவடியின் கீழ் அருள் இன்ப வடிவம் விளங்குவாராயினார்!



விஷ்ணு பக்தர்கள்

1. நம்மாழ்வார்

பன்னிரு ஆழ்வார்களில் சிறந்தவரும் கருவிலே திருவுடையவரும் நம்மாழ்வார்தான். இவர் சேனை முதலியார் என்ற விஷ்யக்ஸேனரின் அவதாரம் ஆகும். இவர் வேளாளர் குலத்திலே பிறந்தவர். இவரது தந்தையாராகிய காரியார் திருக்குருகூரில் (ஆழ்வார் திருநகரி) வாழ்ந்து வந்த சிறந்த வைணவராவார். நம்மாழ்வாரது தாயாராகிய உடைய நங்கையார் மலைநாட்டில் திருவெண்பரிசாரம் (திருப்பதிசாரம்) குமரி மாவட்டம் என்ற ஊரில் பிறந்தவர். காரியாரும், உடையநங்கையாரும் திருக்குறுங்குடியில் எம்பெருமானை வழிபட்டு ஆண் குழந்தை வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கிய எம்பெருமான், "நாமே வந்து பிறக்கிறோம்" என்று பூசாரி வாயிலாக அவர்களுக்குத் தெரிவித்தபடி, கலியுகம் பிறந்து நாற்பத்து மூன்றாம் நாளான வைகாசி பௌர்ணமி கூடின வைசாக நட்சத்திரத்தில் ஒரு அழகிய ஆண்மதலை அவதரித்தது. ஆனால் அக்குழந்தை பிறந்தது முதலே அழவோ, தாய்ப்பால் அருந்தவோ செய்யாமல் புன்முறுவலுடன் பொலிந்து கிடந்தது. அதைக்கண்டு தாய் தந்தையர் அக்குழந்தையை திருக்குருகூர் ஆண்டவன் சன்னிதிக்கு எடுத்துச்சென்று வழிபட்டு ஆலயத்தினருகே நின்ற புளியமரத்தின் அடியிலே ஒரு தொட்டிலில் வைத்து வளர்த்து வந்தனர். அங்ஙனம் பதினாறு ஆண்டுகள் வரை அக்குழந்தை கண்களைத் திறக்கவோ, வாய் திறந்து பேசவோ செய்யவில்லை. அக்குழந்தைக்கு மாறன் சடகோபர் என்று பெயர்கள் உண்டு. மற்றைய

குழந்தைகள் போல் அல்லாமல் தெய்வீக சக்தி யோடு திகழ்ந்ததால் மாறன் என்ற பெயர் இவருக்குப் பொருத்தமானதே.

இங்ஙனமிருக்கையில் திருக்கோளூரிலே, பிராம்மணர் குடியில் பிறந்த மதுரகவியாழ்வார் என்ற பெரியார் திவ்ய தல யாத்திரை செய்யப் புறப்பட்டு அயோத்தியை அடைந்தார். அயோத்தியிலிருந்து பார்த்தபோது தென்திசையிலே ஒரு சோதியைக் கண்டார். அதன் காரணத்தை அறிய வேண்டி தென் திசை நோக்கியே நடந்து வந்து கடைசியில் திருக்குருகூரை (ஆழ்வார் திருநகரி) அடைந்தார். அதற்கு மேல் அந்த திவ்யசோதி தெரியாமையால் அதனை அறிய விரும்பினார். அவர் திருப்புளி நிழலிலே உண்மையை பூரண சந்திரனைப்போல் பொலிவுற்று பத்மாஸனத்தில் நிஷ்டை கூடியிருந்த நம்மாழ்வாரைக்கண்டு இவருக்கு செவி கேட்குமோ என்றறிய பக்கத்திலே ஒரு குண்டுக்கல்லை திடீரென்று போட, ஆழ்வாரும் கண் விழித்தார். இவர் பேசுவாரோ என்றறிய, "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்" (ஜடமாகிய ஒரு சீவான்மா பிறந்தால் எந்த உலகில் அநுபவித்து வாழும்) என்று கேட்டார்.. அதற்கு ஆழ்வாரும் "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று அருளிச் செய்தார். அதைக்கேட்ட ஸ்ரீ மதுர கவியாழ்வார் நம்மாழ்வாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அவரையே குருவும் தெய்வமுமாக ஏற்றுக் கொண்டார்.

பின் இறைவனே நம்மாழ்வாருக்கு திருக் காட்சியும் திருவடி ஞானமும் தந்தார். அதன்பின் நம்மாழ்வார் ருக் யஜுர் ஸாம அதர்வண வேதங்களின் சாரமாக முறையே திருவிருத்தம், திருவாசிரியம்,

திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி என்ற திவ்யப் பிரபந்தங்களை அருளிச் செய்தார். நூற்றெட்டு திவ்யதேசத்து இறைவர்களும் திருப்புளி படியிலேயே நம்மாழ்வாருக்குத் தரிசனந் தந்தனர். அதனால் அத்தலங்களுக்கு எல்லாம் மங்களா சாஸனம் (பாடல்கள்) பண்ணிவிட்டு இளமையிலேயே வைகுந்தம் சென்று சேர்ந்தார்.

பன்னிரு ஆழ்வார்களிலும் இவருக்கே தலைமை கூறுவர். இவரது பெருமை பற்றியே இவரை "நம்மாழ்வார்" என வழங்கலாயினர்.

2. திருமங்கையாழ்வார்

ஸ்ரீமத் நாராயணன் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள திருவாலி என்னும் நகரின் அருகிலுள்ள திருக்குறையலூர் என்னும் நகருக்கு அரசனான கள்ளர் மரபின் தலைவன் நீலன் சிறந்த சிவபத்தனாவான். இவருக்கு கலியுகம் 398-ம் ஆண்டு நளவருடம், கார்த்திகை மாதம், வியாழக்கிழமை, கிருத்திகை நட்சத்திரத்தில் திருமங்கை ஆழ்வார் அவதரித்தார். இவருக்கும் நீலன் என்றே பெயரிடப் பட்டது. இளம் வயதிலேயே இவர் கல்வி கேள்விகளிலும், யானையேற்றம், குதிரையேற்றம், வில், வாள், வேல் முதலிய பயிற்சிகளிலும், மல்யுத்தத்திலும் தேர்ந்து புஜபல பராக்கிரமத்திலும் சிறந்து விளங்கினார்.

தந்தை காலமானபின், சோழராஜன் இவரை அரசனாக்கினான். அரச போகத்தில் மிகவும் ஆழ்ந்து ஈடுபட்டு பகவத் விஷயங்களில் பற்றின்றி வாழ்ந்தார்.

திருவாலி நாட்டில் ஒரு பக்தரால் வளர்க்கப் பட்டு வந்த குமுதவல்லி என்ற நங்கையை மணஞ் செய்ய விரும்பினார். ஆனால் அப்பெண்மணியோ 'நான் ஸ்ரீ வைஷ்ணவருக்கின்றி வேறு யாருக்கும் ஆட்படேன். எனவே திருமண் காப்பு தரித்து ஸ்ரீ வைஷ்ணவன் ஆதல் வேண்டும். மேலும் ஒருவருட காலம் நாள்தோறும் 108 பக்தர்கட்கு ததீயாராதனை கைங்கர்யம் செய்து அவர்கள் திருப்பாதத் தீர்த்த மும் பிரசாதமும் கொள்ளல் வேண்டும் என்று நிபந் தனை விதித்தார். நீலனும் அதன்படி விரதம் மேற் கொண்டு நல்லதோர் நாளில் குமுதவல்லியை மண முடித்தார். அதன் பின்னரும் ததீயாராதனையைத் தொடர்ந்து நடத்தி வந்தார். இவர் பெருமை நாடெங்கும் பரவியது

ஆனால் சோழஅரசனுக்குச் செலுத்த வேண் டிய கப்பபணத்தை கட்டத் தவறினான். எனவே சோழன் தன் படைகளை அனுப்பி நீலனை கைது செய்யக்கட்டளையிட்டான். ஆனால் நீலன் தன் ஆடன்மா என்ற குதிரை மேல் ஏறி போர் செய்து அவர்களை விரட்டினான். இதனால் வெகுண்ட சோழன் பெரும்படையுடன் சென்று நீலனுடன் பல நாட்கள் யுத்தம் செய்து அவனை சிறைப்பிடித் தான். சட்டட்டணம் கிடைக்கும்வரை காவலில் வைக் கவும் உத்தர விட்டார். ஆனால் பரந்தாமன் அரு ளால் காஞ்சி வரதராஜபெருமாள் சன்னிதியருகில் வேகவதி ஆற்றில் புதையல் எடுத்து கப்பம் கட் டினான். இதைக் கேள்வியுற்ற சோழன் நீலன் பக் தன் என்பதறிந்து கப்பப் பணத்தையும் மேலும் பரிசுப் பொருட்களையும் திருப்பி அனுப்பினான்.

நீலன் ததீயாராதனையை செவ்வனே தொடர்ந்து நடத்தி வந்தான். பொருளெல்லாம் தீர்ந்து போகவே வழிப்பறி செய்து ததீயாராத

னையை நடத்தி வந்தார். இவரது பெருமையை உலகறியச் செய்ய திருவுளம் கொண்ட பெருமாள் ஸ்ரீலட்சுமி தேவியுடன் திருமணதம்பதிகள் கோலம் கொண்டு தேவர்களை மானிட வடிவத்தில் உடன் அழைத்துக்கொண்டுச் சென்றார். நீலன் இவர்களைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்து அவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்கள் ஆபரணங்களையெல்லாம் கழற்றி எடுத்தான். ஆனால் பரந்தாமன் அணிந்திருந்த திருவாழியைக் கழற்ற முடியாமல் போகவே அதை கடித்திழுத்தான். ஆயினும் அது வராமல் போகாவே அதை விட்டு விட்டு மற்ற ஆபரணங்களை ஒன்று சேர்த்து கட்டி அதை தூக்கினான். ஆனால் அதை தூக்க முடியாமல் போகவே கோபங்கொண்டு, "அந்தணரே! களவாடிய பொருளை எடுக்க முடியாமல் ஏதேனும் மந்திரம் செய்து விட்டீரோ? அம்மந்திரத்தை எனக்குக் கூறும்" என்றார். பெருமாளும் இரக்கம் கொண்டு அவர் காதருகே சென்று "ஓம் நமோ நாராயணா" என்னும் அஷ்டாக்ஷரத்தை உபதேசித்து கருடவாகனமேறி ஸ்ரீலட்சுமி சமேதனாய் தேவர்கள் புடைசூழ காட்சியளித்தார். நீலன் பெருமகிழ்ச்சியடைந்து நிலத்தில் வீழ்ந்து வணங்கினான்.

அதன்பின் ஆழ்வார் மெஞ்ஞானம் பெற்றவராய் பல பாசுரங்கள் பாடினார். பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல் பெரியதிருமடல் போன்ற பிரபந்தங்களை பாடியருளினார்.

எம்பெருமான் திருவுள்ளப்படி பத்ரிகாசிரமம் முதலிய வடஇந்திய ஸ்தலங்களும், தீர்த்தங்களும் சென்று தரிசித்தார். பின்னர் சீர்காழியை அடைந்

தார். அங்கிருந்து திருவரங்கம் சென்று பெருமானுக்கு திருக்கோபுரமும், திருமதிலும் கட்டினார். சோழ மன்னன் முன்னிலையில் பௌத்தர்களுடன் வாதம் செய்து அவர்களை வென்றார். இதனால் பெருமகிழ்ச்சியடைந்த சோழன் வழங்கிய பரிசுப் பொருட்களை பெற்று அவையனைத்தையும் ததீயாராதனை செய்து வாழ்ந்து வந்தார்.

பின்னர் திருவரங்கத்திலிருந்து புறப்பட்டு குமுத வல்லியுடன் திருக்குறுங்குடியடைந்தார். ஆங்கு ஸ்ரீலட்சுமி நாராயணன் அருளால் பரமபதம் அடைந்தார்.

3 குலசேகராழ்வார்

ஸ்ரீ குலசேகராழ்வார் கொல்லி நகர் என்னும் திருப்படை வீட்டிலே க்ஷத்திரிய குலத்தில் மாசி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் ஸ்ரீ கௌஸ்துப மணியின் அம்சராய் அவதரித்தார். இவர் சதுரங்க சேனையுடன் நாட்டை வெகு திறமையுடன் ஆண்டு வந்தார். இவர் சிறந்த விஷ்ணுபக்தராயிருந்தபடியால் இறைவன் இவருக்கு தரிசனம் தந்தார். அதன் பின் இவ்வுலக வாழ்வில் வெறுப்புற்று தெய்வ சிந்தனையிலேயே காலத்தைக் கழித்தார். முகுந்த மாலை என்ற சிறந்த வடமொழி தோத்திர நூலைப் பாடினார். தினமும் வால்மீகி ராமாயணம் கேட்டு வந்தார். கொடியவனாகிய ராவணன் சீதா தேவியைச் சிறைபிடித்துச் சென்றான் என்று கேட்டதும், குலசேகர ஆழ்வார் தன்னை மறந்தவராய் சீதையை மீட்டுவர தனது நால்வகைப் படைகளுடன் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தார். ஆனால் மதியூகமுள்ள மந்திரிகள் ஆழ்வாருக்கு எதிரே வந்து ஸ்ரீராமபிரான் ராவணனைக்கொன்று

சீதாதேவியை மீட்டு வந்து விட்டார் என்று தெரிவிக்கவே ஆழ்வாரும் தன் படைகளுடன் அரண்மனைக்கு மீண்டும் வந்தார்.

அரசர் பெருமாரின் பரவச நிலையை அறிந்த அமைச்சர்கள், அரசனின் இத்தகைய நிலைக்குக் காரணம் வைஷ்ணவ அடியார்களின் கூட்டுறவு தான் என்றெண்ணி அடியார்களுக்கு எதிராக ஒரு வஞ்சக வழக்கை உண்டு பண்ண நினைந்து, அரசரின் அந்தரங்க பூஜைக்குரிய பெட்டியிலிருந்து ஒரு நவரத்தின மாலையை எடுத்து மறைத்து வைத்துக்கொண்டு அதனை அடியார்கள் தாம் திருடிச் சென்றிருக்க வேண்டுமென வீண் பழி சுமத்தினர். ஆனால் மெய்ஞானியாகிய குலசேகர ஆழ்வார் சொன்னார், "இம்மாலையைத் திருடியவர்கள் வைஷ்ணவர்கள் அல்லர். அப்படி திருடியிருப்பின் ஒரு பரீட்சை நடத்துவோம்." பின்னர் ஒரு குடத்திற்குள் ஓர் நல்லபாம்பை அடைத்துக் கொண்டு வரச்செய்தார். "நான் இந்த குடத்திற்குள் என் கையை இடுவேன். வைஷ்ணவர்கள் மாலையை எடுந்திருபாராயின் இப்பாம்பு என்னைக் கடிக்கும்," எனச் சொல்லி. அமைச்சர்கள் முன்னிலையில் பாம்புக் குடத்திற்குள் கையைப் புகுத்தி சற்று நேரங்கழிந்து எடுத்தார். பாம்பு அவரை ஒன்றுமே செய்யாததால் வைஷ்ணவர்கள் மாலையை எடுக்கவில்லை என்பது தெளிவாயிற்று. அமைச்சர்கள் தலை கவிழ்ந்தனர். அவர்களின் சதிச் செயலைக் கண்டு மனமுடைந்து, அரசாட்சியில் வெறுப்புற்று தனது மகனுக்குப் பட்டம் சூட்டி தான் திருவரங்கம் சென்று வழிபட்டு வந்தார். அங்கேயே "பெருமாள் திருமொழி" என்ற பிரபந்தத்தை பாடியருளி, பின் பரமபதம் அடைந்தார்.

பாடம் - 15

சமயப் பெரியார்கள்

1. ஸ்ரீ ராமானுஜர்

ஸ்ரீ ராமானுஜாச்சாரியார் சனாதன தர்மத்தில் விசிஷ்டாத்வைதம் என்ற கொள்கையை நிலை நாட்டினார். விசிஷ்டாத்வைத கொள்கையின்படி வேதாந்தத்தின் பிரஸ்தான த்ரயங்களாகிய (முப் பெரும் நூல்கள்) உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் பகவத்கீதை ஆகியவற்றிற்கு விளக்கம் (பாஷ்யம்) தந்துள்ளார். அதனால் இவரை பாஷ்யக்காரர் என்றும் சொல்வார்கள்.

இவர் கி.பி. 1017 -ஆம் ஆண்டு அந்தணர் குலத்தைச் சார்ந்த அசூரி கேசவாச்சாரியருக்கும், காந்திமதி அம்மையாருக்கும் மகனாக ஸ்ரீபெரும் புதூரில் தோன்றினார். திருபுட்குழியில் யாதவப் பிரகாசரிடம இளமையில் கல்வி பயின்றார். இவருக்கும், இவர்தம் குருவிற்கும் வேதாந்த விஷயங்களில் வேற்றுமை ஏற்பட்டதனால் குருவை விட்டுப் பிரிந்தார். பின்னர் இறைவனரு ளால் கபஞ்சீபுரம் வந்து சேர்ந்தார். இவருடைய பெருமையை அறிந்து ஸ்ரீ ரங்கத்திலிருந்து வைஷ் ணவ ஆச்சாரியராகிய ஆளவந்தார் என்ற சுவாமி கள் இவரைப் பார்க்கக் காஞ்சிக்கு வந்தார். காஞ்சியில் இவரைப் பார்த்ததும் இவர்தம் பெருமையை உணர்ந்தார். இவரிடம் ஒன்றும் பேசாமலேயே ஸ்ரீ ரங்கத்திற்கு மீண்டார். ஆனால் ஆளவந்தாரின் விருப்பப்படி ஸ்ரீ ராமானுஜர் அடுத்த வைஷ்ணவ ஆச்சாரியப் பட்டத்திற்கு வந்தார்.

இளமையிலேயே ராமானுஜர் தஞ்சம்மாள் என்ற பெண்ணை மணமுடித்திருந்தார். ராமானுஜர் வைசிய (செட்டி) குலத்தில் பிறந்த திருக்கச்சி பெரிய நம்பியை தன் குருவாக ஏற்றிருந்தார். இருவரும் ஒரே வீட்டிலேயே தங்கியிருந்தனர். ஆனால் ராமானுஜரின் மனைவி திருக்கச்சி பெரிய நம்பியின் மனைவியோடு ஜாதி உயர்வு தாழ்வு விஷயமாக சண்டை போட்டார். அதனால் திருக்கச்சி நம்பி காஞ்சீபுரம் விட்டு வேறு ஊருக்குச் சென்றார். ராமானுஜர் சண்டை விவரம் அறியாமல் ஒருநாள் திருக்கச்சி நம்பியை தன் வீட்டிற்கு விருந்திற்கு அழைத்தார். நம்பி அவ் அழைப்பை ஏற்றுச் சென்றார். துரதிஷ்ட வசமாக ராமானுஜர் வீட்டில் இல்லை. அவரது மனைவி திருக்கச்சி நம்பிக்கு உணவு பரிமாறி அவர் உண்டபின் இலையை கோலால் மாற்றி இவர் உணவருந்திய இடத்தையும் சாணம் தெளித்து, சுத்தம் செய்தார். ராமானுஜர் இவையனைத்தையும் அறிந்து மனைவியின் செய்கைக்கு வருந்தி வீட்டைத் துறந்து சன்னியாசி ஆனார்.

பிறகு திருக்கோட்டி நம்பியினிடம் சென்று உபதேசம் தர அவரை வேண்டினார். அவர் திருமந்திர உபதேசம் கொடுப்பதற்கு முன்னர் அவர் தாம் கொடுக்கும் மந்திரத்தை வேறொருவரிடமும் வெளியிடலாகாது. அவ்வாறு வெளியிட்டால் மீளா நரகில் செல்ல நேரிடும் என்றும் எச்சரித்தார். மந்திரம் உபதேசம் ஆனதும் ராமானுஜர் தனது பக்தர்களையெல்லாம் ஓரிடத்தில் கூட்டுவித்து கோவில் கோபுரத்தின் மேல் ஏறி தான் பெற்ற குரு மந்திரத்தை எல்லோருக்கும் உபதேசம் செய்தார். இதையறிந்த குரு தட்டிக் கேட்டபோது மந்திரத்தைக் கேட்ட எல்லோரும்

இறைவன் திருப்பாதத்தைக் அடைவார்கள் என்பது நிச்சயம். அதனால் நான் ஒருவன் நரகத்திற்குப் போகத் தயாராக இருக்கிறேன் என்றார்.

பின் ராமானுஜர் ஆளவந்தாரை தரிசிக்க ஸ்ரீ ரெங்கத்திற்கு சென்றபோது அவர் காலமாயிருந்தார். ஆனால் அவரது கையிலுள்ள மூன்று விரல்கள் மடங்கியிருந்தன. உடனே ஆளவந்தாரின் சீடர்களிடத்தில் ஆளவந்தாரின் விருப்பம் ஏதேனும் நிறைவேறாமல் போய் விட்டதா எனக் கேட்டார். உடனே சீடர்கள் ராமானுஜரிடம் "பிரம்ம சூத்திரத்திற்கு வைஷ்ணவ கொள்கைப்படி பாஷ்யம் எழுதவும், தமிழில் நம்மாழ்வாரின் திருவாய் மொழிக்கு விளக்கவுரை எழுதவும் விஷ்ணு சகஸ்ர நாமத்திற்கு விளக்கவுரை எழுதவும் விரும்பியிருந்தார். அது நிறைவேறவில்லை" என்று கூறினார். இதைக் கேட்ட ராமானுஜர் தாம் அதை நிறைவேற்றுவதாகக் கூறினார். உடனேயே 3 விரல்களும் நிமிர்ந்தன.

பிரம்மசூத்திரத்திற்கு பாஷ்யம்எழுதியதோடு தனது சீடர்களைக் கொண்டு திருவாய் மொழிக்கும். விஷ்ணு சகஸ்ர நாமத்திற்கும் உரை எழுது வித்தார். இதன் மூலம் ஆளவந்தாரின் ஆவலை பூர்த்தி செய்தார்.

டெல்லி சுல்தானில் மகன் வைத்திருந்த ராம பிரியாவின் சிலையை மீட்டுக் கொண்டு வரும்போது மேல்கோடு (திருநாராயணபுரம்) ஹரிஜனங்களால் சுல்தானில் காவலர்களிடமிருந்து காப்பாற்றப்பட்டார். அதற்கு நன்றியறியதலாக திரு நாராயண புரம் கோவிலில் தரிசனம் செய்யவும், ஆலய குளத்தில் குளிக்கவும் ஹரிஜனங்களுக்கு அனுமதி தந்தார். வேதங்கள் பயில்வும்,

பஞ்ச சம்ஸ்காரம் பெறவும் அவர்களுக்கு உரிமை அளித்தார். அவர்களை திருக்குலத்தார் என அழைத்தார்.

தன்கையிலிருந்த ராமபிரியா சிலை பறி போனதால் உயிரை விட்ட சுல்தானின் மகளுக்காக இரங்கி ஸ்ரீரங்கம் பேராலயத்தில் சுல்தானின் மகள் சிலையை வைத்து 'துலுக்க நாச்சியார்' என்ற சன்னிதியை வகுத்து நித்திய பூஜைக்கு ஏற்பாடு செய்தார்.

தமிழில் நாலாயிர திவ்ய பிரபந்தத்திற்கும் வேதாந்தத்திற்குரிய மதிப்பைக் கொடுத்தார். இவர் போதித்த விசிஷ்டாத்வைத கொள்கையானவை

1. சித் (உயிர்), அசித் (உலகம்), ஈச்வரன் என்ற முப்பொருளும் உண்மையே என்பதாகும்.
2. பிரபத்தி அல்லது பரிபூரண சரணாகதியே இறைவனை அடையும் வழி.
3. இறைவனுக்கு கைங்கரியம் (தொண்டு) செய்வதே ஜீவனுடைய ஒரே கடமையாகும்.
4. ஆச்சாரியாரையும் (குரு) பாகவதர்களையும் (பக்தர்கள்) கடவுள் எனவே பாவித்து வணங்க வேண்டும்.

அவர் தம் மதத்தில் ஜாதி வேறுபாடின்றி அனைவரும் சேர அனுமதி கொடுத்தார். ஆனால் நாளடைவில் இக்கொள்கை கைவிடப் பட்டது. ஸ்ரீ ரங்கத்தில் முறையான பூஜையை வகுத்தார் தமிழ் நாட்டில் சைவ சமயத்திற்கு இணையாக வைஷ்ணவத்தை நிறுவினார்.

இவர் தம் 120 வயது வரை வாழ்ந்து ஸ்ரீரங்கத்தில் சமாதியானார்.

2. ஸ்ரீ மத்வர்

வேதாந்த ஆச்சாரியர்களில் துவைதக் கொள்கையை சனாதன தர்மத்தில் நிலை நாட்டிய தோடு அச்கொள்கைப் படியே பிரஸ்தான திரயங் களுக்கு பாஷ்யம் (விளக்கம்) தந்தவர் ஸ்ரீமத்வாச் சாரியர் ஆவார்.

கி.பி. 1238 -ல் உடுப்பிக்குத் தென் கிழக்கில் 'பாஜக' என்னும் கிராமத்தில் மத்யதேஹபட்டர் என்பாருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு பெற்றோர் வாசுதேவன் எனப் பெயரிட்டனர்.

சிறு வயதிலேயே இவருக்கு ஆன்மீக நாட்டம் வந்தது. இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டது. எனவே துறவு மேற்கொள்ள தந் தையின் அனுமதியை வேண்டினார். அவரது தந்தை இணங்கவில்லை. எனவே இவர், "உங்க ளுக்கு இன்னொரு பிள்ளை பிறக்கும் வரை நான் காத்திருக்கிறேன். அதற்குப் பிறகு அனுமதி கொடுங்கள் என வேண்டிக் கொண்டார். அதன் படி தம்பி ஒருவன் பிறந்ததும் பெற்றோரின் சம்மதத்துடன் வாசுதேவன் அச்சுத் பிரேஷர் என்பவரிடம் சன்நியாசம் பெற்றுக் கொண்டார்.

பின்னர் பாரததேசமெங்கும் தீர்த்த யாத் திரை செய்தார். கடைசியாக உடுப்பி க்ஷேத்தி ரத்தை அடைந்தார். மல்பே கடற்கரையில் ஸ்ரீமத்வர் சென்ற பொழுது கடலில் கொந்தளிக் கும் அலைகளிடையே ஒரு கப்பல் சிக்கித் தவிப்ப தைப் பார்த்தார். தமது இயற்கையான கருணை யின் காரணமாக அந்தக் கப்பல் எந்த ஆபத்து மில்லாமல் கரை சேரப் பிரார்த்தித்தார். கப்பல்

அதுபோலவே கரையை வந்தடைந்தது. கப்பல் தலைவன் மத்வரின் கால்களில் வீழ்ந்து வணங்கினார். பொன்னும் பொருளும் காணிக்கையாகத்தர முன்வந்தான். ஆனால் ஸ்ரீமத்வர் துறவிக்கே உரிய முறையில் பொன்னும் பொருளும், தூசென மறுத்து கப்பலில் இருந்த ஒரு சந்தனப் பாறையை மட்டும் காணிக்கையாகக் கேட்டார். அதை வாங்கியதும் இரண்டாகப் பிளந்தார். அதனுள்ளே ஒரு கிருஷ்ண விக்ரகம் காணப்பட்டது.

அதி அற்புதமான அந்த விக்ரகத்தை ஓரிடத்தில் பிரதிஷ்டை செய்தார். அங்கு எட்டு இளம் சன்னியாசிகளை நியமித்து ஒவ்வொரு நாளும் விடியற்காலை முதல் இரவு வரை ஒன்பது முறை பூஜை செய்ய ஏற்பாடு செய்தார்.

மீண்டும் தீர்த்த யாத்திரை செய்ய விரும்பி பல புண்ணியத் தலங்கள் சென்று பத்ரிநாதத்தை அடைந்தார். இவரது பெருமையை உணர்ந்து நூற்றுக்கணக்கானோர் இவர் தம் சீடர்களாயினர். தமது சீடர்களுக்கு தெய்வ பக்தி, தார்மீக வாழ்க்கை முதலியவை குறித்து உபதேசம் செய்தார். கன்னியாகுமரி. ஸ்ரீரங்கம் முதலிய இடங்களில் பல சாதுர்மாஸ்யங்களை நடத்தினார்.

இவர் 79 வயது வரை வாழ்ந்திருந்தார். 37 அரிய நூற்கள் எழுதியுள்ளார். இவர் உபதேசித்த கொள்கைகளுக்கு துவைதம் அல்லது 'தத்துவ வாதம்' என்று பெயர். தன்னல மயக்கம் கொண்டிருந்த மக்களுக்கு ஆண்டவனின் அருளையும் மனிதர்கள் அவனால் படைக்கப் பட்டவர்கள் மட்டுமே என்பதையும் போதித்தார். அவருடைய சித்தாந்தத்தைப் 'பக்தி சித்தாந்தம்' என்று அழைக்கிறார்கள். மக்கள் ஆண்டவனின் சேவகர்கள் என்பதும். இந்த உலகம் மாயை அல்ல என்பதும் அவரது போதனைகளில் முக்கியமானவை.

3. ஸ்ரீராமானுஜன் எழுத்தச்சன்

ஸ்ரீராமனுஜன் எழுத்தச்சன் அல்லது துஞ்சத்து எழுத்தச்சன் என்ற பெரியவர் மலையாள மொழியின் தந்தையும், மலையாளக் கவிச்சக்கரவர்த்தியுமாவார். எழுத்து என்றால் மொழி, அச்சன் என்றால் தந்தை எனப்பொருள்படும். இவர் பெரிய ஆன்மஞானியாகவும். ஆச்சாரியராகவும் திகழ்ந்தவர். பொது மக்களிடையே சமய அறிவு குன்றியிருந்த அக்காலத்தில், இவர் ஸனாதன தருமத்தின் முக்கிய அம்சங்களாகிய பக்தி, ஞானநெறிகளை மக்களது மொழியிலேயே கிளிப்பாட்டாக எழுதிப்பிரச்சாரம் செய்தார். இவர் காலத்திலேயே இவரது பாடல் கேரளமெங்கும் பிரச்சாரம் அடைந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இவரது பக்தர்கள் ஆயினர்.

இவரது காலம் பதினாறாம் நூற்றாண்டாகும். கேரளமாநிலத்தில் பொன்னானித் தாலுகாவிலுள்ள திருக்கண்டியூரில் துஞ்சன்பறம்பு என்ற வீட்டில் செக்காலநாயர் குலத்தில் அவதாரம் செய்தார். தந்தையாரும் பெரிய வித்வானாயிருந்தார். அவரது பெயர் ரிலகண்டர். தாயார் பெயர் ஸ்ரீதேவி இவர்களது இரண்டாவது மகனான ராமானுஜர். கொல்லமாண்டு 661 (1485 கி. பி) மார்கழி 18 ஆம் நாள் பிறந்தார். இவருக்கு ராமன் என்ற அறிவாளியான ஒரு அண்ணனிருந்தார். தனது இருபத்தைந்தாவது வயதில் இல்லற வாழ்வை மேற்கொண்டார். ஒரு பெண் மகள் பிறந்ததும் மனைவி காலமானார். அதன்பின் மகாபண்டிதனாகிய எழுத்தச்சன் துறவு வாழ்வை மேற்கொண்டார். கோழிக்கோடு, சாமூதிரிப்பாடு, கொச்சிராஜா, பாலக்காடு ராஜா முதலியோரின் ஞான குருவாகத்திகழ்ந்திருந்த எழுத்தச்சன் தனக்கு தட்சிணையாகக் கிடைத்த

பெருஞ்செல்வங்களையெல்லாம் ஆலயங்கள் கட்டுவதற்கும், அறநிலயங்களுக்கும் செலவழித்து விட்டு, சுற்றுப்பயணம் மேற்கொண்டு, எங்கும் பக்தி மணம் பரப்பிக்கொண்டு இறுதியில் சிற்றூர் கிராமத்திலுள்ள நதிக்கரையில் ஒரு மடத்தை நிறுவி அங்கே வாழ்ந்து, கொல்லமாண்டு 732 (கி. பி. 1556) மார்கழி 24 ஆம் நாள் அம்மகான் மகாசமாதி அடைந்தார். அவர் வாழ்ந்திருந்த இடம் குருமடம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு வைத்து விஜயதசமியன்று குழந்தைகளுக்கு ஏடு தொடங்குவதைப் பெரும்புண்ணியமாகக் கருதி வருகின்றனர்.

எழுத்தச்சன் மலையாள மொழியில், அத்யாத்ம ராமாயணம் உத்தரராமசரிதம் மகாபாரதம், போன்ற இதிகாசங்களையும், பாகவத மகாபுராணத்தையும் பக்திச்சுவை சொட்டச் சொட்ட. கிளிப்பாட்டு என்ற புதிய அகவலாகப் பாடியருளியுள்ளார். மேலும் ஹரிநாமகீர்த்தனம், பதினாலு விருத்தம் சிந்தாரத்தனம் முதலிய அரிய நூல்களையும் யாத்து கேரளமாதாவிற்கு (கைரளிக்கு) அணிவித்துள்ளார். இவரது பாடல்கள் தெரியாத மலையாளியே இருக்கமுடியாது. தமிழுக்குக் கம்பனையும் திருவள்ளுவரையும் போல் மலையாளமொழிக்கு எழுத்தச்சனாவர். எழுத்தச்சனது இராமாயணத்தை கேரளமக்கள் ஒருநாள் இரவுபகலாக (அஹோராத்ர பாராயணம்) வாசித்துப் பூசிப்பார்கள். பாகவத புராணத்தை ஏழுநாட்கள் பாராயணம் (ஸப்தாஹம்) பண்ணி பூசிப்பார்கள். 'ஹரிநாம கீர்த்தனம்' தினமும் அதிகாலையில் பாடி மகிழ்வார்கள்.

எழுத்தச்சனது புலமையிலும். ஆன்மீக அனுபவத்திலும், செல்வாக்கிலும் பொறாமை கொண்ட சாதிப்பித்தர்கள் சிலர், அவரிடம். "துஞ்சனே,

உன்னுடைய செக்கில் எவ்வளவு எண்ணெய் ஆடும்?" என்று கிண்டல் பண்ணிய போது, "நமது செக்கில் நாலும் ஆறும் ஆடும்" என இரு பொருள் படும்படியாகக் கூறி அவர்களது வாயை அடைத்தார் என்பர். "நாலும் ஆறும்" என்றால் "நான்கு வேதங்களும் ஆறு சாத்திரங்களும்' என்று கூறினார்.

கேரள நாட்டில் ஒரு ஆன்மீக விழிப்புணர்வை எற்படுத்திய மிகப்பெரிய கவியோகி என்று இவரைக் கூறலாம்.

இளம் வயதிலேயே இறந்து போன அவரது மனைவி ஸ்ரீதேவியின் ஞாபகார்த்தமாக தனது ஒரே மகளுக்கும் ஸ்ரீதேவி என்று பெயரிட்டு வளர்த்தார். அவ்வம்மையாரும் ஒழுக்கத்திலும் ஞானத்திலும் சிறந்த ஒரு மாதரசியாகத் திகழ்ந்தார். அவரும் ஓர் அருட்கவியாவார் 'லட்சுமீ கடாக்ஷரஸவும்", "சனீஸ்வர ஸ்தோத்திரவும்" அவரது கவிதைகளாம்.

திரீருக்கு அருகாமையிலுள்ள துஞ்சன்பறம்பில் இன்று ஸ்ரீராமானுஜன் எழுத்தச்சனுக்கு கேரள மக்களால் அழகான நினைவு மண்டபம் எழுப்பப் பெற்றுள்ளது. அது ஒரு தீர்த்தத் தலமாக மாறி உள்ளது.

கேரளம் உய்ய வந்த கிளிப்பாக் கவியாம் ஞானி
பாரதம் ராமா யணங்கள் பாடியே பக்தி
வளர்த்தோன்
வாரமாய் ராமபக்திவளர்த்திடும் குருவாம்துஞ்சன்
சீரொளிர் எழுத்தச் சன்தாள் சென்னியில்
கொண்டோம் யாமே!

4. பக்தர் ஸ்ரீ பூந்தானம் நம்பூதிரிப்பாடு

கேரளநாடு உய்யத் தேன்றிய அடியார் பெருமக்களில் பூந்தானம் நம்பூதிரியும் ஒருவர். இவர் மலபாரில் அங்ஙாடிப்புறம் என்ற ஊரில் திருமாங்

தாம்குன்று ஆலயத்திற் கருகாமையில் பிறந்தவர். குருவாயூரப்பனது பெயரில் ' நாராயணீயம்'' என்ற மகாகாவியம் எழுதிய சமஸ்கிருத மகாகவியும் பக்தனுமாகிய மேல்பத்தூர் நாராயணபட்டதிரியின் காலத்தில் வாழ்ந்தவராவார். பூந்தானம் பட்டதிரி யைப் போல பெரும்புலமையுடையவரல்லவெனி னும் குருவாயூரப்பனைக் கனவிலும் நனவிலும் மறவாத பக்தோத்தமனாக வாழ்ந்தவர்.

இல்லறத்தை மேற்கொண்ட பூந்தானத்திற்கு குழந்தை (உண்ணி) ஒன்று பிறந்தது. அதற்கு அன்னமூட்டு விழா அவரது வீட்டில் நடந்து கொண்டிருக்கவே, அம்மழலை ஆபத்திற்சிக்கி இறந்து போனது. அதனால் பெரும் மனவேதனைக் குள்ளானார். அதன்பின் குருவாயூரப்பனாகிய பால கிருஷ்ணனை உறுதியாகப் பிடித்தார். குருவாயூர் ஆலயத்திலும் தனது வீட்டிலுமாக வாழ்ந்து வந்தார். அவர் எங்கு போனாலும், கண்ணபிரா னின் காதையாகிய ஸ்ரீமத்பாகவதத்தைத் தினமும் பாராயணம் செய்வதற்குத் தவறியதில்லை அவர் மிகவும் பக்தியோடு உருகி உருகிப் பாகவத மகா புராணம் வாசிப்பதைக் கேட்டவர்களெல்லாம் பக்தி பரவசம் எய்தினார்கள். ருக்மிணீ சுயம்வரம் மறு படியும் வாசித்துக் கேட்பிக்க வேண்டுமென்று கண்ணபிரானே அவரது கனவில் தோன்றிக் கூறினார்.

இவர் "ஞானப்பான" "ஸந்தானகோபாலம்" "ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம்", "குசேல விருத்தம்", "சுபத்திராகரணம்", "நூற்றெட்டுஹரி", "கன சங்கம்" போன்ற பல பக்திப்பனுவல்களைப்பாடி மலையாள மொழியின் புண்ணியப் பெருமையை வளர்த்துள்ளார்.

ஸந்தான கோபாலம் என்ற நூலை எழுதிக் கொண்டிருந்தபோது பகவானது இருப்பிடமாகிய வைகுண்டத்தை வருணிக்க முனைந்தார். எவ்வளவு வியந்து புகழ்ந்து, எழுதிய போதிலும் அவருக்கு மனநிறைவுண்டாக வில்லை. அன்றிரவு தூங்கும் போது தெய்வீகக் கனவொன்று கண்டார். அதில் தான் வைகுண்டம் சென்றிருந்ததாகவும் ஆங்குள்ள பக்தர்களெல்லாம் அவரது பாகவதபாராயணம் கேட்டுப் பரசதி அடைந்தவர்களாகவும் அவர்களின் வேண்டுகோளின்படி வைகுண்டத்திலேயே பாகவத பாராயணம் செய்து எல்லோரையும் பரவசப்படுத் தியதாகவும் கனவு கண்டார். கனவில் கண்டது போலவே, வைகுண்டத்தை தனது நூலாகிய "ஸந்தான கோபாலத்தில்" பாடி வைத்துள்ளார்.

ஒருநாள் பூந்தானம் குருவாயூர் கோயிலில் வழிபடச் சென்றபோது நேரம் பிந்திவிட்டது. மாலை இருள் சூழ்ந்து வழிப்பறிக் கள்வர்கள் இரண்டு மூன்று பேர் பூந்தானத்தைச் சூழ்ந்து அவரது மூட்டை முடிச்சையும் பறித்து விட்டு அவரை மரத்திற் கட்டி வைத்துக் கொல்ல நினைத்தனர். அந்தக் கணத்தில் சடசட என்று குதிரைக்குழம்பு களின் ஒலி கேட்டது. ஒரு நிமிஷத்தில் அவ்வூர் அரசன் சாமூதிரிப்பாடினது அமைச்சரான மங்காட் டச்சன் என்ற வீரர் ஆங்கே தோன்றினார். கள்வர் கள் கதிகலங்கி ஓடிமறைந்தனர். தனது உயிரைக் காத்த அமைச்சரிடம் மிகுந்த நன்றியுடையவராகிப் பூந்தானம் அவருக்கு ஏதாவது பரிசளிக்க விரும் பினார். ஆனால் மங்காட்டச்சன் பூந்தானத்தின் கைவிரலிலுள்ள மோதிரம் கிடைத்தால் நல்லதென விரும்பினார். அம்மோதிரம் பூந்தானத்தின் குரு வாகிய மேல்பத்தூர் நாராயண பட்டதிரியால் அவருக்கு ஆசீர்வதித்து கொடுக்கப் பெற்றது.

ஆதலால் அதை அமைச்சருக்குச் சற்று தயக்கத்துடன் கொடுத்தனுப்பினார். அன்றிரவு குருவாயூர்க் கோயில் தலைமைப் பூசாரியின் கனவில் பகவான் தோன்றி, "நாளை நிர்மால்ய பூசைவேளையில், என் விரலில் புதியதோர் மோதிரத்தைக் காண்பாய். அதனை பூந்தானம் பக்தர் வரும்போது, அவரிடம் கொடுத்து விடுக" என்று சொல்லி மறைந்தார். அஃதே போல் மறுநாட் காலை பூந்தானம் ஆலய வழிபாட்டிற்கு வந்தபோது மேல்சாந்தி (தலைமைப்பூசாரி) பூந்தானத்திடம் அம்மோதிரத்தை பகவான் கனவில் சொல்லியருளியபடி கொடுத்தார். பூந்தானத்திற்கு அப்போது தான் உண்மை விளங்கியது. தன்னைக் கொள்ளைக்காரரிடமிருந்து பகவானே மாறுவேடத்தில் வந்து காப்பாற்றி அருளினான் என அறிந்து அளவிலா ஆனந்தமும் பக்தியும் கொண்டு ஆடிப்பாடினார்.

முன்னே கூறப்பெற்றது போல் பூந்தானம் பெரும் பண்டிதரல்ல. ஆனால் ஒரு உத்தமபக்தர். இவர் எழுதிய ஞானப்பான என்ற 356 வரிகள் கொண்ட பக்திபாடல் இக்காலத்தில் கேரளமெங்கும் அன்பர்களால் பாடப்பெற்று வருகிறது. இது பக்தர்களிடையே கர்ம, பக்தி யோக ஞானங்களையும் தேசபக்தியையும் வளர்த்து வருகின்ற பரவசமிக்கதோர் பக்திப் பனுவலாகும். இதைப்பூந்தானம் சுவாமிகள் எழுதி முதன் முதலாக தனது குருவாகிய மேல்பத்தூர் நாராயணபட்டதிரிப் பாடினிடம் காண்பித்து. பிழை திருத்தித் தருமாறு வேண்டினார். புலமைச் செருக்கு மிகுந்த ஸம்ஸ்க்ருத மகாகவியாகிய பட்டதிரி இவரது மலையாளக் கவிதையை மதிக்காமல் அவமரியாதையுடன் திருப்பிக் கொடுத்துவிட்டார். இதனால் பூந்தானத்தின் மனம் வருந்தியது. குருவாயூர் கோவிலில்

வழிபட்டு வாதநோய் தீரப் பெற்றிருந்த பட்டதிரிக்கு திடீரென நோய் கூடியது. கோயிலினுள்ளிருந்து பட்டதிரியின் செவிகளுக்கு "உனனுடைய விபக்தி (இலக்கணப்) யை விட பூந்தானத்தின் பக்தியே எனக்குப்பிரியம்" என்றொரு அசரீரி கேட்டது. உடனே பட்டதிரி பூந்தானத்திடம் சென்று வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவரது கவிதையைப் புகழ்ந்து பாராட்டினார். நோயும் பறந்தது.

திங்கட்கிழமை தோறும் தனது இல்லத்திலிருந்து பூந்தானம் குருவாயூரப்பனைக் கண்டு தொழ நடந்து வந்து கொண்டிருந்தார். முதுமை வந்தெய்தியதால் குருவாயூரப்பன் அவரது வீட்டிலேயே அவருக்குக் காட்சி கொடுத்து "இனி நீ குருவாயூருக்கு வர வேண்டாம். நான் உன் வீட்டிலேயே வேண்டும் போது காட்சிதருவேன்" என்று கூறியருளி மறைந்தார். பகவான் அவருக்கு தென்பட்ட இடத்திலேயே ஓர் கோயிலை அமைத்து வழிபட்டு வந்தார். இன்றும் அந்தக் கோயிலை அங்கே காணலாம்.

பூந்தானத்தின் முதுமைப்பருவம் இவ்வாறு கழிந்து கொண்டிருக்கவே ஒரு நாளிரவு தன்னை வைகுண்டத்திற்குக் கூட்டிச்செல்ல பகவான் மறுநாள் வருவார் என்று கனவு கண்டார் அந்நாளில் வீட்டை அலங்கரித்து மிகுந்த பக்தி பரவசத்துடன் பகவானது வரவை எதிர்பார்த்திருந்தார். பகவான் அன்று மதிய வேளையில் தோன்றி பூந்தானம் அளித்த பூசையையும் விருந்துணவையும் ஏற்றருளினார். பின் பகவான் கொண்டு வந்த விமானத்தில் பூந்தானம் ஏறிக்கொண்டார். அப்போது அவர் தன்னோடு கூட வைகுண்டத்திற்கு யாராவது வருகிறார்களாயின் வரலாம் எனக்கேட்டுக்

கொண்டார். உடனே இவர்பால் பக்தியும் நம்பிக்கையும் கொண்ட வீட்டு வேலைக்காரி நானும் வருகிறேன் என்று சிறிது தூரம் நடந்து சென்று பல்லக்கில் ஏறினாள். ஆனால் அவளது உடல் கீழே விழுந்தது. உயிர் பூந்தானத்துடன் வைகுண்டம் சென்றது. இவையெல்லாம் மற்றவர் கண்களுக்குத் தென்படவில்லை. பூந்தானம் உடலோடு வைகுண்டம் சென்றாரென்று கூறப்படுகிறது. ஆனால் பூந்தானத்தின் மனைவிக்குப் பூந்தானத்திடம் நம்பிக்கையில்லை. அவள் இதெல்லாம் ஏதோ பைத்தியம் என்று எண்ணியிருந்தாள். அவளுக்கும் கடைசியில் உண்மை விளங்கியது.

கேரள பக்தமகாகவிகளில் சிறந்தவரும், பக்த சிரோமணியுமாகிய பூந்தான சுவாமிகளின் பாடல்களும் வாழ்வும் இன்றும் லட்சக்கணக்கான மலையாளிகளுக்கு ஆன்மீக ஒளி கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அவர் நாமம் என்றென்றும் வாழ்க! குருவாயூரப்பனது கருணை வாழ்க! வாழ்க!

குருவாயூரப்பனது திருவடியே குறித்து நின்றோன்
குருவானபட்டதிரி மகாகவியும் பணிந்தேத்தும்
திருவாளன் பெருந்தொண்டன் கேரளந் தான் சிறந்திடவே
பொருள் ஞானப்பாணபாடும் பூந்தானக் கவிவாழ்க!

மலையாளமொழியோங்க மணிக்கவிதை பலதந்தோன்
நலமாரும் குருவாயூர் நாதனுக்கு விருந்தளித்தோன்
பலதடவை பகவான்பால் பாராட்டுப் பெற்றபக்தன்
புலவருமே பணிந்தேத்தும் பூந்தானம் வாழ்க வாழ்க!

5. இராமலிங்க சுவாமிகள்

சிதம்பரத்திற்கருகாமையிலுள்ள மருதூர் எனும் சிற்றூரில் சைவ வேளாள குலத்தில் 1823-ம் ஆண்டு அக்டோபர் 5-ம் நாளில் இவர் பிறந்தார். தந்தை பெயர் இராமையாபிள்ளை, தாயார் சின்னம்மையார். இளம் வயதிலேயே தந்தையை இழந்த இராமலிங்கர் தமையனார் சபாபதியுடன். சென்னை சென்று அவருடன் வாழ்ந்து வந்தார் பிள்ளைப் பருவத்திலேயே இவர் முருகன் மீது பாடல்கள் இயற்றிப் பாடுவார். பள்ளியில் நீண்ட நாட்கள் படிக்கவில்லை. இதனால் இவரது அண்ணு வருந்தினார். ஆனால் இராமலிங்கர் தன் வீட்டு மாடியில் தனித்துறைந்து முருகப்பெருமானை ஒரு கண்ணாடியில் வழிபட்டு அவரது காட்சியைப் பெற்றார்.

சபாபதி பிள்ளை பெரியபுராண விளக்கம் கூறுவது வழக்கம். அவருக்கு ஒரு நாள் உடல் நலக்குறைவு இருந்ததால் தன் தம்பி இராமலிங்கத்திடம் நீ போய் இரண்டு பாடல்களைப்பாடி கூட்டத்தாரிடம் விரத்தைக் கூறிவா என்று அனுப்பினார். இராமலிங்கம் சென்று பெரியபுராணத்திலுள்ள திருப்பாடல்களை மிகவும் திருத்தமாகவும் இனிமையாகவும் பாடியதைக் கேட்ட மக்கள் இரண்டொரு பாடல்களுக்கு விளக்கம் கூறுமாறு கேட்டனர். இரவு நெடுநேரமாகியும் இராமலிங்கம் ஒரு பாடலுக்கு விளக்கம் கூறி முடிக்கவில்லை. எல்லோரும் ஆச்சரியம் அடைந்தனர். தமையனாருக்குத் தம்பியிடம் மதிப்பும் மகிழ்ச்சியும் கூடியது. அண்ணாவும் அண்ணியும் இராமலிங்கத்தை முருகனாகவே எண்ணிப்பணிவிடை செய்தனர்.

திருமணப்பருமவடைந்த இராமலிங்கத்திற்கு அவரது விருப்பமில்லாமலே திருமணம் செய்வித்தனர். ஆனால் அவர் இல்லறத்தை விரும்பாது மனைவியை விட்டு நீங்கினார்.

சென்னையில் கந்தசாமி கோவிலிலும் திருவொற்றியூரிலும் சுவாமி வழக்கமாக வழிபட்டு பல பாடல்களைப் பாடி வந்தார். சிதம்பரம் நடராஜ பெருமானைப் பற்றியும், திருத்தணி முருகனைப் பற்றியும் எண்ணிறந்த பாடல்களைப் பாடினார். இவரை மக்கள் திருவருட் பிரகாச வள்ளலார் என்றழைத்தனர். ஜீவகாருண்யமே உருவெடுத்து வந்த வள்ளலார் ஏழைகளுக்கு அன்னமளிக்க வடலூரில் சத்திய தர்மசாலை ஒன்றை நிறுவினார். பசித்து வந்தோர் யாவருக்கும் அங்கு உணவளிக்க ஏற்பாடு செய்தருளினார். மேலும் வடலூரில் சத்திய ஞானசபை என்ற கோயில் ஒன்றைக் கட்டுவித்து அதில் ஒரு பெரிய நிலைக்கண்ணாடியையும், திருவிளக்கையும் ஏழுதிரைகள் இட்டு வழிபட்டு வந்தார். "அருட்பெருஞ்ஜோதி தனிப்பெரும் கருணை" என்பது வள்ளலார்வாயிலிருந்து வந்த மகாமந்திரம். வடலூருக்கு அருகிலுள்ள மேட்டுக்குப்பத்தில் சித்தி விளாகம் என்ற குடிசை கட்டுவித்து அங்கேயே உறைந்து யோகம் பயின்று வந்தார். 1874 தைப்பூசத் திருநாளன்று நள்ளிரவில் தாமிருந்த அறையில் மறைந்து விட்டார். இவரது தூயஉடலை யாருக்கும் காண முடியவில்லை.

வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பாடல்களுக்கு திருவருட்பா என்று பெயர். தைப் பூசந்தோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வடலூரில் சென்று வழிபடுகின்றனர்.

6. ஸ்ரீ சட்டம்பி சுவாமிகள்

திருவனந்தபுரத்திற்கருகாமையிலுள்ள கொல்லூர் என்ற ஊரில் 1853-ம்ஆண்டு ஆவணி 11-ம் நாள் வாசுதேவ சர்மாவுக்கும் உள்ளூர்க்கோடு வீட்டைச்சார்ந்த நாயர் குலத்து நங்கை தேவிக்கும் மூத்த மகனாகப்பிறந்தார். குஞ்ஞன் என்பது இளமைப்பெயர். ஏழைக்குடும்பம். வறுமை காரணமாக பள்ளிக்கூடம் போகாமலேயே மலையாளம், தமிழ் சம்ஸ்க்ருதம் முதலிய மொழிகளைக் கேள்வி மூலம் சிறிது கற்றுக்கொண்டார். பிறகு பேட்டையிலுள்ள ராமன்பிள்ளை ஆசானின் பள்ளியில் சேர்ந்து அதில் முதல் மாணாக்காாகத் திகழ்ந்தார். வகுப்பில் சட்டாம்பிள்ளை (Monitor) யாக இருந்தார். இதனால் வந்த பெயர் தான் சட்டம்பி என்பது. அந்தப்பெயர் இவருக்கு நிலைத்து விட்டது.

இளமையிலேயே அறிவுத்தாகம் உடையவராயிருந்தார். ஒரு தடவை கற்றதை மறவாத பெரும் நினைவாற்றல் உடையவராயிருந்தார். சிறுவனாயிருந்தபோதே பெரிய அஹிம்ஸாவாதியாயிருந்தார். ஜாதி வெறி அற்ற அவர் ஈழவர்களைத்தனது உற்ற நண்பர்களாகக் கருதி அவர்களுடன் உணவருந்துவார். பெரிய சங்கீத மேதையாயிருந்தார் கதைகளி, மிருதங்கம் முதலிய கலைகளில் பெருந்தேர்ச்சி பெற்றார். ஆனால் இவைகளால் அவருக்கு மன நிம்மதியுண்டாகாமல் வேதாந்த நூற்களைக் கற்றார். ஒரு குருவைத் தேடினார். கொல்லூர் கோயிலில் நிட்டையிலிருந்த ஒரு துறவிப்பெருமானிடமிருந்து பாலசுப்ரமணிய மந்தர தீட்சை பெற்று, அந்த மந்திரத்தில் சித்தி பெற்றார். துறவு வாழ்க்கையை விரும்பினார். தாயாருக்காகச் சிறிது நாள் ஆதாரம் (தஸ்தாவேஜு) எழுத்தராகப் பணியாற்றினார். பிறகு சிறிது நாள் அரசு வேலையிலும் அமர்ந்து அதனையும் விட்டார்.

அந்நாளில் ஆங்கில அதிகாரி ரெஸிடென்டின் அலுவலகத்தில் வேலை பார்த்து வந்த அய்யாவு சுவாமிகளிடமிருந்து யோகாஸனங்களையும் தமிழ் வேதாந்த நூல்களையும் தெரிந்து கொண்டார். அதன்பின் கல்லிடைக்குறிச்சி சுப்பா ஜடாவல்லபர் என்ற பண்டிதரிடமிருந்து தமிழ், சமஸ்கிருத நூல்களை நன்றாகக் கற்றுத் தேர்ந்தார். ஐந்தாண்டுகள் கல்லிடைக்குறிச்சியில் கழித்தபின் மருத்துவா மலையில் வந்து சிறிது காலம் தங்கி யோகம் பயின்று தேர்ச்சி பெற்றார்.

அதன்பின் திருவனந்தபுரத்தில் கல்லுவிட்டில் கேசவபிள்ளை என்பவரது மனைவியின் தீராத நோயைத் தீர்த்தார். ஆதலால் கேசவபிள்ளை சுவாமிகளின் பெரும பக்தரானார். சுவாமிஜி ஒரு சித்தர் என்று எங்கும் புகழ் பரவியது. 1882 ல் ஸ்ரீநாராயண குருவுடன் நட்பு ஏற்பட்டது. நாராயண ஒரு சட்டம்பி சுவாமிகளிடமிருந்து யோகப்பயிற்சி பெற்று அவரது சீடரானார். இருவரும் காடு மலைகளில் ஒன்றாக யாத்திரைகள் செய்து தவஞ்செய்தனர். நெய்யாற்றின் பிறப்பிடமாகிய அருவிப்புறத்தில் சிறிது காலம் தங்கினர்.

1892 -ல் எர்ணாகுளத்தில் சட்டம்பி சுவாமிகளும் விவேகானந்த சுவாமிகளும் சந்தித்தனர். ஒருவரை ஒருவர் பாராட்டியிருக்கின்றனர்.

சட்டம்பிசுவாமிகளின் சன்னியாசிச் சீடர்களில் முக்கியமானவர்கள் நீலகண்ட தீர்த்த பாதர், பரமஹம்ஸதீர்த்தபாதர் என்ற இருவருமாவர். நீலகண்ட தீர்த்த பாதர் பெரிய பண்டிதர். இளமையிலேயே இறந்து போனார். இவருடைய ஆசிரமம் இன்றும் கருநாகப் பள்ளியிலிருக்கின்றது. எழுமாற்றூர் என்ற இடத்தில் ஒருமடம் நிறுவப்பெற்றது. பரமஹம்ஸ தீர்த்தபாதா அங்கு தங்கியிருந்தார்.

1913-ல் சுவாமிகளின் ஷஷ்டிபூர்த்தி கொண்டாடப்பெற்றது. அன்று சுவாமிகளுக்கு "வித்தியாதிராஜா பரமபட்டாரசுவாமிகள்" என்ற பட்டப் பெயர் சூட்டப்பெற்றது. தீர்த்த பாதசம்ப்ரதாயம் என்ற சன்யாசி பரம்பரை சட்டம்பி சுவாமிகளால் துவக்கி வைக்கப்பெற்றது.

கிறிஸ்து மத நிரூபணம், ப்ராசீனமலையாளம், வேதாதிகார நிரூபணம், அத்வைத சிந்தா பத்ததி முதலிய சிறந்த ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளார்.

சுவாமிகளது வித்யாதிராஜா என்ற பெயருக்கேற்ப எல்லா வித்தை அல்லது கலைகளிலும் அவர் தேர்ச்சிபெற்ற மாமேதையாயிருந்தார். அவருக்குத் தெரியாத கலைகளே இல்லையெனலாம். ஆனால் அவர் தன்னை ஒன்றும் தெரியாத பாமரனைப் போல காட்டிக் கொள்வார்.

கடுவாய், பாம்பு முதலிய துஷ்டமிருகங்களையும் முரட்டு மனிதர்களையும் அடக்கியாளும் ஆற்றல் அவரிடம் இருந்தது. அஹிம்ஸை என்பதை அவரது சிறந்த பண்பாகக் கூறலாம். முயல், தவளை, எலி, எறும்பு, நாய் முதலிய உயிரினங்களெல்லாம் அவரது நண்பர்கள். அவரது ஆணைக்கு அவைகள் கீழ்ப்படிந்தன. ஜாதி வேற்றுமை பாராட்டாமல் எல்லோரையும் சமநோக்குடனும் அன்புடனும் நேசித்தார்.

இரிஞ்ஞாலக் குடையில் சில ஆண்டுகள் தங்கியிருந்தார்கள். அங்குள்ள தச்சுடைய கைமள் என்ற அதிகாரி சுவாமிகளின் பக்தரானார். அவ்வேளை எர்ணாகுளம் பறவூர் முதலிய இடங்களுக்கெல்லாம் போயிருந்தார்கள். பன்மனை கும்பளத்து சங்குப்பிள்ளை சுவாமிகளின் சீடரானார். அவரது தோட்டத்தில் பழங்காலத்திய சர்ப்பக்காவு ஒன்றி

ருந்தது. அதைப்பார்த்ததும், அதன் பக்கத்தில் தனக்குச் சமாதிஸ்தானம் அமைந்தால் நல்லது என்று குறிப்பிட்டார். பின் திருவனந்தபுரம் வந்து எல்லா பக்தர்களையும் கண்டு, கடைசியாக விடை பெற்று பன்மனைக்குச் சென்றார். செல்லும் வழியில் ஸ்ரீ நாராயணகுரு சுவாமிகளும் சட்டம்பி சுவாமிகளும் சந்தித்து அன்புடன் அளவளாவினர்.

1924 சித்திரை 23-ம் நாள் பகல் மூன்று மணியளவில் உட்கார்ந்து கொண்டே மகாசமாதி கொண்டார்கள்.

இதற்கும் மூன்று நாட்கள் முன்னர் அதாவது 20-ஆம் நாள் சிலபக்தர்கள் சேர்ந்து கொல்லத்திற்கு வர வேண்டுமென்று அழைத்தனர். அதற்கு சுவாமிகள் "23-ம் தேதி கழிந்து நான் தெற்கே வருகிறேன்" என்றார்கள். தெற்கே வருதல் என்பது இறந்து போதல் என்றும் பொருள்படும்.

சுவாமிகள் குறிப்பிட்ட இடத்திலேயே, கருநாகப்பள்ளிக்குப் பக்கத்திலுள்ள பன்மனை கும்பளத்து சங்குப்பிள்ளை அவர்களின் காவிலேயே சமாதிகோயில் எழுப்பினார். சுவாமிகளின் விருப்பத்திற்கிணங்க சமாதியின் மேலே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பெற்று ஸ்ரீ பாலபட்டாரகேசுவரம் என்ற கோயிலும் கட்டப்பெற்றுள்ளது.

1934-ல் மகாத்மா காந்தியடிகள் இரண்டு நாட்கள் இந்த அழகிய அமைதியான ஆசிரமத்தில் தங்கியிருந்தார்கள்.

7. ஸ்ரீ நாராயண குரு

சேரள மாநிலத்தின் தலைநகராகிய திருவனந்தபுரத்திற்கடுத்த செம்பழந்தி என்னும் ஊரில் கொல்லமாண்டு 1032 ஆவணிச் சதய நட்சத்திரத்

தில் (ஆங்கில வருடம் 1857) ஸ்ரீ நாராயண குரு அவதாரம் செய்தார். தந்தையின் பெயர் மாடன் ஆசான். தாய் பெயர் குட்டி. சாதிக்கொடுமை தாண்டவமாடிய அக்காலத்தில் இவர் தாழ்த்தப் பட்ட ஈழுவர் குலத்தில் பிறந்தார்.

சிறு வயதிலேயே மலையாளம், தமிழ், ஸம்ஸ்க்ருதம் முதலிய மொழிகளில் இவர் நல்ல புலமை பெற்றிருந்தார். உறவினரின் வற்புறுத்த லுக்கிணங்கி தனது 28-ஆம் வயதில் திருமணம் செய்தார். இல்லற வாழ்க்கையைவிட மேலானதோர் காரியம் நிறைவேற்றுவதற்காக அவர் பிறந்திருந்த மையால் இல்லற வாழ்வினின்று அவர் விடுபட்டார். 29-ஆம் வயதில் துறவற வாழ்வை மேற்கொண் டார். அக் காலத்தில் கேரளத்தில் வாழ்ந்திருந்த சட்டம்பி சுவாமிகள் என்னும் ஒரு யோகியுடன் பலநாள் யாத்திரை செய்தார். பின்னர் கன்னியா குமரிக்கருகிலுள்ள மருத்துவாமலையிலும், கடற் கரைகளிலும் கடுந்தவம் இயற்றினார்.

அச்சமயம் ஜாதிக் கொடுமையினால் இந்துக் களுக்கு, இந்து சமயத்தின் ஆத்மீக ஒளி மறுக்கப் பட்டிருந்தது. அந்த இந்துக்களுக்குச் சேவைசெய்ய அவர் உறுதிபூண்டார். பல நாட்கள் கீழ்க்குலத் தோர் என்று வைக்கப்பட்டிருந்தோரிடமும் ஏழை எளியோரிடமும் வாழ்ந்தார். தென்திருவிதாங்கூரில் "அய்யாவு" என்ற மகானிடம் பிராணாயாமம், ஹடயோகம், ராஜயோகம் முதலியன பயின்றார். கிறிஸ்தவரும், இஸ்லாமியரும்கூட அவரிடம் மரி யாதை செலுத்தினார்கள். சில நாட்கள் கழித்து சுவாமிகள் அருவிப்புறம் என்ற இடம் சென்று ஒருகுகையில் ஏகாந்தவாசம் செய்தார். அப்போது சிவலிங்க சுவாமிகளின் சீடரானார்.

அருவிப்புறம் குகையில் வசித்திருந்த சுவாமிகளை ஏராளமான மக்கள் வந்து தரிசித்துச் சென்றனர். கீழ்க்குலத்தோருக்கு, அந்நாளில் கோவில் தரிசனம், தடைசெய்யப்பட்டிருந்தது. எனவே சுவாமிகள் அருவிப்புறத்தில் கீழ்க்குலத்தோருக்காக ஒரு சிவன் கோவிலைப் பிரதிஷ்டை செய்தார். கோயில் தரிசனம் மறுக்கப்பட்டிருந்தபோது, இவர் கோவில் பிரதிஷ்டை செய்தது பலருக்கு கோபமூட்டியது. சுவாமிகளோ அதற்குப் பதிலாக "நான் ஈழவ சிவனைத்தான் பிரதிஷ்டித்தேன்" என்று கூறி அவர்அவர்களை வாயடைக்கச் செய்தார். மேலும் சிவகிரி, குளத்தூர், சிறையின் கீழ், வைக்கம் முதலிய பல்வேறு இடங்களிலும் சிவன் கோவில்கள் பிரதிஷ்டித்து, ஈழவகுல மக்களை வழிபடச் செய்தார். கள்ளும், சாராயமும் நிவேதித்து, மிருக பலிகள் செய்து இறைவழிபாடு செய்து வந்த மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக ஸத்வகுண வழிபாட்டிற்குக் கொண்டு வந்தது அவர் செய்த ஒரு பெருஞ்சாதனை.

1903-ம் ஆம் ஆண்டு சுவாமிகள், "ஸ்ரீநாராயண தர்மபரிபாலன யோகம்" என்ற சங்கம் ஸ்தாபித்தார். இதுவே எஸ். என்.டி.பி என்ற புகழ் பெற்ற சங்கமாகும். மேலும் சிவகிரியில் சாரதா தேவி பிரதிஷ்டையும் செய்தார். அனேகப் பள்ளிகள் நிறுவினார். சமஸ்க்ருதக் கல்வியைப் பிரசாரஞ் செய்தார். ஆல்வாயில் அத்வைதாசிரமம் தொடங்கினார்.

"ஒருஜாதி, ஒருமதம் ஒரு தெய்வம்" என்பதுவே அவரது உபதேசம். மதபேதமின்றி எல்லோருடைய அன்பையும் பெற்ற அவர் 1929-ம் ஆண்டு தமது 72-ஆம் வயதில் மஹாசமாதியடைந்தார்.

பாடம் 16

தேசத்தை நேசித்தவர்கள்

1. போரஸ் என்ற புருஷோத்தமன்

பாரத கண்டத்தின் மேற்கே பஞ்சாப் மாநிலத்தில் ஜீலம், ராவி ஆகிய இரு நதிகளுக்கிடையே உள்ள பகுதியை புருஷோத்தமன் என்ற மாவீரன் ஆண்டு வந்தான். இவனது காலம் கி.மு. 327 ஆகும். இவன் ஒரு ஒப்புயர்வற்ற வீரனாக நம் தேச வரலாற்றில் ஒளிவீசுகிறான்.

ஏற்கனவே இவனைப்பற்றி நாம் அறிந்திருக்கிற வரலாறு, இவனது காலத்தில் நிகழ்ந்த சங்கிலித் தொடர் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் புறம்பானதாகப் பொருத்தமற்றதாக இருக்கிறது. ஆங்கிலேயர்களுடைய சரித்திர மூலாம் பூச்சுகளாலும் அவர்களைப் பின்பற்றிய ஆசிரியர்களின் யந்திரப் பார்வையாலும் இவனது உண்மைச் சரித்திரம் மறைக்கப்பட்டு விட்டது.

புருஷோத்தமன் மிகுந்த வீரமும் தயாள குணமும் உடையவனாக இருந்தான். ஒருமுறை இவனது அண்டை நாட்டரசனான 'அம்பை' என்பவன் போரஸ் மீது போர் தொடுத்தான். புருஷோத்தமன் அவனுடன் வீரத்துடன் போராடி அம்பையை சிறைப்பிடித்தான். அம்பை மன்னிப்புக் கேட்டான். அவன் திருந்தி விட்டான் என்று நம்பி அவனை விடுதலை செய்து சுதந்திர வேந்தனாக அவனது நாடான தட்சசீலத்திற்கு அனுப்பிவைத்தான் போரஸ்.

பொறாமையும் பகைமையுணர்ச்சியும் கொண்ட அம்பை திருந்தவில்லை. மாறாக இத்தோல்வியினை அவமானமாகக் கருதி போரஸைப் பழிவாங்குவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த சமயத்தில்தான் ஆதிக்க வெறி கொண்ட அலக்ஸாண்டர் அடுத்தடுத்து பெற்ற வெற்றிகள் என்ற மூலதனத்தை வைத்துக் கொண்டு இந்தியாவிற்குள் நுழைந்தான்.

அவனை நிலைகுலையச் செய்து, வந்த வழியே அவனைச் சொந்த ஊருக்கு ஓட ஓட விரட்டி அடிக்கிற வீரமும் வல்லமையும் பெற்ற மன்னர்களுக்கு அப்போது பஞ்சமும் இல்லை. ஒரு புருஷோத்தமன் போதாதா? ஆனால் ஏன் புருஷோத் தமர்களால் முடியவில்லை. அவனுக்குப் பின்னால் தேசப்பற்றோடு மாற்றானை எதிர்க்கப் போகாமல் முதுகிலே குத்துவதற்குக் காலம் பார்த்துக் கொண் டிருந்த பொறாமையும் பகைமையும் கொண்ட அம்பைகளைப் போன்ற துரோகிகளும் இருந்தார் கள்.

புருஷோத்தமனைப் பழிவாங்குவதற்காக காலம் பார்த்துக் கொண்டிருந்த அம்பை, அலக் ஸாண்டர் என்ற அன்னியனின் காலில் விழுந்து சொந்த நாட்டானிடம் பட்ட அவமானத்தைத் தீர்க்க வந்தவனிடம் கூட்டுச் சேர்ந்து தன்கையா லேயே தன் கண்ணைக் குத்திக் கொண்டதுபோல அலக்ஸாண்டருக்குப் படை உதவி செய்தான்.

அலெக்ஸாண்டர் இந்தியாவின் எல்லை புறங் களிலேயே; பல மன்னர்களுடன் கடுமையாக போராட வேண்டியிருந்தது. அப்போர்களில் மசாக வதியிலே நடந்த போர் முக்கியத்துவம் வாய்ந்தது. மசாகபுரிமன்னன் அலக்ஸாண்டரை எதிர்த்துக் கடு மையாகப் போர்புரிந்தாலும் அலக்ஸாண்டரின் பெரியபடை, விசேஷ ஆயுதங்களின் முன்னால் வெற்றிபெற முடியாமல் அவனிடம் சரணடைந்து புருஷோத்தமனை எதிர்க்க ஒத்துக்கொண்டான். ஆனால் தேசப்பற்றும் விழிப்புணர்வும் கொண்ட

அந்நாட்டு மக்கள் அன்னியனை ஆதரிக்க விரும்பாமல் இரவோடிரவாகக் கிளம்பி, புருஷோத்தமனையே ஆதரிப்பதென்று முடிவு செய்து போய்க் கொண்டிருகையில் சிறிது தூரத்திலேயே அலக்ஸாண்டரின் படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டனர். அலக்ஸாண்டர் அவர்களைத் தம் பக்கம் இழுக்க முயன்றான். ஆனால் அவர்களோ "சொந்த நாட்டிற்குத்துரோகம் செய்ய மாட்டோம். உயிருக்கு அஞ்சிடவில்லை, எங்களுடன் போருக்குத்தயாராகு" என்று வீர முழக்கமிட்டனர். அவர்களிடம் போதிய ஆயுதங்களும் இல்லை. தகுதியான படைத்தலைவனும் இல்லை. எனினும் ஆணும் பெண்ணும் போர் புரிந்தனர். முடிவில் தாய் நாட்டிற்காகத் தம் உடலை இம்மண்ணிற்கு அர்ப்பணம் செய்தனர்.

இவ்வாறு பலபோராட்டங்களைக் கடந்து தட்சசீலம் வந்து, அவனும் அம்பையுமாக புருஷோத்தமனை எதிர்க்க ஜீலம நதிக்கரையில் முற்றுகையிட்டனர்.

முற்றுகையை ஒற்றர் மூலமறிந்த புருஷோத்தமன் அவனது படைபலத்தை அறிய தானே சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்க மாறு வேடமிட்டு சென்றிருந்த பொழுது, அலக்ஸாண்டர் நதியில் நீராண்டிக் கொண்டிருப்பதைக் கண்டான். அந்த ஒருமனிதனை அழித்து விட்டால் அவன் படை, அவனுடன் சேர்ந்த அம்பையின் படை அனைத்தும் வெற்றுவேட்டுக்களாகிவிடும் என்பதை நன்கறிவான் போரஸ், நதியில் நீராடிக் கொண்டிருந்த அலக்ஸாண்டர் எதிர்பாராத விதமாகக் கரைபுரண்டு வந்த வெள்ளத்தில் சிக்கி இழுத்துச் செல்ல படுவதைக் கண்டபோது, அம், மாமன்னனுக்கு மனித நேயமே பெரிதாக நின்றது. ஒரு சிறந்த வீரனுக்கு எதிரி போர்களத்தில் மட்டும்தானே. கரைபுரண்டு ஓடும் சீலம் ஆற்றில்

பாய்ந்து அலெக்ஸாண்டரை மீட்டான் போரஸ். படை வலிமையறிந்து வந்த வழியே திரும்பினான் புருஷோத்தமன் என்ற போரஸ்.

புருஷோத்தமன் நாட்டுக்கு சீலம்நதி ஒரு அரண். அதைக்கடப்பது எளிய செயல் அன்று. அதைக் கடக்க முயலும் போது எதிரிப்படையால், கடக்க முயலும் எந்தப் படையும் கணிசமான அளவு துவம்சம் ஆகிவிடும். போர்தந்திரமிக்க அலக்ஸாண்டர் நதியைக் கடப்பது போல இரவில், பல முறை ஒலி செய்து புருஷோத்தமன் வீரர்களுக்கு போக்குக் கட்டினான். பிறகு, கரையோரமாக இரவோடிராக பதினாறு மைல் தூரம் படையை நடத்தின சென்ற மறைவான பகுதியில் நதியைக் கடந்தான் அலக்ஸாண்டர்.

திருட்டுத்தனமாக நதியைக் கடந்து வந்த அலெக்ஸாண்டர் பெரும்படையைத் தன் சிறிய படையுடன் சந்தித்தான் போரஸ்.

பாரத யுத்தத்திலேயே பாண்டவர்க்குச் சாரதியாக இருந்த கிருஷ்ணனுடைய விக்ரகம் புருஷோத்தமனுக்கு முன்னணியிலேயே யானையின்மீது ஆரோகணித்திருந்தது. யுத்தம் ஆரம்பமாகியது. தன் சிறிய படையின் உதவிகொண்டு தம் வலிமைத் திறத்தால் அலெக்ஸாண்டரின் படைக்கு பெரும் சேதத்தை விளைவித்தான் போரஸ்.

இது எப்படி நிகழ்ந்தது என்றே அலெக்ஸாண்டருக்கு புரியவில்லை. அவன் ஆச்சர்யமும் அதிர்ச்சியும் கொண்டான். படைவீரர்களோ மனந் தளர்ந்தனர். இந்திய மண்ணைப் பிடிப்பதற்கல்ல, நம் இன்னுயிரைப் பலியிடவே வந்திருக்கிறோம் என்று அவனுடைய வீரர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தனர்.

எதற்கும் கலங்காத மகாவீரன் அலக்ஸான்டரின் கலக்கம் அவன் மனைவியையும் வாட்டியது. அவளுக்குத் தேவை கணவன்தான். பெரும் வெற்றிகள் அல்ல. அதுதானே பெண்ணுக்கு இயல்பு. புருஷோத்தமனின் வீரத்தையும் இரக்கத்தையும் பற்றி அவள் கேள்விப்பட்டிருந்தாள். அம்பையின் மனைவியும் அவள் கூடவேயிருந்தாள். அவள் ஒரு ஆலோசனை சொன்னாள், யாருக்கும் தெரியாமல் புருஷோத்தமனைக் கண்டு, அவனது கரத்தில் ரக்ஷாபந்தனைக் கட்டி சகோதர உறவை ஏற்படுத்திக் கொள்வது என்று அம்பையின் மனைவி ஆலோசனை நல்கினாள்.

ஒரு பெண் ஆணின் கையில் 'ரக்ஷாபந்தனைக்' கட்டினால் அவளைச் சகோதரியாக ஏற்றுக் கொண்டு கடைசிவரை காப்பாற்றும் வழக்கம் பாரதத்தில் உண்டு.

ரக்ஷாபந்தனம் போரஸுக்குக் கட்டப்பட்டது. அலக்ஸாண்டரின் மனைவி இப்போது போரஸுக்கு சகோதரி. அலக்ஸாண்டரோ எதிரியல்ல சகோதரியின் கணவன். போரஸ் திகைத்தான் எனினும் அவனுடைய வீரமும் தேஜசும் பொருந்திய முகத்தில் புன்னகை அரும்பியது. அலக்ஸாண்டரின் படை வலிமையை அழித்து அவனைச் சிறைப்பிடித்து சகோதரியிடம் ஒப்படைத்து வந்த வழியே அவனை அனுப்பி வைப்போம் என்று தீர்மானித்தது போரஸின் தன்னம்பிக்கையுள்ள தீர உள்ளம்.

மறுநாள் போரில் போரஸ் திட்டமிட்டு வியூகம் அமைத்து அலக்சாண்டர் படைக்குப் பெரும் சேதம் விளைவித்தான். படைக்கு ஏற்பட்ட சேதத்தைக் கண்டு அலக்சாண்டர் திகைத்தான்

போரஸின் 'வியூக அமைப்பு' அவனுக்குப் புரிய வில்லை. அம்பையின் உதவியோடு அவன் சூழ்ச்சி செய்தான்.

போரஸைக் குறிபார்த்து அம்புகள் பாய்ந்தன. உடலில் பாய்ந்த அம்புகளோடு யானையின் மீதிருந்து கீழிறங்கினான் போரஸ். அவனது அம்புகளை அவனது பட்டத்துயானை ஒவ்வொன்றாக பிடுங்கி எறிந்தது.

அலக்ஸாண்டரது அதிகமான படைபலத்தை அழிப்பதற்கு முன்னாலேயே அவனுடன் நேருக்கு நேர் மோத வேண்டியதாயிற்று.

அவர்களின் முறையற்ற போர் சூழ்ச்சியால் போரஸ் கடுஞ்சினம் கொண்டான். அலக்ஸாண்டரின் வாளைக் கீழே தட்டிவிட்டு, அவனைக் கொன்று விடுவதென்றே முடிவு செய்து, வாளைத் தலைக்கு மேலே உயர்த்தினான் போரஸ். எதிரியைக் கொல்லுவதைத் தவிர. அவனது யுத்த வெற்றிக்கு இனி வேறு வழியே இல்லை.

உயர்த்திய கையிலே தொங்கிய ரக்ஷாபந்தனம் அவன் கண்ணையும் மனதையும் உறுத்தியது. பாரதப் பண்பாண்டை மீறத்துணியவில்லை அவன் மனம். அவன் கையிலிருந்த வாள் நழுவியது.

அந்தோ! அம்மாவீரன், அலக்ஸாண்டரின் படையால் கைது செய்யப்பட்டான்.

ஆதிக்கவெறி கொண்டலைந்தாலும் அலக்-சாண்டர் ஒரு மாவீரன்தான், வீரத்தைப போற்றுகிறவன்தான். அவன் மனம் குறுகுறுத்தது. போரஸின் வீரம், இரக்கம், பண்பாட்டினைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான். ஆதிக்க வெறி கொண்டலையும் தன் வீரம் எங்கே, எதிரியிடம்

இரக்கம் காட்டும் பண்பாட்டினைக் கட்டிக்காக்கும் இறைவனுடைய வீரம் எங்கே? அவன் ஒப்பிட்டு பார்த்தான்.

அலக்ஸாண்டர் போரஸைப் பார்த்துக் கேட்டான். "உன்னை எவ்வாறு நடத்த வேண்டும். போரஸ்" புன்முறுவலுடன் "மன்னனைப் போல". 'நீதான் அரசன்' என்று மனதிற்குள் வியந்து கொண்ட அலக்சாண்டர் அவனை விடுதலை செய்தான்.

அலக்சாண்டரின் லட்சிய வெறி வறட்சி யடைந்தது. இந்தியாவின் பண்பாட்டு கலாச்சார நெறி அவர்களது ஆதிக்க வெறியைத் தணித்தது.

தம்மீது அவநம்பிக்கை கொண்ட, தம் படையைப் பார்த்து, அவை அகமகிழும்படியாகச் சொன்னான். நாம் தாயகம் திரும்புவோம். தன் வீரர்களுடன் நாடு திரும்பினான் அலக்சாண்டர். அலக்சாண்டரின் ஆதிக்கவெறியை வென்றது போரஸின் இந்திய இந்துப்பண்பாடு. சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்றான் போரஸ்.

2. சத்ரபதி சிவாஜி

இந்துக்களின் கலாச்சாரம் தழைத்தோங்கிய குப்தர்களின் காலத்திற்குப் பிற்பாடு 1336 -ல் தேன்றிய விஜயநகரப் பேரரசுதான் இந்துக்களின் கலாச்சாரம் அழிந்துவிடாமல் காப்பாற்றி வந்துள்ளது. எல்லா மதங்களும் கடவுளை நோக்கியே செல்கின்றன. ஒவ்வொருவரும் தன் தன் மதத்தின் வழிநின்று இறைவனை அடையமுடியும் என்று உலகத்திற்கு எடுத்துச் சொல்லுவது இந்து தர்மம். ஆனால் இந்துக்களையும், இந்து கலாச்சாரத்தை யும் வேருடன் அறுத்து ஒழிக்க முழு முயற்சி

செய்த கொடுங்கோலன் ஔரங்கசீப் என்னும் மொகலாய அரசனின் கொட்டத்தை அடக்கி இந்துக்களின் மானத்தைக் காத்தவர் சிவாஜி.

1627-ம் (1630 என்றும், சிலர் கூறுவர்) ஆண்டு ஷாஜி போன்ஸ்லேக்கும் ஜீஜாபாய் அம்மையாருக்கும் மகவாக சிவாஜி பிறந்தார். இவர் பிறந்த போது ஜீஜாபாய் சிவனார் கோட்டையில் ஒரு குடிசையில் மறைந்து வாழ்ந்து வந்தார். தந்தை ஷாஜியை ஷாஜகானின் மொகலாயப் படைகள் சிறைபிடிக்க தேடி அலைந்ததால் அவர் பிஜப்பூர் சுல்தானிடம் தஞ்சம் புகுந்திருந்நார். சிவாஜிக்கு 6 வயது நிரப்பியபோது ஜீஜாபாய் மறைந்து வாழ்ந்த சிவனார் கோட்டையை அடைந்து, மொகலாயர்கள் ஜீஜாபாயை சிறைபிடித்து திரயம்பகம் என்னுமிடத்தில் சிறைவைத்தனர்.

ஆனால் தனது 6வேது வயதிலேயே மொகலாயர்களிடமிருந்து தப்பிச் சென்ற சிவாஜி விசுவாசிகளான சில தோழர்களின் உதவியுடன் வானளாவிய மலைச் சிகரங்களும் மூச்சுத் திணறவைக்கும் குளிர் காற்று வீசுகின்ற பாதாள பள்ளத்தாக்கும் நிறைந்த அடர்ந்த சகியபர்வத மலையில் மொகலாயர்களுக்குப் பிடி கொடுக்காமல் ஒளிந்து திரிந்தார். இக்காலகட்டத்தில், எந்த ஆபத்தையும் எதிர் நோக்கும் துணிச்சலும், பாரத மண்ணின் மீதும் பாரத கலாச்சாரத்தின் மீதும் அபரிமிதமான பற்றுதலும், முகலாயர்களின் கொடுமைகளுக்கு முடிவு கட்டவேண்டுமென்ற உறுதியும் பெற்றார்.

பிஜப்பூரில் துருக்க அரசனின் அடிவருடிகளாக இந்துக்கள் பலர் வாழ்ந்திருப்பதை சிவாஜியால் சகிக்க முடியவில்லை. பூனாவிற்கு அருகில் உள்ள பாழடைந்து கிடந்த தன்னுடைய

முன்னோர்களின் சமஸ்தானத்தில் தாயார் ஜீஜா பாய், குரு தாதாஜி கொண்டதேவ் ஆகியோருடன் சிவாஜி குடியேறினார். அவருடைய வீரத்தாலும், நேர்மையாலும், தேசப்பற்றாலும் மலைவாழ் மாளவ வீரர்கள் சிவாஜிக்கு உயிர்த் தோழர்களாயினர்.

தனது 16 வது வயதில் தோரணகோட்டையைக் கைப்பற்றினார். அதைத் தொடர்ந்து முகலாயர்களின் வசம் இருந்த பல கோட்டைகளைக் கைப்பற்றினார்.

இந்துக்களின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை அடைந்த பிஜப்பூர் சுல்தான் மலை போன்ற உருவமுடைய அப்சல்கான் என்ற துரூக்க் தளபதியை பெரும் படையும் சிவாஜியைப் பிடித்து வர ஏவினான். இந்த அப்சல்கான் வழி நெடுகிலும் உள்ள இந்து கோவில்களையும், இந்து வழிபாட்டு விக்ரங்களையும் உடைத்து இந்து பெண்களை கற்பழித்து பயங்கர அட்டகாசம் செய்தான். இந்துக்கோயில்களிருந்த இடத்தில் மசூதிகளைக் கட்டினான். சிவாஜியின் குலத்தெய்வமாகிய அன்னை பவானியின் சிலையை உடைத்து, அரைத்து, மாவாக்கி வழி நெடுகிலும் தூவி அதன் மீது துருக்கர்களை நடக்கச் செய்தான். சிவாஜியை சித்திரவதை செய்வதற்கும் பிடித்துக் கொண்டு வருவதற்கும் இரும்பு கூடு ஒன்று செய்தான்.

சமாதான ஒப்பந்தம் பேசுவதற்கு வந்த இடத்தில் முகலாய சம்பிரதாயப்படி சிவாஜியைக் கட்டித்தழுவ அழைத்தான் அப்சல்கான். அப்சல்கானின் சூதை அறிந்து கொள்ளாத சிவாஜி அப்சல்கான் இரும்புப் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டார். சிவாஜியின் கழுத்தை நெரித்ததோடு

விலாவில் சுட்டாரியால் குத்தினான் நம்பிக்கைத் துரோகி. ஆனால் அன்னை பவானியின் அருளால் இரும்புக்கவசம் அணிந்திருந்த சிவாஜிக்கு காயம் படவில்லை. அப்சல்கானின் பிடியிலிருந்து விடுபட்ட சிவாஜி புலி நகத்தால் அவனுடைய குடலை உருவிக் கொன்றார்.

இன்னொரு முறை பனாலா கோட்டைக்குள் இருந்த சிவாஜியை சித்தி செளகார் என்னும் மிலேச்ச படைத்தலைவன் பிஜப்பூர் சுல்தானின் ஏவலால் பெரும் படையுடன் முற்றுகையிட்டான். இங்கிருந்து தந்திரமாகத் தப்பிச் சென்ற சிவாஜி பாஜி பிரபு தேஸ் பாண்டே என்னும் மாவீரனின் இணையில்லா தியாகத்தால் காப்பாற்றப் பட்டார். ரெங்கானா சணவாயில் நடந்த சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த பெரும் போரில் பாஜி பிரபு தேஸ் பாண்டே 500 இந்து வீரர்களின் துணையுடன் பதினாயிரத்திற்கும் மேற்பட்ட துருக்கப் படைகளை எதிர்த்துத் தாக்கி 5 மணி நேரம் எதிரியின் முன் னேற்றத்தை தடைப்படுத்தி சிவாஜி தப்பிச் செல்ல வழி வகுத்தான்.

டெல்லியை ஆண்ட ஔரங்கசீப் என்னும் கொடுங்கோல் முகலாய மன்னன் ஷேய்ஷ்டகான் என்னும் தளபதியை சிவாஜியை அடக்குவதற்காக அனுப்பினான். ஒரு லட்சம் வீரர்களின் உதவியுடன் பூனா அரண்மனையில் தங்கியிருந்த ஷேய்ஷ்டகானை சிவாஜி அவன் தூங்கும் அறையிலேயே துணிச்சலுடன் அபாரமான நடுநிசி தாக்குதல் நடத்தினார். இந்தத் தாக்குதலினால் கைவிரல்களை இழந்த ஷேய்ஷ்டகான் பின்வாங்கிச் சென்றான்.

அடுத்தபடியாக ஔரங்கசீப் ஜெய்சிங் என்னும் தளபதியை அனுப்பினான். சிவாஜி ராஜ தந்திர முறைப்படி இவனோடு சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு டெல்லி சென்றார்.

ஔரங்கசீப் விருந்தினனாக வந்தசிவாஜியை நயவஞ்சகமாக சிறையிட்டு கொல்ல முயன்றான். ஆனால் சிவாஜி அன்னை பவானியின் அருளால் தப்பி தன் நாடு வந்து சேர்ந்தார்.

1674 ஜுன் 5-ல் ராஜ் கட் கோட்டையில் சிவாஜி சக்கரவர்த்தியாக முடி சூட்டிக்கொண்டார். சிவாஜி தன்நாடு வந்து தஞ்சாவூரிலும், செஞ்சி யிலும் கோட்டைகளை அமைத்தார்.

ஔரங்கசீப் இந்து கோயில்களை இடித்து அந்த இடத்தில் மசூதிகள் கட்ட கட்டளையிட்டான். காசி விசுவநாதர் கோயிலை இடித்து மசூதி கட்டப்பட்டது. மதம் மாற மறுத்த இந்துக்கள் மீது ஜெஸியா என்ற கொடும் வரியை சுமத்தினான்.

ஆனால் சிவாஜி இவற்றிற்கெல்லாம் மாருக மற்ற மதத்தினரை மிகவும் மரியாதையோடு நடத்தினார். மசூதிகளுக்கு பாதுகாப்புக் கொடுத் தார். முகமதிய பெண்களை தாய் போன்று மதித்தார்.

கல்யான்கோட்டை பிடிபட்டபோது அந்த கோட்டைத் தலைவனான துருக்கனின் மருமகள் கைது செய்யப்பட்டு சிவாஜியின் முன்னிலையில் கொண்டுவரப்பட்டாள். இதைப் பார்த்த சிவாஜி பதறியவராக எழுந்திருந்து தாயே "என்னை மன் னிக்க வேண்டும், என்னுடைய வீரர்கள் தவறு செய்து விட்டார்கள்" என்று மன்னிப்புக் கேட்ட தோடு அந்த அழகியை தகுந்த பாதுகாப்புடன் அனுப்பிவைத்தார். சமர்த்த ராமதாசரிடம் தன் னுடைய நாடு முழுவதையும் சாசனம் எழுதி ஒப்படைத்து விட்டார். தன்னுடைய குருவாக சமர்த்த ராமதாசரை வழிபட்டு வந்தார்.

தென்னாட்டுப் படையெடுப்பின் போது ஸ்ரீ சைலம் சிவாலயத்திற்குச் சென்ற சிவாஜி இறைவன் மீது நீங்காத அன்பு கொண்டு அங்கேயே தன் வாழ்நாளைக் கழித்துவிட எண்ணினார். ஆனால் தளபதிகளின் வேண்டுகோளின் படி திரும்பி வந்தார்.

பரம பவித்ர பகவத் துவஜமான காவிக் கொடியை தன் அரசாட்சியின் சின்னமாகக் கொண்டார். இதே கொடியை குருக்ஷேத்திரப் போரில் பகவான் கண்ணன் தன்னுடைய தேரில் கட்டினார். சிவாஜியின் காலத்தில் இந்துக்கள் தலை நிமிர்ந்து வாழ்ந்தனர். "நாட்டையும் சமயத்தையும் காப்பாற்ற வலிமை இல்லாதவன் ஆண்டவனை அடைய முடியாது" என்ற சமர்த்த ராமதாசரின் அறிவுரையை ஏற்று சிவாஜி வாழ்ந்து காட்டினார்.

3. வீரசாவர்க்கர்

பம்பாய் ராஜ்யத்தில் நாசிக் மாவட்டத்தில் பகூர் கிராமத்தில் தாமோதர்பந்த் ராதாபாய் என்னும் தாய்தந்தையருக்கு மகவாக 1883 -ம் ஆண்டு மே மாதம் 28 -ம் நாள் விநாயகராவ் சாவர்க்கர் பிறந்தார். சாவர்க்கருக்கு கணேஷ்பந்த் சாவர்க்கர் என்ற தமையனும் நாராயணராவ் என்ற தம்பியும் மைனாபாய் என்ற தங்கையும் உடன் பிறந்தவர்கள். பெற்றோர் இந்து சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவராக இருந்தனர். தம் குழந்தைகளுக்கு தாய் ராதாபாய் சமய உணர்வு ஊட்டி வளர்த்தார். வீரசிவாஜியின் வரலாறு சாவர்க்கரை மிகவும் கவர்ந்தது.

சாவர்க்கரின் 10 -வது வயதில் தாய் காலமானார். அப்போது 40 வயதான தந்தை மறுமணம் புரியாமல் தாமே சமைத்து குழந்தைகளுக்கு ஊட்டி

வளர்த்தார். சாவர்க்கர் சிறுவயதிலேயே இந்து மதத்தையும் சமுதாயத்தையும் காப்பாற்ற வேண்டு மென்று உறுதி கொண்டார். சிறுவர் படை ஒன்று திரட்டினார். அப்படை பஜனை கிராமவீதி களில் தேசபக்திபாடல்களை பாடியவாறு ஊர் வலம் வரும். 16 -வயதிலிருந்து கொள்கைப் பிரச் சாரம் செய்தார். புலமை வாய்க்கப்பட்ட சாவர்க்கர் சிறுவயது முதலே வீரப் பாடல்களை எழுதினார்.

1899 -ல் தந்தை பிளேக் நோயினால் காலமா னார். 16 வயதில் நண்பர்கள் சங்கம் என்ற ஒன்றை அமைத்து சில இளைஞர் நண்பர்களை சேர்த்தார். பாரதத்தாயின் அடிமைவிலங்கை முறிப்பதற்காக போராடுவதற்கு அவர்கள் சபதம் செய்து கொண்டனர்.

1901 -ல் யமுனா என்ற பெண்மணியை திருமணம் செய்தார். அதே ஆண்டு மெட்ரிகுலேஷனி லும் தேறினார். பின் பூனாவில் பெர்கியூசன் கல்லூரி யில் சேர்ந்தார். கல்லூரியில் 'சாவர்க்கர் காப்' என்ற நண்பர்கள் குழு அமைத்தார். இவர்கள் உடற்பயிற்சி விளையாட்டுகள், பேச்சுவன்மை, ஒழுக்கம், கல்வி இவற்றில் சிறந்து விளங்கினார் கள். விதேசித் துணிகளை தீயிட்டு எரிக்கும் பழக்கத்தை துவக்கினார்கள். இதனால் கல்லூரி விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

1900 -ல் சட்டம் படிக்க பம்பாய் சென்றார். அங்கு 'பிகாரி' என்ற பத்திரிகையும் 'அபிநவ பாரத்' என்ற சங்கமும் நிறுவினார். இந்திய விடுதலை அதன் குறிக்கோள்.

தமது குறிக்கோளை செயல்படுத்துவதை மனதில் பதித்து கொண்டு பாரிஸ்டர் படிப்பிற் காக லண்டனுக்கு சப்பலேறினார். மனைவியும் சகோதரர்களும் வழியனுப்பினார்கள். லண்டனி

லுள்ள இந்திய இளைஞர்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டினார். 1857 -ல் நடந்த இந்திய விடுதலைப் போரின் 50 -வது ஆண்டுவிழாவை அங்கு கொண்டாடினார். பொதுக்கூட்டங்கள் நடத்தி இந்தியா விடுதலையடைந்தே தீரவேண்டுமென்று கர்ஜித்தார். கட்டுரைகள் வெளியிட்டார். வெள்ளையர் அரசு இவர் மீது ஐயம் கொண்டது.

1909 -ல் பாரிஸ்டர் தேர்வில் தேறினார். ஆனால் ஆங்கில அரசாங்கம் அவருக்கு விடுதலை கொள்கையை கைவிட்டால் மட்டுமே சன்னது வழங்கப்படும் என்று கூறியது. சாவர்க்கர் சன்னதை உதறித் தள்ளினார்.

பாரத நாட்டில் சுதந்திரப் போராட்டம் வலுவடைந்தது. தேசபக்த இளைஞர்கள் அநியாயமாக தூக்குப் போடப் பட்டனர். நாடு கடத்தப்பட்டனர். இதை எதிர்த்து மதன்லால் திங்கார என்ற இந்திய வாலிபர் லண்டனில் இரண்டு வெள்ளையர்களை கொலை செய்தார். இக்கொலையில் சாவர்க்கரை சம்பந்தப்படுத்த முயற்சித்தனர். ஆனால் முடியவில்லை என்றாலும் அவரை போலீசார் கண்காணித்தனர்.

இந்தியாவில் தேசபக்திப் பாடல்களையும் நூல்களையும் வெளியிட்டதற்காக அவரது தமையனார் கணேஷ்பந்த் நாடுகடத்தப் பட்டார். தம்பி நாராயண சாவர்க்கர் இன்னொரு வழக்கில் கைதானார். சாவர்க்கரின் உறவினர்கள் யாவரும் துன்புறுத்தப் பட்டனர். சாவர்க்கர் தம் அண்ணிக்கு புகழ்ப்பெற்ற ஒரு காவியக் கடிதம் எழுதினார். "நமது உடல் பொருள் அனைத்தையும் பாரத தாய்க்கு அர்ப்பணம் செய்வோம். நம்முடைய மூதாதையர்களான மகரிஷிகளும் இனிவரப்போகும் பாரம்பரையினரும் போற்றும்படி நடப்போம்." என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவில் நாசிக் கலெக்டர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்கும் சாவர்க்கரே காரணம் என்று இங்கிலாந்தில் ஆங்கில அரசு கருதியது. எந்த நேரமும் சாவர்க்கர் கைது செய்யப்படலாம் என்று கருதிய இந்திய இளைஞர்கள் அவரை வற்புறுத்தி பாரீசுக்கு அனுப்பி வைத்தனர். அங்கு மேடம் காமாவின் வீட்டில் தங்கினார். ஆனால் பாரத அன்னையின் அடிமைவிலங்கொடிக்க சபதம் எடுத்த சாவர்க்கருக்கு சுகமாக வாழபிடிக்கவில்லை. ஆகவே 1910 -ம் வருடம் லண்டனுக்கு கப்பல் ஏறினார். லண்டனில் கால்வைத்ததும் அவர் கைது செய்யப்பட்டு பலத்த பாதுகாப்புடன் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டார். வரும் வழியில் பிரான்ஸ்நாட்டு துறைமுகம் அருகில் கப்பல் வந்தது. சாவர்க்கர் ஏதாவது சாகஸசெயல் செய்து பிரிட்டிஷாரை திகைக்க வைக்க எண்ணியவராய், கக்கூஸ் ஜன்னல் வழியாக கடலில் குதித்து கரையை அடைந்து பிரஞ்சு போலீசாரிடம் அடைக்கலம் புகுந்தார். ஆனால் பிரஞ்சு போலசார் வெள்ளையரிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு சாவர்க்கரை வெள்ளையரிடமே ஒப்படைத்தார்கள்.

இந்தியாவில் அவரை பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்படுத்தி நாடுகடத்த உத்தரவிட்டார்கள். சாவர்கரின் குடும்பத்தில் ஆண் துணையில்லை. அந்த பெண்களுக்கு ஆதரவு அளித்தவர்கள் தண்டனைக்குள்ளானார்கள். பிரான்சிலிருந்து காமா அம்மையார் பணம் அனுப்பி வைத்து உதவினார்கள். இந்நிலையில் சாவர்க்கரின் அண்ணி காலமானாள்.

நாடு கடத்தப்பட்ட சாவர்க்கர் அந்தமான் சிறையிலிடப்பட்டு கொடுமைப்படுத்தப் பட்டார், செக்கிழுத்தார். கடும் வேலைகள்செய்தார்.

முஸ்லீம்களாக இருந்த சிறை அதிகாரிகள் கைதிகளை துன்புறுத்தி மதம்மாற்றம் செய்தனர். சாவர்க்கர் அவர்களை மீண்டும் இந்துவாக்கினார். 16 ஆண்டுகள் அந்தமான் சிறையில் அடைப்பட்டுக் கிடந்தது அந்த சிங்கம். பின் அவரும் தமையனார் கணேஷ்பந்தும் இந்தியாவிற்குக் கொண்டு வரப் பட்டு சிறைவைக்க பட்டனர். 1922 -ல் கணேஷ் பந்து விடுதலை செய்யப்பட்டார் 1924 ஜனவரி 6 ல் சாவர்க்கர் பலகட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு விடுதலையானார். ரத்தினகிரி எல்லையைவிட்டு அவர் வெளியில் செல்லக்கூடாது. அவர் லண்ட னுக்கு புறப்பட்டபோது கணவனை பிரிந்த அவரது மனைவி மீண்டும் கணவனைப் பெற்றாள்.

1924 ஜனவரி 23 -ம் நாள் ஹிந்து மஹா சபை ஸ்தாபிக்கப்பட்டது. ஹிந்துக்களை ஒன்று படுத்தினார். நாசிக்கில் ஹிந்து ஒற்றுமைக்கும் தீண்டாமை ஒழிப்பிற்கும் பிரச்சாரம் செய்தார். எல்லோருக்கும் பொதுவான ஒரு மாருதி ஆலயமும் பதிதபாவன ஆலயம் என்ற லட்சுமிநாராயணன் கோவிலும் எழுப்பினார். ஹரிஜனங்களுக்காக பள்ளி கூடங்களும் உணவு விடுதிகளும் கட்டினார். அங்கு மதபோதனைகள் செய்யப்பட்டது. சாதிஹிந்துக் களும் ஹரிஜனங்களும் கூடி உண்ண சமபந்தி போஜனத்திற்கு பலமுறை ஏற்பாடு செய்தார்.

சாவர்க்கருக்கு முழு சுதந்திரம் அளிக்கக் கோரி மக்கள் கிளர்ச்சி செய்தனர். 1937 மே 10 ல் அவர் முழு விடுதலை அடைந்தார்.

இந்து மஹாசபைக்கு பிரச்சாரம் செய்தார். ஹைதராபாத் நிஜாம் ஆட்சியில் ஹிந்துக்கள் கொடு மைக்குள்ளானர். 1938 ல் இதனை எதிர்த்து 11 மாதங்கள் சத்தியாக்கிரகம் நடத்தினார். ஹிந்துக் களுக்கு மதசுதந்திரம் கிடைத்தது. மஹாத்மாவின்

அஹிம்சைக் கொள்கையை விட ஆண்மையுடன் எதிர்த்து புரட்சி செய்து பிரிட்டீஷ் ஆட்சியை வீழ்த்த முடியுமென்று அவர் நம்பினர். ஹிந்துக் களைவிட மிகுதியான சலுகைகளை அளிப்பதன் மூலம் முஸ்லீம்களுக்கு தேசபக்தி உண்டாக்க முயலுவது தவறு என்பது அவர்கருத்து. தேசபக் தர்களாக ஆண் பெண்கள் அடங்கிய இந்திய தேசிய ராணுவத்தை அமைத்த வீரசாவர்க்கரை நேருஜி போற்றிப் புகழ்ந்தார்.

பாரதம் சுதந்திரம் பெற்ற பின் தம் இறுதிக் காலத்தை அமைதியாக கழித்தார். 1966 பெப்ரவரி 26-ம் நாள் அந்தவீரரின் தமது வாழ்க்கை 83ம் வயதில் முடிவுற்றது. அவருடைய காவியங்கள் நாடகங்கள் கட்டுரைகள், உள்ளத்திற்கு நம்பிக்கையும் தைரிய மும் அளிப்பவை.

4. வ. உ. சிதம்பரம்பிள்ளை

பாண்டிய நாட்டில் திருநெல்வேலி மாவட்டத் தில் உள்ள ஒட்டப்பிடாரம் என்னும் சிற்றூரில் உலகநாதபிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் மகனாக வ. உ. சிதம்பரம்பிள்ளை 1872-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ம் நாள் வியாழக்கிழமை பிறந்தார். அவருக்கு நான்கு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உண்டு.

வ. வு. சி முதலில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் வீரப்பெருமாள் அண்ணாவி என்பவரி டம் படித்தார். 1895-ம் ஆண்டு சிதம்பரம்பிள்ளை சட்டப்பரீட்சையில் தேர்ச்சி பெற்று வழக்கறிஞர் ஆனார். வக்கீல் தொழிலில் அதிக வருமானம் பெற்றார். ஏழை செல்வந்தர் என்கிற வித்தியாசம் பாராட்டாது எல்லோரையும் சமமாய் மதித்தார். தூத்துக்குடிக்கு 1900-ம் ஆண்டு சென்றார்.

வ. உ. சி 23 -ம் வயதில் வள்ளியம்மை என்பவரை மணம் புரிந்தார். அவ்வம்மையார் 1901 ல் அகால மரணமடைந்து போகவே, மீண்டும் அவ்வம்மையாரின் குடும்பத்தில் மீனாட்சியம்மை என்பவரை திருமணம் புரிந்துகொண்டார். வ. வு. சி பின் ஒட்டப்பிடாரம் சென்றார்.

ஆங்கிலேயர் வருகையால் இந்திய வாணிபம் வீழ்ச்சி அடைந்தது. இந்நிலைகண்டு பொறுக்காத வ. வு. சி ஆங்கிலேயரை விரட்டுவதற்கான சூழ்நிலையை எதிர்பார்த்தார். இந்நேரத்தில் தான் வங்காளத்தை இந்துக்கள் அதிகம்வாழும் பகுதி முஸ்லீம்கள் அதிகமாக காணப்படும் பகுதி என இரண்டாக பிரித்து விட்டனர் வெள்ளையர். வங்கபிரிவினையை எதிர்த்து அந்நிய ஆடைகளை புறக்கணித்தனர். அந்நிய ஆடைகள் மலைபோல் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

சிதம்பரம்பிள்ளை இந்நேரத்தில் தம் வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு விடுதலைப் போரில் குதித்தார். ஆங்கில வணிகர்களுக்கு எதிராக கப்பல் கம்பெனி நடத்த வேண்டுமென திட்டமிட்டார். 1906 -ம் ஆண்டு சுதேசிக்கப்பல் கம்பெனியை தோற்றுவிக்க எண்ணினார். 1906 - ம் ஆண்டு அக்டோபர் 16 -ம் தேதி இவரது புதிய கம்பெனி பதிவு செய்யப்பட்டது. அக்கம்பெனியின் செயலாளராக வ. வு. சி. அவர்களும், தலைவராக மதுரைத் தமிழ் சங்கத்தின் தலைவர் திரு. பாண்டித்துரைசாமித்தேவர் அவர்களும் பதவி வகித்தார்கள். முதலில் குத்தகைக்கு கப்பல வாங்கி ஓட்டினார்கள். பின்னர் சிதம்பரனாரின் முயற்சியால் பம்பாய் கல்கத்தா போன்ற பகுதிகளிலிருந்து பணம் பெற்று கப்பல் வாங்கப்பட்டது.

வ. வு. சி. யின் கப்பல் கம்பெனியை ஆங்கிலேயர்கள் அழித்துவிட எண்ணினர். சிதம்பரனாரின் தீவிரப்போக்கையும் மக்கள் மேல் செல்வாக்கையும் கண்டு ஆங்கிலேயர் கொதிப்படைந்தனர். காங்கிரஸின் சூரத் மாநாட்டுக்குப் பிறகு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர். நமது கப்பலோட்டிய தமிழன் வ. வு. சியும் கைது செய்யப்பட்டார். துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட முதல் இந்தியர் வ. வு. சி. யே ஆகும். ஆனால் அத்தண்டனை உயர்நீதி மன்றத்தால் ஆறு ஆண்டு தண்டனையாகக் குறைக்கப்பட்டது. சிறையில் செக்கிழுத்தும் உணவின்றியும் மிகவும் துன்பப்பட்டார். சிறைவாசம் முடிந்து 1912 -ல் விடுதலை ஆனார்.

காந்திஜியின் தலைமையை விரும்பாத காரணத்தால் 1920 -ல் காங்கிரஸிலிருந்து வெளியேறினார். எனினும் 1920 -ல் மீண்டும் காங்கிரஸில் சேர்ந்தார். பின்னர் நடந்த சூரத் மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

அவர் பலமொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். தமிழ் இலக்கியத்துக்கு பெரும தொண்டுகள் செய்தார். திருக்குறளுக்கு மணக்குடவர் எழுதிய உரையை திருத்தமாக வெளியிட்டார். தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்திற்கு இளம் பூரணர் உரையை வெளியிட்டார். தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தையும் அவ்வாறு திருத்தமாக வெளியிட்டார். நன்னிலை என்ற நூலுக்கும் எளிய உரை எழுதினார். ‘சிவஞான போதம்’ என்ற இந்துமத நூலுக்கும் நயமான உரை எழுதினார்.

அறநெறிகளைக் கடைப்பிடிக்காது இருந்தால் மக்கள் உயர்வு பெற முடியாது என்பது அவரது கொள்ளையாக இருந்தது.

பாரதியார் வ.வு.சியை "தமிழகத்தார் மன்னர்" எனப்பாராட்டினார்.

1936 -ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 -ம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

5. டாக்டர் கேசவ பலிராம் ஹெட்கேவார்

1889 -ம் ஆண்டு வேதமூர்த்தி பலிராம் பந்த்ஹெட்கேவார் என்பவருக்கும் ரேவதிபாய் அம்மையாருக்கும் ஐந்தாவது மகவாக கேசவர் பிறந்தார். இவர் சிறுவயதிலேயே மிகுந்த தேச பக்தி உடையவராகத்திகழ்த்தார். இந்துக்களின் சொந்த நாடான பாரத பூமியில் அன்னியர்களான ஆங்கிலேயர்கள் அரசாட்சி செய்வதையும் சிறு பான்மையினரான முஸ்லீம்களாலும் கிறிஸ்தவர் களாலும் தமது சொந்த நாட்டிலேயே இந்துக்கள் துன்புறுத்தப்படுவதையும் பார்த்து மனம் நொந்தார்.

பிரிட்டிஷ் ராணியின் முடிசூட்டு விழா நாளன்று பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. சிறுவனாக பள்ளியில் படித்துக் கொண்டிருந்த கேசவர் வெறுப்புடன் அந்த இனிப்புகளை ஏற்க மறுத்துவிட்டார்.

பாரத அன்னையைப் புகழ்ந்து பாடும் தேசீய கீதமான வந்தேமாதரம் என்னும் பாடலை யாரும் பாடக்கூடாது என்று ஹார்சன்பிரபு என்ற ஆங்கி லேயன் 1905 ம் ஆண்டு உத்தரவு பிறப்பித்தான். ஆனால் தேசப்பற்றுமிக்க கேசவர் தன்னுடைய பன்னிரண்டாவது வயதில் ஆங்கிலேய அதிகாரி கள் பாடசாலைக்கு சோதனைக்கு வந்தபோது மாணவர்களை ஒன்று திரட்டி ஒவ்வொரு வகுப்பி லும் வந்தேமாதரம் முழங்கச்செய்தார். "பாரத அன்னைக்கு வணக்கம், பாரத அன்னை வாழ்க"

என்னும் தாய் நாட்டுப் பாடல் பாடியதற்காக பிஞ்சு வயதிலேயே கேசவர் கொடுமையான முறையில் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டார். பின்பு வேறு ஒரு பள்ளியில் சேர்ந்து மெட்ரிகுலேஷன் தேறினார்.

இந்நாளில் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து வெளியேற்ற தேசபக்தர்கள் தீவிரமான சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். சுதந்திர போராட்ட வீரர்கள் பெரும்பாலும் கல்கத்தாவில் இருந்ததால் அவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்காகவும் தன்னுடைய படிப்பைத் தொடர்வதற்காகவும் கேசவர் 1910-ல் கல்கத்தா சென்றார். கல்லூரியிலும் வெளியிலும் ஆங்கில அரசாட்சிக்கு எதிரான பிரசாரங்களிலும் போராட்டத்திலும் தீவிரமாக ஈடுபட்டார். பாரத நாட்டையோ இந்துமதத்தையோ பழித்துப் பேசுவதை பொறுத்து கொள்ள மாட்டார்.

டாக்டர் படிப்பை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நாகபுரி திரும்பினார். டாக்டர் தொழிலை நடத்தி பணம் சம்பாதிக்கும்படி நண்பர்களும் உறவினர்களும் வற்புறுத்தினர். ஆனால் அடிமையாகி விட்ட தாய் நாட்டின் மீதும் ஒற்றுமையில்லாது தவிக்கும் இந்துக்கள் மீதும் மாறாத பக்தி கொண்ட கேசவர் பணத்தைத் துச்சமாக மதித்தார். தன் வாழ்நாள் முழுவதையும் தேச சேவையிலும் இந்து மத சேவையிலும் ஈடுபடுத்த துணிந்துவிட்டார்.

சுதந்திர போராட்ட வீரர்கள் திலகர் தலைமையில் ஒரு பகுதியினர் தீவிரவாதிகளாகவும் கோபாலகிருஷ்ண கோகலே தலைமையில் இன்னொரு பகுதியினர் மிதவாதிகளாகவும் ஆங்கிலேயரை எதிர்த்துப்போராடி வந்தனர். நமது கேசவர் தீவிரவாதிகளின் பக்கம் சேர்ந்து தீவிரமாக செயல் புரிந்

தார். நாக்பூரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் வீரமிக்க திலகரை காங்கிரஸ் தலைவராக்க வேண்டுமென்று கேசவர் முயற்சித்தார். ஆனால் அம் மாநாடு கூடுமுன்பே திலகர் மரணம் அடைந்து விட்டார். கேசவர் தளர்ச்சி யடையவில்லை. அந்நாளில் பெரும் வீரராகவும் அறிவாளியாகவும் தியாகியாகவும் தீவிரவாதியாக வும் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட பின் யோகியாகி பாண்டிச்சேரியில் வசித்துவந்த ஸ்ரீ அரவிந்தரை நாடி விரைந்தார். ஆனால் தியா னத்திலும் ஆன்மீகத்திலும் மூழ்கிவிட்ட ஸ்ரீ அர விந்தர் மீண்டும் அரசியலில் ஈடுபட மறுத்து விட்டார். இப்போதும் கேசவர் மனம் தளரவில்லை. நாகபுரி மாநாட்டில் காந்தியடிகளை சந்தித்து பாரதத்திற்கு பூரண சுதந்திரம் வேண்டும் என்னும் தீர்மானத்தை நிறைவேற்றும்படி வேண்டினார். அதுவும் நடைபெறவில்லை.

இக்கால கட்டத்தில் கேசவரின் தோழர்களா கிய பல இளைஞர்கள் ஆயுதங்கள் சேகரிப்ப திலும் ஆங்கில அரசுக்கு எதிரான நடவடிக்கை களில் ஈடுபடுவதிலும் ஒத்துழைத்தனர். ஆனால் முறையான பயிற்சி இல்லாமையாலும் அவர்கள் தன்னம்பிக்கை இல்லாமையாலும் பிரிந்து விட்டனர். கேசவர் சிந்தித்தார். இந்துக்கள் பலகோடி பேராக இருந்தும் 9000 மைலுக்கு அப்பால் இருந்துவந்த சில ஆங்கிலேயர்கள் நமது நாட்டை அடிமையாக் குவதற்கு காரணம் அவர்கள் மத்தியிலுள்ள ஒற்றுமையும் கட்டுப்பாடும் என்பதை புரிந்து கொண்டார்.

இந்து இளைஞர்கள் ஆங்கில மோகத்தில் ஈடு படுவதையும் அவர்கள் சிறுகசிறுக தந்திரமாக கிறிஸ்தவமதத்திற்கு மாற்றப்படுவதையும் உணர்ந்

தார் கேசவர். மக்கள் மத்தியில் தேசப்பற்றை ஊட்டும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். உறங்கிக் கிடந்த இந்தியர்களை விழித்தெழச் செய்து கொண்டிருந்த கேசவரை ஆங்கில அரசாங்கம் 1921 -ல் கைது செய்து ஓராண்டு சிறையிலிட்டது. தண்டனை முடிந்து வெளிவந்த கேசவர் முன்னிலும் பன்மடங்கு வேகத்துடன் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டார்.

துருக்கியில் மக்கள் காலிப்சுல்தானை அகற்றி விட்டு 'கமால் பாஷா' "அட்டாதுர்க்" என்னும் தீவிர தேசபக்தனை தங்கள் தலைவனாக ஏற்றனர். இதை எதிர்த்து இந்திய முஸ்லீம்கள் போராட்டம் துவக்கினர். இதற்கு 'கிலோபத்" இயக்கம் என்று பெயர். இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக உயிரைக் கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்திய முஸ்லீம்களின் போக்கைக்கண்டு வேதனைப் பட்டார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் கதர்தொப்பி அணிவது வழக்கம் கேசவருடைய முஸ்லீம் நண்பர் சமீலுல்லா துருக்கி நாட்டுத்தொப்பி அணிந்திருந்தார். இதுபற்றி அவரிடம் கேட்டபோது அவர் கொடுத்த பதில் கேசவரை திகைக்க வைத்தது. "எனக்கு என்னுடைய மதம் தான் முக்கியம். இந்தியா என்பதும் சுதந்திரம் என்பதும் கடையில் தான்" என்றார், சமீலுல்லாகான்.

கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவு கொடுக்கக் கூடாதென்று காந்திஜியிடமும் காங்கிரசாரிடமும் கேசவர் சொன்ன ஆலோசனை ஏற்கப்படவில்லை.

கிலாபத் இயக்கம் தோல்வி கண்டதும் பல இடங்களில் இந்துக்கள் முஸ்லீம்களால் அநியாய

மாக தாக்கப்பட்டார்கள். மலபாரில் பாப்ளா முஸ்லீம்களால் ஆயிரக்கணக்கான இந்துக்கள் கொல்லப் பட்டனர். பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் மத மாற்றப்பட்டனர். இந்து பெண்கள் மானமங்கப் படுத்தப்பட்டனர். கோடிக்கணக்கான இந்துக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. வட இந்தியாவில் ஷாரன்பூர், நாக்பூர், அமேதி, சம்பல், குல்பர்கா, கோகட் ஆகிய இடங்களிலும் தாக்குதல் நடந்தது. இந்துக்கள் பெரும்பான்மையாக உயிர்களையும் பொருள்களையும் இழந்தனர்.

முஸ்லீம்கள் நமது சகோதரர்கள் என்ற கொள்கைக் கேற்ப எல்லா இந்துக்களும் நிதிஉதவி செய்து 1920-இல் நாக்பூரில் பிரம்மாண்டமான மசூதி ஒன்று கட்டப்பட்டது. ஆனால் மறுவருடமே காலம்காலமாக நடந்துவந்த வினாயக சதுர்த்தி விழாவையும, ஊர்வலத்தையும், பஜனையையும் மசூதி ரோடு வழியாக செல்லக்கூடாது என்று முஸ்லீம்கள் தடுத்தனர்.

இந்தியா வரலாற்றில் கோடிகோடியாக வாழுகின்ற இந்துக்கள், குறைந்த எண்ணிக்கை கொண்டஅந்நிய ஆக்கிரமிப்பாளருக்கு ஒவ்வொரு முறையும் தோல்வி அடைந்த சோக வரலாறுகளே நிறைந்துள்ளன.

இந்திய நாட்டுக்கும் இந்திய மக்களுக்கும் அடிமை வழ்வும் அவல நிலையுமே ஆயிரம் ஆண்டுகளாக அனுபவிக்க வேண்டியதாயிற்று .இந்தியா வீரர்களும் தியாகிகளும் நிறைந்தநாடு. ஆனல் ஒற்றுமையில்லாமையினுல் அந்நியர்கள் செய்யும் கொடுமைகளால் துன்புறுகின்றனர். இந்துக்களிடம் ஒற்றுமையும் கட்டுப்பாடும் தேச பக்தியும் ஏற்பட்டால் மட்டுமே உண்மையான பெருமைப் படத்தக்க சுதந்திரநாடு அமையமுடியும் என்பதை உணர்ந்த

டாக்டர்ஜி 1925 விஜயதசமி நாளன்று ராஷ்டிரீய சுயம் சேவக சங்கத்தை நிறுவினார்.

இச்சங்கம் நமது முன்னோர்களாகிய ரிஷீஸ்வர்களுடையவும் தியாகத்தினுடையவும் சின்னமாகிய காவிக்கொடியை (பரமபவித்ர பகவத் த்வஜம்) குருவாகக்கொண்டு செயல்படுகிறது. இச்சங்கம் நடத்தும் தினசரி சாகாக்களில் உடற்பயிற்சி விளையாட்டு தேசியசிந்தனை' தேசபக்தி பாடல்கள் முதலியனகற்பிக்கப் படுகின்றன.

டாக்டர்ஜி அயராது உழைத்து பாரதநாடு முழுவதும் சங்க சாகாக்கள் ஏற்படுத்தினார். 1940-ம் ஆண்டு ஜூன் 29-ம் நாள் டாக்டர் கேசவ பெலிராம் ஹெட்கேவார் இறைவனடி எய்தினார்

அவர் நிறுவிய சங்கம் பல்லாயிரக்கணக்கான தினசரி சாகாக்கள் நடத்தி உடல் பலமும், மனோபலமும் தூய்மையும், ஒழுக்கமும். தியாக உணர்வும் கட்டுப்பாடும். தெய்வபக்தியும், தேசபக்தியும் நிறைந்த இந்தியர்களை உருவாக்கி வருகிறது.



பாடம் 17

பொது அறிவு

1) மாதா, பிதா, குரு, தெய்வம்

மாதா, பிதா குரு, தெய்வம் என்ற சொற்றொடர் தொன்று தொட்டே வழக்கில் உள்ளது ஆகும். மனித வாழ்க்கையின் குறிக்கோளை நிறைவு செய்யும் வழியினை இந்த நான்கு வார்த்தைகளும் குறிக்கின்றன. மனிதன் பிறப்பதும், வாழ்வதும் பின் இறந்து விடுவதும் நாம் தினமும் காணும் நிகழ்ச்சிகளாகும். காரணமில்லாமல் காரியங்கள் நிகழ்வதில்லை. ஆன்மா மும்மலங்களைக் களைந்து தெய்வத்தை அடைவதற்கு தெய்வத்தால் அளிக்கப் படும் அரிய வாய்ப்பு மனிதப்பிறவியாகும். ஆகவே தான் ஔவைப்பிராட்டியார் "அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது!" என்றார். மனிதனாகப் பிறந்தவன் தனது இலட்சியத்தை அடைய முயற்சிக்க வேண்டும். முயற்சியுடைய மனிதனுக்கு தெய்வமே மாதா பிதா குரு என்ற மூன்று உருவில் உதவி செய்கிறார். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்னும் பழமொழிகள் பொருள் நிறைந்தவை யாகும்.

மனிதன் பிறவியெடுக்கும் போது முதலில் அவன் தாயை (மாதா) அறிகிறான். தாயின் கருப்பையினிள் உருவாகி வளர்கிறான். பிறந்தபின் தாயின் பாலை அருந்தி பசி தாகம் தீர்த்து வளர்கிறான். அப்பொழுது அவன் அறிந்ததெல்லாம் "தாய்" (மாதா) என்ற தெய்வத்தை மட்டுமே யாகும். சொல்லித் தெரியவேண்டிய தேவையின்றியே அவன் 'அம்மா' என்று தன் தாயை அழைக்கிறான்.

சில மாதங்களில் அவனது கவனம் வெளியில் செல்கிறது. அப்பொழுது தாய் அவனுடைய தந்தையை காண்பித்து 'அப்பா' என்று அழைக்க கற்றுக்கொடுக்கிறாள். அப்பொது அவன் தந்தை (பிதா) என்ற தெய்வத்தை அறிகிறான். தாயும் தந்தையும் அவனை வளர்க்கிறார்கள்

சில வருடங்களில் அவனது மூளை விரி வடைகிறது. அவனது கவனம் தாய் தந்தையரை யும் கடந்து இந்த பரந்த உலகில் செல்கிறது. அப்பொழுது அவனுடைய தந்தை அவனை நல்ல 'குரு' விடம் கொண்டு சேர்க்கிறார். மூன்றாவதாக 'குரு' என்ற தெய்வத்தை அறிந்த மனிதன், எண்ணும் எழுத்தும், இம்மைக்குத் தேவையான பயிற்சிகளும் மறுமைக்கு தேவையான அறிவு களும் அவரிடமிருந்து பெறுகிறான்.

குருவிடமிருந்து ஆன்மிக அறிவைப் பெற்ற மனிதன் நான்காவதாக தெய்வத்தை அறிகிறான். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்தை அடைய முயற்சிக்கிறான். அவனது வாழ்வின் இலட்சியமாகிய இறைவனை அடைந்து பிறப்பினை அறுக்க முயற்சிக்கிறான்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற சொற் றொடர், மாதாவிலிருந்து தொடங்கி பிதா மூல மாக குருவை அடைந்து அவர் காட்டிய வழியில் தெய்வத்தை அடையும், மனிதனின் வாழ்க்கைப் பாதையை காட்டுகிறது.

2) குருவின் பெருமை

'கு' என்றால் இருட்டு என்றும் 'ரு' என்றால் நீக்குபவர் என்றும் பொருள். குரு என்ற வார்த் தைக்கு அறியாமை அல்லது அஞ்ஞானம் என்ற

இருட்டை நீக்குபவர் என்று பொருள். ஆன்மாவை இறை நினைவிலிருந்து நீக்கி பிறப்பு இறப்பு என்னும் துன்பங்களுக்கு ஆளாக்குவது மும்மலங்களாகும். அஞ்ஞானம் அகன்றால்தான் பிறவிப்பிணி நீங்கும். அஞ்ஞானம் அகலுவதற்குத் துணை நிற்பவரும் வழிகாட்டுபவரும் குருவேயாதலால் குருவின் பெருமை சொல்லிலடங்காததாகும். இறையருளால் நல்லகுருகிடைக்கப் பெற்றவர்கள் வாழ்வின் இலட்சியத்தை எளிதில் அடைவர். இறைவனே குருவாக தோன்றிய வரலாறுகள் நமது நாட்டில் ஏராளமாக உண்டு.

"தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

என்னும் திருமந்திரப்பாடல் குருவின் பெருமையை விளக்குகிறது.

ஆதிசங்கரருக்கு கோவிந்த பாதரும், சத்ரபதி சிவாஜிக்கு சமர்த்த ராமதாஸ் சுவாமிகளும், ஹரிஹரருக்கும் புக்கருக்கும் வித்யாரண்ய சுவாமிகளும், சுவாமி விவேகானந்தருக்கு பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் சிறந்த குருவின் மாண்பினைக் காட்டும் உதாரணங்களாகும். அருணகிரிநாதருக்கும் வள்ளலாருக்கும் முருகனே குருவாக தோன்றினார். அவ்வண்ணம் மணிவாசகப் பெருமானுக்கு சிவபெருமானே உபதேசம் அளித்தார். அர்ஜுனனுக்கு பகவான் கண்ணனே குருவாகத் தோன்றினார்.

நல்லகுரு அமையாதவர்கள் துன்பத்திற்குள்ளாவர். கலியுகத்தில் நல்ல குரு வாய்க்கப் பெறுவது அரிது.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி
குருடும் குருடும் குழிவிழுமாறே.

—திருமூலர்

முற்காலத்தில் தந்தை தமது மகனை தகுந்த குருவிடம் சேர்ப்பிப்பார். குரு அவனை இவ்வுலகிற்கும் அவ்வுலகிற்கும் தகுதியுடையவனுகவும் வீரனாகவும், ஆண்மையுடையவனாகவும் பயிற்றுவித்து தந்தையிடம் மீளச் சேர்ப்பிப்பார். குரு தனது மாணுக்கனை பூரண மனிதனுக மாற்றும் வல்லமை படைத்தவராக இருப்பார். மனிதன் பூரணத் தன்மை அடைய குரு இன்றியமையாதவராவார். குருவிடம் பக்தி செலுத்துவது மாணவனின் கடமையாகும்.

3. கல்வியின் நோக்கம்

கல்வி என்பது கற்றல் கேட்டலினுல் பெருகும்- "கற்றிலன் ஆயினும் கேட்க" எனறார் வள்ளுவர். உயிர்க்கு உறுதிபயக்கும் நூல்களைக் கற்றல் வேண்டும். அவற்றைக் கல்லாதவன் கற்றறிந்தார் மூலம் கேட்டறிதல் வேண்டும். வறுமையினுலும் அறிவுஇன்மையாலும் ஒருவன் துன்பப்படும் பொழுது மனத்தளர்ச்சி உண்டாகும். அத்தளர்ச்சியினை கல்வி நீக்கும். எனவே கல்வி, வழுக்கு நிறைந்த சேற்றுநிலத்தில் நடப்பவருக்கு ஊன்று கோல்போல உதவும்.

கல்வியால் அறிவு வளரும், அறியாமை மறையும். கற்றவனுக்கு எந்த நாடாயினும் எந்தஊராயினும் சொந்த நாடாகும், சொந்த ஊராகும், ஒருபிறப்பில் கற்ற கல்வி ஒருவர்க்கு ஏழுபிறப்பிற்கும் உதவும் என்பது திருவள்ளுவர் கருத்து.

ஒருவர் தாம் நல்வழியில் ஒழுகுவதற்கும், பிறர்க்கு உறுதிகூறுவதற்கும் உதவுவது கல்வி.

மனிதன் இடைவிடாமல் தேடவேண்டிய செல்வம் கல்விச்செல்வமே. இது' கேடில் விழுச்செல்வம்'' மற்றைய பொருட்செல்வத்தால் மனிதன் பெருமை பெறுவதற்கில்லை. பொருட் செல்வத்தை ஈட்டுதல். பாதுகாத்தல் இழத்தல் என்பவற்றால் மனிதன் துன்பம் அடைதலும் பகைமைக்கு ஆளாதலும் கூடும். கற்றறிந்த சான்றோர் பொருட் செல்வத்தை விரும்பமாட்டார். கல்விச் செல்வத்தையே விரும்புவர் ஒரு மனிதன் இன்பம் அடைவதற்குக் காரணமாக இருப்பதும் உலகம் இன்பம் அடைவதற்கும் காரணமாயிருப்பதும் கல்விதான்புகழ். பொருள் வழிபாடு இவற்றைப் பெறக்காரணமாக அமைகிறது கல்விதான். அதுவே அறம், விடுபேறு ஆகியவற்றை அடையச் செய்கிறது. எனவே கல்வியை இடையறாமல் கற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

கல்விக்கடலின் எல்லையைக் காணமுடியாது. கற்பவரின் வாழ்நாளோ மிகக் குறைவு. ஆதலால் உயிருக்கு உறுதிபயக்கும் பொருட்களைநாடிக்கற்றல் வேண்டும். விபரீதம் ஐயங்களை நீக்கி உண்மைப் பொருளைத்தேடி அறிந்து கற்றல் வேண்டும். நல்லவர்பலருடன் பழகல்அவர் உரை கேட்டல் அவற்றை உள்ளத்தால்' சிந்தித்து உணர்தல், உணர்ந்து அவற்றையே வாழ்வாக்க் கொள்ளல், இதனை கற்க,என்றும் கசடறக் கற்க, என்றும், கற்பவை கசடறக்கற்க, என்றும் கற்றபின் அதற்குத்தக நிற்க. என்று வள்ளுவர் பெருமான் கூறினார்.

சடற்கரை மணற்கேணி தோண்டத் தோண்ட தண்ணீர் ஊறும். ஊறஊற தண்ணீர் இறைக்கப் பட வேண்டும் இல்லையென்றால் மாசடி, சேத்தை, குப்பை, கூழம் விழுந்து தூர்ந்து

பத்து நாட்கள் தண்ணீர் இறைக்கவில்லையென்றால் விழுந்த செடி செத்தைகள் அழுகி நாற்றம் வீசும். அது போன்று பத்துநாள் படிக்காமல் சிந்திக்காமல் இருந்தால் கல்வி பயனற்றதாகி விடும். படித்துக்கொண்டே இருக்கவேண்டும். பத்து நாட்கள் படிக்காவிட்டால் இறையாத கோணி போல் ஆகிவிடும். எனவே ஒருவன் சாவது வரையிலும் கற்றுக்கொண்டேயிருக்க வேண்டும்.

தெய்வப்புலவர் "கற்றதனாலாய பயன் என் கொல்" என்ற வினாவை எழுப்புகிறார். எத்தனை டாக்டர் பட்டம் பெற்றவரானாலும் வாலறிவனாகிய இறைவனது பாதங்களை நெஞ்சில் நினைக்காவிட்டால் கற்றகல்வியால் எந்தபயனுமில்லை.

பொய்யை ஒழித்து சத்தியத்தை நிலை நிறுத்தல், அஞ்ஞான இருளை நீக்கி ஞான ஒளியினைப் பெறல் நிலையற்ற பொருட்களை விட்டொழித்து என்றும் நிலைபெறுகின்ற உண்மைப் பொருளை நாடல் அப்பொருளில் வாழ்வை உறுதிப்படுத்தல் அதனை இடைவிடாது உணர்தல், இப்படி உணர்ந்து உணர்ந்து தன்னையே உணர்தல், இவையே கல்வியினாலய பயன். கல்வியின் ஊற்று தன்னுள்ளிருந்து கிளம்புவதை உணர்தல், அதனால் கலைகள் பல வளர்தல் இப்படி பல கலைகளை வளர்த்து இந்தப் பாரினை உயர்த்த வேண்டும். பாரத தேசத்தின் பண்பு இதுதான்.

கல்வியின் நோக்கம் மனிதன் தன்னை அறிதலும், தான் வாழும் தேசத்தை உணர்த்தலும் ஆகும். தெய்வ பக்தியும், தேசபக்தியும் இருபெரும் சக்திகள் கல்வியின் நோக்கம். இந்தச் சக்திகளை

வளர்த்தல் வேண்டும். உயிரற்ற பொருட்களைப் பற்றி அறியும் கல்வி விஞ்ஞானம் எனப்படும். மனித ஆன்மாவைப் பற்றிய கல்வியே உயர் கல்வி யாகும். எனவே தேசத்தையும், தெய்வத்தையும் ஆன்மீகத்தையும் பற்றிய கல்வியே நமக்குத் தேவையானது. வெறும் குமஸ்தா வேலைக்கு தயார்ப்படுத்தும் இன்றைய பல்கலைக் கழகக் கல்வியால் நாட்டில் பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. பிறர் துன்பத்தைத் தன துன்பம் போல் கருதி அதனை போக்குவதற்குப் பயன்படும் உயர்ந்த கல்வியே நமக்குத்தேவை

4. சமய வகுப்பு

"காடுகளிலும், மடங்களிலும் மறைந்து கிடக்கும் ஆன்மீகம் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு குடிசையிலும் பரவவேண்டும்" என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்று நடைமுறையில் வந்தால் தான் இந்து ஒருவன் உண்மை இந்துவாக மாற முடியும். எனவே அதற்காக ஆரம்பிக்கப் பட்டதே சமய வகுப்பு (பண்பாட்டு வகுப்பு).

சமயவகுப்பு ஒவ்வொரு சிற்றூரிலும் ஒவ் வொரு நகரத்தின் பல பாகங்களிலும் நடத்தப்பட வேண்டும். சமய வகுப்பு நடத்துவது மிக எளிது. ஊர்க்கோவிலிலோ, பொது இடத்திலோ ஊரிலுள்ள மாணவர்களையும்பெரியவர்களையும்கூட்டிவைத்து 2 மணி நேரம் சமயவகுப்பு நடத்த வேண்டும். வகுப்பில் அவர்களுக்கு இந்து சமயக் கதைகள், தத்துவங்கள் முதலியவற்றை பாடபுத்தகத்தின் உதவியுடன் கற்பிக்க வேண்டும்.

சமய வகுப்பில் மாணவர்களின் ஒழுக்கத்தை முக்கியமாக கவனிக்க வேண்டும். பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் கீழ்ப்படிந்து நடத்தல் போன்ற நற்குணங்களை கற்பிக்க வேண்டும். பேச்சு,

பாட்டு, நடனம், நாடகம் ஆகியவற்றில் மாணவர்களுக்கு பயிற்சியளித்து அவைமூலம் ஆன்மீகத்தை ஊட்ட வேண்டும். வருகைப்பதிவு செய்யும் போது மாணவர்களின் பெயர்களை வாசிக்க அவர்கள் 'ஓம்' எனக்கூறி வருகையைத் தெரிவிக்க வேண்டும்.

சமய வகுப்புகள் மூலம் ஒழுக்கமும் பக்தியும் வீரமும், நாட்டுப்பற்றும் உள்ள ஆண்களும் பெண்களும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். வருங்கால பாரதமும், பாரத சமுதாயமும் உன்னத நிலையை அடைய சமயவகுப்புகளே அடிப்படை என்பதை அறிந்து நாம் செயல்படுவோமாக.

5. திருவிளக்கு வழிபாடு

திருவிளக்கு அல்லது குத்துவிளக்கு ஒவ்வொரு இந்து இல்லத்திலும் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். தினமும் மாலை சந்தி வேளையில் திருவிளக்கு ஏற்றி வைப்பதும் இறைவனது திருநாமங்களை குழந்தைகளுடனும் குடும்பத்தினருடனும் பாடி. பஜனை செய்வது அர்ச்சனை செய்வது இல்லாளின் கடமையாகும். ஆகவே மணப்பெண்ணை விளக்கேற்ற வந்தவள் என்றும் அழைப்பார்கள். தேவியின் அருள் பெறவும் குடும்பத்தினர் அனைவரும் ஒற்றுமையாக இருக்கவும், பிணிகள் நீங்கி இன்பம் சுரக்கவும், குழந்தைகளுக்கு நற்குணமும், நல்லொழுக்கமும், பக்தியும் உண்டாகவும், பொதுவாக குடும்பத்தில் லட்சுமிகடாக்ஷம் பெறவும் திருவிளக்கு வழிபாடு காரணமாக அமைகிறது.

ஓர் ஊரிலுள்ள குடும்பங்கள் அனைத்தும் ஒற்றுமையாக இருக்கவும், ஊருக்கு தேவியின் அருள் கிடைக்கவும், திருவிளக்கு வழிபாடு

காரணமாக அமைகிறது. ஊரிலுள்ள எல்லா வீடுகளிலிருந்தும் வீட்டுக்கு ஒரு பெண் வீதம் திருவிளக்குப் பூஜைப் பொருட்களும் எடுத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஊர்க் கோவிலில் அல்லது ஊர் மக்களுக்கு பொதுவாக உள்ள ஓரிடத்தில் கூடி திருவிளக்கு வழிபாடு செய்ய வேண்டும்.

பெண்கள் பக்தி சிரத்தையுடன் இந்த பூஜையை செய்ய வேண்டும். இதிலுள்ள மந்திரங்கள், பாடல்கள் அர்ச்சனைகள் அனைத்தும் பெண்களாலேயே சொல்லிக் கொடுக்கப்பட்டு நடத்தப்பட வேண்டும். மாதம் ஒருமுறை ஒவ்வொரு ஊரிலும் நடை பெறும் திருவிளக்கு வழிபாட்டின் மூலம் ஏற்படும் நன்மைகள் எண்ணிலடங்காதன. தாய்மார்களின் ஒரு விழா போன்று ஒவ்வொரு ஊர்களிலும் நடைபெறும் இந்த வழிபாட்டினால் ஒற்றுமை வளர்கிறது. ஊரில் புனிதமான இந்துச் சூழ்நிலை உருவாகிறது. தாய்மார்கள் அன்னியோன்யமாக பழகும் சந்தர்ப்பம் உண்டாகிறது. குடும்பங்கள் இணைகின்றன. தேவியின் அருளால் எல்லா நன்மைகளும் உண்டாகிறது. திருவிளக்கு வழிபாடு ஒவ்வொரு ஊரிலும் நடைபெறுமாயின் நமது நாடு வெகுவிரைவில் ஒரு உண்மையான இந்து நாடாக மாறவும் அனைத்து இல்லங்களும் உண்மையான இந்து இல்லங்களாக விளங்கவும் செய்யும் என்பது திண்ணம்.

6. சத் சங்கம்

பேராலயங்கள், ஊர்க்கோவில்கள், பஜனை மடங்கள் முதலியவற்றில் வாரம் ஒருநாள் சத்சங்கம் நடத்த வேண்டும். சத்சங்கம் என்ற வார்த்தைக்கு நல்லார் இணக்கம் என்று பொருள் கொள்ளலாம்.

உண்மையான இந்துக்கள் வாரம் ஒருநாள் ஒரு பொது இடத்தில் கூடி இந்துசமயத்தின் பெரும் தத்துவங்கள், ஆசாரங்கள், கோட்பாடுகள் பற்றி தெளிவு பெறுவதுவே சத்சங்கத்தின் இலட்சியம். சமய தத்துவங்களில் அறிவுடைய ஒருவரை அழைத்து வந்துஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி விளக்கம் கேட்டறிந்து பின் அது பற்றியுள்ள சந்தேகங்களை கேட்டுத் தெளிவு பெறுதல் சத் சங்கத்தின் நோக்கமாகும். இந்து சமயத்தின் பல் வேறு கோட்பாடுகளை பற்றி அறிவு பெற வேண் டியது இந்துக்களின் இன்றைய தேவையாகும். வாரத்தில் ஒருமணி நேரம் இதற்கென ஒதுக்குவது பெரும் பயனை அளிப்பதாகும். சத்சங்கத்தில் விளக்கவுரை, சந்தேகம் தெளிதல் நாமபஜனை, மௌ னம், தியானம் முதலியன நடத்தலாம். கோவில் களில் தனித்தனியாக வந்து வழிபட்டு தனித்தனி யாக பிரிந்து செல்லும் இந்துக்களை ஓரிடத்தில் ஒற்றுமையாக, அமைதியாக, அடக்கமாக உட்கார வைத்து சத்சங்கம் நடத்துவது பெரும் பயன் அளிப்பதாகும்.



பாடம் - 18

பொதுக் குறிப்புகள்

1. பஞ்சபூதங்கள்:

பிருத்வி (மண்) அப்பு (நீர்) தேயு (தீ) வாயு (காற்று) ஆகாசம் (வெளி). பஞ்சபூதங்கள், (ஸ்தூலம், சூக்ஷ்மம் என இருவகைப்படும்).

2. ஞானேந்திரியங்கள்:

மூக்கு (மண்ணின் கூறு) நாக்கு (நீரின் கூறு) கண் (தீயின் கூறு) தோல் (வாயுவின் கூறு) காது (ஆகாயத்தின் கூறு)

3. கர்மேந்திரியங்கள்

வாக்கு (தீயின் கூறு) பாணி - கை (வாயுவின் கூறு) பாதம் (ஆகாயத்தின் கூறு) - வாயு மலவாய் (மண்ணின் கூறு) உபஸ்தம் - குறி (நீரின் கூறு)

4. சிரார்த்தம்:

இறந்துபோன முன்னோர்களைக் குறித்துச் செய்யும் பூசை. இதை பித்ருபூசை என்பர். பித்ரு லோகத்திலிருக்கும் முன்னோர்களின் ஆன்மாவிற்கு அமைதியும், இன்பமும் கிடைக்க எள், பச்சரிசி, வெல்லம் இவைகளால் பிண்டம் போடுவார்கள். முன்னோர்கள் இறந்த நாட்களில் அல்லது அமாவாசை நாட்களில் சிராார்த்தம் நடத்துவார்கள். அவற்றில் ஆடி அமாவாசையும், மகாளாய அமாவாசையும் (நவராத்திரிக்கு முந்தியது) முக்கியம். கயா என்ற புண்ணிய தலத்தில் சென்று சிராார்த்தம் பண்ணினால் பிறகு சிராார்த்தம் செய்ய வேண்டிய தேவையில்லை.

சிரார்த்தம் என்பது முன்னோர்களைக் குறித்து, தகுதிவாய்ந்த பிராமணர்களுக்கு அளிக்கும் வெகுமதியாகும். சிரத்தை (ஈடுபாடு) யுடன் செய்யப்படும் கிரியையாதலால் இதற்கு சிரார்த்தம் என்று பெயர் வந்தது. முன்னோர்களை நினைத்து முக்கியமாக அமாவாசை நாட்களில் குறிப்பிட்ட சில மந்திரங்களைக் கூறி நீரிறைப்பதை 'தர்ப்பணம்' என்பர்.

ஒருவன் சிரார்த்தம், தர்ப்பணம் ஆகியவற்றைச் செய்வதால் இறந்துபோன அவனது முன்னோர்கள் பிதிர்லோகத்திற்கு (தென்புலம்) பயணஞ்செய்யும் போது தங்கள் பசி தாகங்களைத் தீர்த்துக்கொள்கின்றனர். சிரார்த்தமும், தர்ப்பணமும் செய்யாதவன் நகரத்தை அடைவான். அவன் நன்றிகெட்டவன் ஆகிறான். அவன் அடுத்த பிறப்பில் இழிந்த குலத்தில் பிறக்கிறான், வறுமையால் வாடுவான்.

5. வர்ணங்கள்

பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர். சூத்திரர் என வர்ணங்கள் நான்கு. பகவத்கீதையின்படி ஒருவனது குணத்தினுடையவும், கருமத்தினுடையவும் அடிப்படையில் வர்ணங்கள் அமைகின்றன. பிறப்பினாலல்ல.

அடக்கம், தவம், தூய்மை, நேர்மை பொறுமை, நூலறிவு, அனுபவஞானம், தெய்வ பக்தி இவைகளையுடையவன் பிராம்மணன்.

எதிரிகளை அடக்கும் வீரம், துணிவு, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, கொடை, ஆளுந்திறமை ஆகிய பண்புகளை உடையவன் க்ஷத்திரியன்

உழவு கால்நடை பராமரிப்பு. வாணிபம் ஆகிய தொழில்களைச் செய்பவன் வைசியன்.

ஏனைய மூவர்க்கும் பல தொண்டுகளையும், வேலைகளையும் செய்பவன் சூத்திரன். இதில் உயர்வு தாழ்வு கற்பித்தல் கூடாது.

6. ஆசிரமங்கள்

பிரம்மச்சரியம். (மாணவ பருவம்) கிருகஸ்தம் (இல்லறம்) வானப்ரஸ்தம் (தவம்) சன்யாசம் (துறவு)

(1) ஒரு பிரம்மச்சாரியின் முக்கிய கடமைகள்:

தன்னடக்கமும், நல்லொழுக்கமும் உடைய வனாயிருத்தல், கல்வி கற்றல். குருவிற்குத் தொண்டு செய்தல் ஆகியவையாம்.

(2) ஒரு இல்லறவாசி, நல்வழியில் பொருள் தேட, பஞ்ச மகாயஜ்ஞங்களைச் செய்து வரல் வேண்டும்.

பஞ்சமகாயஜ்ஞங்களாவன: தேவயஜ்ஞம். (தெய்வ வழிபாடு) ரிஷியஜ்ஞம் (மந்த்ர ஜபம், வேதபாராயணம்) பித்ருயஜ்ஞம் (இறந்துபோன முன்னோர்களை வழிபடல்), நரயஜ்ஞம் (மக்களுக்குத் தொண்டுபுரிதல்) பூதயஜ்ஞம் (கால்நடை, காகம், நாய், பூனை முதலியவைகளுக்கு உணவு முதலியன வழங்குதல்).

(3) இல்லறவாசி தனது உடம்பில் நரை திரையையும், மகனின் மகனையும் (பேரன்) கண்டபின் இல்லறத்தை விட்டு வானப்ரஸ்த தவவாழ்வை மேற்கொள்ளல் வேண்டும்.

(4) சன்யாச ஆசிரமம் என்பது வாழ்வின் கடைசி நிலை. இல்லறம் வானப்ரஸ்தம் ஆகிய முடிந்த பின், "யான் எனது" என்ற எண்ணங்களை விட்டு, விதிப்படி குருமூலமாக துறவு நெறியை மேற்கொள்ள வேண்டும்.

முற்பிறவியின் புண்ணியத்தால் சிலர் இளமையிலேயே, விவேகமும் (பகுத்தறிவு) வைராக்யமும் பெற்று, துறவு நெறியை மேற்கொள்கின்றனர். அதுவும் வேதசம்மதமான முறைதான்.

7. யுகங்கள் நான்கு. அவை முறையே க்ருத (ஸத்ய) யுகம், த்ரேதாயுகம், துவாபரயுகம், கலி யுகம் என்பனவாம்.

க்ருதயுகம்	*1728000*	ஆண்டுகளையும்,
திரேதயுகம்	*1296000*	ஆண்டுகளையும்,
துவாபரயுகம்	*864000*	ஆண்டுகளையும்,
கலியுகம்	*432000*	ஆண்டுகளையும்,

உடையனவாம். க்ருதயுகம் என்ற புண்ணிய யுகத்தில் தர்மமாகிய பசு நான்கு கால்களை உடைத்திருந்தது, வரவர தர்மங்குன்றி கலியுகத்தில் அதர்மம் பெருகியுள்ளது. தர்மமாகிய பசு ஒற்றைக்காலில் உலவுகிறது என்று புராணங்கள் கூறும்.

க்ருதயுகத்தில் இறைவனை அடையும் வழி தியானம், தவம்.
த்ரேதாயுகத்தில் அதற்குவழி வேள்விகளாயின
துவாபரயுகத்தில் மூர்த்திபூஜை.
கலியுகத்திற்கேற்ற தெய்வ நெறி ஆண்டவனது திருநாமங்களை பாடுவதாகும் (நாமஸங்கீர்த்தனம்). அத்துடன் மக்களுக்குத் தொண்டு செய்தலும் சேர்க்கலாம்.

(8) புருஷார்தங்கள்

(உறுதிப்பொருட்கள்) நான்கு. அவை - தர்மம் (அறம்) அர்த்தம் (பொருள்) காமம் (இன்பம்) விடு (மோக்ஷம்)

ஔவையார் இதனை ஒரு வெண்பாவில் சுருக்கமாக விளக்கியுள்ளார்.

ஈதலறம் தீவினைவிட் டீட்டல் பொருளொன்றும்
காதலிருவர் கருத்தொருமித் -தாதரவு
பட்டதே யின்பம் பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

(9) முக்குணங்கள்

சத்வம் (அமைதி தெளிவு தூய்மை) ராஜஸ் (ஆசை சஞ்சலம்) தமஸ் (தூக்கம் அறியாமை, சோம்பல்)

(10) அவஸ்தைகள்

மூன்று:- ஜாக்ரம் (விழிப்பு) ஸ்வப்னம் (கனவு) ஸுஷுப்தி (தூக்கம்). நான்காவது அவஸ்தையாக, துரியத்தைக்கூறுவர். அது பிரம்மானுபூதி நிலையாகும்.

(11) ஸப்தரிஷிகள்

ஏழுபேர்: மரீசி, அத்ரி, அங்கிரசு, புலஸ்தியர், புலகர், க்ரது, வஸிஷ்டர்.

(12) பிரம்மகுமாரர் நான்குபேர்

ஸனகர், ஸனந்தனர், ஸநுதனர், ஸனத்குமாரர் (ஸனத்ஸுஜாதர்) இவர்கள் நால்வரும் என்றும் தவசிகளான பிரம்மச்சாரிகளாகவே இருக்கின்றனர்.

பாடம் 19

அருளுபதேசக் கதைகள்

1. பச்சோந்திக் கதை

ஒருவன் ஒரு மரத்தினடியிலிருந்த ஒரு பிராணியைப் பார்த்தான். அது சிவப்பு நிறமாக இருந்தது. வேறு ஒருவன் அதைப் பார்த்த பொழுது மஞ்சள் நிறமாக இருந்தது. மற்றொருவன் அது பச்சை நிறப்பிராணி என்றான். இவ்வாறு இவர்கள் தங்களுக்குள் அவரவர் கூறுவதே சரி என வாதிட்டுக் கொண்டிருந்த பொழுது, அம்மரத்தினருகில் வசிக்கும் ஒரு மனிதன் அங்கே வந்தான்.

அவன் இவர்களைப் பார்த்து "நான் இம் மரத்தினடியிலேயே இருப்பவன் நீங்கள் கூறுவது அனைத்தும் உண்மை. அப்பிராணியின் பெயர் பச்சோந்தி. அது நிறத்தை அடிக்கடி மாற்றும் தன்மையுடையது. எனவே நீங்கள் ஒவ்வொருவர் கண்ட போதும் ஒவ்வொரு நிறத்தில் தெரிந்தது, என்றார். வாதிட்டவர்கள் உண்மையறிந்து தெளிவு பெற்றனர்.

அதுபோல் பரம்பொருள் ஒன்று என்பதை நமக்கு ஞானிகள் கூறுகின்றனர். எனவே நாம் வேற்றுமைகளை மறந்து அன்புடன் ஒன்றுபட்டு வாழ்வோமாக.

2. யானையும் குருடர்களும் கதை

ஒரு ஊரில் சில குருடர்கள் இருந்தனர். அவ்வூருக்கு வந்ததோர் யானையைப் பார்க்க அவர்கள் சென்றனர். குருடர்கள் யானையைத் தொட்டுப்

பார்த்தனர் துதிக்கையை தொட்டவன் யானை 'உலக்கையைப்' போன்றதென்றும், காலைத் தொட்டவன் யானை 'மரம்' போன்றதெனவும், வயிற்றைத் தொட்டவன் 'பானை' போன்றது எனவும், காதைத் தொட்டவன் 'முறம்' போன்றது எனவும் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகக் கூறலானார்கள். உண்மையில் யானையின் முழு வடிவையும் அக்குருடர்கள் அறியவில்லை.

இதுபோலவே ஒவ்வொருவரும் கடவுள் இப்படித்தான் இருக்கிறார் இப்படித்தான் இருக்கிறார். என வாதிடுகின்றனர். அவர்கள் குருடர்களுக்கு ஒப்பானவர்களே. ஆனால் கடவுள் அதாவது பரம்பொருள் ஒன்று என்பதை ஞானிகள் உணர்கின்றனர். நாமும் பரம்பொருள் ஒன்று என்ற உண்மையை உணர்ந்து வழிபடுவோமாக.

3. ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசங்கள்

1. சத்பொருள் (மெய்ப்பொருள்) ஒன்றேதான். வெளியில் தோயும் வேறுபாடுகளெல்லாம் நாமரூப வேறுபாடுகளேயாகும். ஏரிதனில் பல படித்துறைகள் உள்ளன. ஒரு படித்துறையில் நீர்பருகும் இந்துக்கள் அதை 'ஜலம்' என்கின்றனர். வேறு இடத்தில் நீர் பருகும் முஸல்மான்கள் 'பானி' என்று கூறுகின்றனர். பிறிதொரு இடத்தில் நீர் பருகும் இங்கிலீஷ்காரர் அதை 'வாட்டர்' என்பர். மூன்று சொற்களுமே ஒரு பொருளையே குறிக்கின்றன. வேறுபாடெல்லாம் பெயரளவில் மட்டும் தான். அதே போன்று சத்பொருளை சிலர் 'பிரம்மம்' என்றும், சிலர் 'காளி' என்றும், சிலர் 'ராமர்' என்றும் மேலும், 'துர்க்கை' 'ஹரி' என்பன போன்ற பெயர்களாலும் அழைக்கின்றனர்.

2. மண்ணில் ஆழப்பதிந்திருந்தால் காந்தத்தினால் இரும்பு கவரப்படாதது போன்று மாயையில் ஆழப்பதிந்து கிடக்கும் மனிதன் இறைவனது கவர்ச்சியை உணருவதில்லை. ஆனால் நீர்கொண்டு மண்ணைக் கழுவிப்போக்கினால் இரும்பின் தடை நீங்கும். அதுபோல, பாவங்களுக்காக வருந்தி இடையறாது கண்ணீர் உகுத்து அழுது பிரார்த்திப்பதன் மூலம் ஜீவன் விரைவில் இறைவனால் கவரப்பெறுகின்றான்.

3. பகவானுடைய நாமத்தை உச்சாரணம் செய். அவருடைய புகழ் பாடு. சத்சங்கத்தை நாடு. இடையிடையே பகவத்பக்தர்களிடமும் புண்ணிய புருஷர்களிடமும் சென்றுவா. இவ்வுலகப் பற்றிலும் உலகக் கடமைகளிலும் உலகப் பொறுப்புகளை ஆற்றுதலிலும், இரவு பகலாக மனம் அழுந்தியிருக்குமானால் அந்த மனத்தால் பகவானைச் சிந்திக்க இயலவே இயலாது. இடையிடையே ஏகாந்தத்தை நாடிச் சென்று பகவத் சிந்தனை பண்ணுவது அவசியமானது.

4. கலியுகத்தில் ஒரு மனிதன் ஒரு பகலும் ஓர் இரவும் கடவுளுக்காக அழுது புலம்புவானாகில் அவன் கடவுளைக் கண்டு கொள்கின்றான் என்றார்.

5. இல்லறத்தாருடைய கடமைகளாவன - ஜீவர்களிடத்து அன்பு பக்தர்களுக்கு சேவை. கடவுளின் புனித நாம உச்சாரணம் ஆகியவையாம்.

6. பாலும் நீரும் கலந்தது போன்றது உலகம். பகவத் சான்னித்திய உணர்வினால்வரும் ஆனந்தமும், இந்திரியபோக சுகமும், கலந்தது அது. நீ ஓர் அன்னம் போன்று இருந்து, நீரைத் தவிர்த்து விட்டு பாலைப் பருகு.

7. நான் உனக்கு உண்மை உரைப்பேன், நீ உலகிலே வாழ்ந்திருப்பதிலே எவ்விதத் தவறும் இல்லை. ஆனால் நீ உன் மனதை இறைவன்பால் திருப்ப வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் உனக்கு வெற்றி கிட்டாது. ஒரு கரம் கொண்டு உன்கடமையைச் செய். மறுகரம் கொண்டு கடவுளைப் பற்றிக் கொள்வாயாக.

8. உள்ளொன்று புறமொன்று என இல்லாது இருந்தாலன்றி. களங்கமற்ற நேர்மை இருந்தாலன்றிக், கடவுளை அறிந்துணர முடியாது. கோணல் புத்தியுடையவரிடமிருந்து கடவுள் வெகு தொலைவிலேயே இருக்கின்றார்.

ஸ்ரீசாரதா தேவியார் உபதேசங்கள்

1. உன் சாதனப் பயிற்சியிலும், சொல்லிலும் செயலிலும் உண்மையாக இரு. அப்போது எவ்வளவு இன்பமாக உள்ளோம் என்பதை உணர்வாய். உலகிலுள்ள எல்லாப்பிராணிகளின் மீதும் ஆண்டவனது கருணை மழை பெய்கின்றது. அது வேண்டும் எனக்கேட்பது அவசியம் இல்லை. நீ உண்மையாகத் தியானம் பழகு. அப்போது ஆண்டவனின் அளவற்ற கருணையின் இயல்பை உணர்ந்து கொள்வாய். ஆண்டவன் நேர்மையையும் சத்தியத்தையும் அன்பையுமே விரும்புவான். வெளிப்பகட்டான வாய் வார்த்தைகள் அவனைத் தீண்டுவதுமில்லை.

2. ஸ்ரீராமகிருஷ்ணரிடம் நம்பிக்கைவை. அவர் உன் துன்பங்களை நீக்கி மனஅமைதியளிப்பார். கடவுள் நாமத்தை ஜெபி. பிறருடைய பாவங்களையெல்லாம் தாம் தாங்கிக் கொண்டதால், ஸ்ரீராமகிருஷ்ணர் அடைந்த துன்பங்களை எண்ணிப்பார்.

அப்போது உன் உடலும் உள்ளமும் பரிசுத்த மடைந்து விட்டதை நீ உணர்வாய் பரிசுத்தமான தெய்வப்பிறவியாக இருந்த போதிலும் ஸ்ரீராம கிருஷ்ணர் பிறர் பொருட்டு துன்புற்றதையும் ஆயினும் அதே சமயம் தமது ஆனந்த பரவசத்தையும் தேவியினைப் பற்றிய தியானத்தின் இன்பத்தையும் ஒரு கணமும் இழக்காமல் வாழ்ந்ததையும் மட்டும் நீ நினைத்தாயானால் உன் துக்கமும துன்பமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

3. நான் உனக்கு ஒன்று கூறுவேன். உனக்கு மன அமைதி வேண்டுமானால் பிறரிடத்துக் குற்றம் காணாதே அதற்குப் பதிலாக உன் குற்றங்களையே எண்ணிப்பார். இவ்வுலகம் முழுவதையும் உன்னுடையதாக்கிக் கொள்ளப் பழகு. குழந்தாய் இவ்வுலகில் யாரும் உனக்கு அன்னியரல்ல. இவ்வுலகம் முழுவதும் உனதே ஒருவன் பிறரிடத்துக் குற்றங்காணப் புகுவானேயாகில் அவனது மனமே முதலில் மாசடைகின்றது.

4. ஒருவன் வார்த்தையாலும் பிறரை துன்புறுத்தக் கூடாது. அனாவசியமாக ஒருவன் பிறருக்கும் பிரியமாயிராத மெய்யை உரைத்தலாகாது. சுடுமொழிகள் பேசுவதால் ஒருவனது சுபாவமே கொடுமையாக மாறுகிறது. நாவை அடக்கும் சக்தி ஒருவனுக்கு இல்லாது போயின், அவன் தனது மனநுண்மையை இழக்கிறான். ஒரு "நொண்டியைப் பார்த்து, அவன் எப்படி முடமானான் என்று வினவக்கூடாது" என்று ஸ்ரீராம கிருஷ்ணர் கூறுவது வழக்கம்.

5. ஒரு மனிதனுக்கு இச்சைகள் இருக்கும் வரை அவனது பிறப்புச் சுழலுக்கு முடிவேயில்லை. அவ்விச்சைகளே, அவனை ஒன்றன்பின் ஒன்றாகப் பலப் பிறப்புகளை எடுக்கச் செய்கின்றன.

6. ஒரு பொருள் மிக அற்பமாயிருந்த போதிலும், ஒருவன் அதை இகழ்ந்து பேசலாகாது, நீங்கள் ஒருபொருளை மதித்தால், அதுவும் உங்களை மதிக்கும். ஓர் அற்ப காரியத்தையும் ஒருவன் மிக்க மரியாதையுடன் செய்ய வேண்டும்.

7. முதன்முதலில் நீ அருந்தும் எதையும், இறைவனுக்குச் சமர்ப்பி. சமர்ப்பிக்கப்படாத உணவை ஒருவன் அருந்தக் கூடாது. உன் உணவு எப்படியோ, அப்படியே உன் இரத்தமும் தூய்மையான உணவின் மூலம் நீ தூய இரத்தத்தையும், தூய மனதையும், பலத்தையும் பெறுகிறாய். தூய மனம் பிரேம பக்தியை உண்டாக்குகிறது.

8. கடவுள் மட்டுமே மெய். மற்றவையெல்லாம் பொய். வாழ்வின் இலட்சியம் இறைவனைக் காண்பதும், எப்போதும் அவன் நினைவில் மூழ்கிக் கிடப்பதுமேயாகும்.



பாடம் 20

மனப்பாடப் பகுதி

1. ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரைஞ் ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட் கொள வேண்டித்
தாயாய் எனக்கு தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்து
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்து திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியிற்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்

இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தறி வித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங்காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலு ணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதா ரத்தின் மூண்டெழுக் கனலை
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுதநிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவுத்(து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கி(யே) எந்தன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிட மென்ன
அருள்தரு மானந்தத்து அழுத்தியென்செவியில்

எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழிகாட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டிச்
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள் ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக; விநாயக; விரைகழல் சரணே.

2. விறகில் தீயினன் பாலிற் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

அப்பர் — தேவாரம்

3. திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய
வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு
இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போது எப்போது இப்போதார் அமளிக்கே

நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர்!
சீசி! இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடம்ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்? யாம் ஆர்? ஏலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெள்நகையாய்! முன்வந் தெதிர்
எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால்
பொல்லாதோ?
எத்தோ? நின் அன்புடைமை எல்லோம்
அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ? நம்சிவனை
இத்தனையும் வேண்டும். எமக்கேலோர் எம்பாவாய்.

ஒள் நித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்!
கண்ணைத் துயின்று அவமே காலத்தை போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மால்அறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போல் அறிவோம்என்றுள்ள பொக்கங்களேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்!
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே! சிவனே! என்று
ஓலமிடினும் உணராய் உணராய்காண்!
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

4. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.
திருமந்திரம் - திருமூலநாயனார்

5. செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே,
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும்
கிடந்தியங்கும்
படியாய் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே.
- பெருமாள் திருமொழி -
குலசேகரப்பெருமாள்.

6. வருகின்ற பாரதத்தை வரவேற்றல்
- பாரதியார்

1. ஒளிபடைத்த கண்ணினாய் வாவாவா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வாவாவா
களி படைத்த மொழியினாய் வாவாவா
கடுமை கொண்ட தோளினாய் வாவாவா
தெளிவு பெற்ற மதியினாய் வாவாவா
சிறுமை கண்டு பொங்குவாய் வாவாவா
எளிமை கண் டிரங்குவாய் வாவாவா
ஏறு போல் நடையினாய் வாவாவா.

2. மெய்மை கொண்ட நூலையே - அன்போடு
வேத மென்று போற்றுவாய் வாவாவா
பொய்மை கூற லஞ்சுவாய் வாவாவா
பொய்மை நூல்க ளெற்றுவாய் வாவாவா
நொய்மை யற்ற சிந்தையாய் வாவாவா
நோய்க ளற்ற உடலினாய் வாவாவா
தெய்வ சாபம் நீங்கவே நங்கள் சீர்த்
தேச மீது தோன்றுவாய் வாவாவா.